769

கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு

கிறிஸ்தவ இலக்கிய நூல் வரிசை—2

769
2-55

CLS

O, 1x
N55
106830

கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு

பாளையங்கோட்டை
பிஷப் சார்ஜென்ற் ஆசிரியர் பயிற்சிப் பள்ளித்
தமிழாசிரியர்
வித்துவான் பேதறு செல்வநாயகம் சாமுவேல்
அவர்கள் எழுதிய
குறிப்புரையுடன்

CLS
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(In association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

O—,1x
N55

G.L.
COPYRIGHT
First printed, 1955

ARCHIVES LIBRARY
106830
MADRAS

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1955. B2307

பதிப்பாளர் முன்னுரை

நம் முன்னோர் நமக்கு விடுத்துச் சென்ற அழியாச் சொத்துகளுள் விழுமிய சொத்து 'வாழும் இலக்கியமாம்' (Classics). புதியன புகுத்துதலோடு, பழையன போற்ற லும் நம்மவர் கடமையாம். ஆழ்ந்துபோன அரும் நிதியை அகழ்ந்தெடுத்து, அனைவரும் ஆக்கமடைதல் வேண்டுமல்லவா! மறைந்துபோன எண்செல்வக் கவிதைகளின் திரட்டைத் தமிழுலகிற்குத் தருகின்றோம். இலக்கியப் பழத்தை உடைத் துத், தோடு நீக்கித், தோல் களைந்து, கோதல் விடுத்து, எண் கவிதைக் கனிரசத்தை இக் 'கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு' வாயிலாக அளிக்க முன்வந்துளோம். இஃது ஆயுந்தொறும் இன்பம் தந்து, வாசிக்குந்தொறும் வாழ்க்கையைப் பண்படுத் தும் என்பது திண்ணம்.

தமிழ்க் கிறிஸ்தவ இலக்கிய மன்றத்தினர்

(B.T.C.L.)

முகவுரை

இரட்சணிய மூர்த்தியாம் இயேசு பெருமானது திருவடிகட்குச் செந்தமிழ்ப் பாமாலை சூட்டிய பாவலர் பலர். அவருள் தலைசிறந்தோர், பாளையங்கோட்டை மகாவித்துவான் H. A. கிருஷ்ணபிள்ளை, நெல்லை நகர் சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாஸ்திரியார், வீரமாமுனிவர் என்னும் புனைபெயர் ஏற்ற இத்தாலி நாட்டுக் கத்தோலிக்க மதகுரு பெஸ்கி முதலியோர். இவர்கள் இயற்றிய நூல்கள் பலப் பல; பாடிய பாடல்கள் பல்லாயிரம். அச் செய்யுட்களெல்லாம் கற்பனை கனிந்தவை; பக்திச்சுவை நனி சொட்டுவன; படிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துவன; பக்தியில் ஆழ்த்துவன.

இப்பாடல்களுள் பலவற்றைப் பன்முறை படித்துப் பயன்பெற்றுப் பரமானந்தமடைந்த அடியேன் 'யான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்' எனப் பல்வேறு சமயங்களில் விழைந்ததுண்டு. அங்ஙனம் பலர்க்கும் பயன்படுமாறும், யாவர்க்கும் எளிதில் கிட்டுமாறும், ஓர் தொகை நூலாக வெளியிட முன்வந்து என்னை இத்தொகுப்புப் பணியில் ஈடுபடுத்திய C. L. S. சங்கத்தார்க்கு எனது உளமுவந்த நன்றி.

நெல்லை நாட்டுப் புலவர் பாடல்கள் எளிய நடையில் அமைந்திருத்தலின், அவற்றிற்கு அரும்பதப் பொருட்குறிப்பும், மேனாட்டுப் புலவர் பாடல், சிறிது அரிய நடையில் அமைந்திருத்தலின், அப்புலவரே ஆக்கி உதவிய பொழிப்பினைச் சிறிது பதச்சேதம் செய்து எளிமைப் படுத்தியும், உரையென உதவியுள்ளேன். இத் திரட்டின்கண் காணும் குறைகளையும் சீர்திருத்தத்திற்குரிய குறிப்புகளையும் அறிஞர்கள் அறிவிப்பார்களாயின், அடுத்த பதிப்பில் வேண்டும் திருத்தங்கள் அமைக்கப்படும். இதனைக், 'குற்றம் களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.'

விவிலியத் திருமறை நூலின் பல பகுதிகளையும், சிறந்த நீதிகளையும், கற்பனைத் திறமையுடன் கவிநலம் கனியப் புலவர்கள் அமைத்துள்ளார்களாதலின், கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், வேதபாடம் சன்மார்க்க போதனைக் கென்றமைக்கப்பட்டுள்ள நேரத்தில், ஒரு பிரிவுக் காலத்தை இப் பாடல்களைக் கற்பதற்

கென்று ஒதுக்கி, இத்திரட்டினைப் பயன்படுத்துவார்களாயின், மாணவர் பெரிதும் பயனடைவர் எனக் கருதுகிறேன். இத் துறையில், கலாசாலைத் தலைவர்கள் தம் சிந்தனையைச் செலுத்தி, மாணவர்க்கு நல் வாய்ப்பு அளிப்பர் என நம்புகிறேன்.

இக் கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு இனிது முடிதற்குத் திருவருள் புரிந்த இறைவனது இணையடித் தாமரைகளை நன்றியுடன் பணிகின்றேன். எம்பெருமான் திரு நாமம் என்றும் வாழ்க!

பாளையங்கோட்டை,
1–1–1955.

பே. சே. சாமுவேல்

அணிந்துரை

தமிழ்மொழி பழமையானது; அதன் தோற்ற வளர்ச்சி எக்காலத்திய தென்பதை இப்பொழுது நாம் அறிந்துகொள்வது இயலாத தொன்றாகும். ஆயினும் அதன் வளர்ச்சி கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே தொடங்கி இருத்தல் வேண்டுமென்பது இக்கால ஆராய்ச்சி யாளர் கண்ட முடிவாகும். சங்க இலக்கியங்களும், அதன்பின் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்கள் முதலியனவும், தேவார திவ்யப் பிரபந்தங்களும், இடைக்காலத்தில் தோன்றிய இதிகாசங்கள், புராணங்கள், இலக்கண நூல்கள் முதலியனவும், பிற்காலத்திய சிறு பிரபந்தவகைகளும் தமிழ்மொழியின் பல்வேறு காலத்திய வளர்ச்சியினை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகள் போன்று உள்ளன.

சங்க காலத்தில் பாண்டிய மன்னர்கள் தமிழ் நாட்டின் பல வேறிடங்களிலுமுள்ள தமிழ்ப் புலவர்களை ஒன்று கூட்டித், தமிழ்ச் சங்கம் நிறுவி, தமிழ்மொழியை வளர்த்து வந்தனர். அப்புலவர்கள் இயற்றிய நூல்களும், பாடல்களும் எண்ணிறந்தனவாகும். ஆயினும் அவைகள் அனைத்தும் இன்று நாம் காணமுடியாதபடி மறைந்தொழிந்தன. அவைகளிலுள்ள ஒருசில பாடல்களையே பிற்காலத்தார் ஒன்று திரட்டி அவைகளின் பொருளுக்கேற்றவாறு ‘எட்டுத் தொகை’ என்றும் ‘பத்துப்பாட்டு’ என்றும் தொகுத்து நமக்குத் தந்தனர். அத்தொகை நூல்கள் சங்ககாலத் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களையும், தமிழ் நாட்டின் நாகரிக நிலையையும், சங்கப்புலவர்களின் திட்ப நுட்ப அறிவின் திறத்தினையும் நாம் அறிந்து கோடற்கு ஏதுவாயுள்ளன. அதனால் சங்க நூல்களின் முழுத்தொகுதியையும் நாம் படித்து இன்புற ஆசைப்படுகின்றோம். ஆனால் அவ்வாசை முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டு முயன்ற கதையாய் இன்று அமைந்தமை கண்டு வருந்துகின்றோம்.

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ்மொழி சமய வாதிகளின் சமய வளர்ச்சியோடு ஒன்றி வளருவதாயிற்று. சமணரும் பௌத்தரும் தமிழ் மொழியை நன்கு பயின்று அம்மொழியிலே அவர்கள் சமயக் கருத்துக்களைப் புகுத்திய, ஐம்பெருங்காப்பியங்களையும், நன்னூல், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பா மாலை முதலிய இலக்கண நூல்களையும் இயற்றுவாராயினர். அவர்கள் காலத்திய தமிழ்நூல்களை இன்று நாம் அறிவதற்கு ஏதுவாயுள்ள ஒரே நூல் புறத்திரட்டு என்பதாகும். சமய உணர்ச்சி ததும்பிய அக்காலத்திய தமிழ்மொழியில் பல புதிய மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியது. அச்சமண பௌத்தர்களுக்கு எதிராக எழும்பிய சைவர்களும், வைணவர்களும் பல திறப்பட்ட இசைப் பாடல்களைப் பாடுவாராயினர். அவைகளே தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தங்கள் முதலியனவாகும். அப்பாடல்கள் முழுவதும் இப்பொழுது நமக்குக் கிடைத்தில. கிடைத்த பாடல்களைத் தொகுத்து பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவர் திருமுறைகளாகவும், நாதமுனிகள் என்பார் திவ்யப்பிரபந்தங்களாகவும் அமைத்துப் பாதுகாக்கலாயினர்.

இதன்பின் சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் சமயப்பூசல்கள் ஏற்படலாயிற்று. அவரவர் தங்கள் தங்கள் சமயத்தைப் பாதுகாத்தற்கும் பரப்புதற்கும் ஏதுவாக, புராண இதிகாசங்களை இயற்றுவாராயினர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணிக்கு எதிராகச் சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றினார். அதற்கு எதிராகக் கம்பர் இராமாயணத்தை இயற்றினார். சைவப்புராணங்களும், வைணவப்புராணங்களும், ஒன்றையொன்று தொடர்ந்து வெளிவரலாயின. நாளடைவில் சைவர்கள் சித்தாந்த கொள்கையை மேற்கொண்டு அதனை நாட்டிடைப் பரப்பி, அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் மனத்தை மாற்றுவாராயினர். அவர்கள் திரட்டிய சைவசித்தாந்த சாத்திரங்கள், பண்டித சாத்திரங்கள், சிவப்பிரகாசப் பெருந் திரட்டு முதலியன அவைகளுக்குச் சான்றுகளாம். வைணவர்களோ ஆழ்வார்கள் பாடிய திவ்வியப் பிரபந்தப் பாடல்களுக்குத் தமிழ்மொழியும் வடமொழியும் ஒருங்கே பயின்ற சமயப்பெரியார்களைக் கொண்டு, தமிழ் மொழியும் வடமொழியும் சம அளவாகக் கலந்த மணிப்பிரவாள நடையில் பல வியாக்கியானங்களை எழுதுவாராயினர்.

இவ்வாறு இடைக்காலத்தில் சைவராலும், வைணவர்களாலும் போட்டியிடப்பட்டு வளர்க்கப்பட்ட தமிழ்மொழி, பிற்காலத்தில், தமிழ்நாட்டில் புதிதாகப் புகுந்த இஸ்லாமிய மதத்தினராலும், கிறிஸ்தவ சமயத்தினராலும் வளரத்தொடங்கிற்று. தமிழ்நாட்டில் வாழ்ந்த இஸ்லாமிய மதத்தினருக்குத் தாய்மொழியில், அம்மதக் கொள்கைகளைப் புலப்படுத்துதற்குத் தகுந்த நூல்கள் இல்லையென்று கண்ட அச்சமயப் பெரியார் பலர் உமறுப் புலவர் போன்ற பெரும் புலவர்களைக் கொண்டு, சீறப்புராணம் போன்ற காவியங்களையும், மஸ்தான்சாகிப் பாடல்கள் போன்ற தோத்திரப் பாடல்களையும் இயற்றுவாராயினர். அவர்களது, அருள் மறையாகிய திருக்குரானையும் தமிழ்மொழியில் மொழிபெயர்த்துப் பொதுமக்கள் பயிலுதற்கு வசதி செய்வாராயினர். இஸ்லாமிய மதத்தினரில் பலர் கலம்பகம் போன்ற பிரபந்த வகைகளையும் பாடி, தமிழ்மொழிக்கு ஆக்கந் தந்திருப்பது தமிழறிஞர் அறிந்ததேயாகும்.

இம்முறையில் கிறிஸ்தவ சமயம் தமிழ் மொழிக்குச் செய்துள்ள பணிகள் யாவை என்பது இங்கு ஆராயத்தக்கதாகும். கிறிஸ்தவ சமயம் தமிழ் நாட்டில், ஏறக்குறைய நான்கு நூற்றாண்டிற்கு முன்னரிருந்தே தோன்றி வளர்ச்சியுற தொடங்கிற்றாயினும், அதன் பெருமையை யுணர்ந்து, தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் அம்மதக் கொள்கையை மேற்கொண்டமை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்பிருந்தென்றே கூறவேண்டியதிருக்கின்றது. அதற்குக் காரணம், அக்காலத்தில் தான் தமிழ் நாட்டில் கிறிஸ்துவ சமயவளர்ச்சிக்குப் பாடுபடவந்த மேனாட்டு திருப்பணியாளர்கள் பலர் தமிழ் மொழி வளர்ச்சி சமய வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற உண்மையைக் கண்டனர். அன்னார் தமிழ்மொழியை நன்கு பயின்றனர். தமிழ்மொழியிலுள்ள நீதி நூல்களையும், தோத்திரப் பாடல்களையும் கண்ட அவர்கள், அவைபோன்று கிறிஸ்தவ சமயத்தினரும், அவர்கள் சமயக் கொள்கையை புகுத்திப் பல தமிழ் இலக்கியங்களை எழுதவேண்டுமென்று கருதினர்.

ஆயினும், தமிழ்மொழி பயின்ற மேனாட்டறிஞர்களில் பலருக்கு அம்முயற்சி கிட்டாதாயிற்று. அவர்களில் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த

வீரமாமுனிவர் ஒருவரே தமிழ்மொழியில் சிறந்த கிறிஸ்தவ காவியமாகிய தேம்பாவணி என்னும் நூலைப்பாடி, தமிழ் உலகம் போற்றும் பெருமையை அடைந்தார். அவர் சமண சமய நூலாகிய சீவக சிந்தாமணியின் நயத்தையும், சேக்கிழார் பாடிய பெரியபுராண பத்திச் சுவையையும், கம்பர் பாடிய கம்பராமாயணப் போக்கையும், மேற்கொண்டு, இடையிடையே திருக்குறளின் கருத்துக்களும் மலிந்து கிடக்கும்படியாக அந்நூலை யாத்தார். அன்றியும், அவர் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய மதுரைக் கலம்பகத்திற்கு எதிராக திருக்காவலூர்க் கலம்பகத்தையும், தேவாரப் பண்ணமைந்த கருணாம்பரப் பதிகம் போன்ற இசைப்பாடல்களையும் அடைக்கல மாலை போன்ற பிற்காலப் பிரபந்த வகைகளையும் இயற்றிக் கிறிஸ்தவ சமூகம், அயல் மதப் பாடல்களைப் படித்து காலந்தாழ்த்தும் நிலையினின்றும் மாற்றுவதற்கு முயன்றார்.

அன்றியும், அவர் தமிழ்மொழியில் மேனாட்டு மொழி வளர்ச்சியில் அமைந்து கிடந்த, பலவேறு முறைகளைத் தழுவி, சிறந்த உரைநடை நூல்கள் எழுதியும், புதிதாக தமிழ் அகராதி அமைக்கு முறையை அவர் இயற்றிய சதுரகராதி என்னும் நூலின் வழியாக வெளிப்படுத்தியும், தமிழ்மொழியையும், கிறிஸ்தவ சமயத்தையும் ஒருங்கே வளர்ப்பதில், அரும்பாடு பட்டார். அவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் என்னும் இயற்றமிழ் இலக்கண நூலும், கொடுந் தமிழ் இலக்கணம் போன்ற பிற இலக்கண நூல்களும், அவர் தமிழ்மொழிக்குச் செய்துள்ள அரும் பெருந்தொண்டினைத் தமிழ் நாட்டினராகிய நாம் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாயின. இவ்வாறு தமிழ்மொழிக்கு புதிய ஆக்கந்தேடிய மேனாட்டறிஞர்களில் ஜீ. யூ. போப்பையர், கால்டுவெல் அத்தியட்சர், டாக்டர் கிராப் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களில் கால்டுவெல் அத்தியட்சர் இயற்றிய 'திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம்' என்னும் ஒப்பியல் மொழிநூல், தமிழ்மொழி உலகப் பழம்பெருமொழிகளில் ஒன்றாய், அதுவே உலக முதன் மொழியாய், என்றும் அழியாக் கன்னி மொழியாய் விளங்குகின்ற தென்பதை தமிழ் நாட்டவரே அன்றி வடநாட்டவரும், அயல்நாட்டவரும் அறிந்துகொள்ளுதற்கு ஏதுவாயிருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கந் தந்த கிறிஸ்தவப் பெரியார்களில் மேற்கூறிய மேனாட்டறிஞர்களேயன்றி, உள்நாட்டு கிறிஸ்தவப் பெரியார்களும் பலர் தோன்றியுள்ளனர் என்பது அவர்கள் அந்தந்த காலத்துச் சூழ்நிலைக்கேற்றவாறு எழுதிய கிறிஸ்தவ தமிழ் இலக்கிய நூல்களாலும் பிறவற்றாலும் நாம் தெரிந்துகொள்ளக்கூடும். அவர்களில் தலைமைசான்ற பெருமை தஞ்சைச் சுவிசேடக் கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார் என்னும் பெரியாருக்கே சாருமென்னலாம். இவர் திருநெல்வேலி நாட்டில் பிறந்தவர். தஞ்சை சுவார்ட்ஸ் ஐயர் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டவர். கி.பி. 1774 முதல் 1864 வரை தமிழ்நாட்டில் வாழ்ந்து, கிறிஸ்து சமயத்திற்காக அவரது உடல் பொருள் ஆவி மூன்றனையும் உவந்தளித்தவர். கிறிஸ்தவ சமயம் தமிழ்நாட்டில் இத்துணை தூரம் வேரூன்றுதற்கு அப்பெரியாரின் இணையற்ற இசைப்பாடல்களும், கவிதைகளுமே காரணமென்னலாம்.

இசைப் பாடல்களால் இறைவனை வழிபடக்கருதிய சாத்திரியார் மேனாட்டு ஞானப்பாட்டுகள் போன்ற இசைப்பாடல்களை விரும்பவில்லை.

தமிழ்நாட்டு இசையில், அதுவும், தமிழ்நாட்டில் தங்கள் சமயத்தை என்றும் அழியா வண்ணம் நிலைநாட்டிய சைவ, வைணவர்களின் இசைப்பாடல்கள் போன்ற பாடல்களை அவர் பாடி கிறிஸ்தவ சபையிலே அரங்கேற்றினர். அப்பாடல்களைப் பயின்ற அக்காலத்திய கிறிஸ்தவ தமிழ் மக்கள், அப்பாடல் களிலே திளைத்து, அம்முறையிலே பல கீர்த்தனைகளையும், கவிதைகளையும் பாடத்தொடங்கினர். சாஸ்திரியார் பாடிய 'செபமாலை' என்னும் இசைப் பாடல் நூல், முப்பத்தோரு பிரிவுகளைக் கொண்டது. நாளொன்றுக்கு ஒரு பிரிவாக ஒரு மாதத்தில் முப்பத்தோரு நாட்களும் இறைவனைப்பாடி வழி படத்தக்க முறையில் அமைந்தது. அவற்றின் நயம், மாணிக்கவாசகர் பாடிய தும், 'திருவாசகத்திற்குருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் புக ழுரை பெற்றதுமான திருவாசகத்தினும் சிறப்பமைந்ததோர் கிறிஸ்தவ, தமிழ் இலக்கிய நூலாகும். ஆனல் இன்று அதன் பெருமையை அறியாத கிறிஸ்தவ தமிழ்ப்புலவர்களில் பலர் கிறிஸ்தவ சமயத்தில் சிறந்த இலக்கியங்கள் இல்லை என்று ஓலமிடுகின்றனர். அப்பாடல்களைப் பயின்று, இன்புற்று வரும் கிறிஸ்தவப் பெரியார் பலரை நாம் இன்றும் கிராமப் பகுதிகளில் காணலாம்.

அன்றியும், சாஸ்திரியார் பாடிய ஒரு நூற்றுக்கு மேற்பட்ட நூல் களில், 'ஆரணதிந்நம்' என்னும் நூல், இன்றும் கிறிஸ்தவப் பெருமக்க ளாலும், தமிழ் அறிஞர்களாலும் போற்றத்தக்கப் பெருமை வாய்ந்ததாகும். இதனைச் சாஸ்திரியார் கி.பி. 1821-ல் நான்கு சருக்கங்களைக் கொண்டதாய், கிறிஸ்தவ வேதத்தின் பொருளனைத்தும் ஒருங்கே அமையும்படி, ஆசிரிய விருத்தப் பாக்களாலும், திருப்புகழ், தேவாரம் போன்ற இசைப் பாடல்க ளாலும், கீர்த்தனங்களாலும் அமையப் பாடினர். அதிலுள்ள புத்தியற்ற கன்னியா ஸ்திரீகள் வரலாறுகக் குறிக்கப்பெற்றுள்ள உரையாடற் கண்ணி கள் போன்ற சில பகுதிகள் நாம் அனைவரும் படித்து இன்புறத் தக்கன வாகும். இந்நூல், கிறிஸ்தவ திருநாட்களிலும், பண்டிகைகளிலும் படித்தற் கென, சாஸ்திரியாரால் புதிய முறையில் அமைக்கப்பெற்றதொரு நூலாகும்.

அக்காலத்தில், மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் குற்றாலத் தலத் தில் எழுந்தருளிய திருக்குற்றாலநாதரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, இயற்றிய குற்றாலக் குறவஞ்சி நாடகம் என்னும் நாடக நூல், தமிழ் மக்க ளால் பெரிதும் பாராட்டப்பட்டு, தமிழ் நாட்டில், பாவலர்முதல் பாமரர் வரையும் அதனைப் படித்து, அதன் சுவையில் ஈடுபடுவாராயினர். சாஸ்திரி யார் பெத்லெகேம் குறவஞ்சி நாடகம் என்னும் நூலை எழுதி, குற்றாலக் குறவஞ்சியின் பெருமையை ஒருவாறு சிதையும்படிச் செய்தார். தமிழ் மொழியிடத்து நீங்கா பற்றுள்ளம் கொண்டவராய், அதன் இலக்கியச் சுவை யில் ஈடுபடுவதையே தம் பொழுது போக்காகக் கொண்ட தஞ்சை சரபோஜி மன்னரும் பெத்லெகேம் குறவஞ்சி நாடக நூலைப் படிக்கக் கேட்டு, பரவச முற்றாரெனின், அதன் பெருமைதான் என்னே! என்னே! ஆயினும் சாஸ்திரியார் பாடல்கள் அனைத்தும் இன்று அங்குமிங்குமாகச் சிதைவுற்று, அவைகளைப் பாதுகாப்பாரின்றி அழியும் நிலையில் இருப்பது, கிறிஸ்தவ சமூகத்திற்கே பேரிழுக்காகுமென்று துணிந்து கூறலாம்.

வேதநாயகம் சாஸ்திரியார் பாடல்கள் பண்டிதர்களுக்கு மட்டுமன்று பாமரர்களுக்கும் எற்றனவாகும். ஆனல் பண்டிதர்களுக்கென்றே இயற்றப்

பெற்ற கிறிஸ்தவ காவியங்களும் பல நம்மிடையுள்ளன. சுவிசேட புராணம், திருவாக்குப் புராணம், இரட்சணிய யாத்திரீகம் முதலியன அவ்வகையைச் சேர்ந்தனவாகும். அவற்றுள் இரட்சணிய யாத்திரிகம் என்னும் காவியத்தை இயற்றிய எய்ச். ஏ. கிருஷ்ணபிள்ளை திருநெல்வேலி நாட்டவர். திருநெல்வேலி, சி. எம். கல்லூரியிலும், சாயர்புரம் திருமறைக் கல்லூரியிலும் தமிழாசிரியராயிருந்து பெயர் பெற்றவர். பிறந்த முப்பதாண்டளவும் கொடிய வைணவனாயிருந்து, கம்பராமாயணப் பயிற்சியிலும், தேவாரத் திவ்வியப் பிரபந்தங்களின் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தவர். கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி, அச்சமயத்தைக் கற்றறிந்த புலவர்களிடை பரவுதற்கு இரட்சணிய யாத்திரிகம் என்னும் காவியத்தை இயற்றிக் 'கிறிஸ்தவக் கம்பன்' என்று புகழப்பட்டார்.

இரட்சணிய யாத்திரிகம் ஜான் பன்னியன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய மோட்சப் பிரயாணம் என்னும் உரைநடை நூலின் தமிழ் மொழிபெயர்ப்பே யாகும். இரட்சணிய யாத்திரிகத்தில் கூறப்படும் பொருள் இன்னதென்பதைக் கூறவந்த ஆசிரியர், இரட்சணிய யாத்திரிகம் முதற்பதிப்பின் முகவுரையில் 'இரட்சணிய யாத்திரிகம் என்ற தென்னை யெனில் ஆன்ம ஈடேற்றத்தை விரும்பியோருடைய உள்ளத்து, அப்பேறு லபிக்குமட்டாக வைதீக மார்க்கத்து நிகழும் சிந்தா யாத்திரையின் ஆதியோடந்தமான சம்பவங்களின் விருத்தாந்தத்தை விளக்கிக் காட்டுகிற நூல் என்பதேயாகும்' என்று கூறியிருப்பதால் தெரிந்துகொள்ளலாம். இந்நூல் ஆதிபருவம், குமாரபருவம், நிதானபருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என ஐந்து பருவங்களையும், நாற்பத்தேழு படலங்களையும், 3622 விருத்தப் பாக்களையும், 144 தேவாரப் பாடல்களையும் கொண்டது. இது கம்பராமாயணச் செய்யுள் நடையையும், போக்கையும் மேற்கொண்டு, இடையிடை திருவள்ளுவர்போன்ற தமிழ்ப் பெரியார்களின் பொருள் பொதிந்த கருத்துக்களையும் கொண்டு மிளிர்கின்றது. இதிலமைந்த சுவிசேட மார்க்கப்படலம், இரட்சணிய சரிதப்படலம், இரட்சணிய நவநீதப் படலம் ஆகியவை கிறிஸ்து சமய உண்மைகளை வெளிப்படக் கூறுவனவாகும்.

மோட்சப் பிரயாணத்தைப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் அம்மானைப் பாடலில் 'முத்திவழி அம்மானை' என்னும் பெயரோடு பாடிய மற்றொரு கிறிஸ்தவப் புலவர் திருநெல்வேலி நாட்டிலுள்ள ஆழ்வார் தோப்பூர் கிராம முனிசிபாகவிருந்த ஈவிகர நாடார் என்பவராவர். அப் பாடலின் நயம், இரட்சணிய யாத்திரிகச் செய்யுள் நயத்திலும் சிறப்புடையதெனினும், அது இன்று ஆதரிப்பாரின்றி மறைந்த பொருளாகவே உள்ளது. அதில் 5978 அம்மானைக் கண்ணிகளும், 165 விருத்தப்பாக்களும் உள்ளன. அம்மானைப் பாடல்களாக அமைந்த தமிழ் நூல்களில், இன்று அதற்கு முதலிடம் தரலாம்.

எய்ச். ஏ. கிருஷ்ணபிள்ளை எழுதிய பிற நூல்களில் இரட்சணிய மனோகரம் சிறப்புடையதாகும். அதில் அவரது அனுபவக் கருத்துக்கள் பொதிந்த தோத்திரப் பாடல்களும், கவிகளும் காணப்படுகின்றன. அப் பாடல்களின் மூலம், பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றினை ஒருவாறு

தெரிந்துகொள்ளலாம். அந்நூலிலமைந்த தேவாரப் பாடல்கள் இரட்சணிய யாத்திரிகத்திலும் இடம் பெற்றுள்ளன. அது சாஸ்திரியார் பாடிய செப மாலைப் பாடல்களைப்போன்று, நாள்தோறும் நாம் படித்து இறை வழிபாடு செய்தற்கு ஏற்றனவாயுள்ளன.

இத்தகைய கிறிஸ்தவ இலக்கியங்கள் பல, இன்னும் அங்கங்கே மறைந்தும், சிதைந்தும் கிடக்கின்றன. அவைகளைத் துருவி ஆராய்ந்து தேடுவாரின்றி, அவை புதைக்கப்பட்ட சாலந்துகளாக உள்ளன. அவை களுக்குக் காரணம், இக்காலக் கிறிஸ்தவ மக்களிடம் தாய்மொழிப் பற்றின்மையும் பயிற்சியின்மையுமேயாகும். தமிழ்நாட்டில், வருங்காலத் தில் கிறிஸ்தவ சமயம் பரவுதல் வேண்டுமாயின், பரவிய கிறிஸ்தவ சமயம் நிலைபெற வேண்டுமாயின், தமிழ்மொழிப் பயிற்சிக்கு, கிறிஸ்தவ உலகத்தார் தக்க ஆதரவு தரவேண்டும்; அங்கங்கேயுள்ள கிறிஸ்தவப் பெரியார்களையும், புலவர்களையும் ஒன்று திரட்டி, கிறிஸ்தவ சமய இலக்கிய ஆராய்ச்சிகள் புரிந்து, பல தமிழ் இலக்கியங்களை வெளிக்கொணர வேண்டும். தோன்றி மறையும் நிலையிலுள்ள ஜீ. யூ. போப்பையர் எழுதி வெளியிட்ட திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற தமிழ் நூல்களையும் கால்டுவெல் அத்தியட்சர் எழுதிய ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ போன்ற புதுமுறை நூல்களையும் உள்நாட்டிலேயுள்ள புலவர்கள் பாடிய சிறந்த கிறிஸ்தவ இலக்கிய நூல்களையும் கண்டுபிடித்து, சிறந்தமுறையில் பதிப்பித்து வெளியிடவேண்டும்.

அம்முறையில் இன்று நம் சென்னை கிறிஸ்தவ இலக்கியக் கழகத்தார், ‘கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு’ என்னும் இந்நூலை வெளியிட முன்வந் திருப்பது, மழையின்றி வாடிய பயிருக்குத், தண்ணீர்ப் பாய்ச்சும் முயற்சி யாகும். இதனை நாம் போற்றுகின்றோம். இம்முறையில் கழகம் தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்குள் கிறிஸ்தவ தமிழ் இலக்கிய வளர்ச்சி எந்நிலையிலுள்ள தென்பதை ஒருவாறு அறிவுறுத்த முன்வந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். அகண்ட பாத்திரத்திலுள்ள இன்சுவை யமுதை, அதன் இனிமை காண விழைவார்க்கு அகப்பையில் அள்ளிக்கொடுப்பதுபோல, கிறிஸ்தவ இலக் கியங்களில் தலைசிறந்த எட்டு நூல்களிலிருந்து இலக்கிய நயந்தோன்றிய இனியப் பாடல்களைத் தொகுத்துத் தந்திருப்பது, தமிழ்ப் புலவர்களின் பண்டு தொட்ட முறையைப் பின்பற்றியதாகும்.

இக்கிறிஸ்தவ இலக்கியத் திரட்டில் எய்ச். ஏ. கிருஷ்ணபிள்ளை இயற்றிய இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் ஆகிய நூல் களிலிருந்தும், சுவிசேடக் கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார் இயற்றிய ஆரணாதிந்தம், செபமாலை, பெத்லெகேம் குறவஞ்சி ஆகிய நூல்களிலிருந் தும் வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி, அடைக்கல மாலை, கருணம் பாப் பதிகம் என்னும் தேவாரம், திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய நூல் களிலிருந்தும் திரட்டப்பட்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை இயல், இசை, நாடகமாகிய முத்தமிழுக்கும் இலக்கியச் சான்றாய் அமையத் தொகுக்கப் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது. இரட்சணிய யாத்திரிகப் பாடல்கள், தேம்பாவணிப் பாடல்கள் திருக்காவலூர்க் கலம்பகப் பாடல்கள் அனைத்தும் இயற்றமிழ் இலக்கியங்கள். அவைகளிடையேயும், ஏனைய

இரட்சணிய மனோகரம், கருணம்பரப் பதிகம், செபமாலை முதலியவற்றிலும் அமைந்துள்ள தேவார திருப்புகழ் பாடல்கள் இசைத் தமிழுக்கு இலக்கியங்கள். பெத்லெகேம் குறவஞ்சி நாடகத் தமிழ் இலக்கியமாகும்.

இன்னும் இப்பாடல்களின் நயங்களைக் கூறுவதாயின், அதுவே மற்றொரு புத்தகமாக இடமாகும். ஆதலின், இறுதியாக ஒன்றிரண்டு குறிப்புக்கள் மட்டும் கூறி இவ்வணிந்துரையை முடிக்கின்றேன். கிறிஸ்தவ இலக்கியத் திரட்டாகிய இந்நூல், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பரவுதற்கு இக்கழகத்தார் ஆவன புரிதல்வேண்டும். இதிலமைந்த முத்துக்களைக் காணும் தமிழ் மக்கள், இவற்றின் முழுப் புத்தகத்தையும் காண விழைவர் என்பதற்கு ஐயமில்லை. ஆதலின், அந்நூல்கள் முழுப் புத்தகமாக சிறந்தமுறையில் விரைவில் வெளிவர ஆவன செய்யவேண்டுவது கிறிஸ்தவ சமூகத்தார் செய்யவேண்டிய கடனாகும். இல்லையேல், கிறிஸ்தவ சமூகத்திற்கு எடுத்துக் காட்டப்பெறும் இம்முத்துக்கள் விலை மதிப்பிடுவதற்கு இடனின்றிக் குப்பையில் எறியப்பட்ட மாணிக்கத்தைப் போன்று பயனற்றுப் போக ஏதுவாகும். அம்முயற்சியில் சென்னை கிறிஸ்தவ இலக்கியக் கழகம் முன்னின்று உதவி, தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு கிறிஸ்தவ சமூகத்திற்கும் சிறந்த சேவை புரியும் என்பதே என் நம்பிக்கையாகும்.

கிறிஸ்தவ சமூகத்தின் ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடந்த என்னை, இவ்விலக்கியத் திரட்டிற்கு ஓர் அணிந்துரை எழுதும்படித் தூண்டி, அதன் மூலம், கிறிஸ்தவ இலக்கிய கழகத்தார் தமிழ் இலக்கியத் தொண்டு புரியும் முறையை யான் அறியும்படிச் செய்த இதன் பதிப்பாசிரியர் உயர்திரு. D. கோயில்பிச்சை, M.A., B.O.L., அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னார் இப்பணியில் ஊன்றிய கவனம் காட்டி, மேலும் இதுபோன்ற கிறிஸ்தவ இலக்கியங்கள் வெளிவருதற்கு ஆவன புரியும்படிக் கேட்கின்றேன். ஆண்டவன் அருள் பெருக.

பாளையங்கோட்டை,
15-1-1955. } வித்துவான் வ. தங்கையா நாடார்

பொருளடக்கம்

				பக்கம்
I.	இரட்சணிய யாத்திரிகம்	...	...	1
II.	இரட்சணிய மனோகரம்	...	...	62
III.	ஆரணாதிந்தம் ...	...	...	73
IV.	ஜெப மாலை ...	...	...	89
V.	பெத்லகேம் குறவஞ்சி	...	...	117
VI.	தேம்பா வணி ...	...	...	136
VII.	அடைக்கல மாலை ...	...	...	151
VIII.	திருக்காவலூர்க் கலம்பகம்	...	...	153

இரட்சணிய யாத்திரிகம்

(ஹெ. ஆ. கிருஷ்ண பிள்ளை)

கடவுள் வாழ்த்து

ஒன்றிலே மூன்றாய் மூன்று மொன்றதா யுலப்பி லாதாய்
நின்றுல கனைத்துந் தூய நினைவுமாத் திரையிற் றந்து
நன்றென வுவந்தி ரக்ஷை நல்குமெய்ஞ் ஞான னந்தக்
குன்றினை யகத்துத் தாங்கிச் சிந்தனை கூடி வாழ்வோம். 1

(குறிப்புரை) ஒன்றிலே மூன்றாய், மூன்றும் ஒன்றது ஆய் - திரியேகத்துவம்; உலப்பு இலாதாய் - அழிவில்லாத வஸ்துவாய்; திரியேகனை உள்ளத்தில் கொண்டு சிந்தித்து உலகில் வாழ்வோம் என்பது கருத்து. இது திரியேகன் துதி.

கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு ஜீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனா மூர்த்தியை யஞ்சலித் திடுவாம். 2

(கு...ரை) மன்னு - நிலைபெற்ற; வான் கதி மருவ-மோட்ச பதவியை அடைய; உபாசனா மூர்த்தி - வழிபடு கடவுள்; உபாசனை - ஆராதனை; இது குமாரன் துதி; வழிபடு கடவுள் வாழ்த்து.

மெய்யுணர்ச்சி

வாடிய முகத்தன்; சென்னி வணக்கியோன்; மலங்கி வார்நீர்
ஓடிய விழியன்; கந்தை யுடையினன்; ஒருங்கு பாவம்
கூடிய சும்மை தாங்கிக் கூனுறு முதுகன்; பல் கால்
வீடியல் நெறியை நாடும் விருப்பினன்; வெருண்ட நெஞ்சன். 3

(கு...ரை) சென்னி வணக்கியோன் - தலை கவிழ்ந்தவன்; மலங்கி - மனம் கலங்கி; சும்மை - சுமை, இடையில் விரித்தல் விகாரம்; வீடு இயல் நெறி - முத்தியுலகிற்குச் செல்லும் வழி; வெருண்ட - பயந்த; நாச தேச வாழ்க்கையில் வெறுப்புற்ற மோட்ச பிரயாணியின் கோலம் இது.

கையுறு புத்த கத்தைக் கருத்துற விரித்து நோக்கி
மெய்யுற நடுங்கி விம்மி வேதனை பொறுக்க லாற்றாது
ஐயகோ வையகோ வென் றலறிநெட் டுயிர்த்தி யாது
செய்யுறு கருமம் என்று திகைத்துநின் றயரும் நீரான். 4

(கு...ரை) மெய் உற நடுங்கி - உடல் அதிகம் நடுங்கி; நெட்டுயிர்த்து - பெருமூச்சு விட்டு; அயரும் - சோர்வு அடையும்; நீரான் - தன்மை உடையவன்; செய்யுறு கருமம் யாது என்று திகைத்து நின்று அயரும் எனச் சேர்த்துப் பொருள் காண்க.

இருதலைக் கொள்ளி யுற்ற எறும்பென ஏகும் மார்க்கம்
ஒருதலை யானுங் காணா துணங்கியோன் உலவை யுற்ற
சருகெனச் சுழல்வன், யாண்டுந் தரிக்கிலன், மேலுங் கீழும்
கருதிநோக் கிடுவன் உள்ளங் கசந்தழு திடுவன் மன்னோ. 5

(கு...ரை) உணங்கியோன் - வாடினவன்; உலவை - உலைக்களம்; யாண்டும் தரிக்கிலன் - ஓரிடத்தும் நிலையாக நிற்கவில்லை, மன், ஓ இரண்டும் அசை.

ஈங்கிவன் இவ்வா றாக இருந்துயர்க் கிறுதி காணான்
ஆங்கொரு நெறியைக்கூடி யடவிநீத் தகத்தை அண்மித்
தாங்கரி தாகி நின்ற தற்பரி பவங்க ளெல்லாம்
பூங்குழன் மனைம கார்க்குப் புகன்றிடா துளத்துக் காத்தான். 6

(கு...ரை) இருந்துயர் - பெருந் துயரம்; இறுதி - முடிவு; காணான் - காணாதவனாய்; அடவி - காடு; நீத்து - நீங்கி; அண்மி - அடைந்து; மகார் - பிள்ளைகள்; புகன்றிடாது - சொல்லாமல்; உளத்துக் காத்தான் - மனத்துள் அடக்கி வைத்தான்.

அயலுறு நிழலைப் போக்கல் ஆவதோ? அகத்துள் ளோங்கி
உயவொரு புகலின் றென்னா வுறுத்திநின் றுடற்று கின்ற
துயர்பிற ரறியா வண்ணந் துடைத்திட முயன்றான்; வாளா
வியனகத் தியன்மு கத்து விளங்குமென் றுணரான் போலும். 7

(கு...ரை) உய ஒரு புகல் இன்று - உய்வதற்கு வேறு ஒரு வழியில்லை; வாளா முயன்றான் - வீணே முயன்றான்; அவனுடைய முயற்சியால் பயனில்லை; வியன் அகத்து இயல் - நிறைந்த அகத்தினது இயல்பு; 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழி அமைந்து கிடப்பது காண்க.

விள்ளரும் ஜீவ சாக்ஷி விளைத்திடு முபாதிச் சும்மை
தள்ளரு நீர்மைத் தாகச் சமழ்த்தலாற் பரிந்தில் லாளை
எள்ளரு மகாரைக் கூவி யினிதரு கிருத்தி யென்றன்
உள்ளுறு யரனைத் ருற்ற தோன்றியா னுரைக்க கேண்மின். 8

(கு...ரை) விள்ள அரும் - நீக்குதற்கு *அரிய, சொல்லுதற்கு அரிய; என்றும் பொருள் கொள்ளலாம். உபாதி - வாதை, வருத்தம்; சமழ்த்தலால் - அமிழ்த்துவதால்.

பரிபவம் ஒருங்கு கூடித் திரண்டவோர் பாரச் சும்மை
வெரிநுறீஇ யமிழ்த்த வாற்றேன்; மிகமெலிந் தயர்ந்தேன்; மேலும்
எரிதரு தேவ கோப விருங்கனல் மாரி பெய்து
வரிதிரை யுலகும் யாமும் வெந்தழிந் தொழிவேம் அன்றோ? 9

(கு...ரை) பரிபவம் - வியாகுலம், மிகுந்த பாவம்; வெரிந் - முதுகில்; உறீஇ - பொருந்தி; கனல் மாரி - தீ மழை; வரி திரை உலகும் - பரந்த கடலால் சூழப்பட்ட உலகமும்; திரை - அலை கடல்.

இத்திறம் நிகழு மென்றற் கெட்டுணை யைய மில்லை;
எத்திறம் தப்பி யுய்தும் என்பதும் அறியேம்; இன்னே
நித்திய ஜீவ மார்க்க நெறியறிந் தோடே மாயின்
சத்தியம் நரகத் தீயிற் சாவது சரத மாதோ. 10

(கு...ரை) இத்திறம் - இவ்விதமாக; இன்னே - இப்பொழுதே; ஓடேம் ஆயின் - ஓடித் தப்பவில்லையானால்; சரதம் - நிச்சயம், உண்மை.

ஈசனுர் கோபத் தாலே எரிந்துநீ றுரு மிந்த
நாசதே சத்தை விட்டு நடப்பதே கருமம்; அன்றேல்
மோசம்வந் தடையும்; பின்னர் முயல்வது விருதா; என்று
பேசினன் பலகால் தன்னைப் பிணித்தபே ரன்பி னலே. 11

(கு...ரை) நீறு ஆகும் இந்த நாச தேசம் - சாம்பலாய்ப் போகும் இந்த நாச தேசம்; விருதா - வீண், பயனற்றது; விருது ஆ? - எனப் பிரித்து வெற்றிக்குரிய செயல் ஆகுமா? என்றும் பொருள் கொள்ளலாம்.

இன்னணம் நிகழும் வேலை யினத்தவர் பலருங் கூடி
என்னவோ பித்த மேலிட் டிவையெலாம் பிதற்று கின்றாய்;
உன்னது தலைசாய்த் தின்னே யுறங்குதி; புலரி தோன்று
முன்னரே சுகமுண் டாகும் என்றின மொழிந்து போனர். 12

(கு...ரை) இன்னணம் - இங்ஙனம், இவ்வாறு; நிகழும் வேலை - நடக்கும் சமயத்தில்; புலரி - விடியற்காலை; என்று இன - என்று இப்படிப் பட்ட வார்த்தைகளை; இன - இன்ன, தொகுத்தல் விகாரம்.

என்னுறு வருத்தந் தோரா திகழ்ந்துரை யாடு கின்ற
இன்னர்புன் மதிதான் என்னென் றிரங்கிநித் திரைசற் றின்றிப்
பன்னருந் துயர முற்றுன்; பகலிலும் பதின் மடங்காக்
கன்னலோ ருகம தாகக் கழிந்தன வவற்குக் கங்குல். 13

(கு...ரை) என் உறு வருத்தம் - எனது மிகுந்த வருத்தத்தை; தேராது - ஆராய்ந்து பாராமல்; புன்மதி - அற்ப புத்தி; பன்னரும் - சொல்லுதற்கு அரிய; கன்னல் - நாழிகை; கங்குல் - இரவு; கங்குலின் ஒவ்வொரு கன்னலும் ஓர் யுகமாகத் தோன்றிற்று கிறிஸ்தியானுக்கு.

கனையிருட் பிழம்பை நூறிக் கதிரவன் குணபாற் றோன்ற
வினைசுமந் தலறியுள்ள மெலியுமாத் துமவி சாரி
மனைவயிற் குறுகி யுய்யு மதியிலா நிருவி சாரர்
அனையவ ஞத்ம சோக மதிகரித் ததனைக் கண்டார். 14

(கு...ரை) கனை இருட் பிழம்பை - நிறைந்த இருட்டினது திரட்சியை; நூறி - அழித்துக்கொண்டு; குண பால் - கீழ்த் திசையில்; உய்யும் மதி இலா நிர்விசாரர் - பிழைக்க மதியில்லாத நிர்விசாரிகள்; ஆத்ம சோகம் - ஆத்தும வியாகூலம்.

கண்டன ருண்மை தேரார் கவல்கின்று ரல்லர் வேரி
உண்டுவா யுழறு வார்போ லுணர்வின்றி யுரைக்க லுற்ற
மிண்டருக் கிரங்கி நேரு மெய்ம்மையைத் தெரித்தல் நன்றென்று
அண்டர்நா யகனை யுள்ளி யாத்தும விசாரி சொல்வான். 15

(கு...ரை) வேரி - கள்; மிண்டர் - அக்கிரமிகள்; அண்டர் நாயகனை உள்ளி - தேவாதி தேவனை மனதில் நினைத்து.

திருவருண் மலிந்து செங்கோல் செலுத்தியிச் சகத்தை முற்றும்
ஒருகுடை நிழற்கீ ழாக்கி யுவந்துகாத் தளிக்கும் வேந்தன்
மருவுதங் குடைநி ழற்கீழ் வாழுமன் னுயிர்கட் கெல்லாம்
தருபிர மாணம் பத்தாம்; தனித்தனி சாற்றக் கேண்மின். 16

(கு...ரை) அருள் மலிந்து - அருள் மிகுந்து; தரு பிரமாணம் பத்தாம் - கொடுத்த கற்பனைகள் பத்து ஆகும்; கேண்மின் - கேளுங்கள்; கிறிஸ்தியானுடைய உபதேசங்களை அவர்கள் செவிகொடுத்துக் கேட்கவில்லை.

பொற்றொடி யினையு மாறும் புறக்கணித் தகந்தை பேசி
உற்றவ ரிகழ்ந்த வாறு முணர்ந்தவாத் துமவி சாரி
எற்றிவர் தன்மை யந்தோ வென்னினிச் செய்வ லென்று
சற்று நின் றேகாந் தத்திற் றம்பிரான் றிருமுன் கிட்டி. 17

(கு...ரை) இவர் தன்மை எற்று - இவர்கள் தன்மை எப்படிப்பட்டது; ஏகாந்தம் - தனியிடத்தில்.

சருவலோ கத்தை யாளுந் தயாபரா! தமியேற் சூழ்ந்த
நிருவிசா ரிகள்சன் மார்க்க நெறியறி யாது செய்யும்
பொருவரும் பிழைக ளெல்லாம் பொறுத்தருள் புரியும் தூய
திருவுள மிரங்கி யென்று ஜெபித்தனன், சிந்தை யொன்றி. 18

(கு...ரை) பொரு அரும் பிழை - ஒப்பற்ற பிழை; ஆத்துமாவை நஷ்டப்படுத்துவதைவிட பெரியபிழை வேறில்லை அன்றோ? தூய திரு உள்ளம் இரங்கிப் பொறுத்தருளும் என்று கூட்டுக.

அறங்கிளர் பரலோ கத்துக் கூரசனைப் பரவிப் போந்து
புறங்கிளர் வெளியு லாவிப் புத்தகச் சுருளை நாடி
இறங்கிய முகத்த னாகி யென்செய்கே னிரக்ஷைக் கென்று
கறங்கெனச் சுழலு நெஞ்சன் கவன்றனன் கலக்க முற்றான். 19

(கு...ரை) அறம் கிளர் - தர்மம் விளங்குகின்ற; பரவி - துதித்து; நாடி - ஆராய்ந்துகொண்டு; கறங்கு - காற்றாடி; கவன்றனன் - கவலைப் பட்டான்.

தேசநா சத்தை யெண்ணித் திகிற்படும், பிணித்து நின்ற
பாசவெவ் வினையின் மிக்க பாரத்தா லழுந்தும்; யாரே
நீசனே னுய்யு மாறு நெறிதெரித் திடுவ ரென்னும்;
மாசறு முயிரைக் கூவி வாய்திறந் தாற்று மாதோ. 20

(கு...ரை) மாசு அறும் உயிர் - குற்றமற்ற உயிரை; ஆற்றும் - வாய் விட்டுப் புலம்புவான். மாது, ஓ, அசை.

குரு தரிசனம்

வித்தக வாத்தும விசாரி யிவ்வணம்
தத்துற லடைந்துயிர் தன்னை நாடியிங்
கெய்த்திடு முடலென வினைந்து சில் பகல்
மத்தரிற் கழித்தன னுண்டோர் வைகல்வாய். 21

(கு...ரை) வித்தக - ஞானமுள்ள; தத்துறல் - தடுமாற்றம்; எய்த்திடும் - வருந்தும்; இனைந்து - வருந்தி; மத்தரில் - உன்மத்தர் (பித்தர்) போல்; ஓர் வைகல் வாய் - ஓர் நாள்.

தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணை காட்டிட
உண்ணிறை யுன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக. 22

(கு...ரை) தண் அளி தயங்கிய-குளிர்ந்த அருள் விளங்கிய; தாமரைக் கண் இணை - தாமரை மலரை யொத்த இரு கண்கள்; இணை - இரண்டு; மல்கிய கருணை - மிகுந்த அருள்; வண்ண - அழகிய; உக - சிந்த.

எண்ணருந் துயர்க்கெலா மிறுதி காட்டுமெய்ப்
புண்ணிய முருக்கொடு பொலிந்தி லங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங்க ளிப்புற
நண்ணின னிருஞ்சுவி சேஷ நாமத்தன். 23

(கு...ரை) எண் அரும் துயர் - மனத்தால் நினைத்தற்கும் அரிய துயரம்; இறுதி காட்டும் - முடிவை உண்டாக்கும்; உணர்வுளார் - உணரக் கூடிய தன்மையுடைய பக்தர்கள்; இரும் - பெருமை பொருந்திய.

உருகிமெய் விசாரியை யுற்று நோக்கிநின்று
அருகணைந் தியாரைநீ? யவலிக் கின்றனை
பெருகுமித் துயருனக் குற்ற பெற்றியென்?
திருகலில் சிந்தையாய் செப்பு கென்றனன். 24

(கு...ரை) யாரை - யார்; ஐ, சாரியை; அவலிக்கின்றனை - வருந்துகின்றாய்; பெற்றி - விதம்; திருகல் இல் சிந்தையாய் - மாறுபாடில்லாத (நேர்மையான) மனத்தை உடையவனே; செப்புக - சொல்வாயாக.

ஐய! கேள் நாசதே சத்த ளுங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீவிழுந்து
ஒய்யென விவணெலா மொருங்க விந்தபின்
மெய்யுற வருநடுத் தீர்வை வேந்தனால். 25

(கு...ரை) ஐய கேள் - ஐயனே கேட்பாயாக; ஆங்கு அமர் - அங்கே தங்கியிருக்கும்; வெகுளித் தீ - (இறைவனுடைய) கோபாக்கினி; ஒய் என - திடீரென்று, ஒலிக் குறிப்பு.

ஆயிடைக் கருணைவேந் தாணை மீறிய
தீயரைத் தீச்சிறைப் படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூ லியம்பு கின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தி னேனரோ. 26

(கு...ரை) ஆயிடை - அப்பொழுது; ஏயும் இச்சுருதி நூல் - (என் கையில்) பொருந்தியுள்ள இந்த வேத புத்தகம்; ஆய - (அதனை) ஆராய்ந்து பார்த்ததனால்; அரோ - அசை.

நன்றிகொன் றிறைவனை மறந்து நாடொறும்
புன்றொழில் புரிந்துவீண் பொழுது போக்கிய
வன்றலைப் புலையனேன் மருவு தண்டனைக்
கின்றுநின் றிரங்குவ தியாவ தாங்கொலோ. 27

(கு...ரை) நன்றி கொன்று - செய்நன்றி மறந்து; புன் தொழில் - அற்பமாகிய பாவத்தொழில்களை; வன் தலைப் புலையனேன் - கொடிய மகா பாவி; தலைப் புலையன் - பாவிகளில் பிரதான பாவி; யாவது ஆங்கொல் - என்ன நேரிடுமோ? ஓ - அசை.

சாகவு மனமிலை; தண்டனைக் கெதிர்
போகவுந் துணிவிலை; புறத்து ளாரைப்போல்
ஏகவும் புகவிலை; யீடு செய்யவோர்
பாகமும் பலமிலைப் பதைக் கின்றே னென்றான். 28

(கு...ரை) ஈடு செய்ய - பரிகாரம் செய்துகொள்ள; ஓர் பாகமும் - சிறிதளவும்.

அஞ்சுவி சேஷ நீ யறைந்த யாவையும்
வஞ்சமின் றுண்மையே; மருவு மிம்மையில்
எஞ்சுறு வேதனை யிவைதல் கண்டுமேன்
அஞ்சுதி சாவதற்கு? அமைதி கூறெனு. 29

(கு...ரை) அம் சுவிசேஷன் - (அப்பொழுது) அழகிய குணநலம் வாய்ந்த அச் சுவிசேஷகன்; எஞ்சுறு - குறைவில்லா நிறைந்த; ஏன் சாவதற்கு அஞ்சுதி எனக் கூட்டுக. அமைதி கூறு - ஆத்திரப்படாமல் அமைதியாகச் சொல்.

ஜென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை
என்முது குளுக்குற விறுத்ததாற் புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற்கி டங்கிடை
அம்மையி லமிழ்த்துமென் றஞ்சு கின்றனன். 30

(கு...ரை) ஜென்ம நாள் தொடங்கி - பிறந்த நாள் முதல்; உளுக்கு உற - வளையும்படி; இறுத்தலால் - அழுத்துகின்றபடியால்; புலைக் கன்மிகள் - பாவிகள்; குழுமு - கூடியிருக்கும்; அம்மையில் - மறுமையில்.

இனையசிந் தனையென திதயத் தூன்றலால்
வனை பொலன் கழலினாய் வருந்து வேனென
அனையவை யறிந்தடுத் தவர்க்கு நன்மையே
நினைசுவி சேஷனும் நிகழ்த்து வானரோ. 31

(கு...ரை) இனைய - இப்படிப்பட்ட; ஊன்றலால் - ஆழ்ந்து பதிந்து இடக்கின்றபடியால்; வனை பொலன் கழலினாய் - கட்டிய பொன் மயமான கழலினை உடையவனே; நிகழ்த்து வான் - பின் வருமாறு சொல்வான் ஆயினன்; அரோ - அசை.

நன்றுநன் றுன்னிலை! நாச தேசத்து
நின்றுநின் றித்துணை தாழ்த்தல் நீதியோ?
பொன்றிடர் வருமுனம் புகலி டம்பெறச்
சென்றிடா திவணுழல் சிந்தை யென்? என்றான். 32

(கு...ரை) பொன்று இடர் - அழிவுக்கு உரிய துன்பம்; இவண் சிந்தை உழல் - இங்கே மனம் வருந்துவது.

உய்வழி யிதுவிதென் றுழறும் பல்வழி
பொய்வழி; யவ்வழி போகுவே னலன்;
தெய்வநா யகன்றிரு நகர்க்குச் செல்வழி
எவ்வழி யவ்வழி யின்னுந் தேர்கிலேன். 33

(கு...ரை) உய்வழி - மீட்பு அடையும் மார்க்கம்; உழறும் பல் வழி - உழறுகின்ற பல வகையான மார்க்கங்கள்; தேர்கிலேன் - ஆராய்ந்து அறிந்து கொள்ளவில்லை.

ஆதியான் றிருநகரடுக்கும் ஜீவ நற்
பாதைநீ யறிதியேற் பகர்தி யாலென
வேதியர் குரவனை வினவி ஞனவன்
ஓதுவல் கேட்டியென் றுரைத்தன் மேயினன். 34

(கு...ரை) அறிதியேல் - அறிவாயானல்; பகர்தி - சொல்வாயாக, ஆல் - அசை; ஓதுவல் - சொல்கின்றேன்; கேட்டி - கேள். உரைத்தல் மேயினன் - உரைப்பான் ஆயினன்.

சுவிசேஷ மார்க்கம்

மக்களை மனைவியை மனையைக் காதல்கூர்
ஒக்கலை யுரிமையை யுவக்குந் தேசத்தை
இக்கணம் விடுத்தியா னியம்பு தேயத்திற்
புக்குவாழ்ந் திருத்திநீ போதி யாலெனு. 35

(கு...ரை) காதல் கூர் ஒக்கல் - அன்பு மிகுந்த சுற்றத்தார்; உரிமையை - உனக்கு உரிமைப்பட்ட பொருள்களை; உவக்கும் தேசத்தை - நீ விரும்பும் உனது நாட்டை; விடுத்து - நீக்கி; போதி - போ; ஆல் அசை.

எழுதிய தோற்சுரு ளெடுத்து நண்ப!நீ
பழுதிலா மொழியிது பார்த்தி யோவென
உழுவலன் பொடுமன முவந்து நோக்கியீண்
டெழுவல்யான் செல்வழி யாதிங் கென்றனன். 36

(கு...ரை) பழுது இலா மொழி இது - குற்றமற்ற சொல் இது; நீ பார்த்தியோ - நீ இதைப் பார்த்தாயா?; உழுவல் அன்பு - நீங்காத அன்பு; எழுவல் - எழுந்து செல்கின்றேன்.

ஆங்குறு பெருவழிக் கப்பு றத் தொரு
பாங்குறு வாயிலைப் பார்த்தி யல்லையேல்
ஓங்கிருஞ் சுடரொளி யொன்று காண்டிமற்
றீங்கிது குறிக்கொளீஇ யேகற் பாலையால். 37

(கு...ரை) ஆங்கு - அங்கே; உறு பெருவழிக்கு அப்புறத்து - (தோன்றுகின்ற) மிக நீண்ட வழிக்கு அப்பாலே; ஒரு பாங்கு - ஒரு பக்கத்

தில்; குறிக்கொளீஇ - குறிக்கோள் ஆக வைத்துக்கொண்டு; ஏகல் பாலே - செல்லக்கடவாய்; ஆல் - அசை.

எட்டிநீ நடந்துசென் றிடுக்க வாயிலைக்
கிட்டியுன் கரங்கொடு கிளர்க பாடத்தைத்
தட்டுதி யுனக்கறி தக்க யாவையும்
உட்டெளி வுறவவ னுரைக்க லாகுமால். 38

(கு...ரை) கரம் கொடு - (உனது) கையினால்; கிளர் கபாடத்தை - விளங்குகின்ற வாயிற் கதவை; அறிதக்க - நீ அறிதற்கு உரிய; உள் தெளிவுற - உன் மனதிற்குத் தெளிவாக; ஆல் - அசை.

என்னுரை யனுத்துணை யிகப்பை யாயினும்
மன்னர்கோன் வளநகர் மருவு வாயலை
பன்னுறு கவர்வழி பலவுண் டாங்கவை
உன்னரு நரகபா தலத்தி லுய்க்குமால். 39

(கு...ரை) என் உரை - எனது சொல்லை; இகப்பை ஆயினும் - கடந்தாலும்; மரிவுவாய் அலை சேரமாட்டாய்; பின் உறு கவர் வழி - சொல்லப்படுகின்ற பக்க வழிகள்; உன்ன அரு - நினைப்பதற்கு அரிய (கொடிய) ஆல் - அசை.

நெறிபிச காதிடை நின்றி டாதொளிக்
குறிபிடித் தேகெனக் கோதி லன்பொடு
செறியுநல் லாசிகள் செப்பி னானுவந்
தறிவனு மஞ்சலித் தகன்று போயினான். 40

(கு...ரை) நெறி பிசகாது - வழி தவறாமல்; இடை நின்றிடாது - வழியில் இடையிலே நின்றுவிடாமல்; கோது + இல் - மாசற்ற; செறியும் நல் ஆசிகள் - மிகுந்த ஆசீர்வாதங்கள்.

யாத்திரை ஆரம்பம்

கண்ணிலா னிருவிழி காணப் பெற்றபோல்
மண்ணக விருள்கெட, வயங்கு மாச்சுடர்
நண்ணிட மறிந்துள மகிழ்ந்து நாட்டம் வைத்
தெண்ணமற் றின்றியே விரைவினேகினான். 41

(கு...ரை) காண இரு விழி பெற்ற போல் - காணக்கூடியவாறு இரண்டு கண்களையும் பெற்றாற் போல; நண் இடம் அறிந்து - சேர்வதற்குரிய இடத்தை அறிந்து; எண்ணம் மற்று இன்றியே - வேறோர் சிந்தனை இல்லாமல்.

போவது கண்டெமைத் துறந்து போதல் நன்
காவதோ? திரும்புகென் றாகு லத்துடன்
கூவினர் மனைமகர் குறிக்கொ ளாதவன்
ஜீவனே ஜீவனே யென்னச் சென்றனன். 42

(கு...ரை) எமைத் துறந்து போதல் - எங்களை யெல்லாம் விட்டு விட்டுப்போவது; ஆகுலத்துடன் - மன வருத்தத்துடன்; குறிக் கொளாதவன் (அச் சொற்களை) ஏற்றுக்கொள்ளாதவனாய்.

கடை திறப்பு

நள்ளுண் டாலுந லம்ம·ஃ தன்றெனில்
எள்ளுண் டாலுமி ழிபுலை யன்னெனத்
தள்ளுண் டாலுந்த யாபதி சித்தமென்
றுள்ளுண் டாயவெ ழுக்கமோ டேகினான். 43

(கு...ரை) நள்ளுண்டாலும் - நட்புக்கொள்ளப்பட்டாலும், அன்பாகப் பாராட்டப்பட்டாலும்; நலம் - அது நல்லதே; எள்ளுண்டாலும் - இகழப் பட்டாலும்; உள் உண்டாய - உள்ளத்தின் கண் உண்டாகிய; ஊக்கமோடு - மனமுயற்சியுடனே.

குன்று காலும்வெஞ் சாபக்கொ ழுங்கனல்
முன்றி னின்றுமு டுகிச்சு ரஞ்செலீஇ
வன் றொடர்ப்படு மான்விடு பட்டெனச்
சென்று கூடினன் முன்விடு செந்நெறி. 44

(கு...ரை) முடுகி - விரைந்து; சுரம் செலீஇ - காட்டை அடைந்து; வன் றொடர்ப்படும் மான் - வலிதாக வேடர்களால் தொடரப்பட்ட மான்; செந்நெறி - செம்மையான வழி.

ஊன்ம னத்திரு ளோடத்து ரந்திடும்
ஆன்ம ஞானத்த விரொளி நாடியக்
கான கத்தெவை யுங்கரு தாதுபோய்
வானு றுங்கடை வாயிலை நண்ணினான். 45

(கு...ரை) ஊன் மனம் - மாமிச இச்சைக்குட்பட்ட மனம்; அவிர் ஒளி - பிரகாசிக்கின்ற ஒளி; நாடி - தேடிக்கொண்டு; வான் உறும் - வான லோகத்தை அடைவதற்குரிய; நண்ணினான் - சேர்ந்தான்.

இடுக்க வாயிலெ திர்ந்தத னுட்புக
அடுக்கு மோவெனக் காசையை வேரறப்
படுக்கு நர்க்கும்ப ருமித்த தூலத்தை
ஒடுக்கு நர்க்கும லாலென வுள்ளினான். 46

(கு...ரை) அதனுட்புக எனக்கு அடுக்குமோ - அவ்விடுக்க வாயினுள் போக எனக்கு முடியுமோ; பருமித்த தூலத்தை ஒடுக்கு நர்க்கும் அலால் - பருத்த உடலை ஒடுக்கினவர்களுக்குமே அன்றி; உள்ளினான் - நினைத்தான்.

உருக்கு மாரரு ளோங்கிய வேந்தனோர்
திருக்கு மாரனைச் சிந்தையு ளேதரித்
திருக்கு மாரண ரேயிக லியாவையும்
ஒருக்கு மாற்றல ரொல்லும வர்க்கரோ. 47

(கு...ரை) உருக்கும் ஆர் அருள் ஓங்கிய வேந்தன் - (பாவிகளுடைய) உள்ளத்தை உருக்கும் ஆற்றல் வாய்ந்த நிறைந்த அருள் மிகுந்த இறைவன்; ஆரணரே - வேதங்களுக்குரியவர்களே; இகல் யாவையும் ஒருக்கும் ஆற்றலர் - தடைகளை எல்லாவற்றையும் அழிக்கக்கூடிய ஆற்றல் உடையவர்; ஒல்லும் - முடியும்.

திருடர் வஞ்சகர் காமிகள் செல்வமார்
குருடர் மற்றொரு ரிமையைக் கொள்ளை கொண்
முருடர் கோபிகண் மூர்க்கர்கு தர்க்கராம்
புருடர்க் கீண்டுபு கலரி தாகுமால். 48

(கு...ரை) செல்வம் ஆர் குருடர் - செல்வம் நிறைந்த (அகக்கண்) குருடர்; முருடர் - முரடர்; குதர்க்கர் - விதண்டாவாதிகள்; ஈண்டு - இங்கே; புகல் அரிது - உட்செல்தல் அரிது.

என்று சிந்தித்த ருகுற, "வேழைகாள்!
நின்று தட்டுமி னீங்கிடு நீள்கதவு"
என்று பித்தியெ ழிலுறத் தீட்டிய
மன்றல் வாசகங் கண்டும னக்கொளா. 49

(கு...ரை) அருகு உற - அருகிலே சென்று (நோக்க); நீள் கதவு நீங்கிடும் - இப்பெரிய கதவு திறந்து விடும்; பித்தி - (அக்கதவின்) ஒரு பாகத்திலே; எழில் உற - அழகு பொருந்த; மன்றல் சிறந்த; மனம் கொளா - உள்ளத்தில் கொண்டு.

திட்டி வைத்தனர் தேவர்பி ரானெனு
உட்டெ ளிந்துணர் வொன்றியொ டுங்கியே
கிட்டி யாங்குகி ளர்பொற்க பாடத்தைத்
தட்டி னானின்றி னையன சாற்றியே. 50

(கு...ரை) தேவர் பிரான் திட்டி வைத்தனர் - எம்பெருமான் எம்மீது கண் நோக்கினர்; திட்டி - திருஷ்டி, கண்; உணர்வு ஒன்றி ஒடுங்கி - மன வொற்றுமையுடன்; இனையன சாற்றி நின்று தட்டினான்—பின்வருமாறு சொல்லித் தட்டினான்.

மாய வுலக மயக்கறுத்து வரையாக் கிருபை தந்தளித்த
தூய பெருமான் றிருவடிக்குத் தொழும்பன் கபாடந்
திறமினே. 51

(கு...ரை) மாய உலக மயக்கு அறுத்து - மாயமாகிய உலக மயக்கத்தை நீக்கி; வரையாக் கிருபை - அளவில்லாத அருளை; தொழும்பன் - அடியான்; கபாடம் திறமின் - கதவைத் திறவுங்கள்.

ஆசாபாசக் கொடுஞ்சுழலி லகப்பட் டுலேந்தே னருளனுக
நாச தேசந் துறந்துவந்தே னையேன் கபாடந் திறமினோ. 52

(கு...ரை) ஆசா பாசக் கொடும் சுழலில் - லௌகிக ஆசை பற்று ஆகிய கொடிய சுழல் காற்றிலே; உலேந்தேன் - சிதைந்தேன்.

உள்ளந் திரும்பிக் குணப்படுமி னுய்வீ ரென்ன வுவந்துரைத்த
வள்ளல் திருவாக் கதுகேட்டு வந்தேன் கபாடந் திறமினோ. 53

(கு...ரை) உய்வீர் - பிழைப்பீர்; என்ன உவந்து உரைத்த - என்று அன்புடன் மொழிந்த; வள்ளல் - பெருங் கொடையாளன்; தன் உயிரையே பாவிகளுக்காக உவந்து அளித்த வள்ளல் இயேசு பெருமான்.

கல்லேன் சுருதி நலம்புரியக் கருதேன் பாவங் கசந்திடேன்
பொல்லே னெனினும் வந்தடைந்தேன் போகேன் கபாடந்திற
மினோ. 54

(கு...ரை) சுருதி கல்லேன் - வேதத்தைக் கற்கமாட்டேன், வேதத்தைக் கற்றற்குரிய ஆர்வம் என்னிடம் இல்லை; பாவம் கசந்திடேன் - பாவத்தின் மீது வெறுப்புக் கொள்ளேன்; போகேன் - இனி நான் திரும்பிப் போகமாட்டேன்.

ஆறக் கொடிய பசிதாக மடங்கத் தணிய வருளளிக்கும்
மாறக் கருணை வரதன்பால் வந்தேன் கபாடந் திறமினோ. 55

(கு...ரை) ஆறு - ஆற்றமுடியாத, தணிக்கமுடியாத; அடங்கத் தணிய- முழுவதும் தணியும்படியாக; கருணை வரதன்பால் - கருணை வள்ளலிடம்; வரதன் - அருளுபவன், வரம் அளிப்பவன்.

வேறு

கொடிய ரிற்கொடிய புலேய ரிற்புலேய ருயி னுங்குமர நாயகன்
அடிய ருக்கடிய னுக வந்திவண டைந்த னன் கதவு திற
மினோ. 56

(கு...ரை) குமர நாயகன் - குமரக் கடவுள்; அடியருக்கு அடியன் - தாசானுதாசன்; இவண் வந்து அடைந்தனன் - இங்கே வந்து சேர்ந்தேன்.

(கபாடம் திறந்த கடைகாவலன் வழி காட்டல்)

முத்தி வழி

நேர்வழிநெ ருக்கவழி நின்மலந கர்க்குச்
சேர் வழிதி கைப்பில்வழி ஜீவவழி சீர்சால்
ஓர் வழியி தன்றியிலை யுண்மைவழி கும்பிப்
பேர்வழிய துற்றலைபி ராந்தருமநேகர் 57

(கு...ரை) நெருக்க வழி நேர் வழி - இதோ ஒடுக்கமாகச் செல்கின்ற இவ்வழியே நேர் வழி; நின்மலன் நகர் - மோட்சம்; கும்பிப் பேர்வழி - நரகத்திற்குச் செல்லும் விசாலமான வழி; பிராந்தர் - பித்தர்.

இக்குறிம னக்கொடினி யேகுகென வுள்ளம்
நெக்குருகு நேயனொடு, வேதியனி கழ்த்துந்
தக்கநெறி சார்வலைய! தாங்கரிய தாமிப்
பொக்கணம்வி முத்திலது புண்ணியமு னக்கே. 58

(கு...ரை) இக்குறி மனக் கொடு - இந்த ஒரே இலக்கை மனத்திற் கொண்டு; ஏகுக என - செல்வாயாக என்று சொல்ல; ஐயதக்க நெறி சார்வல் - ஐயனே தகுதியான வழியிலே செல்வேன்; தாங்கு அரிதம் இப்பொக்கணம் - சுமப்பதற்கு அரிய இச்சுமை.

வியாக்கியானி

இந்தவா றுயவன் னேகுமவ் வமைதியில்
உந்துநல் லுணர்வுமுன் னூன்றிநின் றீர்க்கவும்
பந்தமார் தீவினைப் பகுதியின் னீர்க்கவுஞ்
சிந்தைநொந் தினையன செப்புவா னுயினுன். 59

(கு...ரை) அவ் அமைதியில் - அந்தச் சமயத்தில்; உந்தும் நல் உணர்வு - ஊக்கித் தள்ளுகின்ற நல் உணர்ச்சியானது; பந்தம் ஆர் தீவினை - கட்டுதல் பொருந்திய தீயவினை; ஈர்க்கவும் - இழுக்கவும்; இனையன - இப்படிப்பட்ட வார்த்தைகளை.

ஜென்மமார் கருவிலே வினைவிடந் தீண்டலால்
நன்மனு தத்துவ நாசமா யினவெலாந்
தின்மையே செயவருந் திறனுளேன் சிறியவோர்
நன்மையே னுஞ்செயத் திறனிலே னவையினேன். 60

(கு...ரை) ஜென்மம் ஆர் கருவிலே - பிறப்பில் அறிதற்கு அரிய கருவாய் இருக்கும்போதே; வினைவிடம் தீண்டால் - பாவமாகிய விஷம் தீண்டியபடியால்; தின்மையே செயவரும் திறன் உளேன் - தீமையே செய்யக்கூடிய தன்மை உள்ளவன்; நவையினேன் - குற்றமுடையவன் நான்.

நான்பிறந் ததுமுயிர்ச் சுமையினு னலியவோ?
கான்பிறங் கலினுறுங் கதழ்விடப் பாந்தளில்
ஊன்பிறங் குடல்வளர்த் துழலுவே னுணர்விலேன்
என் பிறந் தேன்கொலா மேழையிவ் வுலகினே. 61

(கு...ரை) நலியவோ - வருந்தவோ; நான் பிறங்கலின் உறும் - காடுகளடர்ந்த மலையில் உள்ள; கதழ் விடப் பாந்தளில் - வேகத்தையுடைய பாம்பைப்போல்; ஊன் பிறங்கு உடல் வளர்த்து - ஊன் பொருந்தி விளங்கு கின்ற இவ்வுடலை; கொல் - அசை.

•

அன்னையா யப்பனு யன்றுதொட் டின்றுமட்
டென்னையன் பொடுபுரந் தென்றுநன் றேதருந்
தன்னையே நிகர்வதோர் தம்பிரான் றயை மறந்
தென்னையே முப்பகைக் கீடழிந் தினைகுவேன். 62

(கு...ரை) என்றும் நன்றே தரும் - எப்பொழுதும் நன்மையே அருளு கின்ற; ஈடு அழிந்து - வலிமை கெட்டு.

கனிதரும் தருமெனக் கவலுநங் கருணைமன்
இனிதரும் பாதவித் தருவெறிந் திடுகென
முனிதரும் பொழுதினே முடுகுமேன் முடுகுவெந்
துனிதருங் கனல்சுடத் துடிதுடித் தயர்வலோ. 63

(கு...ரை) கவலும் - கவலையுற்றிருக்கும்; நம் கருணைமன் - நம் கருணை யுள்ள ஆண்டவன்; இனிது அரும்பாத இத் தரு எறிந்திடுக - இனிய கனியை உதவாத இம் மரத்தை வெட்டிவிடுக; என முனிதரும் பொழு தின் - என்று கோபப்படும் பொழுது; வெந்துனி - கொடிய வருத்தம்.

ஓரணுத் துணையுநல் லுணர்விலே னுலகுசெய்
கோரணிக் குளமுடைந் திடையுமோர் கோழையான்
ஆரணத் துறைபடிந் தயர்வுயிர்த் திலனினி
மாரணக் கடல்குளித் தயர்வனே மதியிலேன். 64

(கு...ரை) ஓர் அணுத் துணையும் நல் உணர்வு இலேன் - ஒரு அணு அளவு நல்ல உணர்ச்சி இல்லாதவன் யான்; உலகு செய்கோரணிக்கு- உலகம் செய்யும் கொடுமைகளுக்கு; கோரம்-கோரணி, கொடுமை; அயர்வு உயிர்த்திலன் - தளர்வு நீங்கினேனில்லை; மாரணக் கடல் - மரணக் கடல்; மதியிலேன் - புத்தியில்லாதவன் யான்.

அண்டர்நா யகனையே யவமதித் தலகையின்
தொண்டனாய்ச் செய்ததீ வினையெலாந் துன்னிமுன்
கொண்டலின் றிரளெனக் குழுமிநின் றூனுமால்
கண்டிலே னொடியான் புகுதவோர் கரவிடம். 65

(கு...ரை) அலகை - பேய்; துன்னி - நெருங்கி; கொண்டலின் திரள்- மேகக் கூட்டம்; உரனும் - முழங்கும்; ஆல் - அசை; ஓடியான் புகுத ஓர் காவு இடம் கண்டிலேன் - யான் ஓடி அடைக்கலம் புகுவதற்கு ஒரு மறைவிடம் காணவில்லை.

உரவுநீ ருததிசூ ழுலகெலா முய்யநம்
புரவலன் புதல்வனைப் புனிதநீ தியிலிவண்
வரவிடுத் தமையறிந் தினுமெனோ மடமையான்
பரவிநின் றருள்பெறுப் பாவமென் பாவமே. 66

(கு...ரை) உரவு நீர் உததி சூழ் - வலிமை பொருந்திய கடல் நீரால் சூழப்பட்ட; பரவி - துதித்து; அருள் பெறுப் பாவம் - அவன் அருளைப் பெறாத குற்றம்.

எப்பெரும் பதகரும் மிதயநொந் தேங்கிவந்
தப்பனே பிழைபொறுத் தருளுமென் றடையிலோர்
ஒப்பரும் புதல்வனுக் குருகிமன் னிப்பமென்
றிப்பெருஞ் சுருதிதந் திறைமறந் திடுவரோ. 67

(கு...ரை) எப்பெரும் பதகரும் - எப்பேர்ப்பட்ட பாவங்களும்; ஓர் ஒப்பு அரும் புதல்வனுக்கு உருகி - ஓர் ஒப்பற்ற குமாரனுக்கு உருகி மன் னிப்பம் - (அவன் பிழையை) மன்னித்து விடுவோம்; இப் பெரும் சுருதி தந்து - இந்தப் பெரிய வேத வாக்குத்தத்தம் கொடுத்துவிட்டு.

ஆற்றருஞ் சுமையினோ டல்லல்பல் விக்கினம்
கூற்றெனக் குமுறிநின் றுயிர்தெறக் குறுகினும்
ஏற்றுமுன் னிடுவதே கருமமிங் கேழையேற்கு
ஊற்றமாங் கடவுள்வேந் தொருபெருங் கருணையே. 68

(கு...ரை) கூற்று - யமன்; உயிர் தெறக் குறுகினும் - உயிரை அழிக் கும்படியாக வந்தாலும்; ஏற்றுமுன்னிடுவதே கருமம் - (அவற்றை யெல் லாம்) ஏற்றுக்கொண்டு முற்பட்டு நிற்பதே செய்யத்தக்க கருமமாகும்; கருணையே ஊற்றம் ஆம் - கிருபையே (எனக்குப்) பற்றுக்கோடு, வலிமை ஆகும்.

என்னவின் னனபல வின்னல்கொண் டிடையிடைத்
துன்னுநல் லுணர்வொடே சுமைசுமந் தலசியும்
முன்னவன் றிருவருட் டுணைமையான் முன்செலீஇச்
சொன்னவப் பனவன்வீ டணுகினன் றுருசிலான். 69

(கு...ரை) என்ன இன்னன பல - என்று இப்படிப்பட்ட பல வார்த் தைகளை; சுமை சுமந்து அலசி - மூட்டையைச் சுமந்துகொண்டு தள்ளாடி; முன் செலீஇ - முன்னே சென்று; பனவன் - வேதபாராயணன், வியாக்கி யானி; துருசிலான் - குற்றமற்றவன்.

மற்றிதே போலுமால் வாயில்கா வலன்விதப்
புற்றமெய்க் குரவன்வா ழுறையுளென் றுவகைபூத்
தற்றமென் னெனவினு யகநுழைந் தவணுறும்
நற்றவக் கிழவனைக் குறுகினு னவிலுவான். 70

(கு...ரை) மற்று - அசை; வாயில் காவலன் விதப்புற்ற மெய்க்குரவன் வாழ் உறையுள் இதேபோலும், என்று கூட்டுக. விதப்புற்ற - பாராட்டிக் கூறிய; குருவன் - குரு; அவண் உறும் - அங்கு வசித்த; நல் தவக் கிழவனை - சிறந்த தவத்திற்குரியவனை; குறுகினுன் - குறுகி முற்றெச்சம்.

உள்ளவோர் கடவுள்வேந் துலகயாத் திரிகனுன்
வள்ளனின் மொழியினுன் மறைபுலப் படும்வழி
தெள்ளிதி னுணர்வையங் கேகெனச் செப்பினுன்
கள்ளமில் வாயில்கா வலனெனக் கழறினுன். 71

(கு...ரை) உள்ள ஓர் கடவுள் - உண்மைப் பொருளாகிய, என்றும் உள்ளவராகிய ஒப்பற்ற கடவுள்; தெள்ளிதின் உணர்வை - தெளிவாக அறிந்துகொள்வாய்; அங்கு ஏகு - அங்குச் செல்வாயாக; கழறினுன் - சொன்னுன்.

கேட்டனு மறைவியாக் கியானிநீ கேவல
நாட்டியாத் திரிகனே? நன்றுநின் வரவெனு
வீட்டுளங் கங்குறும் விநயபா வனையெலாங்
காட்டுவான் வேதியன் கைபிடித் தேகினுன். 72

(கு...ரை) மறைவியாக்கியானி - வேத வியாக்கியானி; கேவல நாட்டு - நாசதேசத்து; வீட்டுள் அங்கு உறும் - அங்கே வீட்டினுள் இருக்கும்; விநய பாவனை - குறிப்பாக அறியக்கூடிய காட்சிகள்; வேதியன் கை பிடித்து - கிறிஸ்தியானுடைய கையைப் பிடித்துக்கொண்டு; கிறிஸ்தியான் கையில் வேதப் புத்தகத்துடன், வேதத்தைப் படித்துக்கொண்டே சென்றதனுல் வேதியன் என்றே பல இடங்களில் குறிக்கப்படுகின்றுன்.

அமார்க்கம்

ஆயிடை யொருபா லின்று மடுத்தவோர் வழிவந் தண்மி
ஏயபே ரழகு வாய்ந்த வீடேற்ற மதிலைத் தாண்டி
மாயசா லகனும் பூண்ட மாயவே டனுமென் றேது
தீயரோ ரிருவர் ஜீவ பாதையிற் றிருமி நின்றுர். 73

(கு...ரை) ஒரு பால் - நின்றும் - ஒரு பக்கத்திலிருந்து; அண்மி - சமீபித்து; மா யசாலகன் - மாயவேடன் என்னும் பெயர்கொண்ட இருவர் பக்க வழியாக அந்த ஜீவ பாதையில் வந்துசேர்ந்தார்கள்.

அங்கவர் தம்மைக் காணு வாத்தும விசாரி, நீவிர்
எங்குறை கின்றீர்? நும்பேர் யா? எது குறித்துச் செல்வீர்?
பங்கமி விடுக்க வாயில் வழிவராப் பான்மை? யென்னீர்
அங்கண்வா னகத்து வேந்த னாணையை யறியீர் போலும். 74

(கு...ரை) அவர் தம்மைக் காணு - அவர்களைக் கண்டு; எது குறித்துச் செல்வீர் - யாது கருதிச் செல்கின்றீர்; பங்கம் இல் - குற்றம் இல்லாத.

சேயுயர் கதியைக் கூட்டுஞ் செந்நெறி முகப்பு வாய்ந்த
வாயிலை விடுத்து வேறோர் வழிநுழை பவரெல் லாரும்
மாயமார் திருட ரென்று மறைமொழி வகுத்துக் கூற
நீயிரந் நியம மீறிப் புகுவது நீர்மைத் தன்றால். 75

(கு...ரை) செய் உயர் கதி - மிக உயர்ந்த மோட்ச பதவி; செந்நெறி முகப்பு வாய்ந்த - செம்மையான வழியின் முகப்பிலே அமைந்துள்ள; மாயம் ஆர் திருடர் - வஞ்சகம் நிறைந்த திருடர்; அந்நியமம் - அந்த வேத கட்டளை; நீர்மைத்து + அன்று - தகுதியல்ல.

என்னவாண் டுரைத்த லோடு மிருண்டவன் மனத்தர் யாங்கள்
மின்னென மிளிர்ந்து குன்றும் விண்மகி மையிலே தோன்றி
மென்னடை பயின்று மேலாம் விழுத்தவ வேடம் பூண்டேம்,
தொன்னெறி விடாது பற்றிச் சுருதிமார்க் கத்து வந்தேம். 76

(கு...ரை) இருண்ட வல் மனத்தர் - இருண்ட வலிய மனத்தை யுடைய அவ்விருவரும்; மின் என மிளிர்ந்து குன்றும் - மின்னல்போல் பிரகாசித்து மறைந்துவிடும்; மெல்நடை பயின்று - மெல்லிய (எளிய) நடையைக் கற்று; விழு தவ வேடம் - சிறந்த தவ வேஷம்; தொன்மை + நெறி - பழமையான வழி.

எட்டிரண் டறியார் போலு மெண்ணமொன் றின்றி வாயில்
விட்டிடை வழியிற் சேர்வோர் விட்புலத் தமரர் கோமான்
கட்டளை யிகந்து நின்ற கள்ளமார்க் கத்த ராய
துட்டரென் றிகழ்ந்து பேசத் துணிந்தனை தரும மன்றால். 77

(கு...ரை) எட்டு இரண்டு அறியார் போலும் - எட்டும் இரண்டும் பத்து என்று சொல்ல அறியாதவர் போல, கல்வி யறிவில்லாதவன் போல; எண்ணம் என்று இன்றி - யாதொரு யோசனையும் இல்லாமல்; விண்புலத்து அமரர் கோமான் - விண்ணுலகத் தேவர் தலைவன்.

சருக்கரை தின்று பித்தஞ் சாந்தமா மென்னில் கைத்த
கருக்கிளர் வேம்பு தின்று கழித்திடக் கருது வோர்யார்?
சுருக்கமிக் குறுக்கு மார்க்க மென்பது துணிந்து வந்தேம்;
நெருக்குறும் வாயில் சுற்றிச் சுழல்வதே நீர்மைத் தன்றால். 78

(கு...ரை) பித்தம் சாந்தம் ஆம் என்னில் - பித்த நோய் அடங்கிவிடும் என்றால்; கழித்திட - அப்பித்த நோயை நீக்கிவிட; ஆல் - அசை.

உற்பவ பேத மான வுபநதி பலவோ ராற்றிற்
பொற்புறப் பொருந்தி யேகிப் புணரியில் கலக்கு மாபோல்
அற்பத்திற் பேத மான அருநெறி யநேகம் வேத
விற்பத்தி நெறியைக் கூடி வீட்டில கடையு மன்றே? 79

(கு...ரை) உற்பவ பேதமான உபநதி பல - பல வேறு உற்பத்தி ஸ்தானங்களையுடைய பல உபநதிகள்; பொன்பு உற - அழகுற; புணரியில் - கடலில்; அற்பத்தில் பேதமான - அற்ப வித்தியாசம் உடைய; வேத விற்பத்திநெறி - வேதநூலில் காட்டப்பட்டுள்ள நெறி.

மார்க்கமிங் கெதுவா னாலு மனமொழி மெய்க ளாலே
பார்க்கொரு முதலாய் நின்ற பரமநா யகனைப் போற்றிப்
போர்க்குமெய்ஞ் ஞான வேட புராதன முறைசா திக்கும்
தீர்க்கரே யன்றோ மேலாஞ் சிற்சுக போகந் துய்ப்பார். 80

(கு...ரை) பார்க்கு ஒரு முதலாய் நின்ற - இவ்வுலகத்திற்கு ஆதி காரணப் பொருளாய் அல்லது தலைவராய் நின்ற; போர்க்கும் - தரித்துக் கொள்வதற்குரிய; தீர்க்கர் - தெளிந்த அறிவுடையவர்கள்; சிற்சுக போகம் துய்ப்பார் - ஞானத்தோடு இன்பத்தை அநுபவிப்பவர்கள்.

மாம்பயில் குரங்கு போல மார்க்கங்கள் தோறும் வாவித்
திரம்பயி லாத சிந்தை திரியவிட் டிடாது செவ்வே
உரம்பயி லுடமு போலு மொருதலை யாக முன்னோர்
பரம்பரை நெறியைப் பற்றிற் பயன்படு மிம்மை மாதோ. 81

(கு...ரை) வாவி - தாவித்; திரிந்து திரம் பயிலாத சிந்தை - உறுதிப் பயின்று பெறாத சிந்தையை; செவ்வே - செம்மையாக; உரம்பயில் - வலிமை பொருந்திய; உடமு - உடம்பு; முன்னோர் பரம்பரை நெறியைப்பற்றின்; நமது மூதாதையர் சென்ற பரம்பரை வழியைக் கடைப்பிடித்தால்; இம்மை பயன்படும் - இவ்வுலக வாழ்க்கை பயன்படுவதாகும்.

கண்ணையே கண்ணுக் கொண்டு காக்கின்ற விமையைப் போலப்
புண்ணிய மூர்த்தி யெல்லாப் புவனமும் புரக்கு மாட்சி
எண்ணலை போலு மெம்மூ ரொழுக்கினுக் கிசைய நின்ற
பண்ணவ ராய வெம்மை யொறுப்பரோ பரிவி லார் போல். 82

(கு...ரை) புவனம் - உலகம்; புரக்கும் - காக்கும்; எண்ணலை போலும். நீ ஆலோசித்துப் பார்க்கவில்லை போலும்; ஒறுப்பரோ - தண்டிப்பாரோ; எம் ஊர் ஒழுக்கினுக்கு இசைய நின்ற பண்ணவர் ஆய எம்மை, ஒறுப்பரோ? - எங்களுடைய வழியின் ஆசாரத்திற்கு ஏற்றவாறு நடந்துகொண்ட சிறப்புடையவர்களாகிய எங்களை; பண் - இசை, புகழ்.

வெவ்விட ருழத்த லின்றி வேறதர் பிடித்துன் னேடும்
ஒவ்வவர் துற்றே மென்னு வுள்ளுளே புழுங்கு கின்றாய்
அவ்வியம் இரும்பைத் தேய்க்கும் அரமென அரிதிற் பெற்ற
செவ்விய வாக்க மெல்லாஞ் சிதைக்கு மென் றறியாய்
[கொல்லோ. 83

(கு...ரை) வெவ் இடர் உழத்தல் இன்றி - கொடிய கஷ்டங்களுக்குட் பட்டு வருந்தாமல்; வேறு அதர் பிடித்து - வேறே வழியில் கூடி; அவ்வியம் - பொறாமை; ஆக்கம் - செல்வம், நன்மை; சிதைக்கும் - அழித்து விடும்; அறியாய் கொல் - அறியமாட்டாயோ; ஒ - அசை.

இந்நின்ற நிலையி லெம்மோ டிணையன்றி யேற்ற மில்லாய்
முன்னின்ற வழியு மெம்மின் முடுகுவா யல்லை யென்னுக்
கன்னின்ற நெஞ்ச வஞ்சக் கள்வர்தாம் புகலக் கேட்டு
வெந்நின்ற சுமடு நீத்த வேதியன் விளம்பலுற்றான். 84

(கு...ரை) இந் நின்ற நிலையில் - இப்பொழுது இருக்கின்ற நிலையிலே; எம்மோடு இணை இன்றி ஏற்றம் இல்லாய் - எமக்கு ஒப்பாவாயே அன்றி, எம்மினும் உயர்ந்தவன் ஆகமாட்டாய்; புகல - சொல்ல; வெந் நின்ற சுமடு - முதுகிலே இருந்த சுமையை; விளம்பல் உற்றான் - பின்வருமாறு சொல்வானானான்.

கண்ணிலான் கருத்தி லானோர் சித்திரங் கவினத் தீட்டும்
வண்ணமாம் புலவர் நீதி வாக்கிய மெடுத்துக் காட்டிப்
புண்ணிய பாவந் துய்க்கும் பலாபலம் புலப்ப டுத்தி
நுண்ணிய தருமம்நீவிர் நுவலுத லழகிற் றம்மா. 85

(கு...ரை) கண் இலான் கருத்து இலான் - கண்ணும் கருத்தும் இல்லாதவன்; கவின - அழகுண்டாக; நீவிர் நுவலுதல் - நீர் சொல்வது; அழகிற்று - அழகாய் இருக்கிறது, எதிர்மறை யிலக்கணை அழகாயில்லை என்றபடி.

தலப்பெரு மையுநீர் பூண்ட தவப்பெரு மையும்ஜந் மித்த
குலப்பெரு மையும்வீண் செல்வக் குப்பையான் மலிந்த கோலா
கலப்பெரு மையுமென் றின்ன கனத்திறம் கருதிற் கங்குல்
உலப்புற வொழியு மாபோ லொருங்கவிந் தொழியு மன்றே? 86

(கு...ரை) கோலாகலம் - ஆடம்பரம்; கங்குல் உலப்புற ஒழியும் ஆபோல - இரவு முடிய கனவிற் கண்ட காட்சி முடிவது போல; தலப் பெருமை முதலியன ஒருங்கே கெட்டு ஒழிந்துபோம் என்பது கருத்து.

அயிலெயிற் றரவுள் ளீட்டு மழல்விட மனைய நெஞ்சிர்!
குயிலுமிம் மாய சால கோலத்தின் குணங்க ளெல்லாம்
வெயின்முன் மஞ்சட் போல வெளிறுமாற் கால தண்டம்
பயிலுமப் பொழுதென் செய்வீர்? ஏழைகாள்! பாவம் பாவம். 87

(கு...ரை) அயில் எயிற்று - கூர்மையான பற்களையுடைய; உள் ஈட்டும் - உள்ளே சேர்த்துவைக்கும்; குயிலும் - (சிறப்பாகச்) சொல்லப்படுகின்ற; வெயில் மூன் மஞ்சட்போல வெளிறும் - வெயிலில் போடப்பட்ட அழகிய மஞ்சள் நிறம் வெளிறித் தோன்றுவதுபோல்.

கள்ளமி னெஞ்சு நெஞ்சிற் கலந்தமெய்ச் சொல்லுஞ் [சொல்லொத்
தெள்ளரு மொழுக்குந் தத்த முளக்கரிக் கிசைந்து ளாரே
வள்ளலெம் மிளங்கோ மான்செம் மலரடிச் சுவடு தோய்ந்த
ஒள்ளிய நெறிசென் றந்தத் துயர்பர கதியிற் சேர்வார். 88

(கு...ரை) கள்ளம் இல் நெஞ்சும் - கள்ளம் கபடு அற்ற மனமும்; சொல் ஒத்து என் அரும் ஒழுக்கும் - சொன்ன சொல்லுக்கு இசைய இகழப்படாத நல் ஒழுக்கமும்; உளக்கரி - மனச்சாட்சி; ஒள்ளிய நெறி சென்று - ஒளியின் வழியிலே சென்று; அந்தத்து - முடிவில்; உயர் பரகதியில் - மோட்சகதியில்.

முறைத்திறம் பிறழா நித்த முத்திசா தனமா யுள்ள
அறத்திறம் பயின்று தூய ராதல்விட் டகத்தை மூடிப்
புறத்தவ வேடம் பூண்டு நடித்தலான் றோலைப் போர்த்து
மறத்திறம் பயிலும் வேங்கை வன்றெழின் மானு மன்றே? 89

(கு...ரை) முறைத்திறம் பிறழா - முறை கெடாத; நித்தமுத்தி - அழிவில்லாத, நித்தியமாக உள்ள முத்தி; அகத்தை மூடி - பாவத்தை மறைத்து; ஆன் தோலைப் போர்த்து - பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டு; மறத்திறம் பயிலும் - கொலைத் தொழில் பழகுகின்ற; மானும் - ஒக்கும்.

வேட்டுவன் புதன்ம றைந்து விடாதுபுட் சிமிழ்த்தல் போலக்
காட்டுமித் தவவே டத்திற் கரந்துல கின்பங் கௌவுங்
கேட்டுளீர்! சுருதி யுண்மை கிளப்பினு முணரீர்; நன்மை
வீட்டுதி ரொன்னும் நீங்கா விழுமமே விழைந்து நின்றீர். 90

(கு...ரை) புதல் மறைந்து - புதருக்குள் மறைந்து; புள் சிமிழ்த்தல் போல - பறவையைப் பிடிப்பதுபோல; கரந்து - மறைந்து; கேட்டுளீர் - நாசத்திற்கு உட்பட்டவர்களே; நன்மை வீட்டுதிர் - நன்மை செய்வதை விட்டுவிடுகிறீர்கள்; நீங்கா விழுமம் - நீங்காத துன்பத்தை.

மருள்பரம் பரையி னோடு மறைநெறி மயங்கு மாயின்
இருணனி யியங்கும் வானத் திருங்கதி ரிரவி முன்னர்த்
தெருளிலா மனத்தீர்! நுங்கள் தீச்செயல் ஒருவி ராகி
அருள்வழிப் பட்டே மென்றலகந்தையின் மடமை யாமால். 91

(கு...ரை) இருங் கதிர் இரவி - ஒளியிற் சிறந்த கதிர்களையுடைய சூரியன்; தெருள் இலா மனத்தீர் - தெளிவில்லாத மனத்தையுடையவர்களே; ஒருவீராகி - விட்டு நீங்காமல்; அகந்தையின் மடமை - ஆணவத்தால் உண்டான மடமையாகும்.

இந்நிலம் புரந்து நிற்கு மிரக்ஷண்ய கிரியிற் றோன்றி
மன்னுபன் னதியு மொன்றாய் மருவியோர் முகமா யோடி
உன்னரும் பரமா னந்த வுததிபுக் கொடுங்கும்; நீர் சொல்
அன்னிய கான்யா றெல்லா மளறுபுக்கழுந்தும் அன்றே? 92

(கு...ரை) பன் நதியும் - பல நதிகளும்; ஒன்றாய் மருவி - ஒன்றாகச் சேர்ந்து; உன்ன அரும் - நினைப்பதற்கும் அரிய; பரமாநந்த உததி - பரமாநந்தமாகிய கடல், முத்தி; அளறு - நரகம்; அழுந்தும் - மறைந்துவிடும்.

ஆரணஞ் சொன்ன வாறிங் கடுத்தன னளிய னேன்யான்;
சோரமார்க் கத்து வந்து சுவரேறிக் குதித்தீர் நீவிர்;
காரணங் கருதி யென்னைக் கடைக்கணித் தருள்வர்; நம்மைக்
கோரவெஞ்சிறையி லுய்ப்பர் முடிவிலெங் கொற்ற வேந்தன். 93

(கு...ரை) ஆரணம் சொன்ன ஆறு - வேத நூல் கூறியபடியே; கோர வெம் சிறையில் - பயங்கரமான கொடிய சிறையில்; எம் கொற்ற வேந்தன் - எமது வெற்றி வேந்தன்; முடிவில் உய்ப்பர் எனக் கூட்டுக.

வேதிய ரல்லீர்; கள்ள வுள்ளத்தீர்; விபுத ராயன்
ஆதரம் பெற்றீ றென்றற் கடையாளம் யாது மில்லீர்;
கோதொரீஇ நன்மை கூடுங் குணமுமின் றாத லாலே
வேதனை யுழக்க நின்றீர்; வேறினிப் புகல்வ தென்னே. 94

(கு...ரை) வேதியர் அல்லீர் - நீங்கள் வேத விதிப்படி நடப்பவர்கள் அல்லர்; விபுத ராயன் - சர்வ வியாபகமாய் இருக்கும் இறைவனது; ஆதரம் - அன்பு, ஆதரவு; கோது ஒரீஇ - தீமையை விட்டு நீங்கி; வேதனை உழக்க நின்றீர் - வேதனைப்படவே இருக்கின்றீர்கள்.

பொருளிலார்க் கில்லை யிந்தப் பூவுல கதுபோல் யாண்டும்
அருளிலார்க் கில்லா தாகு மவ்வுல கென்ன வான்றோர்
தெருளுரை யேனுங் கொண்டு தேடலீர் அருளை; வாளா
இருளுளா ரொளியைப் பேணு ரென்பது சரத மாமால். 95

(கு...ரை) ஆன்றோர் - அறிஞர், ஈண்டு வள்ளுவர்; தெருள் உரை - தெளிந்த உண்மை; அருளை தேடலீர் - அருளைத் தேடவில்லை; இருள் உள்ளார் - இருளில் இருப்பவர்கள்; சரதம் - உண்மை.

மறங்குலா மனத்தீர்! இன்னே திரும்புமின்; மாபின் ஞானத்
திறங்குலா மறுமா னத்தின் றிரவியங் கொண்மின்; போர்த்த
புறங்குலாந் தவவே டத்தைப் போக்குமின்; புனித மார்க்கத்
தறங்குலாம் விரத சீல மகத்துற வநுட்டித் துய்ம்மின். 96

(கு...ரை) மறம் குலாம் மனத்தீர் - பாவம் நிறைந்த மனத்தை உடையவர்களே; இன்னே திரும்புமின் - இப்பொழுதே மனந்திரும்புங்கள்; புறம் குலாம் - புறத்தே பொருந்திய; அறம் குலாம் விரதசீலம் - அறத்தோடு பட்ட விரதமாகிய நல்லொழுக்கம்; உய்மின் - மீட்பு அடையுங்கள்.

காயத்தை விடுமுன் னுள்ளக் கள்ளத்தை யொருவி, மேற்கொள்
மாயத்தை யுதறித், தூய வளமலி பரம காணுன்
தேயத்தை நோக்கிச் சென்று, ஜீவமா நதியின் புண்ய
தோயத்தைப் பருகி யென்றுந் தொலைவிலா வின்பந்
[துய்ம்மின் 97

(கு...ரை) காயத்தை விடு முன் - இந்த உடலை விட்டுப் பிரியுமுன்; மேற்கொள் மாயத்தை - மேற்கொண்டுள்ள மாய்மால வேஷத்தை; புண்ய தோயத்தை - புண்ணிய தீர்த்தத்தை; என்றும் தொலைவு இலா - என்றும் நீங்குதல் இல்லாத; துய்ம்மின் - அனுபவியுங்கள்.

இற்றிதே யமையு மேனும் மிட்டமென் றியம்பி வேத
நற்றவன் வழியைக் கூடி நனிவிரைந் தேகலோடும்
சொற்றிற மறியா ராய சோரமார்க் கத்தர் தம்மில்
ஏற்றிவன் றுணிவென் றெள்ளி யெதிருரை யாது சென்றார். 98

(கு...ரை) இற்றிதே அமையுமேனும் இட்டம் - இத்தன்மையாகவே நாங்கள் இருப்போம் என்றாலும், உங்கள் இஷ்டம்; சொல் திறம் அறியார் - சொல்லின் தன்மை அறியாதவர்; ஏற்று இவன் துணிவு - இவனுக்கு எவ்வளவு துணிவு இருக்கிறது; எள்ளி - இகழ்ந்து; எதிர் உரையாது - எதிர்த்துப் பேசாமல்.

குக்கல்வால் மட்டை கட்டி நிமிர்ப்பினும் கோணல் தீரத்
தக்கதோ? மூட ருள்ளத் தன்மையு மன்ன தேயாம்;
பக்குவ நிலத்தி லன்றிப் பாழ்படு கருங்கற் பாறை
உக்கவை நல்வித் தேனும் பயன்படா தொழியு மன்றே. 99

(கு...ரை) குக்கல் - நாய்; அன்னதே - அப்படிப்பட்டதே; உக்கவை - உகுத்த (விதை) சிந்தின; நல் வித்து எனும் - நல்ல விதையாக இருந்தாலும்.

களங்கமின் மதியைக் காணுங் கண்ணிலா வவர்தம் பாட்டில்
விளங்குமுட் பன்றி போல விடாப்பிடி யாக வோடி
வளங்கெழு தடத்தை நீங்கி வருத்தமென் றுரைபெற் றோங்கு
துளங்கலில் கிரியைக் கிட்டி யேங்கினர் துணுக்க முற்றார். 100

(கு... ரை) களங்கம் இல் மதி - குற்றம் அற்ற சிறந்த புத்திமதி; மதி - சந்திரன்; மதி என்றதற்கேற்பக் காணும் கண் என உருவகித்தார்; தம் பாட்டில் - தமது மனப் போக்குப்படி; விடாப் பிடிக்கு முட் பன்றியை உவமை காட்டினர். வளம் கெழு - வளம் பொருந்திய; வருத்தம் என்று உரை பெற்று ஓங்கு - உபாதி என்று சிறப்பாகச் சொல்லப்படுகின்ற; துளங்கல்இல் கிரி - அசைவில்லாத மலை.

வெருவருங் காட்சித் தாய வெற்பிதன் மீது செல்லும்
அருநெறி பிடித்தி யாரிவ் வவஸ்தையை யடைவ ரென்றுப்
பெருவழி யிரண்டு பாலும் பிரிந்துபோ வதைக்கண் டந்தோ
இருவரும் பிரிந்து சென்றங் கிடைவழிப் பிணமாய்ப் போனர். 101

(கு...ரை) வெரு வரும் காட்சித்து ஆய வெற்பு - பயங்கரமான தோற்றத்தையுடைய மலை; அரு நெறி - செல்லுவதற்கு அரிய வழி; யார் இவ் அவஸ்தையை அடைவர் - யார் இந்தக் கஷ்டத்தை அடையமுடியும்; அந்தோ - ஐயோ; இடைவழிப் பிணமாய்ப் போனர் - அங்கே இடை வழியிலே பிணமாய்ப் போனர்கள்.

பிரிந்தவப் பெருவ ழிக்குப் பெயர்நாசம், மோசம், என்பர்;
விரிந்தமோ சத்தின் மாய சாலகன் விழுந்தான்; வேடம்
புரிந்தவன் நாச மெய்திப் புதையிருண் மலிந்த கானில் 102
திரிந்திட ருழந்தான்; பின்னர்த் திரும்பின ரில்லை யாண்டும்.

(கு...ரை) பிரிந்த அப் பெரு வழிக்கு - (அவர்கள் இருக்கும்) பிரிந்து சென்ற அந்தப் பெரிய வழிக்கு; புதை இருள் - மூடிய இருள்; கானில் - காட்டில்; திரிந்து இடர் உழந்தான் - அலைந்து திரிந்து கஷ்டப் பட்டான்; திரும்பினர் இல்லை - திரும்பி வந்து சேரவில்லை.

பேசரும் வருத்தத் துன்பம் பிறங்கினும் பிதாவின் சித்தம்
ஈசனர் செயலெல் லாமென் னீடேற்றத் திசையு மென்று
நேசமோ டமைய வேண்டும்; நிலைபிச கிடுவ ராயின்
நாசமோ சம்பொல் லாங்கு நரகும்வாய் திறக்கு மன்றே? 103

(கு...ரை) பேச அரும் - சொல்ல முடியாத; பிறங்கினும் - பெருகினலும்; என் ஈடேற்றத்து இசையும் - என் இரட்சிப்புக்கு இசைந்ததே ஆகும்; என்று - என்று எண்ணி; நிலை பிசகிடுவர் ஆயின் - உறுதியான அந் நிலை தவறிவிட்டால்.

இடையில்வந் திடையிற் போன விருவர்தங் கதியீ தாக
உடையவன் திருவாக் கொன்றே யுறுதுணை யாகக் கொண்டு
நடைவழி பிடித்துச் சென்ற நலங்கிளர் மறைவ லாளன்
மிடைதரு வருத்த மென்னும் வியன்கிரி யருகர் வந்தார். 104

(கு...ரை) இடையில் வந்து இடையில் போன இருவர்-மாயா சாலகன், மாயா வேடன்; உடையவன் - எல்லாப் பொருள்களையும் சொந்தமாக உடையவன், இறைவன்; நலம் கிளர் - நன்மையே விளங்குகின்ற; மிடை தரு - தூறுகள், செடிகள் செறிந்த; அருகர் - பக்கம்; வியன் கிரி - பெரிய மலை; வருத்தம் என்னும் வியன்கிரி - உபாதி மலை.

ஜீவ புஷ்கரிணி

அங்கணோர்சிறை மீக்கிளர்ந் துயர்விசும் பணவி
மங்கு றோய்ந்தெழின் மறிதூரத் தண்ணிழன் மருவிக்
கொங்கு யிர்த்துவான் மீனெனப் பன்மலர் குழூஉம்
பொங்க ரொன்றுள தாதுலர் புகலிடம் போலும். 105

(கு...ரை) அங்கண் ஓர் சிறை - அங்கே ஒரு பக்கத்தில்; மீ + கிளர்ந்து மேலோங்கி; உயர் விசும்பி அணவி - உயர்ந்தவான் அளாவி; மங்குல் தோய்ந்தும் - மேகங்கள் படிந்து; கொங்கு உயிர்த்து - வாசனை வீசி; பொங்கர் சோலை; அதுலர் - ஏழைகள்.

புண்ணி யன்றிரு வடிமலர்க் கன்புசெய் புனிதர்
உண்ணி கழ்ந்தமெய்ப் பக்தியி னுள்ளிய செயல்போல்
வண்ண வான்றருக் குலமலர் நறுமண மலிந்து
கண்ண கன்புவி முழுவது நறுங்கடி கமழும். 106

(கு...ரை) உள் நிகழ்ந்த - உள்ளத்தின்கண் நிகழ்ந்த; வண்ண - அழகிய; வான் தரு - உயர்ந்த மரங்களினது; கண் அகல் புவி - இடம் அகன்ற பூமி; நறும் கடி - நல்ல வாசனை.

கண்ணும் உள்ளமுங் களிப்புறக் கடிகமழ் காவின்
எண்ண ரும்பல காட்சிகண் டிதயநெக் குருகிப்
புண்ணி யம்பொலி ஜீவபுஷ் கரிணியின் புனிதத்
தண்ண றும்புன லருந்துவான் வேட்டவண் சார்ந்தான். 107

(கு...ரை) இதயம் நெக்கு உருகி - உள்ளம் நெகிழ்ந்து; புனித - பரிசுத்தமான; தண்நறும் புனல் - குளிர்ந்த நறுமணம் பொருந்திய நீரை; அருந்துவான் வேட்டு - பருக விரும்பி; அவண் சார்ந்தான் - அங்கு அடைந்தான்.

ஆரணத்துறை யணைந்துநின் றூழ்ந்தவம் மடுவின்
கார ணத்தையுங் காவலன் கருணையி னிறைந்த
பூர ணத்தையும், நித்திய ஜீவனிற் பொருத்தி
மா ரணத்தொட ரறுத்திடு மாண்பையு மதித்தே. 108

(கு...ரை) ஆரணம் துறை - வேதமாகிய துறையில்; அம் மடு - அந்த நீர் நிலை; மாரணத் தொடர் - மரணத் தொடர்பு; மா ரணத்தொடர் எனப் பிரித்து பெரிய ரண வேதனையின் தொடர்பு, நரக வேதனை, எனவும் பொருள் தரலாம்.

சங்கை யின்றியுட் டழைத்தபத் தியின்விசு வாசச்
செங்கை யாரவத் திவ்விய தீர்த்தத்தை முகந்து
பொங்கு மாவலிற் பருகினன்; அன்புளம் பூப்பத்
திங்க ளிற்றிகழ்ந் ததுமுகஞ் செழித்தது ஜீவன். 109

(கு...ரை) சங்கை இன்றி - சந்தேகம் இல்லாமல்; ஆர - நிறைய; பொங்கும் ஆவலின் - மிகுந்த ஆசையோடு; முகம் திங்களில் திகழ்ந்தது - முகம் சந்திரனைப்போல் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

மாகந் தீர்ந்திவண் மருவிய ஜீவநீர் மாந்தி
ஆகந் தோய்தலும் ஆத்தும விடாய்தணிந் தாறாத்
தாகந் தீர்ந்தது; தீர்ந்தது பசிப்பிணி; சமழ்த்த
சோகம் தீர்ந்தது; தீர்ந்தது; நரஜென்ம தோடம். 110

(கு...ரை) மாகம் தீர்ந்து இவண் மருவிய ஜீவநீர் - விண் உலகத்தை விட்டு இங்கு வந்து பொருந்திய ஜீவ தண்ணீர்; மாந்தி - குடித்து; ஆகம் - உடல்; ஆறாத் தாகம் தீர்ந்தது - தணியாத தாகம் நீங்கிற்று; சமழ்த்த சோகம் - அழுத்தின வருத்தம்; நர ஜென்ம தோடம் - மானிடப் பிறப்பின் தோஷம்.

அருந்து நீரெனத் தெளிந்தது சித்தமங் கவற்குப்
பொருந்த கப்புறக் கருவிகள் புனிதமாய்ப் பொலிந்த;
வருந்து சாவுமின் றுயதது; புத்துயிர் மருவித்
திருந்தி னன்மறை வாணன்மற் றியாதினித் தெரிப்பாம். 111

(கு...ரை) சித்தம் அங்கு அவற்கு அருந்து நீர் எனத் தெளிந்தது - அப்போது கிறிஸ்தியானுக்கு மனம் தான் அருந்திய நீர் போலவே தெளிவு அடைந்தது; புத்துயிர் மருவி - புத்துயிர் பெற்று; மறைவாணன் - வேதிய னாகிய கிறிஸ்தியான்.

இனைய சீலனு யாங்கொரு தருநிழ லிருந்து
சினைய லர்ந்தபூ நறுவிரை யளைந்துலாந் தென்றல்
வினைய மோடுதன் மேனியிற் படியவிண் ணவர்கோன்
புனைமலர்க்கழல் தொழுது தோத் திரம்பல புரிந்தே. 112

(கு...ரை) இனைய சீலனுய் - இப்படிப்பட்ட ஒழுக்கமுடையவனுய்; தருநிழல் - மரநிழல்; சினை அலர்ந்த பூ நறுவிரை - கொப்பிலே மலர்ந்த பூக்களின் நறுமணம்; வினயோடு - மெதுவாக; புனைமலர்க் கழல் - அழகிய தாமரை மலரை யொத்த திருப்பாதங்களை.

இத்த னைக்குநா னருகனோ? வென்னையீ டேற்றச்
சித்தம் வைத்தனர் தம்பிரான்; சிந்தனை யினியென்?
வித்த கத்திரு வாவிநீ ரருத்திய விதத்தில்
எத்த னைக்கதி கங்கலம் பெற்றன னென்று. 113

(கு...ரை) சிந்தனைக்கு நான் அருகனோ - இவ்வளவு கடவுளின் அருளைப் பெறுவதற்கு நான் பாத்திரனோ; வித்தகத் திருவாவி நீர் - ஞானமாகிய இந்த பரிசுத்த தடாகத்தின் நீர்; எத்தனைக்கு அதிக நலம் பெற்றனன் - எவ்வளவு அதிகமான நன்மையைப் பெற்றேன்.

வள்ளல் நம்குரு ராயனைச் சிலுவைமண் மேட்டிற்
கள்ள மில்லகக் கண்கண்ட காட்சியைக் கருதி
அள்ளி யன்பலர் தொடுத்தினி தமைத்ததே வாரம்
பிள்ளை நீர்மையிற் புனைந்தனன் திருவடி பிறங்க. 114

(கு...ரை) கள்ளம் இல் அகம் கண்கண்ட காட்சியைக் கருதி - வஞ்சகம் இல்லாத அகக்கண் கொண்டு கண்ட காட்சியை மனதில் தியானித்து; அன்பு அலர் அள்ளித் தொடுத்து - அன்பாகிய மலர்களைச் சேர்த்துத் தொடுத்ததாகிய தேவாரப் பாடல்களை; பிள்ளை நீர்மையில் - சிறு குழந்தை போன்ற களங்கமற்ற சிந்தையுடன்.

விசுவாசக் காட்சி

கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள் பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே. 115

(கு...ரை) கள்ளம் உறும் கடையேனும் - வஞ்சகம் நிறைந்த கடைப்பட்டவனாகிய அடியேனும்; உகந்து அருள் பொழியும் - விரும்பி என்மீது தன் அருளைப் பொழிகின்ற; விமல லோசன நிதியை - பரிசுத்தமான கண்களையுடைய பொக்கிஷத்தை; உலவாத - அழியாத.

படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக
முடிசாய்த்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின் மிசைக் கண்டேனே. 116

(கு...ரை) படிசாய்த்த - பூமியிலே உண்டான; திருமேனி வதைந்து - அழகிய உடல் வாதைப்பட்டு; இழி செங்குருதி உகவழிந்து ஓடும் - இரத்தம் சொரிய: மூதலகை - பழமையான பிசாசு; கொடிசாய்த்த - சாத்தானின் கொடியைக் கீழே தள்ளின.

பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருளாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த
சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவை மிசைக் கண்டேனே. 117

(கு...ரை) பொய்த்திருக்கும் - பொய்யும் திருக்கும்; எத்திருக்கும் உடையேமை - எல்லாவிதமான கோணல்களும் உடைய எம்மை; சித்து இருக்கும் செழும் தவனை - பலவகைச் சித்துக்களும் பொருந்தியிருக்கும் பெரும் தவமுடையவனை.

மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாம்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் றனித்தாயைத்
தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே. 118

(கு...ரை) மூவினை - படைத்தல், காத்தல், அழித்தல்; திரிகரணம் - மனம், மொழி, மெய்; ஏத்த அரிய - துதித்தற்கு அரிய; தீவினைக்கு ஓர் அரும் மருந்தை - தீவினையைப் போக்குதற்குரிய ஒப்பற்ற அருமையான மருந்தை.

மூவாத முதலவனை முதுசுருதி மொழிப் பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்துஞ்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே. 119

(கு...ரை) மூவாத - மூப்பு, அழிவு இல்லாத; முது சுருதி - பழமை யான வேதம்; ஓவாத - நீங்காத; தனு எடுத்து துஜம் கட்டும் - தன் உடலையே கம்பமாக நட்டு அதில் வெற்றிக் கொடி கட்டும்.

உபாதி மலை

கஞ்சமலர்ப் பாதமிரு கண்கலுழி யாற்கழுவிச்
செஞ்சொன்மலர்ப் பாமாலைத் தேந்தொடைய லைச்சேர்த்தி
அஞ்சலித்துப் போற்றியருள் வேண்டிநின் றங் காவலுடன்
நெஞ்சாரப் புல்லிவழி கூடினு னேர்கருதி. 120

(கு...ரை) கஞ்சம் - தாமரை; இரு கண் கலுழி - இரண்டு கண்களி லிருந்தும் வழிந்தோடும் நீரால்; தேந்தொடையல் - இனிய (பா) மாலை; அஞ்சலித்துப் போற்றி - வணங்கித் துதித்து; நெஞ்சு ஆரப் புல்லி - மன விருப்பத்துடன் தழுவிக்கொண்டு; ஏர் கருதி - அழகிய மோட்சவீடாகக் கருதி; வழி கூடினன் - தன் வழிகூடிச் சென்றான்.

காரார்பூங் காவகத்தின் கண்ணூர்நி ழற்சுகமுஞ்
சீரார்ந றுஞ்சுனையின் றேம்படுதெண் ணீர்ப்பயனும்
ஏராருந் தூயவி ளங்காலின் றேற்றரவும்
நேராயு ளத்திற்பொ றித்து நெறிகூடினன். 121

(கு...ரை) காரார் பூங்கா அகத்தின் கண் - மேகங்கள் பொருந்திய பூஞ் சோலையின் உள்ளே; கண் ஆர் நிழல் கீழ் - இடம் அகன்ற நிழலின் கீழ்; தேம்படு - இனிமை பொருந்திய; வர் ஆரும் - அழகுபொருந்திய; இளங்கா - இளமரச்சோலை; தேற்றரவு - ஆறுதல்; பொறித்து - பதித்து.

செல்வான்வ ழிமறித்துச் சீறிவிட முள்ளெயிற்றுக்
கொல்வாள ரவங்கு றுக்கெதிர்ந்த கொள்கைப்போல்
தொல்வாரி திப்புவியில் தொக்க பெருந் துன்பமெல்லாம்
மல்வாய்த்து நின்றம லையடிவா ரத்தணைந்தான். 122

(கு...ரை) செல்வான் - அங்ஙனம் செல்பவனாகிய அவன், வினையா லணையும் பெயர்; விடம் முள் எயிற்று கொல்வாள் அரவம் - விஷம் பொருந் திய முள்போன்ற பற்களையுடைய, கொல்லும் தன்மை பொருந்திய பிரகாச மான தோற்றத்தையுடைய பாம்பு; தொல்வாரிதி புவி - பழமையான கடல் சூழ்ந்த இப்புவியில்; மல்வாய்த்து - வளமாகப் பொருந்தி.

அவ்வசலந் தன்னைய றியாதார் யாருமில்லை;
கௌவைநீர் வேலி புடைவளைந்த காசினியில்
ஒவ்வொருவ ருள்ளத்து யர்வேயு யர்வன்றிச்
செவ்வேமட் டிட்டளவு செப்பரிது, தேருங்கால். 123

(கு...ரை) அவ் அசலம் தன்னை - அந்த மலையை; கௌவை நீர் வேலி - ஆரவாரம் செய்யம் கடல்நீராகிய வேலி; புடை வளைந்த - சுற்றிலும் உள்ள; செவ்வே - செவ்வையாக, நன்றாக; மட்டு இட்டு - அறுதியிட்டு; தேருங்கால் - ஆராய்ந்து பார்த்தால்.

தொன்மையுல கிற்பாவந் தோன்றியநாட் டோன்றியெங்கும்
திண்மைபெரு கப்பெருக வோங்கிச்செ ருக்கடைந்து
வன்னமிகு துன்பம்ம னக்கவலை துக்கமெனுந்
தன்மைத்த னிச்சிகர மூன்றுத டித்தனவால். 124

(கு...ரை) செருக்கு அடைந்து - கர்வம் கொண்டு; வன்மை மிகு துன்பம் மனக்கவலை துக்கம் எனும் தன்மை - வலிமை மிகுந்த துன்பம், கவலை, துக்கம் என்னும் தன்மையுடைய; தனிச் சிகரம் மூன்று - ஒப்பற்று உயர்ந்த மூன்று சிகரங்கள்; ஆல்-அசை.

கல்லாயி ளக்கமின்றித் தீயவினைக் காடுசெறிந்து
எல்லோன் சுடர்விளக்கம் இன்றாகி யெப்புறமும்
அல்லாயி ருள்குழுமித் தூர்க்குணமுட் பூண்டளவிப்
பொல்லாத வல்லிதயம் போன்றுளதப் பூதரமே. 125

(கு...ரை) இளக்கம் இன்றி கல்லாய் - மெத் தென்றில்லாமல் எங்கும் கல் ஆகி; செறிந்து - நெருக்கி; எல்லோன் - சூரியன்; அல் - இருள்; தூர்க் குணம் முள் பூண்டு அளவி - தூர்க்குணமாகிய முட்செடி எங்கும் நிறைந்து; பூதரம் - மலை.

வட்டமிடுங் கிட்டிவரும் வந்துவந் தச்சுறுத்தும்;
கட்டம் விளைக்குங் கடுகடுக்கும்; கௌவியுயிர்
நட்டஞ்செ யும்பொல்லார் நல்லாரென் றோராத
துட்டவி லங்கனந்தந் தொக்கதந்தச் சூழலே. 126

(கு...ரை) வட்டமிடும் - சுற்றிலும் வளைந்துகொள்ளும்; வந்து வந்து அச்சுறுத்தும் - வந்து வந்து பயமுறுத்தும்; கௌவி - வாயினால் கௌவி; உயிர் நட்டம் செயும் - உயிர்ச்சேதம் விளைக்கும்; ஓராத - எண்ணிப் பாராத; தொக்கது - சேர்ந்துள்ளது; சூழல் - குன்று, சுற்றுப்புறம் என்றும் கொள்ளலாம்.

துனியெலா மொருங்கு கூடி மலையெனத் தொடரு மேனும்
பனியெனப் படுமால் தூய பார்த்திவ னருளுண் டாயின்
இனியிடைந் தேகல் நன்றன் றிபலுமட்டாக முன்னே
தனியெதி ரூன்றிப்போதல் தகவதே தரும மாமால். 127

(கு...ரை) துனி - துன்பம்; மலை போல துன்பம் வந்தாலும் இறைவன் அருள் கூடுமாயின், பனிப்போல் நீங்கிவிடும், என்னும் கருத்து அழகாக அமைக்கப்பட்டுள்ளது; இடைந்து - தடைப்பட்டு; ஏகல் - பின்வாங்கிச் செல்வது; எதிர் ஊன்றி - எதிர்த்து நின்று; தகவு - தகுதி.

என்றின வாவி சாரி யெண்ணமிட் டிருண்ட கானிற்
பொன்றிடர் வருவ தேனும் புரவலன் புரப்ப ரென்னு
ஒன்றியாய்ச் செல்லுங் காலை யொருதிருத் தேவா ரத்தை
நன்றியோ டுள்ளிப் பண்ணோ டிசைபெற நவின்று போனான். 128

(கு...ரை) என்று இன்ன ஆ - என்று இந்த விதமாக; விசாரி - ஆத்மீக ஆராய்ச்சியில் ஈடுபட்டவன்; கான் - காடு; பொன்று இடர் - உயிர்போவதற்குக் காரணமாகிய துன்பம்; புரவலன் புரப்பர் - இறைவன் காப்பார்; என்னு - என்று (உறுதியாய்) எண்ணிக்கொண்டு; உள்ளி - நினைத்து; நவின்று - சொல்லி, பாடிக்கொண்டு.

தேவாரம்

சத்தாய் நிஷ்களமா யொரு சாமிய மும்மிலதாய்ச்
சித்தா யானந்தமாய்த் திகழ் கின்றதி ரித்துவமே
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவ னென்பவந்தீர்ந்
தத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே. 129

(கு...ரை) சத் - உண்மைப் பொருள்; நிஷ்களம் - இடம் அற்ற பொருள், சர்வவியாபகம்; சாமியம் - ஒப்பு; சித் - அறிவு; எத்தால் - எதனால்; நாய் அடியேன் - நாய்போன்ற இழிகுணமுடைய நான்; அத்தா - அப்பனே.

எம்மா விக்குருகி யுயி ரீந்துபு ரந்ததற் கோர்
கைம்மா றுண்டுகொலோ கடை காறுங் கையடையாய்ச்
சும்மா ரக்ஷணைசெய் சொல்சு ந்தரம் யா துமிலேன்
அம்மா னுன்னையல்லா லெனக்கார் துணை யாருறவே. 130

(கு...ரை) எம் ஆவிக்கு உருகி - என்னுடைய ஆவியின் ஈடேற்றத்தின் பொருட்டு மனம் உருகி; உயிர் ஈந்து - உயிரைக் கொடுத்து; கடை காறும் - முடிவுவரை; கையடையாய் - அடைக்கலப் பொருளாக; ரட்சணை செய் சொல் சுந்தரம்யாதும் இல்லேன் - என்னை நீ ரட்சி என்று சொல்வதற்குரிய உரிமை யாதும் இல்லாதவன்; அம்மான் - அழகிய மகான், பெருமை பொருந்தியவன்.

பித்தே றிச்சுழலும் ஜெகப் பேய்பிடித் துப்பவத்தே
செத்தே னுன்னருளாற் பிழைத் தேன்மறு ஜென்மமதாய்
எத்தோ டங்களையும் பொறுத் தென்றுமி ரங்குகவென்
அத்தா வுன்னையல்லா லெனக்கார் துணை யாருறவே. 131

(கு...ரை) பித்து ஏறிச் சுழலும் - பைத்தியம் பிடித்து மனம் சுழல்வதற்கு ஏதுவாகிய; ஜெகப் பேய் - உலகமாகிய பேய்; பவத்தே செத்தேன் - பாவத்திலே விழுந்து செத்துப்போனேன்; எத் தோடங்களையும் - (யான் செய்த) எல்லாப் பிழைகளையும்; என் அத்தா - என் தகப்பனே; உறவு - நண்பர்.

இன்னிசை பாடி யேகு மேல்வையி னிரண்டு பாலுந்
துன்னிய புதரி னூடே சுருங்கிய நெறியின் பாங்கர்
மன்னிரு கோர சிங்க மறிந்திடு நிலைகண் டேங்கித் 132
தன்னிலை கலங்கி நெஞ்சந் துணுக்குறீ இத் தமியன் றேர்வான்.

(கு...ரை) இன்னிசை பாடி - (இவ்வாறு) இனிமையான தேவாரப் பாடலைப் பாடிக்கொண்டு; துன்னிய - நெருங்கிய; புதர் - செடி; சுருங்கிய நெறியின் பாங்கர் - ஒடுக்கமான வழியின் (இரு) பக்கத்திலும்; மன்று - பொருந்தியுள்ள; தேர்வான் - ஆலோசிப்பான்.

ஆங்கவர் கண்டு சொற்ற வடுந்திறல் வயவெஞ் சீயம்
ஈங்கிவை போலும்; என்கண் எதிர்ப்படு மிரண்டு மெஞ்சித்
தூங்குவ வல்ல; நின்று துயல்வரு கின்ற; யாண்டும்
பாங்குற வகலத் தக்க பரிசெது மின்று பார்க்கில். 133

(கு...ரை) சொற்ற - சொன்ன; அடும் திறல் வயம் வெம்சீயம் - கொல்லும் தன்மையுடைய வெற்றி பொருந்திய கொடிய சிங்கம்; எஞ்சி - (வலிமை) குறைந்து; நின்று துயல்வருகின்ற - நின்று அசைகின்றன; பாங்கு - பக்கத்திலே; உற அகலத்தக்க - நெடுந்தூரம் நீங்கிச் செல்வதற்கு ஏற்ற; பரிசு எதும் இன்று - வழி ஒன்றும் இல்லை.

ஆற்றெதிர்ப் பட்ட துன்புக் களவிலே; யவற்றால் யானோர்
காற்றெதிர்ப் பட்ட பூளை யாயினன்; கருணை வேந்தன்
தேற்றெதிர்ப் பட்ட தாலோர் தீங்கின்றி வந்தேன்; ஈண்டிக்
கூற்றெதிர்ப் பட்டேன்; வாணாள் இன்றொடுங் குறுகிற் றேயோ? 134

(கு...ரை) ஆற்று எதிர்ப்பட்ட துன்புக்கு அளவு இலே - வழியிலே நேரிட்ட துன்பங்களுக்கு ஒரு அளவு இல்லை; காற்று எதிர்ப்பட்ட பூளை ஆயினேன் - காற்றிலேபட்ட பூளைச் செடியின் பூப்போல், அது காற்றிலே பறந்து விடும்; தேற்று எதிர்ப்பட்டதால் - தேறுதல் எனக்குமுன் நின்றதால்; ஈண்டு இக்கூற்று எதிர்ப்பட்டேன் - இப்போது இந்த யமனுக்கு எதிரில் வந்தேன்; வாணாள் இன்றொடும் குறுகிற்றேயோ - ஆயுள் இன்றோடு முடிந்ததோ?

நேருறத் துணிந்து செல்லின் நினைப்பதன் முன்னம் பீறிக்
கோரவெம் பகுவா யார விழுங்கிடும் கொள்கைத் தம்மா!
ஆரிவற் றிடையிற் சென்றிங் காவிபெற் றுய்வர்? இந்தக்
காரியங் கண்டன் றோவவ் விருவருங் கடுகி மீண்டார். 135

(கு...ரை) நேர் - இதன் எதிரில்; உறத் துணிந்து செல்லின் - மிகவும் துணிந்து சென்றால்; வெம் கோரப் பகுவாய் - கொடிய பயங்கரமான பிளவு பட்ட (திறந்த) வாய்; இவற்று இடையில் சென்று - இவற்றிற்கு இடையிலே போய்; ஆவி பெற்று உய்வர் ஆர் - உயிருடன் திரும்பக் கூடியவர் யார்?; கடுகி மீண்டார் - விரைவாகத் திரும்பிவிட்டார்கள்.

உயப்படு மார்க்க மாமிவ் வோரடித் தடத்தை விட்டிங்
கயற்புறம் விலகி யேகி னாவதன் றதோமு கங்கொண்
மயற்படு குழியுள் வீழ்ந்து மடிவது திண்ணம்; என்னே
செயப்படு முபாயம்? மீண்டு திருமுதல் சீரி தன்றால். 136

(கு...ரை) உயப்படும் மார்க்கமாம் இவ் ஓர் அடித்தடத்தை விட்டு - மீட்பு அடையச் செல்வதற்கு உரியதாகிய இந்த ஓரடித் தடத்தை (ஒற்றையடிப் பாதையை) விட்டு; அயல் புறம் விலகி ஏகின் - பக்கத்திலே விலகிச் சென்றால்; ஆவது அன்று - அதனால் ஆகக்கூடிய நன்மை இல்லை; அதோமுகம் - தலைகீழாக; திருமுதல் - திரும்பி விடுதல்; சீரிது அன்று - சிறப்பு அல்ல; ஆல் - அசை.

பண்டுகோ ளரிவாய் கட்டிப் பத்தனைப் பாது காத்த
அண்டர்நா யகன லாலிவ் வாபத்துக் குதவு வார்யார்?
உண்டெனக் குறுதி யென்னு வுள்ளியுள் ளூக்கந் தோன்றித்
தெண்டனிட் டிரக்கக் கூவி ஜெபித்தனன் சிந்தை யொன்றி. 137

(கு...ரை) பண்டு - முற்காலத்தில்; கோளரி வாய் கட்டி - சிங்கத்தின் வாயைக் கட்டி; அண்டர் நாயகன் அலால் - கடவுளே அல்லாது; உள் ளூக்கம் தோன்றி - உள்ளத்திலே தைரியம் உண்டாகி; தெண்டன் இட்டு - பணிந்து; சிந்தை ஒன்றி - மன ஒற்றுமையுடன்.

ஆகுலத் துடன்வா னேக்கி யழுதுமன் றூடிக் கூவும்
காகுளி வான மெட்டக் கதித்தபே ரோசை கேட்டுக்
கோகுல மாட வீதிப் புறக்கடை குலவிக் காக்கும்
சோகமில் சாவ தானி தன்னுளே சூழுங் காலை. 138

(கு...ரை) ஆகுலத்துடன் - மன வருத்தத்துடன்; காகுளி - உரத்த சப்தம்; கதித்த - எழுந்த; கோகுல மாடவீதிப் புறக்கடை - சிறந்த மாடங்களையுடைய தெருவின் சுற்றுப்புறத்தை; குலவிக் காக்கும் - (இடைவிடாமல்) பொருந்தி நின்று காவல் செய்யும்; சோகம் இல் - வருத்தம் இல்லாத, மனக் கலக்கம் அற்ற; சூழும் காலை - ஆலோசிக்கு மிடத்து.

மேக்குயர் பரலோ கத்து விபுதரா யனைவி ளித்த
வாக்கிது; வயவெஞ் சீய மறிதல்கண் டஞ்சி யிட்ட
கூக்குர லிது; என் றோர்ந்தென் வார்த்தையைக் குறிக்கொ
ளென்று
மீக்கிளர் சத்தத் தோடும் விளித்துமற் றிதனைக் கூறும். 139

(கு...ரை) மேக்குயர் - மிக உயர்ந்த; விபுதராயனை - சர்வ வியாபகராகிய கடவுளை; விபுதர் ஆயனை, எனப்பிரித்து விபுதராகிய (நல்ல) மேய்ப்பனை எனவும் பொருள் கொள்க; ஓர்ந்து - நினைத்து; என் வார்த்தையைக் குறிக்கொள் - என் சொல்லைக் கவனித்து நட; மீக்கிளர் சத்தத்தோடு - உயர்ந்த குரலில்; விளித்து - கூப்பிட்டு.

வெஞ்சின மடங்கற் கஞ்சி விளித்தனை போலும்; எம்பி!
அஞ்சிடேல் அஞ்சி டேல் நீ; அருந்தளை காலிற் பூட்டிச்
செஞ்செவே தொடரின் மாட்டிச் சிறையிடு வித்த துண்டால்
விஞ்சியோர் தீங்கு செய்ய விறலின்றிவ் விநய மோர்தி. 140

(கு...ரை) வெம் சின மடங்கல் கு - கொடிய கோபத்தையுடைய சிங்கத்திற்கு; எம்பி! - என் தம்பி; அஞ்சிடேல் - பயப்படாதே; அரும்தளை - நீக்குதற்கரிய தளை (இருப்பு விலங்கு); தொடர் - சங்கிலி; ஆல் - அசை; விஞ்சி ஓர் தீங்கும் செய்ய விறல் இன்று - இதற்கு மிஞ்சி ஒரு தீங்கும் செய்வதற்கு அதற்கு வலிமை இல்லை; இவ் விநயம் - இந்த அந்தரங்கத்தை.

கால்வழி பிசகா துள்ளங் கலங்காது கடவுள் வேந்தன்
கோல்வழி யிழுக்கா வண்ணங் குறிக்கொளீ இ யமைத்த வேத
நூல்வழி யுரத்து மத்தி நுனித்தடி பெயர்த்து வந்திப்
பால்வழி பிடித்தி நெஞ்சிற் பதியிது பரமார்த் தங்காண். 141

(கு...ரை) (உன்) கால் வழி பிசகாது - உன் கால் வழியினின்றும் தவறாமல்; கடவுள் வேந்தன் கோல்வழி இழுக்கா வண்ணம் - இறைவனுடைய ஆணையாகிய வழி கடவாமல்; குறிக்கொளீஇ - இலக்கை மனதிற் கொண்டு; உரத்து மத்திநுனித்து அடி பெயர்த்து - மத்தியிலே உறுதியாக நுட்பமாகப் பிசகாமல் காலெடுத்துவைத்து; பரமார்த்தம் - இது உறுதிச் சொல்.

தீயினுங் கொடிய கோடி துன்பங்கள் செறினும் ஆவி
மாயினும் ஜீவ மார்க்க வரம்புநீ யிகப்பா யல்லே;
ஆயினு நடுவி கந்தோ ரணுத்துணை பிசகி யோர்பாற்
சாயினுந் தீங்கு வந்து சாருமென் றறிதி; தக்கோய்! 142

(கு...ரை) நீ இகப்பாய் அல்லே - நீ கடந்து செல்வதற்கு உரியவன் அல்ல; நடு இகந்து - நடுவு நிலைமை தவறி; ஓர் அணுத் துணை பிசகி - ஓர் அணுவளவும் தவறி; அறிதி - அறிவாயாக; தக்கோய் - மேலோனே.

என்றவ னிசைத்த வார்த்தை யெனுஞ்சுவை யமுதத்தோடு
சென்றுநின் றுழலும் ஜீவன் செவிவழி புகுதத் தேறி
வென்றிசே ரரச னுய்த்த விழுத்திரு வாக்கீ தென்ன 143
நன்றியோ டுள்ளிப் போற்றித் துதித்திது நயந்து செய்தான்.

(கு...ரை) நின்று உழலும் ஜீவன் - நின்று வருந்திக்கொண்டிருந்த ஜீவன்; தேறி - தெளிவடைந்து; வென்றி சேர் அரசன் - வெற்றிவேந்தன், இறைவன்; விழு திருவாக்கு ஈது - சிறந்த பரிசுத்த வாக்கு இதுவாகும்; இது நயந்து - இவ்வாறு விரும்பி.

கச்சையை யிறுக்கிக் கட்டிக் கால்நிலைத் தூன்றிக் கையில்
வச்சிரத் தண்டொன் றேந்தி நடுநிலே வழுவா வண்ணம்
உச்சித விசுவா சத்தி னூரக்கொண் டங் குற்று நோக்கி
நிச்சய நுண்ணூன் மார்க்க நெறிகடைப் பிடித்து நின்றே. 144

(கு...ரை) கச்சையை இறுக்கிக்கட்டி - இடைக் கச்சையை நன்றாக இறுக்கிக்கட்டி; வச்சிரத் தண்டு - உறுதியான வைரத் தடி; ஏந்தி - பிடித்து; உச்சித விசுவாசம் - மிக உன்னதமான விசுவாசம்; நுண் நூல் - நுட்பமான நூல், வேத நூல்; இதுவும், அடுத்த செய்யுளும் குளகம்.

வானநா யகனை யுள்ளி மானதாஞ் சலிவ ழங்கி
மோனமாய் முன்னிட் டேக முயன்றடி பெயர்க்கும் போழ்தில்
கானகத் துழல்வி லங்கின் கணநிலை குலேந்து சாயத்
தானவா ரணங்க ளேங்க முழங்கின தறுகட் சீயம். 145

(கு...ரை) மானத அஞ்சலி வழங்கி - மனதிலே ஆராதனை செய்து விட்டு; மோனமாய் - மௌனமாக, தியானித்துக்கொண்டே; முயன்று அடி பெயர்க்கும் போழ்தில் - பிரயாசப்பட்டு அடி எடுத்துவைக்கும் பொழுது; தான வாரணங்கள் - மதயானைகள்; தறுகண் சீயம் - அஞ்சாத சிங்கம்.

முதிர் சினந் திருகிக் கான முடங்குளை மடங்க லெங்கும்
அதிர்பட முழங்கிப் பொங்கி யடுத்தடுத் தூறி யார்ப்ப
எதிரொலி யெழும்பி நால்வா யிருங்களிற் றியானை மூளை
பிதிர்பட வுருமி னேசை பிறங்கிய தடவி யெங்கும். 146

(கு...ரை) மூதிர் சினம் திருகி - மிகுந்த கோபம் உண்டாகி; முடங்கு உளை மடங்கல் - வளைந்து தொங்கும் பிடரிமயிரை உடைய சிங்கம்; உரறி ஆர்ப்ப - சத்தமிட்டு முழங்க; நால் வாய் இரும் களிற்று யானை - தொங்குகின்ற வாயையுடைய பெரிய ஆண் யானையினது; மூளை பிதிர்பட - மூளை சிதறிப் போகும்படியாக; உருமின் ஓசை - கர்ச்சனையின் சப்தம்; அடவி எங்கும் பிறங்கியது - அக்காடு முழுவதும் பெருகியது.

தெற்றென மறையோ னுள்ளந் துணுக்குற்றுத் திகைத்த
தேனும்
நற்றவம் பயின்ற தாலே நடுங்கிலே தவறுணுகி
மற்றெதி ரூன்றி முன்னே வைத்தகால் பின்வாங் காமல் 147
வெற்றொலி யிதுவென் றெள்ளி நடந்தனன் விறல்கொள் வீரன்.

(கு...ரை) தெற்றென - திடுக்கென்று; நல் தவம் பயின்றதாலே - நல்ல தவம் செய்து பழகியதன் பயனாக; இது வெற்றொலி என்று எள்ளி - இது வெறும் சப்தம் என்று இகழ்ந்து; விறல் கொள் வீரன் - வெற்றி வீரன்.

இருட்டையூ டறுத்து முன்சென் றெதிருற வணைந்து சீறி
வெருட்டுவெம் மடங்கல் வாயுட் புக்குடன் மீண்டானென்ன
அருட்டுணை யாலே அந்த ஆபத்துக் ககன்று போனான்
திருட்டுவா யலகைக் குண்டோ தொண்டனைச் செயிக்குந்
தீரம். 148

(கு...ரை) வெருட்டும் - பயப்படுத்தும்; வாயுள்புக்கு உடன் மீண்டான் என்ன - வாயினுள்ளே அகப்பட்டுப்பின் பிழைத்து வெளியே வந்தவனைப்போல; அருள் துணையாலே - தெய்வத் திருவருள் துணைகொண்டு; திருட்டு வாய் அலகைக்கு - திருட்டுத் தன்மை பொருந்திய பைசாசத்திற்கு.

பாம்பின்வாய்த் தேரை மீண்ட பரிசெனப் படருண் மூழ்கித்
தூம்புறழ் பகுவாய்ச் சீயச் சுவட்டிடை மறிந்து போந்து
மேம்படு தலத்தின் மேய வேதியற் குற்ற வெற்றி
ஓம்படை யாகக் காத்த வுன்னதத் தொருவர் பாற்றே. 149

(கு...ரை) பரிசு என - தன்மைபோல்; படர் - துன்பம்; தூம்பு உறழ் - மதகு நீர்த் துவாரம் போன்ற; உறழ், உவம உருபு; போந்து - போய்; மேம்படு தலத்தின் மேய - உயர்ந்த இடத்தில் போய் நின்ற; ஓம்படை - அடைக்கலம்.

பொருட்டிறன் அறியார் சொல்லும் பொய்யுரைக் கொருகால்
சற்று
மருட்டி முன் னின்று மெய்யை மறைக்குமோர் வலியுண்
டேனும்
அருட்டிற னுடைய நீரா ரவலத்தோ டுரைக்கு மெய்ம்மை
தெருட்டுவா ரறிவுந் தானே திகழ்க்திடுஞ் செவ்வியுண்டால் 150

(கு...ரை) ஒரு கால் - ஒரு வேளை; சற்று மருட்டி - சிறிது மயங்கச் செய்து; அருள் திறன் உடைய நீரார் - அருள் வலிமை உடையவர்கள்; அவலத்தோடு உரைக்கும் மெய்ம்மை - அதைரியத்தோடு சொல்லும் உண்மைச் சொல்; தெருட்டுவார் அறினும் - தெளிவு படுத்திக் காட்டுவார் இல்லையானாலும்; தானே திகழ்ந்திடும் - தானாகவே விளங்கும்.

கடுங்கத மடங்கலேற்றின் கைதப்பி யகன்று போன
அடுங்களி றனையான் சித்த மமைதலுற் றுறி ஜீவன்
நடுங்குற வெதிர்ந்த மோச நாசத்தி லுயிர்தந் துய்த்த
ஒடுங்கலில் கருணைத் தேவை நன்றியோ டுள்ளி யுள்ளி. 151

(கு...ரை) கடும் கதம் மடங்கல் ஏற்றின் - கடும் கோபத்தையுடைய ஆண் சிங்கத்தின்; அடும் களிறு அனையான் - கொல்லும் ஆண்யானையை யொத்த வலிமையை உடையவன்; ஒடுங்கல் இல் கருணை - குன்றாத கருணையை உடைய; உள்ளி உள்ளி - எண்ணி எண்ணி.

அஞ்சலித் தோகைக் கண்ணீர் அவிழ்ந்துதன் னங்கம் போர்ப்பத்
துஞ்சுறு வன்பிற் பல்காற் றொழுதுதோத் திரித்துப் பாடி
உஞ்சன னளிய னேனென் றுவந்துதன் னெறியிற் சென்றான்
எஞ்சிய கருக்கல் மாயக் காரிரு ளிறுத்த தன்றே. 152

(கு...ரை) அஞ்சலித்து - கும்பிட்டு; ஓகைக் கண்ணீர் - ஆநந்தக் கண்ணீர்; துஞ்சுறு அன்பின் - கெடுதலில்லாத அன்பினால்; அளியனேன் உஞ்சனன் - அடியேன் பிழைத்தேன்; உஞ்சனன் - உய்ந்தனன் - இடைப் போலி; கருக்கல் - மாலை இருள்.

சம்பாஷணை

அடங்கின விலங்குபுள் அடவி ஆர்ப்பொலி
அடங்கின பல்லியத் தணிகொள் பேரிசை
அடங்கின பணிமுறை அகில காரியம்
அடங்கின பொறிபுலன் அவித்த யோகிபோல். 153

(கு...ரை) விலங்கு புள் அடவி ஆர்ப்பு ஒலி அடங்கின - மிருகங்கள், பறவைகள், காட்டின் ஆரவாரம் எல்லாம் அடங்கின; பல் இயத்து அணி கொள் பேரிசை - பலவகை வாச்சியங்களின் அழகிய பேரோசை; பொறி புலன் அவித்த யோகி போல் - பொறி புலன்களை அழித்த யோகிகளைப் போல்.

இத்திற முன்னிசி இருட்டொ டேகிய
வித்தக வேதியன் விரைந்து போய்எழில்
சத்திரப் புறக்கடைத் தலையைக் கிட்டினான்;
அத்தகு காவல னுரை நீயென்றான். 154

(கு...ரை) முன்னிசி இருட்டு - முன் இருட்டு; 'ஆரை நீ?' என்றான் - 'நீ யார்?' என்றான். ஆரை - ஐ சாரியை; ஆர் - இலக்கணப் போலி.

நாசதே சத்துளேன்; நயந்து நாடொறும்
பாசவெவ் வினைத்தொழில் பயின்ற பாமர
நீசன்;முற் பெயரவ பத்த னின்மல
ஈசனு ரருள்பிடித் திழுத்த திவ்வழி. 155

(கு...ரை) பாசம் வெவ் வினைத் தொழில் - பற்றினால் உண்டாகும் கொடிய தீவினையாகிய செயல்களில்; முன் பெயர் அவபக்தன் - எனது முன்னைய பெயர் 'அவபக்தன்' என்பது. நின்மல ஈசனார் அருள் - பரிசுத்த கடவுளின் அருள்.

வந்தன னுபாதிமா மலையின் மீதுள
நந்தனத் திருந்துயில் நயந்து, நன்மதி
சிந்தினேன்; அதுபல தீங்கும் மோசமும்
தந்ததால் இருள்வழி தவித்து வந்தனன். 156

(கு...ரை) இரும் துயில் நயந்து - மிக்க தூக்கத்தை விரும்பி; நன்மதி சிந்தினேன் - புத்தி கெட்டேன்; இருள் வழி தவித்து - இருட்டு வழியில் கஷ்டப்பட்டு.

இத்தகு தலத்திடை இரவு தங்கியான்
நித்திரை தெளிந்துத யாதி நீங்கவெற்(கு)
உத்தரங் கிடைக்குமோ? உலங்கொள் தோளினாய்!
எத்திற நுங்கருத் தியம்பு வாயென்றான் 157

(கு...ரை) இத் தகு தலத்திடை - இந்த சிறந்த ஸ்தலத்திலே; உதய ஆதி நீங்க - சூரியன் உதயமானவுடன் நீங்க; எற்கு - எனக்கு; என் + கு = எற்கு; உலம் கொள் தோளினாய் - தூண் போல் திரண்ட தோள்களை உடையவனே.

எள்ளருங் கடைத்தலை யேந்தல் மற்றிவன்
உள்ளமும் வாக்குமொத் துளது போலுமால்
கள்ளமில் நீர்மையன் கருதுங் காலெனா
ஒள்ளியோய்! கேளென வுரைத்தன மேயினான். 158

(கு...ரை) எள் அரும் கடைத்தலை ஏந்தல் - இகழ்ச்சி யற்ற வாயிற் காவலன்; கருதுங்கால் கள்ளம் இல் நீர்மையன் - யோசித்துப் பார்க்கு மிடத்து இவன் களங்கமற்ற தன்மையை யுடையவன்; ஒள்ளியோய் - தெளிந்த அறிவுடையவனே.

அரும்பிய மெய்விசு வாசத் தால்அகம்
திரும்பியுன் னதநகர் சேர யாத்திரை
வரும்பர தேசிகள் வதிந்து போதரா
விரும்பிஇங் கமைத்ததிவ் விநோத மாடங்காண். 159

(கு...ரை) உன்னத நகர் சேர - மோட்சம் அடைய; வதிந்து போதர - தங்கிப் போக; விருமபி இங்கு அமைததது - விருப்பத்தோடு இவ்விடத்தில் அமைக்கப்பட்டது.

வித்தக! விவேகிசொல் விநய யூகிமெய்ப்
பத்திநற் சிநேகிஎன் றுரைக்கும் பார்ப்பன
உத்தமி நால்வரிங் குளர்மற் றொண்ணிலைச்
சித்திர மாளிகை யகத்துச் செவ்வியோய்! 160

(கு...ரை) பார்ப்பன உத்தமி நால்வர்: அவர், விவேகி, யூகி, பத்தி, சிநேகி. ஒள் நிலைச் சித்திர மாளிகை அகத்து - ஒளி பொருந்திய நிலையை உடைய அலங்கார மாளிகையினுள்.

கைவரு தவநிலை யியற்றுங் கன்னியர்
தெய்விக சுருதிநன் குணர்ந்த செவ்வியர்
மெய்வரு நாவினர் விதேக முத்தர்போல்
ஐவரை அறுவராய் அமைத்த ஆருடர். 161

(கு...ரை) கைவரு தவநிலை இயற்றும் - சித்தி பெற தவம் செய்யும்; தெய்விகச் சுருதி - தெய்வத் தன்மை வாய்ந்த வேத நூலை; மெய்வரும் நாவினர் - உண்மையே பேசும் நாவினை உடையவர்கள்; ஐவரை அறுவர் ஆய் - ஐம்புலன்களையும் அற்றுப் போனவர்களாகும்படி; அமைத்த - அழித்து விட்ட; ஆருடர் - முனிவர்கள்.

மற்றிவர் சீலமும் மறைமெய்ஞ் ஞானமும்
பற்றறுத் தியோகுசெய் பரிசும் தெள்ளிதின்
உற்றறி; அஃதுனக் குறுதி யாமெனச்
சொற்றுடன் யூகியை விளித்துச் சொல்லுவான். 162

(கு...ரை) பற்று அறுத்து யோகு செய் பரிசும் - பற்றுக்களை விட்டு யோகம் செய்யும் விதமும்; உற்று அறி - நன்றாக உற்று நோக்கி அறிவாயாக; உறுதி ஆம் எனச் சொற்று - உனக்கு நன்மை தரும் எனச் சொல்லி; யூகியை விளித்து - யூகியைக் கூப்பிட்டு.

அம்ம!கேள் நாசதே சத்த னும் இவன்;
நம்மசீ யோன்மலை நணுகும் ஆசையால்
இம்மலை எறிவந் திடர்பபட் டெஞ்சியோன்
செம்மையை அறிந்தினிச் செய்வ செய்மினே. 163

(கு...ரை) நம்ம சீயோன் மலை - நமது சீயோன் மலையை; நணுகும் ஆசையால் - சேரவேண்டும் என்னும் ஆசையினால்; இடர்ப்பட்டு எஞ்சியோன் - துன்பப்பட்டுக் குறைவுற்றவன்; செய்வ செய்மின் - செய்யத்தக்க காரியங்களைச் செய்யுங்கள்.

என்றினி துரைத்திட இஸைந்து வைதிக
நன்றிகொள் மடவரல், நம்பி! யெங்குளை?
ஒன்றியிவ் வழிவர உற்ற தென்னையோ?
இன்றெலாம் புலப்பட இயம்பு கென்றனள். 164

(கு...ரை) என்று இனிது உரைத்திட - என்று இன்பமாகச் சொல்ல; இசைந்து - சம்மதித்து; மடவரல் - பெண், (யூகி); நம்பி - சிறப்புடையவனே, எங்கு உளை - நீ எங்கு உள்ளவன்; ஒன்றி - தனிமையாக; மனமிசைந்து எனினும் பொருந்தும்.

தாயெனப் பரிவுடன் வினவும் தையலாள்
சேயுயர் மதிமுகம் நோக்கிச் செவ்விய
தூயவன் தன்வர லாறு தொன்றுதொட்
டேயவை சுருக்கிநன் கியம்பி னனரோ. 165

(கு...ரை) பரிவுடன் - அன்புடன்; தையலாள் - பெண்; சேய் உயர் - மிக உயர்ந்த; தொன்று தொட்டு ஏயவை - முன்பு தொட்டு நிகழ்ந்தவை; அரோ - அசை.

கேட்டனள் யூகியென் றுரைக்கும் கேதமில்
வாட்டடங் கண்ணினள் மற்றை மூவரைக்
கூட்டினள் இவனிலை குறிகு ணங்களைக்
காட்டினள் கைநெல்லிக் கனியின் வாய்மையால். 166

(கு...ரை) கேதம் இல் - சலிப்பு இல்லாத; கிறிஸ்தியானுடைய ஆதியோடந்த வரலாறு நீண்டதெனினும் யூகிக்கு அதைக் கேட்பதில் சலிப்பு உண்டாகவில்லை; வாள் தடம் கண்ணினள் - ஒளி பொருந்திய விசாலமான கண்களையுடையவள்; வாள்போல் கூரிய எனினும் ஆம்.

காரிகை யூகிசொற் கருத்தை ஓர்ந்தவர்
சீரியன் இவன்செயல் செவ்வி தாதலிற்
கூரிய தவநிலை குறித்துப் பேசுதும்;
ஆரிய! வருகவென் றழைத்துப் போயினர். 167

(கு...ரை) காரிகை - பெண்; சொற்கருத்தை - சொல்லினது கருத்தை; ஓர்ந்தவர் - உணர்ந்தவர்; பேசுதும் - பேசுவோம்; ஆரிய - அறிவுடையவனே.

முன்பொரு பற்றிலர் மூகங்கண் டோரிலர்
பின்பெதுங் குறித்திலர் பேணுஞ் செய்கையோ
டன்புநெக் குருகித்தம் இனத்தொ டேற்றனர்
அன்பெதுங் கருதிடா தவிக்கு நீரதே. 168

(கு...ரை) இது முதல் மூன்று கவிகள் அப்பார்ப்பனக் கன்னியரின் பண்பை விளக்குவன; முன்பு ஒரு பற்றிலர் - முன்பு யாதொரு தொடர்பும் இல்லாதவர்; இனத்தொடு கூட்டத்தோடு; ஏற்றனர் - ஏற்று உபசரித்தார்கள்; அன்பு எதும் கருதிடாது அளிக்கும் நீரதே - அன்பு யாதொன்றையும் எதிர்பாராமல் கொடுக்கும் தன்மை உடையது.

அறப்பெரும் சாலையை அடுக்கும் காற்பலர்
புறப்படூஉ வெதிர்ந்தருள் பொழியும் கண்ணினர்
மறப்பரு நன்மொழி வழங்கி வாழ்த்தினர்
சிறப்பொடு பூசனை செய்யும் செய்கையார். 169

(கு...ரை) பலர் புறப்படூஉ - பலர் புறப்பட்டு; எதிர்ந்து - எதிர்கொண்டு அழைத்து; மறப்பு அரு நன்மொழி - மறப்பதற்கு அரிய இனிய வாசகங்களை; சிறப்பொடு பூசனை - நித்திய நைமித்தக பூசை.

புவனபோ கங்களை புதைத்திட் டாத்தும
கவனமுற் றருநெறி கடைப்பி டித்தவன்
உவகையோ(டு) உபசரித் துறவு காட்டும்அத்
தவநிலை முதியரைத் தாழ்ந்து போயினான். 170

(கு...ரை) புவன போகங்களைப் புதைத்திட்டு - உலக இன்பங்களையெல்லாம் மறந்து விட்டு; உறவு காட்டும் - நட்புக் கொண்டாடும்; தவநிலை முதியரை - தவத்தில் முதிர்ந்த நிலை பெற்றவர்களை; தாழ்ந்து - பணிந்து.

ஆங்கொரு சார்பினில் அழகு வீற்றிருந்
தோங்கிய தவளமா ளிகையின் உள்ளுறப்
பூங்கொடி மடந்தையர் புகுந்து புங்கவ!
ஈங்கினி திருக்களன் றிருக்கை ஈந்தனர். 171

(கு...ரை) தவள மாளிகை - வெண்ணிறமான மாளிகை; புங்கவ - அறிவில் உயர்ந்தவனே; ஈங்கு இனிது இருக்க - இங்கே இன்பமாக இருப்பாயாக.

நன்றியோ டாசனத் திருந்து நம்பனை
ஒன்றிய சிந்தையோ டுவந்தி றைஞ்சினான்;
துன்றிய வுபாதிதொக் கடர்ந்த சூழலில்
பொன்றிடா வகைதனைப் புரந்த துள்ளியே. 172

(கு...ரை) நம்பன் - நம்பிக்கைக் குரியவன், கடவுள்; துன்றிய உபாதி - நிறைந்த துன்பம்; தொக்கு அடர்ந்த சூழலில் - திரண்டு நெருங்கிய இடத்தில்; பொன்றிடா வகை - தான் அழிந்துபடாத விதத்தில; தனைப் புரந்தது - தன்னைக் காப்பாற்றியது.

அவ்வயின் சிலதிய ரடுத்தங் கேந்திய
திவ்விய பானநீ ரருந்திச் சிந்தையில்
கவ்வையின் றுயிருந் தாங்கின் காட்சியைச்
செவ்விதின் நோக்கினன் திகைத்துள் ளூன்னுவான். 173

(கு...ரை) அவ்வயின் - அவ்விடத்தில்; சிலதியர் - பணிவிடைப் பெண்கள்; அங்கு அடுத்து ஏந்திய - அங்கே வந்து கையிலே ஏந்தி வழங்கிய; திவ்விய பானம் நீர் - இனிய பானமாகிய நீர்; கவ்வை - கவலை; நோக்கினன்- நோக்கி; முற்றெச்சம்.

புண்ணியம் குடிபுகப் புதுக்கு மாடமோ!
கண்ணிய அருந்தவக் கழகந் தான்கொலோ!
தண்ணளி உறைவதற் கியன்ற சாலையோ!
மண்ணுல கிறுத்தபே ரின்ப மாடமோ! 174

(கு...ரை) புண்ணியம் குடி புக - புண்ணியமே இங்கு வந்து குடியிருக்கும்படி; புதுக்கும் - புதிதாகக் கட்டப்பட்ட; கண்ணிய அரும் தவம் - மேன்மை பொருந்திய அரிய தவம்; தண் அளி - குளிர்ந்த அருள்; மண்ணுலகு இறுத்த - மண்ணுலகில் வந்து தங்கின.

துறைதொறும் ஆரணத் துழனி; தூயநாட்
டிறைதிருப் புகழ்விளக் கினிய பாட்டிசை
மறைமொழி வழாதமா டகநல் யாழிசை
நிறையுமால் இதுவுமோர் நிமல வீடுகொல்! 175

(கு...ரை) தூய நாட்டு இறை திருப்புகழ் - பரிசுத்த முத்தி உலகத்து இறைவனது திருப்புகழை; ஆரணத் துழனி - வேத முழக்கம்; வழாத - தவறாத; மாடக நல்யாழ் இசை - முறுக்காணியுடைய அழகிய யாழினின்று உண்டாகும் இனிய கீதம்.

வெண்ணிலா வுமிழ்சுதை மிளிர்ந்த பித்தியிற்
திண்ணிய சுருதியில் தெளித்த நீர்மைய
கண்ணடிப் படிவங்கள் ககன கோளத்தின்
வண்ணமித் துணையென வகுத்துக் காட்டுமால். 176

(கு...ரை) வெண்ணிலா உமிழ் - வெண்ணிறமாக ஒளியைச் சொரியும்; சுதை மிளிர்ந்த பித்தியில் - சுண்ணம் தீட்டப்பட்டு விளங்கிய சுவரிலே; கண்ணடிப் படிவங்கள் - கண்ணாடி வடிவங்கள்; ககன கோளத்தின் வண்ணம் இத்துணை - ஆகாய வட்டத்தின் அழகு இத்தன்மையது.

மாயமில் உளத்திடை வந்து தைவிக
தூயஆ வியினருள் துன்னும் ஆறுபோல்
மேயசா ளரந்தொறும் வீசும் இவ்வகத்
தேயவ ருடல்புள கேறத் தென்றலே. 177

(கு...ரை) தைவிக தூய ஆவியின் அருள் - பரிசுத்த தேவ ஆவியின் அருள்; மாயம் இல் உளத்திடை - மாய்மாலம் இல்லாத உள்ளத்திலே; வந்து துன்னும் ஆறு போல் - வந்து நிறைவது போல; இவ்வகத்து - இவ்வீட்டில்; வயவர் உடல் புளகேற - தங்கியிருப்பவர்களுடைய் உடல் மயிர்க்கூச் செறிய.

பொறிக்கெலா நலந்தரு புனித மாப்புலன்
செறிக்குமாற் சிந்தனை தெருட்டு மாலற
நெறிக்கெலாந் துணையென நிலவு மானில
வெறிக்குமா ளிகையிதை யென்னென் றுள்ளுகேன்! 178

(கு...ரை) பொறிக்கு எலாம் நலம் தரு - ஐம் பொறிகளுக்கும் இன் பத்தைக் கொடுக்கும்; பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி; புலன் - உணர்ச்சி, அறிவு; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். சிந்தனை தெருட் டும் - மனதைத் தெளிவு படுத்தும்; நிலவு எறிக்கும் - ஒளி வீசும்.

இன்னண மதிசயித் தெண்ணி வேதியன்
தன்னுளே உவந்தனன் இருப்பத் தண்ணளி
துன்னிய முகத்தவத் தோகை மாரவன்
முன்னுற விருந்திவை மொழிகு வாரரோ. 179

அரசிளங் கோமகற் கன்பு செய்யுமெய்ப்
பரிசுடை ஐய!வெம் பக்க னீவரும்
வரிசைபெற் றனமெனும் மகிழ்ச்சி உண்டெமக்
குரைசெயுந் தரத்ததன் றுண்மை நூல்வலாய்! 180

(கு...ரை) அரசிளங் கோமகற்கு - அரச குமாரனுக்கு; மெய் அன்பு செய்யும் பரிசுடை ஐய - உண்மையான பக்தி கொள்ளும் தன்மையுடைய ஐயனே; எம் பக்கல் நீ வரும் வரிசை பெற்றனம் - எம்மிடத்தில் நீ வரு வதற்குப் பாக்கியம் பெற்றோம்; உரை செய்யும் தரத்தது அன்று - சொல்ல முடியாதது.

தராதல விரக்ஷணை சமைக்குந் தன்மைய
புராதன சுருதிநன் குணர்ந்த புந்தியோய்!
இராவுண வியையுமட் டாக யாங்குழீஇ
விராயுரை யாடுதும்; விழைவெ னென்றனர். 181

(கு ..ரை) தராதல இரட்சணை - பூவுலகில் இரட்சிப்பை; சமைக்கும் - உண்டாக்கும்; புராதன சுருதி - பழமையான வேதம்; புந்தியோய் - அறி வுடையவனே; இராவுணவு இயையும் மட்டாக - இரவு உணவு ஆயத்தமாகும் வரை; யாம் குழீஇ விராய் உரையாடுதும் - நாம் கூடி அளவளாவி சம்பா ஷிப்போம்; விழைவு என் - விருப்பம் என்ன.

ஆசறு மனத்தினர் அன்பி னூற்சொலும்
வாசகங் கேட்டுளம் மகிழ்ந்து வேதியன்
பூசனை மொழிசில புகன்றெ னன்னைமீர்
பேசுதும் எனக்கது பெரிது நன்றென்றான். 182

(கு...ரை) ஆசு அறும் மனத்தினர் - குற்றமற்ற மனத்தையுடையவர்கள்; பூசனை மொழி சில புகன்று - சில வார்த்தைகள் சொல்லி இறைவனைத் துதித்து விட்டு; என் அன்னைமீர் - என் தாய்மாரே; பேசுதும் - அவ்வாறே சம்பாஷித்துக் கொள்வோம; எனக்கு அது பெரிதும் நன்று - எனக்கு அது மிகவும் பயனுடையதே ஆகும்.

மாயாபுரி

அரிய நூனெறி கடைப்பிடித் தாரணக் கிழவன்
பரிய கானகந் துருவிவந் திறுத்தமை பகர்ந்தாம்;
விரியுந் தீவினைக் குறையுளாய் விளங்கிய மாயா
புரியின் பான்மையுங் கோன்மையும் வகுத்தினிப் புகல்வாம்.

(கு...ரை) ஆரணக் கிழவன் - வேதத்திற்குரியவன், வேதியன், கிறிஸ்தியான்; பரிய கானகம் துருவி - பெருங்காட்டைக் கடந்து; பகர்ந்தாம் - சொன்னோம்; விரியும் தீவினைக்கு உறையுள் ஆய் - மிகுந்த பாவத்திற்கு உறைவிடமாய்; பான்மை - தன்மை; கோன்மை - ஆட்சிமுறை.

தொன்று தொல்லறந் துதைந்தெழில் குலவிய தூய
மன்று தோக்கபல் வளனெலாங் கரவினால் வௌவிக்
கன்று வெஞ்சினத் தலகைதன் கவிகையைக் கவித்தான்
அன்று தொட்டுமா யாபுரி யாயதிவ் வகிலம். 184

(கு...ரை) தொன்று - பண்டைக்காலத்தில்; தொல் அறம் துதைந்து - பழமையான தர்மம் பொருந்தி; கரவினால் வௌவி - திருட்டுத்தனமாக அபகரித்து; கன்றுவெம் சினத்து அலகை - கடுங்கோபத்தினையுடைய பிசாசு; கவிகை - குடை.

மெய்யு ரைப்பவர் யாவரு மடம்படு மிலேச்சர்;
பொய்யு ரைப்பவ ரேயதி புண்ணிய புருஷர்;
கையு லோபரே மதியுளார்; கசிந்துப காரஞ்
செய்யு மாந்தரே பயித்திய ரிந்நகர்ச் செவ்வி. 185

(கு...ரை) மடம்படு மிலேச்சர் - மூடத்தன்மையுடைய அநாகரிகர்; கை உலோபரே - கீழ்மைக் குணமுடைய உலோபிகளே; மதி உளார் - அறிவுடையவர்கள்; கசிந்து உபகாரம் செய்யும் மாந்தரே - மனம் உருகி அன்புடன் உபகாரம் செய்யும் மனிதர்களே; செவ்வி - தன்மை.

புகழ் விரும்பியட் டேட்டுவர் புரண்ட நூலவருக்(கு)
இகழ்வ ரேழையை யிரங்கியோர் சற்றுண வீயார்.
திகழு ஞானநூல் செப்புவர்; திருட்டள வாக
அகழ்வ ரேனைய ரருநிதி வைப்பிட மறிந்தே. 186

(கு...ரை) புரண்ட நூலவர்க்கு - (உண்மைக்கு) மாறுபட்ட நூல் அறிவுடையவர்க்கு; நூலவர் - நூலைச் செய்வோர், அதனைப் படிப்போர்; புகழ் விரும்பி அட்டு ஊட்டுவர் - புகழையே கருதி சுவைபடச் சமைத்து விருந்து அளிப்பார்கள்; வைப்பு இடம் அறிந்து - சேமித்து வைத்திருக்கும் இடத்தை அறிந்து; அகழ்வர் - தோண்டி எடுப்பார்கள்.

பத்தி நூல்வழிப் போக்கர்மேற் படாப்பழி கூறிக்
கத்து வார் தெருத் தெருத்தொறுங் கத்த பங்கடுப்பக்
குத்தி ரத்துவ வேடர்பாற் கூட்டுண்டு களித்து
மித்தி ரத்துவம் பூணுவர் கொக்கன விரகால். 187

(கு...ரை) பத்தி நூல் வழிப் போக்கர்மேல் - பத்தி வழியில் நடப்பவர்கள்மீது; படாப் பழி - பொய்யான பழிச் சொற்களை; கத்தபம் கடுப்ப - கழுதை மாதிரி; குத்திரத்துவ வேடர்பால் - வஞ்சகம் நிறைந்த புலையர்களிடம்; மித்திரத்துவம் - நட்பு; விரகால் - தந்திரமாக.

பஞ்ச தந்திரம் பயிலுவர்; காமநூல் படிப்பர்;
தஞ்ச மாக்கிய வுடைமையைத் தமதெனச் சதிப்பர்
நஞ்ச மன்னதீ வினையெலா நயந்தனுட் டிப்பர்
வஞ்ச மல்குவாய் மொழியினாற் புதைபட மறைப்பார். 188

(கு...ரை) பயிலுவர் - செய்து பழகுவார்கள்; தஞ்சம் ஆக்கிய உடைமையை - அடைக்கலமாக வைத்த பொருளை; சதிப்பர் - சதிசெய்து எடுத்துக்கொள்வார்கள்; நஞ்சம் அன்ன - நஞ்சுபோன்ற (கொடிய); வஞ்சம் மல்கு - வஞ்சகம் பொருந்திய; புதைபட - உண்மை வெளிப்படாதபடி.

கடனை வாங்கியே மாற்றுவர் சிலர்;சிலர் கையிற்
கடனை வையெனத் தொண்டையை நெரிப்பர்கைக் கணக்கிற்
கடனை யேற்றிமற் காட்டுவர் சிலர்;சிலர் கடுகிக்
கடனை யன்றியோர் காசிலை யெனப்பொருள் கரப்பார். 189

(கு...ரை) கடனை வாங்கி ஏமாற்றுவர் - கடன் வாங்கிப் பின் அதைக் கொடாதபடி ஏமாற்றுவர்; கைக் கணக்கில் கடனை ஏற்றி - தன் கையில் உள்ள கணக்கில், கடன் தொகையை அதிகப்படுத்தி; மன் காட்டுவர் - பெருக்கிக் காட்டுவார்; கடுகி - கோபப்பட்டு; கரப்பார் - ஒளிப்பார்கள்,

கொண்ட பெண்டிரா லூதியங் கொண்டுயிர் கொளுவி
உண்டு தேக்கெறிந் துழலுவார்; பாழ்வயி றோம்பி
மண்டு காமவெம் பிணியினால் வான்முறை மயங்கி
எண்ட காப்பழி பூணுவர் இகபர மிழந்தே. 190

(கு...ரை) கொண்ட பெண்டிரால் - தாம் மணந்துகொண்ட பெண் களால்; உயிர்கொளுவி - உயிரைப் பாதுகாத்து; மண்டு காம வெம்பிணி - நிறைந்த காமமாகிய கொடிய நோயினால் (பீடிக்கப்பட்டு); எண் தகாப்பழி - மனத்தால் நினைக்கவும் முடியாத பழிச் செயல்களை; பூணுவர் - மேற் கொண்டு செய்வார்கள்.

அன்ன சத்திரத் துண்டுதேக் கெறிபவ ரனந்தம்
துன்னு காமசத் திரந்தொறுந் துதைபவ ரனந்தம்
மன்னு செல்வர்தம் மனைக்கடை வறியவ ரனந்தம்
இன்ன லுற்றுளங் கசந்தழு மேழைக ளனந்தம். 191

(கு...ரை) துன்னு - நிறைந்த; துதைபவர் - நெருங்குபவர்; மனைக் கடை - வீட்டு வாயிலில்; இன்னல் உற்று - துன்பப்பட்டு; உளம் கசந்து அழும் - மனம் வெறுப்புற்று அழும்.

காளி கோட்டமு மூட்டமு மாட்டமுங் குதிக்கும்
கூளி நாட்டமுங் குறக்குறி யீட்டமுங் குமையும்
கோளி னீட்டத்து மனைதொறுஞ் சண்டை கொக்கரிக்குந்
தேளி னீட்டிய விடமெனச் செவிக்கிடர் செருகும். 192

(கு...ரை) காளிகோட்டம் - காளிகோவில்; குதிக்கும் கூளி - துள் ளிக் குதிக்கும் பேய்; குறக்குறி - குறத்தி சொல்லும் குறி; ஈட்டம் - கூட் டம்; குமையும் - நிறைந்து தோன்றும். தேளின் நீட்டியவிடம் என - தேளின் மிகுந்த விஷம்போல; செவிக்கு இடர் செருகும் - செவிக்கு துன் பத்தை உண்டாக்கும்.

வேறு

மயங்காட்டம் புரிகணிகை மடமாதர் மனமருட்டி
இயங்காட்டி லயங்காட்டி யெழில்காட்டி விழிகாட்டி
நயங்காட்டி பயங்காட்டி நகைகாட்டிச் சிகைகாட்டிக்
குயங்காட்டிக் காமுகரைக் குரங்காட்ட மாட்டுவரால். 193

(கு...ரை) மயக்கு ஆட்டம்புரி - மனதை மயக்கும் நடனம்புரிகின்ற; கணிகை மடமாதர் - இளமை பொருந்திய நடனப் பெண்கள்; இயம் - இனிய ஓசை, சங்கீதம்; லயம் - ஒடுங்கின இடையை; சிகை - (நீண்ட அழகிய) கூந்தலை; குயம் - இளமை அழகைக் காட்டி. இச்சந்தர்ப்பத்திலும் கூட, கம்பராமாயண வர்ணனைபோன்ற ஆபாச அங்கவர்ணனை யில்லா திருப்பது இந்நூலின் புனிதத்தைக் காட்டும்.

உண்டாட்ட மந்தணருக் குரையாட்ட மடவார்க்குக்
கண்டாட்டங் காமுகர்க்குக் களியாட்டங் குடியருக்குக்
கொண்டாட்டம் பரத்தையர்க்குக் குடியாட்டங் கொடுங்
கோற்குத்
திண்டாட்டம் பொருளிலர்க்குச் சிரசாட்டங் கெருவிகட்கே.

(கு...ரை) அந்தணருக்கு உண்டு ஆட்டம் - அந்தணருக்கு வயிறார உணவு உண்டு மகிழ்ந்து ஆடும் ஆட்டமே உண்டு; மாயாபுரியின் மாயத் தன்மையைப் புலவர் சித்திரிக்கும் அழகை நோக்குக. அம் + தண் + அர் - அழகிய குளிர்ந்த அருளையுடையவர்கள்; மாயாபுரியில் அவர்கள் செயல் பெயருக்கு ஏற்றதல்ல; பரத்தையர்க்குக் கொண்டு ஆட்டம் - பரத்தையர் காமுகர் பொருளைக் கைப்பற்றிக்கொண்டு, அவர்களை ஆட்டிவைப்பர்.

ஆரணங் காட்ட நாடி யகங் குழைந் திருப்பார் யாண்டும்
ஆரணங் காட்ட நாடி யகங் குழைந் திருப்பார் இல்லர்
தாரணி தந்தஞ் ஞானச் சனியனைப் பணிவார் யாண்டும்
தாரணி தந்த ஞானத் தம்பிரான் பணிவார் இல்லர். 195

பொருள்: ஆரணங்கு - நடன மாதர்களின்; ஆட்டம் நாடி - நடனத்தையே கருத்தோடு பார்த்து; அகம் குழைந்து இருப்பார் - (எப்போதும்) மனம் களித்து இருப்பார்களே (அன்றி); ஆரணம் காட்ட - வேத நூல் (தங்களுடைய உள்ளத்தின் உண்மை நிலையைக்) காட்ட; நாடி - அதை ஆராய்ந்து பார்த்து; அகம் குழைந்து இருப்பார் - மனம் வருந்தி உருகியிருப்பவர்கள்; இல்லர் - அங்கு ஒருவருமே இல்லர்; யாண்டும் - எவ்விடத்தும்; தார் அணி - மாலைகளை அணிந்துள்ள; தந்த - தந்தத்தையுடைய (தந்திமுகத்தோனாகிய); அஞ்ஞானச் சனியனை - ஞான சூனியமாகிய சனியனாகிய விக்கிரகங்களை; பணிவார் - வணங்குவார்களே (அன்றி); தாரணி தந்த - உலகத்தையும், உலகத்துப் பொருட்களையும் படைத்து உதவிய; ஞானத் தம்பிரான் - சர்வஞானமுள்ள கடவுளை; பணிவார் இல்லர் - வணங்குபவர்கள் இல்லர். திரிபு என்னும் சொல்லணி காண்க.

இரக்ஷணிய நவநீதம்

தந்தை யாகி யுலகனைத்துந் தந்து மறுக்க டமைப்புரக்க
மைந்தனாகிப் புனிதாவி வடிவாய் ஞான வரமருளிப்
பந்தமறநின் றிலங்குதிரி யேக பரமன் பதாம்புயத்தைச்
சிந்தை யாரத் தொழுதேத்திச் சேரவாரும் ஜெகத்தீரே. 196

(கு...ரை) நவநீதம் - வெண்ணெ, சாரம்; மறுக்கள் தமைப் புரக்க - மனிதர்களை இரட்சிக்க; பந்தம் அறநின்று - பற்று அற்று நிலையாயிருந்து; பத அம்புயத்தை - பாதமாகிய தாமரை மலர்களை; சிந்தை ஆர - மனமார; சேரவாரும் - அவருடைய திருவடியை அடையும்படியாக வாருங்கள். ஜெகத்தீரே - உலகத்தில் உள்ளவர்களே.

நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்
போத மினைய லக்ஷணங்கள் பரிபூரணமாய்ப் பொருந்தியணு
ஏத மிலனுய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரணநிழ லடைய வாரும் ஜெகத்தீரே. 197

(கு...ரை) சுயம்பு - தன்வயம்; போதம் - ஞானம்; அணு ஏதம் இலனுய் - அணுவளவும் குற்றம் இல்லாதவனுய்; காமாதி - காமம் முதலிய வற்றை; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பன; சரண நிழல் - திருவடி நிழல்.

ஆதி நரனைப் படைத்துலக மனைத்து மவனுக் கடிப்படுத்திப்
போதமொடுபாக் கியம்புனிதம் போத வருளி மனச்சான்றும்
மேதின் மதியு மீந்துசுயா தீனத் திருவென் றினிதுவந்த
நாதன் கருணை யுள்ளியதை நாட வாரும் ஜெகத்தீரே! 198

(கு...ரை) ஆதி நரன் - ஆதாம்; போத - போதுமான அளவு; மனச்சான்று - மனச்சாட்சி; சுயாதீனத்து இரு - சுயாதீனமாக வாழ்க; என்று இனிது உவந்த; என்று மனம் உவந்து அருளிச்செய்த.

பாவ நரங்க ளெரிநரகிற் பதையா வண்ணம் பரகதி செல்
ஜீவ வழியைத் திறந்தொன்றுஞ் செல்வ மகவைச் சிலுவையிலே
சாவக் கொடுத்தெப் பாவிகட்குஞ் சலியா திரக்ஷை தனையருளும்
தேவ சிநேகந் தனைநினைந்து சேரவாரும் ஜெகத்தீரே. 199

(கு...ரை) ஒன்றும் செல்வ மகனை - ஒரே செல்வக் குமாரனை; சிலுவையிலே சாவக் கொடுத்து - சிலுவையிலே சாகும்படியாகக் கொடுத்து; எப்பாவிகட்கும் - எப்பேர்ப்பட்ட பாவிகளுக்கும்.

சொந்த மகவை நம்பொருட்டுத் துணிந்து சாகக்கொடுத்த பிரான்
உந்த மிதய மெமக்கு நல்கி யுய்ம்மி னென்ன வுணராமற்
சந்த தமும்பேய்க்கிடங்கொடுத்துச் சாதனலமோ தயாபரற்கே
சிந்தா சனத்தைக் கையளித்துச் சேரவாரும் ஜெகத்தீரே. 200

(கு...ரை) துணிந்து - மனம் துணிந்து; உம்தம் - உங்களுடைய; நல்கி - கொடுத்து; உணராமல் - அவருடைய சொற்களை அறியாமல்; சந்தத மும் - சதாகாலமும்; சாதல் நலமோ - சாவது நல்லதோ? சிந்தாசனத்தை - சிந்தையாகிய ஆசனத்தை.

கோதி னீதி யிரக்கமெனுங் குணங்கண் மாறு கொள்ளாமல்
தாதை யுவப்ப மாதுவித்தாய்த் தயாள வுருக்கொண் டவ தரித்து
நீதி யிரக்க சமரசனு நின்றுத் தரித்த நிறைகருணை
ஆதி மூலப் பரம்பொருளை யடுக்க வாரும் ஜெகத்தீரே. 201

(கு...ரை) கோது இல் நீதி - குற்றமில்லாத நீதி; இரக்க சமரசனை - நீதி இரக்கம் இரண்டு குணங்களையும் ஒப்ப உடையவனால்; நிறை கருணை ஆதி மூலப் பரம்பொருள் - நிறைந்த கருணையுடைய ஆதிகாரணக் கடவுளை.

மண்ணை விழுங்கக் கொதித்தெழும்பி வருந்தீ யாற்றைக் கடப்பதற்கு
வெண்ணெய்ப் பாலஞ் சமைப்பார்போல் வேதநாதன் வெகுளிசுய
புண்ணி யத்தாற் றீருமெனப் புலம்ப வேண்டாம்; புரைதீர்ந்த
அண்ண லேசு குருதிமுகந் தவிக்க வாரும் ஜெகத்தீரே. 202

(கு...ரை) கொதித்து எழும்பி வரும் தீயாறு - பொங்கி எழுந்துவரும் தீயாகிய ஆறு; வெண்ணெய்ப் பாலம் சமைப்பார்போல் - வெண்ணெயினால் ஓர் பாலம் அமைப்பவர்போல்; வெகுளி - கோபம்; புரை தீர்ந்த - குற்றமற்ற; குருதிமுகந்து அவிக்க - இரத்தத்தை மொண்டு தெளித்து இத்தீயை அவிக்க.

நீதா சனத்தண் டையினிற்க நீதி மானுக் கும்மரிதேல்
கோதார் பாபாத் துமங்களுக்குக் கூடுமோ? கூடாதெனவே
வேதாக்ஷரங்கள் விளம்புகின்ற மெய்யைக் கருதி விரைந்தின்னே
தாதா கிருபா சனத்தண்டை சார வாரும் ஜெகத்தீரே. 203

(கு...ரை) நீத ஆசனத்து அண்டையில் நிற்க - கடவுளுடைய நியாயாசனத்தின்முன் நிற்க; வேத அட்சரங்கள் - வேத எழுத்துக்கள்; மெய்யைக் கருதி - உண்மையை எண்ணி; இன்னே - இப்பொழுதே.

நம்மைப்படைத்துக் காத்துவரும் நாத னிதர தேவர்களை
நம்மைப் போல வணங்காதீர்; நாமே கருத்த சென நவின்ற
செம்மை மொழியைக் கருத்திருத்தித் தெய்வப்பதரைச்சீத்துவிட்டு
வம்மின் றிரியே கப்பெருமான் மலர்த்தாள் வணங்க ஜெகத்தீரே.

(கு...ரை) இதர தேவர்களை - வேறு தேவர்களை; நவின்ற - சொன்ன; கருத்து. இருத்தி - கருத்திலே உறுதியாகக்கொண்டு; தெய்வப் பதரை - பதர்போன்ற தேவர்களை; சீத்துவிட்டு - சீ என்று வெறுத்துத் தள்ளிவிட்டு; வம்மின் - வருமின், வாருங்கள். இதுமுதல் பதினாறு கவிகள் பத்துக் கற்பனைகளைக் கற்பனை நயங்களுடன் விளக்குவது சுவைத்து இன்புறத்தக்கது.

விக்கிர கம்நம் மிணையாக்கி விழுந்து வணங்கும் விழலரைநம்
உக்கிர கோபந் தகிக்குமென வுரைத்த கடவுளுமை முழுதும்
நிக்கிர கஞ்செய் திடுமுன்னர் நீசவுருவா ராதனமாம்
அக்கிர மம்விட் டியேசுதிரு வடியை யடைமின் ஜெகத்தீரே.

(கு...ரை) விழலரை - விழல் நிலம்போன்ற பயன் அற்றவர்களை; தகிக்கும் - எரித்துவிடும்; நிக்கிரகம் செய்திடும் முன்னர் - அழித்துவிடு வதற்கு முன்னதாகவே; நீச உரு ஆராதனமாம் அக்கிரமம் - நீசத் தன்மை பொருந்திய உருவ வழிபாடாகிய அக்கிரமத்தை; விட்டு - நீக்கிவிட்டு.

தூய நினைவால் அன்றிநம்பேர் சொல்லி வழங்குந் துர்ஜநரைக்
காயும்நமது சினமென்ற கடவுளுரையைக் கருதாமல்
வாயில் வந்த படிபிதற்றி மதியா தொழுகல் மா பாவம்;
நேய மிகுமெய்ப் பத்தியுடன் நினைத்து வழுத்தும் ஜெகத்தீரே.

(கு...ரை) துர்ஜனர் - கெட்டவர்கள் X சற்ஜனர்; காயும் நமது சினம் - நமது கோபாக்கினி எரித்துவிடும்; மதியாது ஒழுகல் - மதியாமல் நடப்பது; மா பாவம் - பெரும் பாவம்.

அனைத்தும் நமக்குக் கையளித்த வகண்ட பரிபூரணன்தம்மை
நினைத்து லோக வியாபார நிறுவி வணங்க வாரத்தோர்
தினத்தை விதித்தார்; அந்நாளைத் தீட்டுப் படுத்திற் றீராத
அனர்த்தம் வருங்காண்; தூமனமா அமலற் பரவும் ஜெகத்தீரே.

(கு...ரை) அகண்ட பரிபூரணன் - அளவிடப்படாத முழுமுதற் கடவுள்; நிறுவி - நிறுத்திவிட்டு; வாரத்து ஓர் தினத்தை - ஒரு வாரத்தில் ஒரு நாளை; தீராத அனர்த்தம் - நீக்க முடியாத கேடு; தூ மனமா - பரிசுத்த மனதுடனே; அமலன் பரவும் - ஆண்டவனைத் துதியுங்கள்.

ஆயு ணீடித் திவ்வுலகி லமர்ந்து சுகிக்க வுனது தந்தை
தாயைக் கனம்பண் ணுதியென்று சருவலோக தந்தை சொன்ன
தூய விதியை நன்னெறியின் றுணிபென் றுன்னிப் பெற்றோர்க்கு
ஞாய முடன்கீழ்ப் படிந்தியேசு நம்பற் றொழுமின் ஜெகத்தீரே.

(கு...ரை) இவ்வுலகில் அமர்ந்து சுகிக்க - இந்த உலகத்தில் இன்ப மாக சுகத்துடன் இருக்க; நன்னெறியின் துணிபு - சன்மார்க்கத்தின் முடிவு; ஞாயமுடன் கீழ்ப்படிந்து - நியாயமான வழியில் கீழ்ப்படிந்து; ஞாயமுடன் என்ற சொல்லில் கற்பனையின் புனிதம் அடங்கியுள்ளது.

கொலைசெய் யாதே யெனப்பரம கோமான் கொடுத்த கற்பனைக்கு
நிலமீ துதித்த குமாகுரு நியாய மிலவாச் சீறுவதுங்
கொலையோ டொக்குமென விதந்து கூறும் பொருளைக் குறிக்கொண்டு
தலைமீ தணிந்தச் சற்குருவின் சரணைப் பணிமின் ஜெகத்தீரே.

(கு...ரை) நிலம் மீது உதித்த குமரகுரு - இயேசு பெருமான்; நியாயம் இலவாச் சீறுவதும் - நியாயமில்லாமல் கோபப்படுவதும்; விதந்து கூறும் - தாற்பரியப்படுத்திக் கூறும்; குறிக்கொண்டு - கருத்தில் வைத்து; தலைமீது அணிந்து - சிரமேற்கொண்டு.

தீய வினையாம் விபசாரஞ் செய்யாதிருங்க ளென்று மகா
தூய கடவுள் வரைந்துதந்த துகடீர் விதியைத் தூமனமாய்
மாய மறவே யநுட்டித்து மனையோ டிருந்தில் லறநடத்தி
நேய மிகுரட் சகன்சரண நிழலை யடைமின் ஜெகத்தீரே. 210

(கு...ரை) துகள் தீர் விதியை - குற்றமற்ற விதியை; மாய மறவே அநுட்டித்து - உண்மையுடன் அனுஷ்டித்து; மனையோடு இருந்து இல்லறம் நடத்தி - இல்லாளோடு கூடி இல்லற வாழ்க்கையை நடத்தி.

இச்சை யோடந் நியமாத ரெழிலைக் கருதி நோக்கிடு வான்
துச்சா ரிகள்பங் கடைவனென்ற தூயோனருளைத் துணைகொண்டு
சிச்சீ யெனத்து ரிச்சையெலாஞ் சேரவெறுத்துச் சீத்துவிட்டுக்
கொச்சை மதியை யகற்றியெம்மான் குணஞ்சார்ந் தொழுகும் ஜெகத்தீரே. 211

(கு...ரை) இச்சையோடு - தீய ஆசையோடு; அந்நிய மாதர் எழிலைக் கருதி நோக்கிடுவான் - பிற பெண்டிருடைய அழகை உள்ளத்தில் கருதி நோக்குபவன்; துச்சாரிகள் - அற்பர், கெட்ட நடத்தையுடையவர்கள்; சீசீ - இழிவுக்குறிப்பு; சீத்துவிட்டு - அழித்துவிட்டு; கொச்சை மதி - கேவலமான புத்தியை; எம்மான் - எம்பெருமான்.

மீளா நரகுக் காளாக்கும் விபசா ரத்தீ வினைபுரிந்து
வாளாப் பரமா னந்தசுக வாழ்வை யிழத்தன் மதியாமோ?
நாளா ரம்பத் தயல்தூற்ற நாண மழிந்து நகைக்கிடமா
மாளா முன்னே கிறிஸ்தியேசு மலர்த்தாள் வணங்கும் ஜெகத்தீரே. 212

(கு...ரை) வாளா - வீணே; மதி ஆமோ - நற்புத்தி ஆகுமோ; நாள் ஆரம்பத்து அயல் தூற்ற - தீவினை புரிந்த அந்த நாளிலேயே, அந்நாளின் ஆரம்பத்திலேயே; நகைக்கு இடமா - பிறர் நகைப்பதற்கு இடமாய்.

எங்குந் தமசந் நிதியாக விருக்குங் கடவுள் களவான
பங்க வினைசெய் யாதிரெனப் பகர்ந்த துணர்ந்து பரபொருளைச்
சிங்கி யெனவே வெறுத்தழியாச் செல்வம் வழங்குங் கிறிஸ்துவெனும்
மங்காப் பொருளை யடைந்துநித்ய வாழ்வை யடைமின் ஜெகத்தீரே. 213

(கு...ரை) எங்கும் தம சந்நிதியான இருக்கும் கடவுள் - எவ்விடமும் தமது சந்நிதானமாக, சர்வ வியாபகமாக, இருக்கும் கடவுள்; களவான பங்க வினை - களவு ஆகிய குற்றமுடைய செயலை; பகர்ந்தது உணர்ந்து - சொன்னதை அறிந்து; பரபொருளை - பிறர் பொருளை; சிங்கி - விஷம்; மங்காப் பொருளை - அழிவில்லாத பொருளை.

பொய்யைப் புகலா திருங்களெனும் புனிதன் புனித கற்பனையை
அய்யோ! நினையா தவமதித்தீ ரல்லும் பகலு மனவரதந்
துய்ய மனச்சாட் சியைமழுக்கித் துணிந்து முழுப்பொய்
சொல்லுகின்றீர்
உய்யீ ருய்யீர் மெய்பேசி யுய்ய வாரும் ஜெகத்தீரே. 214

(கு...ரை) பொய்யைப் புகலாதிருங்கள் - பொய் சொல்லாதிருங்கள்; உய்யீர் உய்யீர் - நீங்கள் நரக வாயில் நின்றும் தப்பிப்பிழைக்கமாட்டீர்கள்; அல்லும் பகலும் அனவரதம் - இரவும் பகலும் எப்போதும்.

பொய்மை தானும் வாய்மையதாம் புரைதீர் நன்மை
பயக்குமெனின்
மெய்மை யாவது எத்தீங்கும் விளையா துரைத்த
லெனுங்குறளின்
நொய்மை யுரையைத் தவிர்த்துள்ள துள்ளபடியே
நுவலு மென்ற
தெய்வ வுரையைக் கடைப்பிடித்துச் சேர வாரும் ஜெகத்தீரே.

(கு...ரை) "பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"
"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

என, உலகியலுக்கியைய வாய்மைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர் வாய்மொழியின் நொய்மையை, எம்பெருமான் உன்னத கற்பனையொடு ஒப்புக் காட்டி விளக்கும் நயம் அறிந்து இன்புறற் குரியது.

நெஞ்சுத் துணிவாய்ப் பொய்பேசி நேச மொருவி யந்நியரை
வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! மனாதி யறியும் மகாதேவன்
கிஞ்சித்தேனும் விடாதுநும்மைக் கேட்குங் காலங் கிட்டுமுனம்
அஞ்சித் தீமை யகற்றியெம்மா னடி சார்ந்துய்மின்
ஜெகத்தீரே. 216

(கு...ரை) நேசம் ஒருவி - அன்பை விட்டு விட்டு; மன ஆதி அறியும் - மன முதலியவற்றை உள் நோக்கி அறியும்; கிட்டும் முனம் - வருவதற்கு முன்னே; தீமை அஞ்சி அகற்றி - தீமைக்கு பயப்பட்டு அதனை நீக்கி விட்டு.

விரிவெள் ளரியங் கனிக்கிருப்புப் பூண்கட் டிடுமவ் விதம்போல
ஒருபொய் நிலைக்க வாயிரம் பொய் யுரைக்க வேண்டும்;
உரைத்தாலும்
வருமே வெளிக்கு; வரிலதிக மானக்கேடே; மறுமையினும்
எரிவாய்ப் படுக்கு மிதைவிடுத்தெம் இறையைத் தொழுமின்
ஜெகத்தீரே. 217

(கு...ரை) விரி வெள்ளரி அம் கனிக்கு - விரிந்த வெள்ளரிப் பழத்திற்கு. 'வெள்ளரிப் பழத்திற்குப் பூண் கட்டினாற்போல்' என்ற சாதாரண உலக வழக்குப் பழமொழி இங்கு உவமானமாக எடுத்து ஆளப்பட்டிருப்பது வியந்து மகிழ்தற்குரியது.

அனைத்து முடையான் பிறருடைமை யான
வெதையு மாசையுடன்
நினைத்தி டாதே யெனவிரித்து நிகழ்த்துங் கடைசிக்
கற்பனையை
மனத்து ளிருத்தி யவரவர்க்கு வகுத்த வளவில் மகிழ்ந்து
சொற்பத்
தினத்தைக் கழித்தெம் மான்அருளும் ஜீவ னடைமின்
ஜெகத்தீரே. 218

(கு...ரை) அனைத்தும் உடையான் - எல்லாப் பொருள்களையும் உடையவன், கடவுள்; சொற்ப தினத்தைக் கழித்து - அற்பமான வாழ்நாட்களை நல்ல வழியிலே செலவிட்டு.

தந்தை கொடுத்த தசவிதியைத் தள்ளி யகச் சாட்சியை
மழுக்கிச்
சிந்தை யுரக்க நன்றொருவித் தீமைபுரிந்த நரரேங்காண்
எந்த விதத்துந் தேவசின மெரிக்கு முன்ன மெமைப்புரக்க
வந்த பரம சுதன்பாதம் வணங்க வாரும் ஜெகத்தீரே. 219

(கு...ரை) தச விதியை - பத்துக் கற்பனையை; சிந்தை உரக்க - மனம் உரத்துப்போக; நன்று ஒருவி - நன்மையை விட்டு; நரரே - மனிதர்களே; காண் - அசை; எமைப் புரக்க வந்த பரம சுதன் - எம்மை இரட்சிக்கும்படியாக வந்த தேவ குமாரன்.

ஏழை மதியாற் றுன்மார்க்கத் தெய்தற் கரிய வாழ்நாளைப்
பாழாக் கிடுவீர்! அந்தோநிர்ப் பந்த முடிவு பற்றியபின்
ஊழி யூழி யழுதாலும் உய்வுண் டாமோ? உளந் திரும்பித்
தாழா தின்னே யேசுதிருச் சரணைப் பிடிமின் ஜெகத்தீரே. 220

(கு...ரை) ஏழை மதியால் - அற்ப புத்தியால்; எய்தற்கு அரிய வாழ்நாளை - பெறுதற்கு அரிய ஆயுட்காலத்தை; துன்மார்க்கத்துப் பாழாக்கிடுவீர் - கெட்ட வழியிலே பாழ்படுத்தி விடுபவர்களே; தாழாது - காலம் கடத்தாமல்; இன்னே - இப்பொழுதே.

இகபர சாந்தி

வித்தகந் திகழு மான்ம விசாரிநம் பிக்கை யென்ற
உத்தம ரிருவர் ஜீவ சரிதத்தை யொரு வாறுக
இத்தகைத் தென்று சொற்று மினிவரு மரண நீந்தி
முத்தி ராச் சியத்தை யுற்ற முறைமையை மொழிது மன்றே.

(கு...ரை) வித்தகம் திகழும் - அறிவு விளங்கும்; இத்தகைத்து என்று - இப்படிப்பட்டது என்று; சொற்றும் - சொன்னோம்; அன்று, ஏ, - அசை.

பகலொளி சதாநின் றோங்கும் பவித்திர தேசாந் தத்தில்
இகபர சந்தி யென்னு மிடரிருட் பிழம்பு தொக்கங்
ககவயிற் கடுகிச் செல்லும் அடுதிரை மரண வாற்றைக்
ககனயாத் திரிகர் தத்தங் கண்களிற் றெரியக் கண்டார். 222

(கு...ரை) பகல் ஒளி - சூரிய வெளிச்சம்; பவித்திர தேச அந்தத்தில் - பரிசுத்த நாட்டின் முடிவில்; இகபர சந்தி - இகமும் பரமும் சந்திக்கும் இடம்; அகவயின் - அதன் உள்ளே; அடு திரை - கொல்லும் தன்மை வாய்ந்த அலைகளையுடைய; ககன யாத்திரிகர் - மோட்சப் பிரயாணிகள்.

கண்டுடன் மனமுங் கண்ணுங் கலங்கினர் கவன்று ரேனும்
உண்டெமக் குறுதி யென்று வுள்ளுளே யூக்கித் தொண்டர்
மண்டலம் புரந்த யேசு மலரடிப் புணையைப் பற்றி
எண்டகு தேவா ரங்கொண் டிசைத்தனர் பிணிப்பார் நெஞ்சில்.

(கு...ரை) கண்டு உடன் - கண்டு, உடனே; கவன்றார் எனும் - மனம் வருந்தினார் என்றாலும்; மலர் அடிப்புணையை - மலரடியாகிய தெப்பத்தை; எண் தகு தேவாரம் - ஆழ்ந்து சிந்தித்தற்குத் தக்க தேவாரங்களை.

காலத்தைக் கருதி நின்றுட் பகையாகிக் கலக்கங் காட்டிக்
கோலத்தைக் குலைத்துக் கோறிக் கூரிருட் சூழ லுய்த்து
ஞாலத்தைக் கெடுக்கும் பொல்லா நச்சுத்தீ யலகையே போற்
சாலத்தை விளைக்கு மிந்தச் சதிபுரி மரண கங்கை. 224

(கு...ரை) பிசாசு ஆன்மாக்களைக் கெடுக்கும் உபாயம் இங்கு விளக்கப்பட்டுள்ளது; காலத்தைக் கருதி நின்று - தனக்கு வாய்ப்பான காலம் கிட்டும்வரை காத்திருந்து; கோலத்தைக் குலைத்து - உருவத்தை மாற்றி கோறி - கொன்று; சாலத்தை - வஞ்சகச் செயல்களை.

தேக்தத் துவங்கள் குன்றுஞ் சீர்கெடு மையஞ் சேருஞ்
சோகமாம் பொறிபு லன்கள் சுழன்றந்தக் கரண மாயும்
ஆகமுங் கிடையா மேலிட் டாருயி ரொடுங்கும்; அந்தோ!
மோகமா மரண கங்கை யூடற முடுகுங் காலே. 225

(கு...ரை) தத்துவம் - அறிவு; குன்றும் - குறையும்; ஐயம் சேரும் - மனதிலே சந்தேகங்கள் தோன்றும்; சோகம் ஆம் - வருத்தம் உண்டாகும்; ஆகமும் கிடையாம் - உடலும் கிடையாகக் கிடந்துவிடும்; மோக மா மரண கங்கை யூடு - மிக மயக்கத்தை உண்டாக்கும் மரண கங்கையின் ஊடாக; முடுகுங்காலே - விரைந்து செல்லும்பொழுது.

பாபத்தை விளைத்தோர்க் குற்ற பயிரிடுங் கூலி தேவ
கோபத்தின் மிகுதி; இந்தக் குவலயத் தெவர்க்கு நீங்காச்
சாபத்தின் சமைவும் மோசச் சற்பனைக் கிடங்கு மாய
ஆபத்தின் குகையா மிந்த வறக்கொடு மரணச் சூழல். 226

(கு...ரை) அறக் கொடு - மிகக் கொடிய.

கெடுமதி வித்திற் றோன்றி யிச்சையிற் கிளைப்பிப் பொல்லாக்
கடுமனத் தெழுமூ வாசைக் கவடுவிட் டனுராய்ப் பூத்துக்
கொடு வினைத் திரளைக் காய்த்துக் குலவிய பாவ தாருப்
படுபழங் கனிந்த சாறிப் பயங்கெழு மரண நீத்தம். 227

(கு...ரை) கெடுமதி வித்தில் தோன்றி - துர்ப்புத்தியாகிய விதையில் முளைத்து; மூவாசைக் கவடு விட்டு - மூன்று ஆசைகளாகிய கொப்பு விட்டு; மூவாசை - மண், பெண், பொன். அனுர் - துன்பம்; பாவதாரு - பாவமாகிய மரம்; கனிந்த சாறு - கனிந்து வடிந்த சாறு; பயம் கெழு - பயம் பொருந்திய; மரண நீத்தம் - மரண நதி.

புரணபுண் ணியரே யார்க்கும் புகலிடம்; அவர்பொற் பாத
அரணத்தைத் தேடித் தம்மை யடைக்கலப் படுத்தி யந்தக்
கரணவிந் தியங்க ளோடு காயத்தைப் புனித மாக்கி
மரணத்தை நினைத்து வாழா மாந்தரே மாந்த மாந்தர். 228

(கு...ரை) புரணம் - பூரணம்; பொற்பாத அரணத்தை - அவர்கள் பொற்பாதமாகிய பாதுகாப்பு மதிலை, இந்தியம் - இந்திரியம்; காயத்தை - உடலை; மரணத்தை நினைத்து வாழா மாந்தர் - சாவை எண்ணாமல் வாழும் மனிதர்; ஏமாந்த மாந்தர் - ஏமாந்தவர்களே.

பழிபடு மரண வாற்றைப் பாரித்துப் பகர்வ தெங்ஙன்?
சுழிபடு மலைவாய்ப் பட்ட துரும்பெனத் துறைக்குண் மூழ்கி
அழிபடு ஜீவ ரேயவ் வவத்தையை யறிவ ரன்றி
மொழிபடு வனவிப் பாங்க ருத்தேச முறைமைத் தாமால். 229

(கு...ரை) பாரித்து - விரிவாக; பகர்வது எங்ஙன் - சொல்வது எப்படி; சுழிபடும் அலைவாய்ப்பட்ட துரும்பு என - நீர்ச்சுழிக்குட்பட்ட துரும்பு போல்; அவத்தை - கஷ்டத்தை; இப்பாங்கர் மொழி படுவன - இவ்விதமாகச் சொல்லப்படுவதெல்லாம்; உத்தேச முறைமைத்து - உத்தேசமானது தான்; ஆல், - அசை.

ஆயுளுக் கெல்லை யாயு மவனிக்கோ ரந்த மாயும்
மீயுயர் கதிவா யிற்கு மிகவணித் தாயு மூடே
பாயுமம் மாண வாற்றின் படுகரை யடுத்தங் குற்றார்
நாயகன் பதத்தை நாடு நலந்திகழ் மறைவலாளர். 230

(கு...ரை) அவனிக்கு - பூமிக்கு; மீ உயர் கதி வாயிற்கு - மேல் உள்ள மோட்ச வாயிலுக்கு; மிக அணித்தாயும் - மிக சமீபமாயும்.

அவ்வயி னொளிகொ டூத ராரணர் தம்மை நோக்கி
இவ்வரை காண்மின் சொற்ற விகபர சந்தி யாய
பௌவமற் றிதனை நீந்தி யக்கரைப் படுகி லீரேல்
திவ்விய நகர வாயிற் சேர்ந்திடப் பெறுவி ரல்லீர். 231

(கு...ரை) அவ்வயின் - அவ்விடத்தில்; ஒளி கொள் தூதர் - பிரகாசமான தேவ தூதர்கள்; ஆரணர் தம்மை - அவ்வேதியர்களை; இவ்வரை - இவ் எல்லை; பௌவம் - கடல்; அக்கரை படுகிலீரேல் - அக்கரை சேரவில்லையானால்; சேர்ந்திடப் பெறுவீர் அல்லீர் - சேரமாட்டீர்கள்.

ஓலிடு மரண வாற்றிற் கொருபுணை யேனு மின்று;
பாலமு மின்று; நீந்தும் பரிசினாற் கடத்தல் வேண்டும்;
ஏலியா வேனோக் கென்ற விருவர்செல் வழியிற் செல்ல
ஞாலமீ தெவர்க்கு மென்று நம்பனுத் தார மின்றால். 232

(கு...ரை) ஓலிடும் - ஓலம் இடுகின்ற, சப்திக்கின்ற; நீந்தும் பரிசினால் - நீந்தும் செயலினாலே தான்; நம்பன் - கடவுளின்; உத்தாரம் இன்று - உத்தரவு இல்லை; ஆல் - அசை.

நதிநிலை வினவு வீரேல் நம்பிமீர்! நவிலக் கேண்மோ;
சதிபுரி யாழ முண்டு; தரிகொளுந் திடரு முண்டெம்
அதிபதி யருண்மே லுய்த்த விசுவாச வளவி னாமால்
மதிநிலை கலங்கி ராகி மரணத்தைக் கடத்தி ரென்றார். 233

(கு...ரை) வினவுவீரேல் - கேட்பீர்களானால்; நம்பிமீர் - சிறப்புடையவர்களே; நவிலக் கேண்மோ - நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்; சதி புரி - மோசம் உண்டாக்கக் கூடிய; திடர் - திட்டு, மேடு; அருள் மேல் உய்த்த விசுவாச அளவின் ஆம் - அருளின்மேல் வைத்த விசுவாசத்தின் அளவே ஆகும்; மதி நிலை கலங்கீர் ஆகி - அறிவு கலங்காமல்; கடத்திர் - கடந்து செல்லுங்கள்.

வேறு

ஆய தேபுரி வாமென வருமறைக் கிழவர்
மேய வந்நதிப் பெருக்கினைக் கண்டுளம் வெருண்டு
தூய வக்கரைப் படுதுமோ? வெனநிலை துளங்கிக்
காய முஞ்சலித் தினிச்செய லென்னெனக் கவன்றார். 234

(கு...ரை) ஆயதே புரிவாம் என - அவ்வாறே செய்வோம் என்று; உளம் வெருண்டு - மனம் பதறி; தூய அக்கரை படுதுமோ; பரிசுத்தமான அக்கரை போய்ச் சேருவோமா; காயமும் சலித்து - உடலும் களைப்புற்று; இனிச் செயல் என் என - இனி என்ன செய்வது என்று.

கலை நிரம்பிய மதியினன் கவன்றன னெனினும்
நிலை வரங் கிறிஸ் தியேசுவென் னித்திய ஜீவன்
உலைவென்? சாவுநல் லூதிய மெனக்கென வுரத்தான்
மலைது ளங்கினு மனந்துளங் காதமெய்ம் மறையோன். 235

(கு...ரை) கலை நிரம்பிய மதியினன் - கலைகளைக் கற்று நிறைந்த அறிவு பெற்றவன்; நிலை வரம் - நித்தியமாக உள்ள; (இப்படியிருக்க) உலைவு என் - மனம் கலங்குவது ஏன்?; சாவு நல் ஊதியம் எனக்கு - சாவு எனக்கு ஆதாயம்; உரத்தான் - உறுதி கொண்டான்; துளங்கினும் - அசைந்தாலும்.

நோக்கி னான் விசு வாசியினக நிலை நுதலி
மீக்கி ளர்ந்தெழு முவகைய னம்பிக்கை விறலோய்!
பாக்கி யம்மணித் துளதுகாண் படுகரூ டுருவி
ஊக்கி யக்கரைப் படுவதே கருமமென் றுரைத்தான். 236

(கு...ரை) நம்பிக்கை, விசுவாசியின் அகநிலை நுதலி நோக்கினான் - நம்பிக்கை கிறிஸ்தியானின் உள்ளக் கிடக்கையை ஆராய்ந்து அறிந்தான்; மீக் கிளர்ந்து எழும் உவகையன் - மேலும் மேலும் பொங்கி எழும் மகிழ்ச்சி யுடையவனாய்; படுகர் ஊடு ஊருவி - இப்பள்ளத்தின் ஊடாகச்சென்று.

சீரி தாமென விருவருந் திருப்பெருங் கருணை
ஆர வுண்டகந் தேக்கின ரானந்த பதவிப்
பேர ருட்கரை பிடித்துமென் றுவலிற் றுணிந்து
மார ணத்துறை யிறங்கினர் வஞ்சமில் மறையோர். 237

(கு...ரை) சீரிதாம் - இதுவே சிறந்தது; திருப்பெருங்கருணை ஆர உண்டு - இறைவன் திருவருளை நிரம்பப்பெற்று; ஆவலில் துணிந்து - ஆவலோடு துணிவு கொண்டு; மாரணத் துறையின் - மரண நதியின் துறையிலே.

இறங்கி டுந்துறை நீத்துள தாதலி னிறங்கி
அறங்கி ளர்ந்தமெய் யாரண ஞழத்தி னமிழ்ந்திக்
கறங்கு போற்சுழன் றகநிலை கலங்கியுள் ளுடைந்து
பிறங்கு நன்மதி திகைத்தனன் காணிலை பிசகி. 238

(கு...ரை) இறங்கிடும் துறை - இறங்கிய இடம்; நீத்து உளது ஆதலின் - ஆழமானது ஆகையினுல்; கறங்கு - காற்ருடி; அகம் நிலை கலங்கி - உள்ளம் நிலை கலங்கி; பிறங்கு - விளங்குகின்ற; கால் நிலை பிசகி - காலின் நிலை தவறி.

•

ஆர ணத்துறை நீந்திய வருள் விசுவாசி
மார ணத்துறை முயங்கலும் வருந்தியுண் மறுகிக்
கார ணத்தனி முதல்வனைக் கருத்திஞற் றழுவிக்
கோர ணிப்படு திரையிடை முழுகிமுக் குளிப்பான். 239

(கு...ரை) ஆரணத்துறை - வேதத்துறைகளிலே; மாரணத்துறை - மரணத்துறையிலே; முயங்கலும் - இறங்கின உடனே; உள் மறுகி - மனம் மயங்கி; கோரணிப்படு திரை யிடை - துன்பத்தைக் கொடுக்கும் பெரிய அலைகளினிடையே; முழுகி முக்குளிப்பான் - மேலும் மேலும் முழுகித் திண்டாடினுன்.

உத்த மந்திக ழொண்மதி படைத்தநம் பிக்காய்!
மெத்த வாழ்கயத் தமிழுகின் றனன்;றலை மேலாய்த்
தத்து பேரலை புரண்டடனை மூடுமாற் றரிப்பின்
றெத்தி றம்மினிக் கடைப்பிடித் துய்வலென் றிசைப்ப. 240

(கு...ரை) உத்தமம் திகழ் ஒள்மதி படைத்த நம்பிக்காய் - மேன்மை விளங்கிய, நல் அறிவுள்ள நம்பிக்கையே; மெத்த ஆழ் கயத்து அமிழுகின்றனன் - அதிக ஆழமான மடுவுக்குள் அமிழுகின்றேன்; தரிப்பு இன்று - கால் தரையில் தரிக்கவில்லை; எத்திறம் - எப்படி; உய்வல் - பிழைப்பேன்; இசைப்ப - சொல்ல.

•

என்னை யென்னைநீ கலங்குதி? திடங்கொண்மற் றெந்தாய்!
நன்ன ரென்னிரு கால்களும் நனிதரிப் பனவால்
முன்ன ரேகிரு பாஸ்தமுண் டிங்ஙன முடுகிப்
பன்ன ருந்திரு வடித்துணை பற்றெனப் பகர்ந்தான். 241

(கு...ரை) என்னை என்னை நீ கலங்குதி - நீ ஏன் கலங்குகின்ருய்; திடம் கொள் - தைரியமாய் இரு; எந்தாய் - என் தந்தையே; நன்னர் - நன்ருக; கிருபா அஸ்தம் - அருள் காட்டும் கை; முடுகி - விரைந்து; பன்ன அரும் - சொல்லுதற்கு அரிய; பற்று - பிடி; பகர்ந்தான் - சொன்னுன்.

புந்தி யுற்றநம் பிக்கைசொற் கேட்டுமெய்ப் போத
அந்த ணன்னென தாருயிர்க் கருந்துணை யாய
மைந்த! பாவியே னுயிர்க்குறு மரணபந் தங்கள்
தொந்த மாய்ப்புடை வளைந்துசூழ்ந் தனவிங்கு றுயோய். 242

(கு...ரை) புந்தி உற்ற - அறிவு மிக்க; நம்பிக்கை சொல் கேட்டு - நம்பிக்கையின் சொல்லைக் கேட்டு; மெய்ப் போத அந்தணர் - மெய் ஞானி யாகிய கிறிஸ்தியான்; புடை - பக்கத்தில்.

ஊணு வட்டுபால் தேனொடு பெருக்கெடுத் தோடும்
மாண ரும்புது வளஞ்செறி மங்கல நாட்டைக்
காணி யாக்குவான் கருதினன்; காணவுங் கிடையேன்;
கோணி லாவுமிந் நதியிடைக் குப்புறீஇ யென்றான். 243

(கு...ரை) ஊண் - பலவகை உணவு; உவட்டு பால் - மிகுந்த பால்; மாண் - மாட்சி பொருந்திய; காணி ஆக்குவான் - உரிமை நிலம் ஆக்கிக் கொள்ளும்படியாக; கருதினன் - எண்ணியிருந்தேன்; கோள் நிலாவும் இந் நதியிடை - மரணம் பொருந்திய இந்நதியில்; குப்புறீஇ - குப்புறக் கிடந்து; காணவும் கிடையேன் - கண்ணால் காணவும் முடியாதவனாய் இருக் கின்றேன்.

[பின் இருவரும் இறைவனை எண்ணித் துதித்தனர்]

இவ்வண்ண மேகோ வாவை யிருதயங் கனிந்து போற்றிச்
செவ்விய ரிருவர் தாமுந் தெவிட்டிடாப் பரமா னந்தப்
பௌவவா ரிதியின் மூழ்கிப் பரவச ராகி நின்றார்
திவ்விய வாக்கச் சீர்மை செகத்துரை தெரிப்ப தேயோ. 244

(கு...ரை) பரமானந்தப் பௌவ வாரிதி - பரமானந்தக் கடல்; திவ் விய ஆக்கச் சீர்மை - மோட்ச செல்வத்தின் சிறப்பை; செகத்துரை - இந்த உலக மொழியால்; தெரிப்பதேயோ - விளக்க முடியுமா?

சுவர்க்க ஆரோகணம்

மிருத்தொடிவ் வுலக பந்தம் வீசிய மறையோ ரின்ன
திருத்தகு சீயோ னென்னுந் திருமலை யடிவா ரத்தை
அருத்தியோ டணைந்து முன்னிட் டாண்டகை திருப்பொற் பாதங்
கருத்தினே டுள்ளிப் போற்றிக் கனிந்துவந் தேத்துங் காலை.

(கு...ரை) மிருத்தோடு - மரணத்தோடு; இன்ன திருதகு - இப்படிப் பட்ட சிறப்புப் பொருந்திய; அருத்தியோடு அணைந்து - விருப்பத்துடனே சேர்ந்து; முன்னிட்டு - முற்பட்டு நின்று; கனிந்து உவந்து எத்தும் காலை - உள்ளம் உருகி மகிழ்ந்து துதிக்கும்பொழுது.

ஐயன்மீர்! வம்மின் வம்மின்; அமலவேந் தடியீர் வம்மின்;
வையகம் புரந்த யேசு மலரடித் தொழும்பீர்! வம்மின்;
துய்யநல் லாவிக் கென்றுந் துக்கமூட் டாதீர்! வம்மின்;
உய்யுநூ னெறிவிடாத உத்தம தவத்தீர்! வம்மின். 246

(கு...ரை) வம்மின் வம்மின் - வாருங்கள் வாருங்கள்; அடுக்குத் தொடர் உவகைபற்றி வந்தது; அமல வேந்து அடியீர்! - கடவுளின் அடியார்களே; தொழும்பீர் - தொண்டர்களே; உய்யும் நூல் நெறி விடாத - இரட்சணிய நூலின் நெறி தவறாத.

என்றுப சரித்துக் கிட்டி யிதயத்து முகத்து மன்பு
துன்றிமன் னுவகை வெள்ளஞ் சொரிந்தெனத் துரிசில் தூதர்
மன்றல்வா சகமி ழற்றி வந்துவே தியரை யேற்றார்;
கன்று காண் கறவை யேபோற் கசிந்துளங் கரையு நீரார். 247

(கு...ரை) என்று உபசரித்துக் கிட்டி - என்று உபசார மொழிகள் கூறிக் கிட்ட வந்து; இதயத்தும் முகத்தும் அன்பு துன்றி - அகத்திலும் முகத்திலும் அன்பு நிறைந்து; துரிசு இல் - அழுக்கில்லாத, பரிசுத்தமான; மன்றல் வாசகம் மிழற்றி - சிறப்பான வார்த்தைகளைச் சொல்லி; ஏற்றார் - எதிர்கொண்டு அழைத்தார்; கன்று காண் கறவையே போல் - கன்றைக் கண்ட கறவைப் பசுப்போல்.

அன்பிற்கு முண்டோ யாண்டு மடைக்குந்தா ழார்வ மிக்கார்
புன்கணீர் பொசிந்து போந்து பூசலைத் தருமற் றென்னாத்
தென்புலந் திகழ்த்தி நிற்குஞ் செந்தமிழ் மொழிக்குச் சான்றாப்
பொன்புலத் துறுபுத் தேளிர் பூஜிதை புரிந்தா ரன்பில். 248

(கு...ரை) அடைக்கும் தாழ் - அடைத்து மறைத்து வைக்கும் தாழ்; பூசலைத் தரும் - வெளிப்படுத்திக் காட்டும்; தென்புலம் திகழ்த்தி நிற்கும் செந்தமிழ் மொழி - வள்ளுவர் வாய்மொழி; திகழ்த்தி - விளக்கி; சான்று ஆ - சாட்சியாக; பொன் புலத்து உறு புத்தேளிர் - பொன் உலகத்துத் தேவர். 'அன்பிற்கு முண்டோ' என்றற் றொடக்கத்துக் குறள் முற்றும் அமைந்து கிடத்தல் காண்க.

வேதியர் தாமுன் கண்ட வித்தக ரிவரே யென்னாக்
காதலோ டளவ ளாவிக் கடன்முறை பரிவிற் செய்து
மேதகு வியப்பி னோடு விட்புலத் தரசை வாழ்த்த
ஏதமில் வான தூத ரிருவரு மிதனைச் சொன்னார். 249

(கு...ரை) பரிவில் செய்து - அன்புடனே செய்து, மேதகு - மேன்மையான, மிகுந்த; வியப்பினோடும் - ஆச்சரியத்தோடும்; விண் புலத்து அரசை - விண்ணுலகத்து அரசனை, கடவுளை; ஏதம் இல் - குற்றம் இல்லாத; இதனைச் சொன்னார் - இப்படிச் சொன்னார்; அதனை வரும் செய்யுட்களில் காண்க.

மண்ணுல கத்தினின்று வரன்முறை மரண நீந்திப்
புண்ணிய லோகத் தெல்லை புகுந்திரட் சணை பெற்றுய்ய
நண்ணிய நும்போல் வார்க்குப் பணிபுரி நலம்பெற் றுள்ளோம்
அண்ணல்வா னகத்து வேந்த னாணையி னடுத்தேம் நும்பால்.

(கு...ரை) வரல் முறை - வரலாற்று முறைப்படியே; நண்ணிய - சேர்ந்த; நும்போல் வார்க்கு - உங்களைப்போன்றவர்களுக்கு; பணிபுரி நலம் பெற்றுள்ளோம் - சேவை செய்யும் நல்ல சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றோம்; நும்பால் அடுத்தேம் - உம்மிடம் வந்தோம்.

எண்ணருந் தவத்தீர்! வம்மி னெம்மொடென் றழைத்துக் கூட்டித்
தண்ணளி யொடுகை கோத்துத் தடங்கிரி மீது செல்வார்;
மண்ணர கீடங்கட்கு வானத்தை வணக்கி நின்ற
புண்ணியப் பெருக்கை யாரே புனைந்துரை செய்யற் பாலார்!

(கு...ரை) எண் அரும் தவத்தீர் - எண்ண முடியாத பல தவங்களைச் செய்தவர்களே; மனத்தாலும் நினைக்க முடியாத அரிய தவம் என்றும் பொருள் கொள்ளலாம்; தண் அளியோடு - குளிர்ந்த அருளோடு; தடம் கிரி - பெரிய மலை; மண் நர கீடங்கட்கு - இவ்வுலகத்து உள்ள நரர்களாகிய (அற்பப்) புழுக்களுக்கு; வானத்தை வணக்கி நின்ற - வான லோகத்தையே பணியும்படி செய்த; புனைந்து உரை - வர்ணித்து உரைத்தல்.

வேறு

ஆதியான் தூதரை யடுத்திவ் வண்ணமா
வேதிய ரிருவரும் விசும்பி வர்ந்து போய்
மேதகு நித்திய விமல முத்தியின்
சோதிமா நகர்ப்புறம் துன்னி னாரரோ. 252

(கு...ரை) ஆதியான் தூதர் - தேவ தூதர்; விசும்பு இவர்ந்து போய் - ஆகாயமார்க்கமாக ஏறிச்சென்று; மேதகு நித்திய விமல முத்தியின் - மேன்மை தங்கிய நித்தியமான பரிசுத்த மோட்சமாகிய; சோதி மா நகர்ப் புறம் - ஒளி விளங்கும் சிறந்த நகரத்தை; துன்னினர் - சேர்ந்தார்கள்; அரோ - அசை.

கடைதிறப்பு

கேடுமல்கிய நாசதே சத்துளேம்; கிருபை
நாடி வந்தெமைப் பிடித்துநன் னெறியிலே நடத்த
ஓடி வந்திளைத் துறுமர ணத்தையூ டுருவித்
தேடி வந்துகண் டடைந்துளேம் திருக்கடை திறமின். 253

(கு...ரை) கேடு மல்கிய நாச தேசத்து உளேம் - கேடு நிறைந்த நாச தேசத்தார் யாம்; கிருபை நாடி வந்து எம்மைப் பிடித்து நன்னெறியிலே நடத்த - இறைவனுடைய அருள் எம்மைத் தேடி வந்து பிடித்து, நல்வழியில் நடத்த; திருக் கடை - மோட்ச வாயில்.

முத்தி சாதன மாகிய சிலுவையின் மூர்த்தம்
மத்த கத்துளேம்; மானுவே லுயிர்கொடுத் தீட்டி
வைத்த மாநிதிக் குரியராய் வருத்தசா தனமெம்
கைத்த லத்துளேம்; காட்டுகேம் கடைதிறந் தருண்மின். 254

(கு...ரை) முத்தி சாதனம் ஆகிய - மோட்சத்தை அடைவதற்குச் சாதனம் ஆகிய; சிலுவையின் மூர்த்தம் - சிலுவையின் வடிவம்; மத்த அகத்து உளேம் - உறுதியாக எங்கள் உள்ளத்தில் கொண்டு இருக்கிறோம்; மானுவேல் உயிர் கொடுத்து ஈட்டி வைத்த மாநிதி - இம்மானுவேலின் திரு ரத்தப் புண்ணியம்; கைத்தலத்து - கையில்; காட்டுகேம் - காட்டுகின்றோம்.

வேறு

இவ்வண்ணம் விதேக முத்தர் இருவரு மிரந்து கூவும்
செவ்வண்ண மறிந்து மோசே யாதியர் சேர்ந்தாங் குய்த்த
கைவண்ணச் சாத்தை யேற்றுக் கருணை வேந்தருக்குக் காட்டி
அவ்வண்ண லழைமினென்ற வருள் பெற்று மீண்ட வொல்லை.

(கு...ரை) முத்தர் - முத்தி அடைதற்கு உரியவர்; மோசே ஆதியர் - மோசே முதலியோர்; சேர்ந்து ஆங்கு உய்த்த வண்ணம் கைச் சாத்தை - சேர்ந்து அங்கே வைத்த அழகிய கையெழுத்து அடங்கிய பத்திரத்தை; அவ் வண்ணல் - அக் கருணை வேந்தன்; மீண்ட - திரும்பி வந்த; ஒல்லை - க்ஷணத்தில்.

என் மனோ ரதரா யென்று மிதயபீ டத்து மேய
தன் மராங் கிறிஸ்தி யேசு சாமிசா மீபமாக
நன்மை சால் மெய்விஸ்வாச நராத்தும ஜீவர்க் குய்த்த
சென்மசா பலிய முத்தித் திருக்கடை திறந்த தம்மா. 256

(கு...ரை) என் மனோ ரதராய் - எனது இன்பப் பொருளாய்; மனோ ரதம் - இன்பம்; மேய - பொருந்தியுள்ள; தன்மர் - தர்மம்; சாமீபமாக - சமீபமாக; மெய் விஸ்வாச நராத்தும ஜீவர் - மெய் விசுவாசிகள்; சென்ம சாபலியம் - பிறவிப் பயனாகிய; முத்தித் திருக்கடை - மோட்ச வாயில்.

முத்திமா நகர வாயின் முகப்புவே தியருக் காக
வித்தகக் கபாடம் வல்லே திறவுண்ட விதத்தை யோரின்
சித்தமுள் ளுவந்து சேசு திருவடிக் கன்பு செய்யும்
பத்திமை யல்லால் வேறு பரமசம் பத்தொன் றுண்டோ? 257

(கு...ரை) வல்லே - சீக்கிரம்; ஓரின் - ஆராய்ந்து பார்த்தால்; பத்திமை - பக்தி; பரம சம்பத்து - மேலான செல்வம்; உண்டோ - ஓகாரம் எதிர்மறைப் பொருள்; இல்லை என்றபடி.

எண்ணரும் பரமசேனை யெதிர் கொண்டிங் கணைமி னென்னப்
பண்ணவர் குழுமி வாழ்த்தப் பராபரன் புதல்வ னீந்த
புண்ணியங் கைமா றில்லாப் புண்ணியம் புண்ய மென்று
விண்ணவர்க் கரசை யேத்தி வேதிய ரகத்துட் புக்கார். 258

(கு...ரை) இங்கு அணைமின் - இங்கே வாருங்கள்; பண்ணவர் - தேவர்கள்; குழுமி - கூடி; விண்ணவர்க்கு அரசு - தேவர் உலகத்திற்கு அரசன்.

புக்கவ ரனந்த ரந்தம் புண்ணியப் பொருளைப் போற்றி
மிக்குறு பரமா னந்த விம்மித ராகி யேத்திப்
பக்குவப் படுநெஞ் சாரப் பல்லாண்டு கூறி வாழ்த்தித்
தொக்கவிண் ணவர்க்குஞ் செய்தா ரஞ்சலி முறையிற்றா
யோர். 259

(கு...ரை) புக்கவர் - அங்ஙனம் முத்தியினுட் புகுந்தவர்கள்; அனந்தரம் - பின்; தம் புண்ணியப் பொருளைப் போற்றி - தம் புண்ணிய மூர்த்தியைத் துதித்து; பரமானந்த விம்மிதர் ஆகி - மேலான சந்தோஷத்தால் உடல் பூரித்தவர்களாய்; அஞ்சலி செய்தார் - வணக்கம் செலுத்தினார்கள்.

வேறு

வாழி! வாழியோர் திரித்துவ நாமத்தின் மகிமை!
வாழி! மன்னுயிர்க் கிரட்சணை வழங்கு வண் சுருதி!
வாழி! மெய்யடி யார்குழூஉந் திருச்சபை மரபு!
வாழி! மெய்க்குரு பரம்பரை யூழிய மாண்பே! 260

(கு...ரை) வாழி - வாழ்க; இரட்சணை வழங்கும் - இரட்சிப்பு அருளும்; வண் சுருதி - வளம் பொருந்திய வேதம்; மெய் அடியார் குழூஉம் திருச்சபை; உண்மை அடியார்கள் கூடியுள்ள திருச்சபை; மரபு - தன்மை; குரு பரம்பரை ஊழியம் - குருத்துவ ஊழியம்.

நன்றுல கனைத்துந் தந்து நலம்பெறு தந்தையாக
வென்றி சேர் மைந்த னாக விமலாவி யாக வொன்றும்
மன்றல் சேர் திரியே கற்கு மகிமையுங் கனமு மாறு(து)
என்றுமுள் ளனபோ லின்று மென்று முண்டாக! ஆமென். 261

(கு...ரை) நலம் பெறு தந்தையாக நன்று உலகு அனைத்தும் தந்து - நன்மை பொருந்திய பிதாவாக, நன்மையாக உலகம் அனைத்தையும் சிருஷ்டித்து; ஒன்றும் - ஒன்றாகப் பொருந்தியிருக்கும்; மன்றல் - சிறப்பு.

இரட்சணிய மனோகரம்

(ஹெ. ஆ. கிருஷ்ண பிள்ளை)

பால்ய பிரார்த்தனை

பத்தியாய்ச்செபம் பண்ணவே
சுத்தமாய்த்தெரி யாதய்யா
புத்தியோடுமைப் போற்றநற்
சித்தமீந்திடும் யேசுவே. 262

(கு...ரை) நல் சித்தம் - நல்ல மனம்.

பாவபாதையை விட்டுநான்
ஜீவபாதையிற் சேரநல்
ஆவிதந்தெனை ஆட்கொளும்
தேவதேவ குமாரனே. 263

(கு...ரை) நல் ஆவி தந்து - நல்ல (பரிசுத்த) ஆவியைக் கொடுத்து; எனை ஆட்கொளும்- எனை ஆண்டருளும்.

ஆசையோடுமக் காட்செய்யும்
மாசில்லாமனம் நல்கியே
நேசம்வைத்தெனை ரட்சியும்
யேசுநாத சுவாமியே. 264

(கு...ரை) ஆள் செயும் - அடிமையாகப் பணிவிடை செய்யும்; நல்கி - கொடுத்து.

இரவில்மோசமொன் றின்றியே
உரிமையாயுறக் காட்டினை
பரமனே!பதி னாயிரம்
சரணம்யேசுத யாபரா. 265

(கு...ரை) உரிமையாய் உறக்காட்டினை - உமக்கு உரிமையுடன் உறங்கச் செய்தாய்.

நாலுமாறு நயந்திடாப்
பாலனிப்பரு வத்துனைச்
சாலவேதொழ நீயருள்
மூலகாரண மூர்த்தியே. 266

(கு...ரை) சாலவே தொழ - மிகுதியும் வணங்க.

துட்டரோடுற வாடிநான்
மட்டிலாத துன் மார்க்கனைக்
கெட்டிடாவகை கிருபைசெய்
தட்டிலாத தயாபரா. 267

(கு...ரை) துட்டரோடு உறவாடி - கெட்டவர்களோடு சிநேகம் கொண்டு; மட்டு இலாத - வரம்பு கடந்த, வரையறைக்கு உட்படாத.

பஞ்சினாயொரு பாவியேன்
தஞ்சம்உன்னிரு தாளையா
அஞ்சலென் றருள் வாய்பரன்
மஞ்சனேமனு வேலனே. 268

(கு...ரை) பஞ்சி - பலவீனன், அற்பன்; மஞ்சனே - மைந்தனே, தேவ குமாரனே.

மெய்ம்மையாக விளங்கிடும்
தெய்வம்நீயல தில்லையே
ஐயனே உன் அடைக்கலம்
கைவிடாதெனைக் காப்பையே. 269

(கு...ரை) காப்பை - காப்பாற்றுவாயாக.

இந்தநாளிலெப் பாவமும்
சிந்தையாலுஞ் செய்யாமலே
முந்தவுன் அருள் தந்துகா
வந்தனம் மனு வேலனே. 270

(கு...ரை) கா - காப்பாற்று; வந்தனம் - உன் திருவடியை அடைக்தோம்; வணக்கம்.

அன்னையுமென தப்பனும்
உன்னையன் றிலை உண்மையே
பின்னையென்ன பிணக்குநான்
என்னரட்சிசர் வேசனே. 271

(கு...ரை) பிணக்கு - வேறுபாடு.

அஞ்சலி

தீயநா கக்கதவ டைத்ததார்? அடைபட்ட
செப்பரிய மோட்ச கதியின்
செம்பொற்க பாடம் திறந்ததார்? நரரெலாம்
தீவினைக் காளா கவே
மாயம் புரிந்தசண் டாளப் பசாசனை
மடித்ததார்? நன்றி யறியா

மாபாவி கட்கென்றும் அழியாத பேரின்ப
வாழ்வருள வேழை மனுவாய்
நேயமொ டுதித்துநன் னெறியைஉப தேசித்து
நீசர்கட் காய்ப்பிணை சொலி
நின்றதார்? வருதேவ நீதியின் தண்டனையை
நேர்ந்தரிய பாடடைந் தைங்
காயம் படச்சிலுவை மீதுபிரா ணத்தியா
கஞ்செய்த தார்கொல்? அந்தக்
கருணா கரன்றனிரு சரணா விந்தமலர்
கருதி அஞ்சலி செய்குவாம். 272

(கு...ரை) நரகக் கதவு - நரகத்தின் கதவை; பொற்கபாடம் - பொன் மயமான வாயில்; மடித்தது - மடிவித்தது, அழித்தது; பிணை சொலி - பிணைபட்டு; நேர்ந்து - ஏற்றுக்கொண்டு; கருணாகரன் தன் - கருணைக்கு உறைவிடமானவனது; இரு சரண அரவிந்தம் மலர் - இரண்டு பாதமாகிய தாமரை மலர்களை; கருதி - நினைத்து; அஞ்சலி செய்குவாம் - வணக்கம் செய்வோம்.

பரமார்த்த பரம நிதி

நில்லாது காயமிது புல்லாகு மென்றுநான்
நினையாது, போன போக்கில்
நெஞ்சத்தை விட்டென்னை வஞ்சித்து நீதந்த
நியமத் தையுங் கடந்து
செல்லாத வழியூடு சென்று நான் மதிகெட்டுத்
திரிந் தயரு நாளிலுனது
திவ்விய கடாட்சமுற வுன்தஞ்ச மாய்வந்த
தீயசண் டாள னேனை
எல்லா ரிலுங்கொடிய பொல்லாத பாவியென்
றெள்ளாது திருவு ளத்தே
எனையுமொரு பொருளாய் மதித்தடிமை யாக்கினவுன்
ஏராள மான அன்பை
பல்லா யிரங்கோடி நாக்கொண்டு புகழினும்
பகருதற் கெளி தாகுமோ?
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 273

(கு...ரை) காயம் இது நில்லாது - இந்த உடல் நிலையாய் இராது; செல்லாத வழி யூடு - செல்லத்தகாத வழியிலே; அயரும் நாளில் - சோர்வு அடையும் நாளில்; கடாட்சம் - கடைக்கண், அருள்; எள்ளாது - இகழாமல்; பகருதற்கு - சொல்வதற்கு; பக்தஜன பரிபால - பக்தர்களைப் பரிபாலிப்பவனே; நித்யம் அவர் அனுகூல - அனுதினமும் அவர்க்கு அனுகூலம் செய்பவனே; பரம அர்த்தம் - மேலான பொருள்.

கல்லான இருதயம் உடைந்துருகி இருவிழி
கலுழ்ந்துகண் ணீர் சொரியவே
கையுச்சி மேன்முகிழ்த் தஞ்சலித் தங்கபுள
காங்கிதம் எழும்ப நின்றே
எல்லா நலத்துக்கு மூலகா ரணமாய
எந்தை! நின தருளையுன்னி
ஏழையேன் நாத்தழு தழுக்கவன் பொடுபணிந்து
எந்நாளும் ஏத்த உன்றன்
நல்லாவி யைத்தந்து திரமான விசுவாசம்
நல்கியிக லோக போகம்
நாடாது பரலோக போகமே விழைகின்ற
நன்மனம் நிலைக்க அருள்வாய்
பல்லூழி யூழியொரு கணமாக வலகிடும்
பார மார்த்திக மோனமே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 274

(கு...ரை) கலுழ்ந்து - அழுது; முகிழ்த்து - குவிந்து; புளகாங்கிதம்-மயிர்க்கூச்செறிதல்; திரமான - உறுதியான; நல்கி - கொடுத்து; போகம் - இன்பம்; விழைகின்ற - விரும்புகின்ற; பல்லூழி ஊழி - பல யுகங்கள்- அலகிடும் - கணக்கிடும்; மோனமே - மௌன வடிவே.

ஞானசம்பந்த குரு

நீயார்? உனக்கெந்த வகையிலென் னோடுறவு?
நினதுவா சஸ்தலமு மிந்
நிலவுலக மன்று;நீ தேவாதி தேவன்; நான்
நீசநர புன்கிருமி யாம்;
மாயா பிரபஞ்சமு முன்றிரு உளத்துநினை
வாகவெம் மாத்திரங் காண்
மற்றதிலோ ரணுவுக்கு நிகரிலேன்; என்னையும்
மதித்துனுயிர் மாய்க்க வந்தாய்;
தாயேனும் மகவின்பொ ருட்டுயிரை ஈவளோ?
சார்வதா நன்றி கெட்ட
சண்டாள னுக்குன்னை அல்லாமல் இப்பெரிய
தண்ணளியை யார் காட்டுவர்?
நாயேன் இவ்வன்பினை மதித்துணர்ந்(து) ஈடுசெய
நனிசிறிதும் வல்லன் அல்லேன்;
நரசரீ ரங்கொண்ட வராசனேபரம
ஞானசம் பந்த குருவே. 275

(கு...ரை) புன் கிருமி - அற்பப் புழு; மாயா பிரபஞ்சம் - மாய உலகம்; மதித்து - (ஒரு பொருளாக) எண்ணி; உன் உயிர் மாய்க்க - உனது உயிரைக் கொடுக்க; மகவின் பொருட்டு - பிள்ளைக்காக; நாயேன் - நாய் போன்றவன், இழிந்தவன்; ஈடு செய - பதில் செய்ய; வல்லன் அல்லேன் - வல்லமையுடையவன் அல்ல; நர சரீரம் - மனித உடல்; வர ராசனே - வரமருளும் அரசனே.

ஏசு நாயக ஸ்வாமி

அன்புமய மேகருணை யானந்த வாரியே!
அருள்பொழி மழைக் கொண்டலே!
ஆருயிருக் குயிரான அமிர்தசஞ் சீவியே!
அடியரித யாம் பரத்தில்
இன்புற வுதித்திலகு மெய்ஞ்ஞான பானுவே!
ஏத்தருஞ் சுகுண நிதியே!
இதரசம யாதீத நிலையமே வானிழிந்
திம்பர்வரு ஜீவ நதியே!
மன்பதை புரக்கநடு நின்றோங்கு! ரக்ஷணிய
மாமேரு வே!என்று, நின்
வண்புகழ் வழுத்திமெய் யன்பினொடு சிந்தைபர
வசமாகி யாவி யனல் கொண்
டென்புருகி யானந்த பாஷ்பஞ் சொரிந்துநின்
றேத்தவரு ளீவ தென்றோ?
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 276

(கு...ரை) ஆநந்த வாரியே - ஆநந்தக் கடலே; கொண்டலே - மேகமே; அமிர்த சஞ்சீவியே - மரணத்தைப் போக்கும் மருந்தே; இதய அம்பரத்தில் - இருதயம் ஆகிய ஆகாய வெளியில்; பானுவே - சூரியனே; சுகுணம் - நற்குணம்; வான் இழிந்து - வான லோகத்திலிருந்து இறங்கி; மன்பதை - மக்கள் கூட்டம்; என்பு - எலும்பு; பாஷ்பம் - கண்ணீர்; ஏத்த - துதிக்க; அருள் ஈவது என்றோ - திருவருள் பாலிப்பது என்றைக்கு?

பிழை நினைந்து இரங்கல்

நின்னடிக் கன்பு செய்யா நீசனேன், ஈசனே! யுன்
பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர் குழாத்துட் புக்கு
நன்னடை கற்று மில்லேன்; நன்றெலா மொருவி நின்ற 277
என்னடை யிகந்து மில்லேன்? என்செய்வான் றோன்றினேனே?

(கு...ரை) புண்ணியர் குழத்துள் - பரிசுத்தவான்களுடைய கூட்டத்திலே; நன்னடை கற்றுமில்லேன் - நல் ஒழுக்கத்தை கற்கவில்லை; நன்று எல்லாம் ஒருவி நின்ற - நன்மை எல்லாம் நீங்கி நின்ற; என் செய்வான் தோன்றினேன் - நான் இவ்வுலகத்தில் எதற்காகப் பிறந்தேன்.

தன்னுயிர் போல விந்தத் தடங்கடற் புடவி மேய
மன்னுயிர்க் கிரங்கி மேனாள் மனுமக னாகத் தோன்றி
இன்னுயிர் கொடுத்தி ரட்சை யீட்டிய விறையை யேத்தி 278
என்னுயி ரோம்பு கில்லேன் என்செய்வான் றோன்றி னேனே?

(கு...ரை) தடம் கடல் புடவி - விசாலமான சமுத்திரத்தால் சூழப்பட்ட இப்பூமியில்; மேய - பொருந்திய; இன் உயிர் -இனிய உயிரை; என் உயிர் ஓம்புகில்லேன் - எனது உயிரை நான் போற்றுகின்றேனில்லை.

வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந்தி டாதென்
புன்கணுக் கிரங்கி யோர்பூம் பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரிந்துஞ் செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணேன்; என்செய்வான் றோன்றி
னேனே? 279

(கு...ரை) வன் கணன் - அருள் இலாதவன்; படிறன் - பொய்யன்; என் புன்கணுக்கு - எனது துன்பத்திற்கு; பூம் பொழிலிடை - பூஞ்சோலையில்; நின் கண் நீர் சொரிந்து - உன்னுடைய கண்கள் நீரைச் சொரிந்தும்.

கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமையங் கீறிப்
பிதிர் படச் சிலுவைமீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோ லத்தை மனக்கணால் தரிசித் தேத்தி
இதையநெக் குருகு கில்லேன்; என்செய்வான் றோன்றி
னேனே? 280

(கு...ரை) கம்பிக்க - அசைய; சிமையம் - மலையுச்சி; பிதிர்பட - சிதைவுபட; இதையம் நெக்கு உருகுகில்லேன் - உள்ளம் உடைந்து உருகுகின்றேனில்லை.

சுத்தனோ அல்லன்; நன்மை சொல்லவெட் டுணையு மில்லேன்;
பித்தனான் பெரிய பாவி; பிழைக்குமா றுணர மாட்டேன்
நித்த! நீ யருளு மீவை நினைக்கிலேன்; அன்றி யீனம் 281
எத்தனை? இறைவ னே! யா னென்செய்வான் றோன்றி னேனே?

(கு...ரை) எட்டுணையும் - எள் துணையும், என் அளவும்; பிழைக்கும் ஆறு - பிழைக்கும் வழியை; நான் பித்தன் - நான் அறிவு மயக்கினவன்; நித்த - நித்தியமாக உள்ளவனே; அன்றி ஈனம் எத்தனை - மேலும் யான் செய்த இழி செயல்கள் எத்தனை.

பன்முறை யிதய மென்னும் படுகரைப் பார்க்குந் தோறும்
நன்மையோ ரணுவுங் காணேன்; நஞ்சினை யமுதா நச்சும்
புன்மையேன் போத மிலலேன் புவிப்பொறை யாயதன்றி
இன்மையேன் பயன்மற் றெந்தாய்! என்செய்வான் றோன்றி
னேனே? 282

(கு...ரை) இதயம் என்னும் படுகரை - இருதயம் என்னும் படு குழியை; நச்சும் - விரும்பும; புவி பொறை ஆயது அன்றி - பூமிக்குப் பாரம் ஆவதே அன்றி; பயன் மற்று இன்மையேன் - வேறொரு பயனும் இல்லாதவன்; எந்தாய் - என் தந்தையே; என் தாய் எனப் பிரித்து 'எம் தாயே' என்றும் பொருள் கொள்ளலாம்.

மலரடி வணங்காய் நெஞ்சே!

முனைவனை அறிய வேண்டின், முற்றுநீ இயற்றும் பாவ
வினையெலாம் தொலைய வேண்டின், வீட்டின்பம் அடைய
வேண்டின்,
இனிவரும் தேவ கோபம் எரித்திடா திருக்க வேண்டின்,
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய்; நெஞ்சே! 283

(கு...ரை) முனைவனை - கடவுளை; மனு உரு ஆய - மானிட உருவம் எடுத்து வந்த; மலர் அடி - தாமரை மலரையொத்த பாதங்களை; வணங்காய் - வணங்குவாயாக; வணங்கு + ஆய் = வணங்காய். ஆய், ஏவல் ஒருமை விகுதி; நெஞ்சே - மனமே; இது நெஞ்சொடு கிளத்தல்.

தனியிடத் திருந்து, பாவச் சழக்கினைக் கருதி, ஆவி
அநுமதி பெற்றுத், தேவ அன்பினை இதயத் துன்னி,
கனியும்உள் அன்பி னோடு கண்கணீர் ததும்ப நின்று,
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே! 284

(கு...ரை) பாவச் சழக்கினைக் கருதி - பாவமாகிய குற்றத்தை எண்ணி; கண்கள் நீர் ததும்ப - கண்களில் நீர் வடிய; இது மனஸ்தாபக் கண்ணீர்.

தனுகர ணங்கள் ஓய்ந்து தளர்ந்துமூச் சொடுங்கு காலை
மனைமகார் துணையா வாரோ? மருங்கிருந் தழுவ தல்லால்,
அநவர தமுமு னக்கோ ராந்துணை விரும்பின், இன்னே
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய்; நெஞ்சே! 285

(கு...ரை) தனு - உடல்; கரணங்கள் - அந்தக் கரணங்கள்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; அநவரதமும் - சதாகாலமும், இம்மையிலும், மறுமையிலும்; இன்னே - இப்பொழுதே, இக்கணமே.

கையடை

ஓதியே சுருதி தினம்தினம் படித்தும்
உணர்விலா துலகொழுக் குவந்து
தீதிலே பயின்று செந்நெறி இகந்த
தீயனேன் உய்யுமா றறியேன்
கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிழம்பே
குணிப்பருங் கருணைவா ரிதியே
ஆதியே அடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 286

(கு...ரை) கையடை - அடைக்கலமாகத் தன்னை ஒப்புவித்தல். சுருதி - வேதத்தை; ஓதியே படித்தும் - முறைப்படி ஓதியுணர்ந்தாலும்; உணர்வு இலாது - அறிவு இல்லாமல்; உலகொழுக்கு உவந்து - லௌகிக வாழ்க்கையையே விரும்பி; தீதிலே பயின்று - தீமையிலேயே பழகி; செந்நெறி - செம்மையான வழியினின்றும்; இகந்த - தவறிச்சென்ற; நீதிக் கொழும் கதிர்ப் பிழம்பே - நீதி சூரியனே; குணிப்பு அரும் - அளவிட்டு உரைக்க முடியாத; ஆதியே - ஆதி பகவானே.

பத்தனாய்ப் பாடேன்; சுத்தனாய் ஒழுகேன்;
பகலெலாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தேன்; இன்றுளேன் நாளை
இலனென எண்ணவும் படுவேன்;
பித்தனேற் குனது பேரருள் அல்லால்
பிழைக்குமா றில்லையா தலினால்
அத்தனே! அடியேன் நின்சரண் அடைந்தேன்;
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 287

(கு...ரை) பத்தனாய்ப் பாடேன் - பக்தனாக நின்று பக்தியுடன் உன்னைப் பாடமாட்டேன்; அந்த அறிவு எனக்கு இல்லை என்றபடி; எத்தன் - வஞ்சிக்கிறவன்; பிழைக்கும் ஆறு இல்லை - ஈடேறுவதற்கு வேறே வழியில்லை; அத்தனே - தகப்பனே.

உருளுறு சகடம் போலஎன் மனமும்
ஒருவழி நிலையிலா துழலும்;
மருளுறும் உலகோ டலகையுங் கொடிய
மாயமாம் வலையிடைப் படுத்தும்
தெருளுறு பொருளே! நின்னடிக் கன்பு
செய்துநான் உய்யுமா றெங்ஙன்?
அருளுறும் எந்தாய்! நின்சரண் அடைந்தேன்;
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 288

(கு...ரை) உருளூறும் சகடம் போல - உருண்டு செல்லும் வண்டியின் சக்கரத்தைப் போல; மருள் உறும் - மயக்கம் நிறைந்த; தெருள் உறு பொருளே - தெளிவாகிய உண்மைப் பொருளே; உய்யும் ஆறு எங்ஙன் - பிழைப்பது எப்படி; நின் சரண் அடைந்தேன் - உன் திருவடிகளே அடைக்கலமாக வந்து சேர்ந்தேன்.

என்புதோல் போர்த்த யாக்கையைச் சதமென்
 றெண்ணியாத் துமத்தையெட் டுணையும்
முன்பின் எண்ணுது புரிந்ததீ வினையென்
 முன்புநின் றுடற்றலான் முதிர்பேர்
இன்பநாட் டரசே! புண்ணிய பொருப்பே!
 இருநிலம் புதைத்தெழுந் தோங்கும்
அன்பினூர் கலியே! நின்சரண் அடைந்தேன்;
 அஞ்சலென் றடைக்கலம் அருளே. 289

(கு...ரை) யாக்கை - சரீரம்; சதம் - நிலையானது; என் முன்பு நின்று உடற்றலான் - என் கண்முன் நின்று என்னை வருத்துகின்றபடியால்; புண்ணியப் பொருப்பே - புண்ணிய மலையே; அன்பின் ஆர்கலியே - அன்புக் கடலே.

வேதமே! வேத விளக்கமே! விளக்கின்
 விழுத்தகு ஜோதியே! விமல
போதமே! போதம் கடந்தமெய்ப் பொருளே!
 பொருள்புலப் படவெளி வந்த
நாதமே! யூத குலநரா திபனே!
 நன்னெறி பிழைத்துல குழலும்
ஆதனுன் அடியேன் நின்சரண் அடைந்தேன்;
 அஞ்சலென் றடைக்கலம் அருளே. 290

(கு...ரை) நாதமே - ஒலியே, வார்த்தையே; யூதகுல நராதிபனே - யூதர் குலத்தில் தோன்றிய அரசனே; நன்னெறி பிழைத்து உலகு உழலும்- நல்வழி தவறி நடந்து இவ்வுலகத்தில் கஷ்டப்படுகின்ற; ஆதன் - குருடன், அறிவிலான்.

திருநாம அர்ச்சனை

முன்னவன் என்கோ? வேத முழுமுதல் என்கோ? முத்தர்க்(கு)
இன்னமு தென்கோ? சிந்தைக் கினியதெள் அமுதம் என்கோ?
கன்னிகா புத்ரன் என்கோ? கனிதரும் பொருளீ தென்கோ?
தன்னிகர் இல்லா யூத சாதிமா ணிக்கத் தையே. 291

(கு...ரை) முன்னவன் என்கோ - எல்லா சிருஷ்டிகளுக்கும் முற்பட்டவன் என்று சொல்வேனோ?; இன் அமுது - இனிய அமிர்தம்; தெள் அமுதம் - தெளிந்த பால்; யூத சாதி மாணிக்கத்தை - யூதர் குலத்திற் றோன்றிய மாணிக்கத்தை.

வானவர் திலகன் என்கோ? வையகம் உய்ய வந்த
மானவன் என்கோ? ஜீவ வழி என்கோ? வழியைக் காட்டும்
ஞானசற் குருவே என்கோ? நராத்தும நாதன் என்கோ?
தானவன் ஆன யூத சாதிமா ணிக்கத் தையே. 292

(கு...ரை) தேவர்களுக்குள் திலகம் போன்றவன் என்று சொல்வேனோ? திலகம் - நெற்றிப் பொட்டு; மானவன் - பெருமை பொருந்தியவன்; நராத்தும நாதன் - நரர்களின் ஆத்தும நாயகன்; தான் அவன் ஆன - ஆதி பரம் பொருளாகிய தானே அக்குமாரனாக வந்துதித்த.

முத்திமா முதல்வன் என்கோ? மூலகா ரணமாய் நின்ற
சத்துவம் என்கோ? லோக சரணியன் என்கோ? ஆன்ம
நித்திய ஜீவன் என்கோ? நெறிநின்றார் நினைவில் நிற்கும்,
சத்தியம் என்கோ? யூத சாதிமா ணிக்கத் தையே. 293

(கு...ரை) முத்தி மா முதல்வன் என்கோ - முத்தியை அருளும், முதல்வன் என்று சொல்வேனோ; மூலகாரணமாய் நின்ற சத்துவம் என்கோ - சகல சிருஷ்டிகளும் உண்டாவதற்கு மூலகாரணப் பொருளாய் நின்ற சக்தி என்று சொல்வேனோ; ஆன்ம நித்திய ஜீவன் என்கோ - ஆத்துமா இறுதியில் அடைவதற்குரிய நித்திய ஜீவன் என்று சொல்வேனோ.

பேயகம் நடுங்கி மாழ்கப் பெருந்தகை விடுத்த தெய்வச்
சாயகம் என்கோ? தூய தனுஎன்கோ? சருவ லோக
நாயகம் என்கோ? பாப நராத்தும ஜீவர்க் கேற்ற
தாயகம் என்கோ? யூத சாதிமா ணிக்கத் தையே. 294

(கு...ரை) பேய் அகம் நடுங்கி மாழ்க - பேய் உள்ளம் நடுங்கி மயங்க; தெய்வச்சாயகம் - தேவசாயல்; தூய தனு - பரிசுத்த உடல்; தாயகம் - பாது காப்பிடம்.

யேசு நாமம்

மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் திலும்பிறி தில்லையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது, பாவ ஜீவருக்(கு)
இன்னமு தாயது, யேசு நாமமே. 295

(கு...ரை) மன் உயிர்த் தொகுதி - மக்கள் கூட்டம்; மறை - வேதம்; பன்னி எத்தெடுப்பது - மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது.

தெருளெலாம் தனதெனும் தெய்வ மாமறைப்
பொருளெலாம் தனதெனப் பொலிந்தி லங்குவ(து)
அருளெலாம் அன்பெலாம் அறனெ லாம்வளர்த்(து)
இருளெலாம் தொலைப்பது யேசு நாமமே. 296

(கு...ரை) தெருள் எலாம் தனது - தெளிவு என்று சொல்லப்படுவ தெல்லாம் தன்னுடையது.

போற்றித் திருவிருத்தம்

ஆதிமெய்த் திருவாக்காய அகிலகா ரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே போற்றி
மாதுவித் தாகி இந்த மாநிலம் புரப்பல் என்று
தாதைபால் பரிந்து நின்ற தற்பரா போற்றி போற்றி. 297

(கு...ரை) அகில காரணனே - சகல பொருள்களும் உண்டாவதற்குக் காரணமானவனே; போற்றி - உன்னைப் போற்றுகின்றேன்; குவலயத்து ஒளியே - பூமிக்கு ஒளியாக வந்தவனே; மாது வித்தாகி - ஸ்திரீயின் வித்து ஆகி; பரிந்து நின்ற - விரும்பி மன்றாடி நின்ற.

பாரிடம் வியக்கத் தீய பாரிடம் துரந்து நேர்ந்த
கோரவெம் பிணிகூன் மூகை குருடுவன் செவிடு பங்கு
தீரமெய் நிமிரப் பேசத் தெரியக்கண் திறக்கச் செல்ல
ஆருள் அளித்த திவ்ய அற்புத மூர்த்தி போற்றி. 298

(கு...ரை) பாரிடம் வியக்க - இப்பூவுலகத்தோர் வியக்கும்படியாக; பாரிடம் - இடவாகு பெயர்; தீய பாரிடம் - கெட்ட பேய்களை; மூகை - ஊமை; பங்கு - முடம்; பிணி தீர, கூன் மெய் நிமிர, மூகை பேச, என நேர் நிரனிறைபாசப் பொருள் கொள்க.

அர்ப்பணம்

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ் சக்கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய்—புந்திக்குள்
வீற்றிருக்கும் சேசு விரைமலர்ப்பூஞ் சேவடிக்கே
ஆற்றுக மெய் அன்பின் பணி. 299

(கு...ரை) அடியேன் நெஞ்சு சிந்திக்க - அடியேனுடைய மனம் ஏசு பெருமானையே சிந்திப்பதாக; சென்னி இறைஞ்ச - தலைவணங்குவதாக; கரங்கள் வந்திக்க - கைகள் அவரையே வணங்குவதாக; வாய் வாழ்த்துக; புந்திக்குள் வீற்று இருக்கும் சேசு விரை மலர்ப்பூஞ் சேவடிக்கே மெய் அன்பின் பணி ஆற்றுக, என இயைக்க; புந்தி - புத்தி; விரை மலர் - வாசனை பொருந்திய மலரை யொத்த; சேவடிக்கே - சிவந்த அழகிய திருவடி களுக்கே; பணி - தொண்டு; ஆற்றுக - செய்க.

III. ஆரணாதிந்தம்

(வேதநாயக சாஸ்திரியார்)

காப்பு

நன்மைபெற்று வாழ்ந்திருக்க ஞானத்தைக் கற்றுணரப்
பொன்மதிற்குட் போகப் புகழ்ச்சி பெறச்—கன்மனதில்
பூரணா னந்தம் புகுதக் கிறிஸ்துவுக்குள்
ஆரணா திந்தம் அறி.

(கு...ரை) ஆரணம் - வேதம். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, ஆரணத்தின் ஆதிமுதல் அந்தம்வரை உள்ள செய்திகளைக் கூறும் இந்நூலைப் படி; இகபர இன்பங்களைப் பெறுவாய், என்பது கருத்து.

தேவ தோத்திரம்

சுந்தர தேவச வுந்தர ஞானசு தந்தர பரம்பரமே
துங்கமு லாவசு யம்பிரகாச நிரந்தர சிதம்பரமே
தந்தருள் கோடி யனந்த சராசர விந்தை மிகுந்திரமே
சந்தத மேலவர் வந்தனை நேர்பர மண்டல மந்திரமே
எந்தை தயாபர சொந்த குணாகர விங்கித லங்கிருதமே
எங்குல தேவனீ யெங்குரு நாதனீ யெங்களினங்களெல்லாம்
நிந்தையு றாதுல கந்தனிலேவரு நின்சுதனின் கதையே
நின்செயலே சொலநின் கிருபையே செய நின்சரணின்
சரணே.

(கு...ரை) துங்கம் உலாவு - மேன்மை பொருந்திய; மேலவர் - விண்ணுலகத்தவர்; அலங்கிருதம் - அலங்காரம், அழகு; நிந்தை உறாது - இகழ்ச்சி அடையாமல்.

சிருட்டி திதி சங்காரம்

விருத்தம்

அந்தமிகு சுந்தர நெடும் பரம தந்தையுல
கண்டமுட னெண்டிசைகளும்
விந்தையொடி யைந்தறு தினந்தனில் வனைந்தொரு
நரன்றனை விருந்தனையுடன்
தந்தொரு மரம்படு பழந்தனில் விளைந்ததுரி
தங்கள் கெடவுங் கிருபையாய்,
மைந்தனை மடிந்திட விகந்தனில்வி டுஞ்சரிதை
வந்தனையு டன்பகர்வனே.

(கு...ரை) அந்தம் - அழகு; விந்தையொடு - ஆச்சரியமாக; விருந்து - புதுமை; அனே - அன்னை, தாய், உலகில் புதுமையாகத் தோன்றின தாய், ஏவை. இகம் - இவ்வுலகம்.

சந்தப்பா

தனதந்த தனதந்த
தனதந்த தனந்த தானனு—தன

திருமந்திர வதிசுந்தர வெழில்கொண்ட
புகழ்மண்டு தேவனுர்—மிகு
செயல் கொண்டு லகும்விண்ட லமுமுண்டு
செயவென்று சாவினுர்
கருமந்தி ரமைகொண்டு ருகுசிந்தை
யுளதந்தை வாக்கினுல்—உயர்
ககனங்கள் பரமண்ட லமுமண்டி
லமும்விண்டுண் டாக்கினுன். 1

(கு...ரை) எழில் - அழகு; புகழ் மண்டு - புகழ் நிறைந்த; உசாவினுர் - ஆலோசித்தார்; ககனம் - ஆகாயம்; திரமை - உறுதி.

ஒளிகொண்டிட நினேந்தெண்டிசையெங்க
ணும் வெளிச்சந்தர விண்டான்—சொன்ன
வுரையின்படியே முந்துதினமன்று
பிரவைவந்த நிலே கண்டான்
களிகொண்டளவை ரண்டிலுதகங்க
ளிருபங்கு பிரித்தான்—வலு
ககனங்களென வந்தரமிசை யண்ட
விரிவெங்கும் விரித்தான். 2

(கு...ரை) விண்டான் - சொன்னுன்; விள், பகுதி - சொல், பேசு; பிரவை - பிரபை, ஒளி. உதகம் - நீர், பூமி; இரு பொருளும் விளங்க அமைந்திருக்கும் அழகை அறிக.

மூன்று தினத்தில் வெளி தோன்றும் புவியில்
அப்பையுடைத்தான்—இதை
முற்றுங் குவியலாகச் சுற்றுங் கடலெனக்
கொண்டடைத்தான்
ஆன்றதருக்கள் பல தோன்றப்புற்
பூண்டையுமே பகுத்தான்—உல
கத்தி லனந்தங்கோடி வித்துப்பயிர்
வகையுந் தொகுத்தான். 3

(கு...ரை) அப்பு - நீர்; தரு - மரம்; பகுத்தான் - வகைவகையாகப் படைத்தான்; அநந்தம கோடி - முடிவில்லாத கோடிக்கணக்கான,

அந்தரத்தின் மிசை சந்திரசூரிய
நட்சத்திரமே—நான்கு
அளவையதனிற்றந்த வளமைமி
குதியும் விசித்திரமே
சிந்தினிடை மச்சங்களுந்தித்திரியும்
நீச்சுப்பிராணியே—ஐந்து
தினத்திற் பறக்கும் பட்சியனைத்து
மொருங்குறச் செய்திராணியே. 4

(கு...ரை) அளவை - நாள்; நான்கு அளவை அதனில் - நான்காம் நாளில். சிந்து - நீர், கடல்.

ஈட்டுமூர் வனங்கள் காட்டமிரு
கங்களை யமைத்தான்—ஆறும்
எல்லையதனில் மண்ணுற் றொல்லைமனித
னையுஞ் சமைத்தான்
பூட்டு விலாவெலும்பொன் றீட்டியேவை
மின்னைச் சிஷ்டித்தான்—ஆதம்
புங்கமாக வாழச் சங்கையாக
மணம் முடித்தான். 5

(கு...ரை) ஈட்டும் - திரண்ட, நிறைந்த; தொல்லை மனிதன் - ஆதி மனிதன், ஆதாம்; புங்கம் - மேன்மை; சங்கை - கனம், சிறப்பு.

புத்தியுள்ள ஆத்துமத்தையவருக்
குபகரித்தான்—அதைப்
போதத்தேவசாய னீதத்தியல்பி
லலங்கரித்தான்
சித்தமாகக் கரிசித்தொரேழைச்
சாபதாக்கினை—னதி
சித்ரக்காவிலிரு வித்ர விருட்சத்
தொன்றை நீக்கினன். 6

(கு...ரை) போதம் - ஞானம்; தரிசித்து - அன்புகொண்டு; கரிசனை, கரிசித்தல் - அன்பு.

சாவிலாமற் செல்வக் காவில்
ஆதம் மகிழ்ந்திருந்தா—னப்போ
சற்பனைப்பேயொரு சர்ப்பமாக
வனம் புகுந்தான்
ஏவை முந்த முந்த மேவிச்
சோதனையிற் சென்றாள்—அவள்
இன்ப மொழியிலாதம் பின்பு
விலகுங்கனி தின்றான். 7

(கு...ரை) சற்பனை - சதி; விலகும் கனி - விலக்கப்பட்ட மரத்தின் கனி; விலகு - தன்வினைப்பகுதி, பிறவினை, செயப்பாட்டு வினையாகப் பொருள்பட்டு நிற்கின்றது.

தேவசாயலையுஞ் சீவ விருட்சத்
தையு மிழந்தான்—கொடுந்
தீங்கினாலழிந்து பாங்கிலா
தொழிந்து விழுந்தான்
ஆவியானந் தனுங் கூவி
ஞாயத்தை விசாரித்தான்—நீ
யாத மெங்கேயென்று போதவே
கனன்று பாரித்தான். 8

(கு...ரை) பாங்கு - தகைமை, தன்மை; ஆநந்தன் - கடவுள், ஆநந்த மயமானவன்; கனன்று - கோபித்து. பாரித்தான் - விவரமாகக் கேட்டான். பாரித்தல் - விரித்து உரைத்தல்.

கடியைக் கடிந்து தலை
மடியப்படுகுந் தீர்ப்பை விதித்தான்—ஏவை
கருப்ப வேதனையைப்
பெருக்க ஆக்கினையை மதித்தான்
முடிவி லாதிதனைப்
படியின் மண்ணுக்கென்று சாபித்தான்—கன
முக்கியமான தம
துக்கிர நீதியைப் பிரதாபித்தான். 9

(கு...ரை) கடி - பேய்; முடிவு இல் ஆதி - அழிவில்லாத ஆதிப் பொருள், குமாரக் கடவுள்; சாபித்தான் - ஸ்தாபித்தான், உறுதிப்படுத்தினான். பிரதாபித்தான் - பிரஸ்தாபித்தான், விளம்பரப்படுத்தினான்.

ஆதி சர்ப்பமிட்ட
சோதனைக்குட்பட்ட பேரையே—மக்க
ளாக்கிக்கொள்ள வெந்தை
வாக்குத் தந்து மகனாரையே
சாதியனைத்து மீட்கப்
பூதலத்தைக் காக்க விடுத்தான்—கர்த்தர்
தயவதாகப் புல்லர்க்
கியல்பதாகப் புல்விற் படுத்தான். 10

(கு...ரை) புல்லர்க்கு - அற்பர்க்கு, பாவிகளுக்காக.

உன்னதத்தினின்று
கன்னிமரியினிடம் பிறந்தான்—வானத்
தும்பர் சேனைகள் சென்
றின்பமாய்ப் பணியச் சிறந்தான்
சொன்ன பத்திராசன்
மன்னன் தவிதன் அரிய வித்தான்—பரி
சுத்தவரு பியினால்
அத்தன் கெற்பமா யுற்பவித்தான். 11

(கு...ரை) தவிதன் - தாவீது; அரிய வித்தான் - அரியவித்தாகத் தோன்றினவன், தாவீதின் வம்சத்தில் தோன்றினவர் கிறிஸ்து.

மந்தை காக்கு மாயர்
சிந்தை நோக்கித் தொழு தேற்றினர்— சாஸ்திரி
மார்கள் காணிக்கைகள்
நேரோ டேற்க வைத்துப் போற்றினர்
கந்தைத் துணியணிந்த
விந்தைத் திருமகிமைக் கட்டினன்—மிகக்
கருத் தொடளவை யெட்டில்
விருத்த சேதனம் பண்ணப் பட்டனன். 12

(கு...ரை) ஆயர் - மேய்ப்பர். ஆய்+அர் - ஆயர். ஆய் - தாய், ஆடு மாடுகளைப் பரிபாலிப்பதில் தாயைப் போன்றவர் ஆயர்.

அளவை நாற்பதனில்
வளமை யாலயத்தை நீடினன்—அங்கே
அன்னா ளோடு புகழ்
அன்னனே சிமியோன் பாடினன்
உளமெய்த் தெருசலேயில்
இளமைப் பனிரண்டாண்டிற் சென்றான்—கோவி
லொருமை யாரியரோ
டொருமையாய்த் தர்க்கித்து வென்றான். 13

(கு...ரை) அளவை நாற்பதனில்-நாற்பதாம் நாள்; புகழ் அன்னன் - புகழே ஓர் வடிவு எடுத்தாற் போன்றவன்; உளம் எய்த்து - மனம் தாழ்ந்து சிமியோன் உளம் எய்த்துப் பாடினன் எனக் கூட்டுக.

முப்பதாண்டதனில்
மெய்ப்பதாக யோர்தானடுத்தான்—அங்கே
முனி யோவானிஸ் நாத
னுமன் பாகத் தீட்சை கொடுத்தான்

ஒப்பி யூதேயாவின்
மைப் படாரணிய மேவினான்—துர்க்கொ
ரேப் பேய்கள் செய்த
பாரச் சோதனைகள் நீவினான். 14

(கு...ரை) மைப்படு + ஆரணியம் - இருண்ட காடு. நீவினான் - வென்றான்.

சீடர் பன்னிருவர்
கூடச் சூழ வெங்குந் திரிந்தான்—சுவி
சேட போதகத்தை
நீடிமனுப் பயிர்க்குச் சொரிந்தான்
பீடைப் படுகின்றோரைத்
தேடித் தொழுவத்தினிற் சேர்த்தான்—பாவப்
பெரிய பிணிகளையும்
அரிய வினைகளையுந் தீர்த்தான். 15

(கு...ரை) மனுப் பயிர்க்கு - மனுக்களாகிய பயிர்களுக்கு; பீடை - துன்பம்; அரிய வினை - போக்குதற்கு அரிய பாவவினை.

சொன்ன போதகத்தைப்
பன்னற் புதுமையிற் றிடத்தினா—னொரு
சொற்க வழியிலேக
மக்கட் கருள் செய்து நடத்தினான்
அன்னை வினையைத் தீர்க்க
வுன்னி வந்து சந்தித்தானே—யிப்பால்
அரிய பாடுபட்டுப்
பிரியமனது சிந்தித்தானே. 16

(கு...ரை) சொன்ன போதகம் - சுவர்ணம் (பொன்) போன்ற உயர்ந்த போதனைகள்; பன்னல் - சொல்லுதல்.

பெத்தானியாவிற்
பிரஸ்தாபிஷேகம் பண்ணப்பட்டா—னதின்
பின்பெருசலேச் சத்திரத்தன்பர்க்
கரியநற் கருணையிட்டான்
பத்தொடொருவர் சூழப்
பத்தா கெத்சேமனேக்காவிலே—யாத்மப்
பாடுபட்டு திரவேர்வை
விட்டனரிராவிலே. 17

(கு...ரை) பத்தா - தலைவன், இயேசு பெருமான்; உதிரம் - ரத்தம்.

முத்தியால் யூதாசு
கர்த்தனைப் பிறருக் களித்தான்—வெள்ளி
முப்பதுக்கு விற்றுத்
தப்பிதத்தை மனத் தொளித்தான்
சத்துருக்கள் பிணைத்
தத்தனைக் கொடுமை பண்ணினர்—அவ
சங்கைப் படுத்திக் கூட்டி
வெங்கை குருக்கள் வீட்டை நண்ணினர். 18

(கு...ரை) முத்தி - முத்தம். பிணைத்து - கட்டி. அத்தன் - கடவுள். அவசங்கை - அவமானம். வெங்கை - கொடிய கை.

முந்த குருக்கள் வீட்டில்
நிந்தைப் பட்டபின் பொந்திப்பிலாத்தே—கொடு
மூர்க்கமாகச் செய்த
ஆக்கினைக ளெல்லாமடாததே
பந்தக் குருசைச் சுமந்
துந்திக்கபால மலை நடந்தான்—அண்ணல்
பாவிகளை யடுத்துச்
சீவனையும் விடுத்து மடிந்தான். 19

(கு...ரை) முந்த - முன்பு; உந்தி - செலுத்தி; கபால மலை - கொல்கதா.

மூன்று தினத் தெழுந்து
தோன்ற நாற்ப தெல்லைவரையே—பத்து
முறையப் போஸ்தலருக்
கிறைமெய்க் காட்சி தந்தாரையே
யூன்றி யிருந்த பிறகு
ஆன்ற மேக சிம்மாசனமே—யேறி
யுன்னதத்தின் வலம்
தன்னிலிருந்தனர் வந்தனமே. 20

(கு...ரை) நாற்பது எல்லை - நாற்பது நாள்; ஆன்ற மேகம் - திரண்ட மேகம்.

கரிசித் தொரு பத்தாநாள்
பரிசுத்த ரூபியைத் தந்தாற்றினன்—சீடர்
கருத்தை விளக்கி ஞான
வார்த்தைத் திரளதாக வூற்றினன்
தரிசித் துலகம் போற்றத்
துருசிற் கடையுகத்தில் வருவான்—நடத்
தீர்த்து நடந்தபடி
யேர்த்த பலனெல்லார்க்குந் தருவான். 21

(கு...ரை) ஆற்றினன் - ஆறுதல்படுத்தினன்; துருசில் கடை யுகம் - அக்கிரமம் மிகுந்த, அழிவுக்குரிய உலக முடிவு காலம்.

திரித்துவ தோத்திரம்

துங்கவா னுலகமுந் துலங்கு பூமியும்
அங்குள பொருட்களு மமைத்து மைந்தனைப்
பங்கமே சுமந்தொழிப் பதற்குப் பாவிகள்
பங்கதாய்த் தரும்பரா பரனைப் போற்றுவாம். 1

(கு...ரை) துங்க - உயர்வான, பரிசுத்தமான; துலங்கு - விளங்குகின்ற; பங்கம் - குற்றம், பாவம்; பாவிகள் பங்கு அது ஆய் - பாவிகளுக்காக; இச்செய்யுளால் கவி பரம பிதாவைப் போற்றுகிறார்.

வார்த்தையா யிருந்துமா னிடசொ ரூபமாய்
ஆர்த்தபா தகமெலா மடைந்த பாட்டினல்
தீர்த்தொரு சிலுவையிற் சீவன் றந்துகை
யோர்த்தவே சுக்கிறிஸ் திறையைப் போற்று வாம். 2

(கு...ரை) ஆர்த்த - நிறைந்த, மிகுந்த; கை ஏர்த்த - தமது திருக்கரங்களினல் நன்மை அருளிய. இது, குமாரன் துதி.

மக்கடம் மனம்வசப் படுத்தி வான்பெற
மிக்கஞா னத்தின்மேல் வரங்க ளைப்பொழிந்து
ஒக்கநின் றுறும்பிதாச் சுதனி லோங்கிய
பக்கிடத் தரூபியைப் பணிந்து போற்றுவாம். 3

(கு...ரை) வான் - மோட்சம்; ஒக்க - ஒன்ருக; பக்கிடம் - பக்ஷிஷம், பரிசுத்தம். இது, பரிசுத்த ஆவி துதி.

மூவரு மொன்றதா யொன்று மூன்றதாய்
மேவருந் திரித்துவ மேன்மை வஸ்தொரு
தேவருந் திடர்வினை தீர்க்க லாவதென்
பாவரும் புகழ் மூனம் பரிந்து நிற்கவே. 4

(கு...ரை) மேவ அரும் - பொருந்துதற்கு அரிய; மூன்று ஒன்ருகவும், ஒன்றே மூன்ருகவும் பொருந்துதல் அரிது அன்ருே? அப்பொருத்தம் மனத்தால் அறிதற்கும் அரியது; ஒருதே - ஒப்பற்ற தேவன்; வருந்து இடர் வினை தீர்க்கல் ஆவது - வருந்துகின்ற துன்பங்களுக்கு ஏதுவாகிய பாவ வினையைத் தீர்க்கக் கூடியது; பரிந்து நிற்க - விருப்பதுடன் நிற்பாராக.

சந்த விருத்தம்

அனைத்தையும் அமைத்துல கனைத்தையும் நடத்தநி
சயப்பரம வஸ்தருபியே!
அகத்தினி லதிக்கிரம மதத்தகழு துக்களை
அழற்குழி யழுத்தும் நடுவா!

கனத்தினி லறத்தினி னலத்தினின் மிகுத்தருள்
கதித்த கருணைச் சொரூபமே!
கதிர்ப்படு கழற்புக வுரித்தினில் நினைத்தவர்
கருத்தினை விளக்கு மொளியே!
மனத்தையு மனத்தினி னினைத்தது நினைப்பது
மதித்தறி வுணர்த்தும் விமலா!
வகைப்பட சுரர்ப்படை விருப்பொடு திருப்புகழ்
வழுத்து முனதக் கடவுளே
தினத்துதி தினப்புகழ் தினச்செப மிகச் சொலு
திறத்தினை யுறப்பணிகிறோம்.
திரித்துவ வொருத்துவ மகத்துவ பரத்துவ
தெய்வத்துவ பரப்பிரமமே. 1

(கு...ரை) கழுது-பேய்: கதிர்ப்படு - ஒளி பொருந்திய; கழல் - திருவடி; உரித்தினில் - பக்தியுடன்; மதித்து அறிவு - மதிப்பிட்டு அறியும் அறிவு; விமலா - பரிசுத்தனே; வகைப்பட - பாகு படுத்தி; சுரர்ப்படை - தேவ கணம், வானலோக வாசிகள்.

அனந்த பரமண்டல மடங்கலு முழங்கிய
அருந்தயை மிகும் பிரமமே
அறங்களும் நலங்களு மொருங்குற விளங்குன
தகண்ட வறிவின் சொரூபமே
கனந்தரு பதங்களை யடைந்தவர் பெறும்படி
கனிந்துதவு சுந்தர வடிவே
கணங்களை நடுங்க நரகங்களில் விழுந்துரு
கவுங்கத மிகுந்த கனலே
நினைந்துள மகிழ்ந்தெமை யுவந்தருள் புரந்தருள்
நிரம்பிய நெடுங்கருணையே
நிரந்தர நிரஞ்சன சவுந்தர சுதந்தர
நிரம்பர சுயம்பரூபியே
தினந்தின முனின்புக ழுனின் செயல் சொலுங்கண
திடம்பெற வரந்தருவையே
சிறந்துலக மெங்கணும் நிறைந்த சுபமங்கள
சிதம்பர பரம்பர தெய்வே. 2

(கு...ரை) அனந்தம் - முடிவில்லாத; அடங்கலும் - முழுவதும்; கனம் தரு பதங்கள் - உயர்ந்த பதவிகள்; கணங்கள் - துன்மார்க்கர் கூட்டம்; நிரஞ்சன - குற்றமற்றவனே.

திருப்புகழ்

எப்போது நீ யெனையாள வருவாய் பரம
அப்பா தயாபரமேதுணை வேறிலை
இப்போது தாசனை யாதரி பராமரி—இதுவேளை

ஒட்டாத வானக மீதிலு லாவுமர்ச்
சிட்டோர் கடுதர்கள் பாடியினிதாய் நட
மிட்டே யெநாளு முனுமவளமே சொலு—மியல்பாக

மெய்ப்பாய்ம காசுவிசேட சபைகூடிய
பொற்பான வீதியின் மீது புகழாயறி
விப்பாய் முனுளின் மெய்ஞ்ஞானியர்கள் கூறின—விரிவான

மிக்கான நூல்களு மோசையுடனே சொலி
அக்கியான மேயதமாயழிய மானிடர்
மெய்க்கியான நேர்வழி நீடியுயிர் வாழ்கவும்—வெளியான

தப்பாத வேதவுதாரண நன்னீதிக
ளைப்பாட நாவதின் மேவியட மாய் வரு
சர்ப்பாதி தீவினையாவு மறவே யருள்—தருவாயே

சத்துராதியாகிய பேயுலகு மேதைய
மெத்தாக வாதை செய்யாமல் விழிபார்திரி
தத்து வாவனுதி பராபர தயாபர—சருவேசா

முப்போதுமா விசுவாசமுடனேயொரு
மிப்பா யுன்மாமறை யாவலுட னோதுவன்
முற்பாவ மாறிடவே குருசிலேறிய—முடிமீது

முட்கிரீடமே புனையூதரராசாதிப
சக்கராகாரதர தவிதாசன கிருபா நிதி
முக்காலு மேழையயா ளடிமையா யொரு—முதலோனே.

(கு...ரை.) மெத்தாக - மிகுதியாக; மாமறை - சிறந்த வேதங்கள்.

பரம காட்சி

விருத்தம்

ஏதனின் றோட்டங் கண்டேன்
எழிற் பர தீசுங் கண்டேன்
சேதன ஞானஸ்நானச்
சீவனி னதியுங் கண்டேன்
தூதரும் நரருங் கூடிச்
சோபனங்கூறக் கண்டேன்
பாதவச் சீயோன் கண்டேன்
பரமண்டலமுங்கண் டேனே.

இராகம்: பூபாளம்] [தாளம்—ரூபகம்.

கண்டேன் பரமண்டலம் நித்தி யானந்தங்
கொண்டேன் களிகூர்ந்தேன் அல்லேலூயா

கொண்டாடி யனந்தங் கோடிதேவ தூதர்கள்
குதித்தாட வுன்னதத்தே நரர் மிகத்தாவிய மகத்துவங்கள் 1

சித்திர நகரின் றுங்கமும் வானத்தை யெட்டுஞ்
சீயோன் மலையின் புங்கமும்
வித்தியாதரர் சங்கமும் அர்ச்சய சிட்டோர்
மேவியிருக்கு மங்கமும்
பத்திராசனக் கிறிஸ்தி னித்தியப் பிரஸ்தாபமும்
பரிசுத்த வான்களின் வரிசித்த சங்கிதப்
பாட்டுஞ் சுராட்டும் பறை
தீட்டும்படி கேட்டுந்திட —கண் 2

பொன்னகரின் விஸ்தாரமும் யஸ்பிக்கற்கள்
போன்ற தெருச் சிங்காரமும்
பன்னிரண்டஸ்தி வாரமும் பூவேந்தர் வரும்
பவனி யிணைவாரமுஞ்
சொன்னந்தனிற் பதித்துமின்னும் ரத்னபுரி
சுத்தப் பளிங்குக் கொக்குஞ் சுத்தப் பசும் பொன்னகத்
துலங்குஞ் சுட ரலங்கங்களும்
இலங்குங் கதி வலஞ் சென்று —கண் 3

கிரு பாசனக் காட்சியுங் கேரூபீன்கள்
கீர்த்தனஞ் செய்யுஞ் சூட்சியுஞ்
சருவலோகத்தின் மீட்சியும் பரிசுத்தாங்கச்
சன்னதியின் சாட்சியும்
மறை யாகமப் பெட்டி யிறை தேவநட்டுக் குட்டி
மன்றல் பிரஸ்தாபமு மொன்றப் பாதீசுக்குள்
மணியோசைகள் தணியா தெழ
அணிமாதர்கள் பணி சூடவும் —கண் 4

சீவ தண்ணீர் நதியும் இம்மானுவேல்
சிறந்த தேவ சன்னதியும்
பாவநாசப் பதியு மோட்ச ராச்சிய
பாரஞ் செய்யும் விதியும்
மேவியிரு கரையுஞ் சீவ விருட்சக்காவில்
விந்தைக் கனிமாப் பெண்கள் சந்தித் துலாவியாடும்

விதமுங் குயிலித முஞ்சொலு
நதமும் புளகித முந்தி —கண் 5

தூதர் கண வசங்கமும் அரிய பரி
சுத்தரப் போஸ்தலர் சங்கமும்
சாதிச் சீவன்கள் சங்கமுஞ் சத்தியரத்தச்
சாட்சிகளின் சங்கமும்
வேதப் பாட்டகர்கள் சங்கீத வாத்திய சங்க
மிக்க மூப்பர்கள் சங்க முக்கிய, சாஸ்திரிகள் சங்கம்
வேத நாயகனோடு துங்கதா
வீது மேவிய ராசசங்கமும். —கண் 6

(கு...ரை) பாதவம் - மலை; நதம் - நாதம், இனிய சப்தம் (குறுக்கல் விகாரம்)

பிறப்பின் சிறப்பு

விருத்தம்

வெள்ளி யொன் றுதிக்கப் பெத்லே
மேருவி லருள் கதிக்கத்
துள்ளியா யர்கள் குதிக்கச்
சுரர்கள் சோபனம் விதிக்கத்
தெள்ளிய சாஸ்திரி மார்கள்
சென்றுவந் தடிதுதிக்கப்
பிள்ளைகள் மனம் பதிக்கப்
பெலத்துட னுடினாரே.

ஏலேலமடி ஏலேலமடி
ஏலேலக்குயிலே—மயிலே

பூலோகந்தனில் மேலோகந் தொழும்
ஏலோகீம் பிறந்தார் சிறந்தார்— ஏலே 1

வெல்லை மலையினிலே ஒரு விடி
வெள்ளி யுதிக்குதையா ஐயையா
மேசையா வெள்ளி யுதிக்குதையா
யேசையா வெள்ளி யுதிக்குதையா
செல்லமலை யெருசெல்லை மலையிலே
சீவனுதிக்குதையா ஐயையா
செல்லையா சீவனுதிக்குதையா
நல்லையா சீவனுதிக்குதையா— ஏலே 2

வானத் திலேயிருந்து இதோவெகு
மானம் வந்ததையா அதிசய
ஞானம் வந்ததையா மெய்ச்சமா
தானம் வந்ததையா
நானக் குயிலாரே! கலிலேய
மேன்மைப் பயிலாரே! விசித்திர
நானத் தொயிலாரே கிறிஸ்தேசு
நாதனை வாழ்த்துங்கடி— ஏலே 3

ஆட்டைக் காணமல் தேடித்தேடி
அசந்து போனரடி; கோனரும்
இசைந்து போனரடி; ஓடிஓடிப்
பறந்து போனரடி;
காட்டுக்குள் ளெங்குஞ் சுற்றித் திரிந்து
கண்டு பிடித்தாரடி மகிந்து
தொண்டு பிடித்தாரடி; தோளிலே
கொண்டு சுமந்தாரடி— ஏலே 4

சீயோன் குமரியைக் காணம லையர்
சிந்தை மெலிந்தாரடி பொன்னையர்
நிந்தை யடைந்தாரடி கண்ணையர்
பந்த மிகுந்தாரடி
ஞாயமுடன் வேதநாயகன் பாட்டுக்கு
நன்மை தருவனடி நிசநிசம்
உண்மை தருவனடி நடுவிட
இன்னம் வருவனடி— ஏலே 5

புத்தியற்ற கன்னியாஸ்திரீகள்

விருத்தம்

அந்தமுள்ள மணவாளன் வந்த போதங்
காயத்தப் பட்டிருந்த கன்னிமார்கள்
விந்தையவ ருடன்கூடி மெய்விவாக
வீடுசென்றார் பூட்டப்பட் டதுகவாடம்
பந்தமதற் கெண்ணெய் கொள்ளப் போனவைந்து
பாவையரு மீண்டுவந்து கதவந்தட்டி
எந்தமக்குந் திறவுமென்று கூவிக்கூவி
ஏற்றினர் மருணனுடன் சாற்றினரே.

(கு...ரை) கவாடம் - கதவு; மருணன் - மகிழ் நன், மகிழ்ச்சி தருபவன், மணவாளன்.

ஆற்று மணவறைக்குள்
அருமையாக வென்னைத்
தேற்றும்படி கதவந்திறவு மென்கணவா. 1

திறவு மென்று தெரு
வாயிற் படியினின்று
அறிவில்லாமற் கூப்பிட்டலறுதே பெண்ணே 2

கூப்பிட் டலறி நிற்குங்
கொள்கை யதனைக் கண்டு
தீர்ப்பிட் டெனைத் தள்ளாமற் சேருமென் கணவா 3

சேருமென் றென்முன்னே
செப்ப ஞாய முண்டோ?
ஆரென் றுனை யறியோம் அகலப்போ கள்ளி! 4

கள்ளி யென்று தள்ளிக்
கடத்திவிடவும் வேண்டாம்
வள்ளலுனது மணவாட்டி நான் கணவா. 5

மணவாட்டி நீ யாமோ?
மருவியெனைப் பற்றுமற்
கன மாயைக் குள்ளான கபடி நீ போடி 6

போடி யென்று தள்ளிப்
புறம்பே விடவும் வேண்டாம்
சூடி மண வறைக்குள் சுகிக்கச் செய் கணவா 7

சுகிப்பதற்கு வேறே
சொந்தக் காரியுண்டு
அகத்தி லறிவில்லாத அணங்கே நீ போகாய் 8

அணங்கு நானுமக்கங்
கருக தாயிருந்து
குணங்க ளொடுபுசித்துக் குடித்தோமே கணவா 9

புசித்துக் குடித்தோ மென்று
புகழ்ச்சி மெத்தச் சொல்லாதே
நிசத்தி லுனையறியோம் நிட்டூரி போகாய் 10

நிட்டூரி நானிங்கே
நின்றிறைஞ்சு மன்றாட்டை
தட்டாமற் றிருக்காட்சி தாருமென் கணவா 11

தாரு மென்று மெத்தத்
தவித்தாலு மினிமேலுன்
பேரில் மனவுருக்கம் பிறக்குமோ? சொல்லாய். 12

உருக்கம் பிறக்க ஞான
உபதேச போதகம்
தெருக்கள் தனிலே நின்று செப்பினீர் கணவா 13

செப்புப் படியே தவஞ்
செய்து குணப் படாத
தப்பிதத் துன்மார்க்க சதிகாரி நீயே 14

சதிகாரி நான் முன்னுள்
சாமிதிரு நாமத்துச்
சித தீர்க்க தெரிசனந் தெரித்தேனென் கணவா 15

தீர்க்க தெரிசனங்கள்
செப்பினு லும்மெய்ச்சன்
மார்க்கப்படி நடவா வஞ்சகி நீயே 16

வஞ்சகி நானன்று
மகிமைத் திரு நாமத்தால்
அஞ்சக் கணங்கள்தனை யகற்றினேன் கணவா 17

அகற்றினு லும்முன்றன்
அகத்தை யகற்ற வில்லை
மிகுத்த கன்ம தோஷம் விளைத்தாயே பாவி! 18

பாவி யடியாளுன்றன்
பரிசுத்த நாமத்தால்
மேவும் அற்புதங்கள் மிகச்செய்தேன் கணவா! 19

அற்புதங்களைச் செய்
தாலு மறிவதற்ற
கற்பில்லாக் கன்னியாஸ்திரி போகாய் 20

கன்னிகை நானுன்றன்
காதலால் மணஞ் செய்ய
மன்னு தீபங் கொண்டு வந்தேனென் கணவா! 21

வந்தேனென்று சொன்னாய்
மதியில்லாத பெண்ணே
அந்த நாளி லென்னை யண்டினதில்லையே 22

அண்டா திருந்தகுற்றம்
அன்பாய்ப் பொறுக்கவேணும்
தெண்ட னிடுகிறேனின் சேவடி கணவா! 23

தெண்டனிட்டுப் பேயைச்
சேவித் தர்ச்சனை செய்த
தொண்டு நீ யகன்று தூரப்போ கள்ளி 24

தூரப்போ வென்றென்னைத்
துரத்தாமல் மனம் வைத்து
பார்த் திருக்கருணை பாருமென் கணவா! 25

பார்க்கும் காலமெல்லாம்
பாரிற் பிழைக்கும் காலம்
ஆர்க்கு மரணகாலத் தாகுமோ முத்தி 26

முத்தி கொடுத்து மோட்ச
வாசல் திறக்கவேணும் .
மெத்தப் புண்ணிய மேசையா வேந்தே யென்
கணவா 27

வேந்தனுக வந்த
மேசியா வென் புண்ணியம்
தீர்ந்த பாவி யுன்னைச் சேராது பெண்ணே 28

சேரா தென்று நடுத் தீர்ப் பிட்டகற்ற வேண்டாம்
சீரார் திருக்கவா டந்திறவு மென்கணவா 29

திறக்கவொருக் காலேனுந், தெரிந்ததில்லை யுன்னை
அறக்கொடிய பொல்லாத அக்கிரம மின்னே. 30

(கு...ரை) கவடி - கபடி, கபடம் வஞ்சகம் நிறைந்தவனே. அஞ்ச கணங்கள் தனை - பேய்கள் அஞ்சி யோடும்படி; தொண்டு நீ - அடிமை நீ; தெரிந்ததில்லை - உன்னை நான் அறியேன். ஆற்றும் - ஆறுதல் படுத்தும்; நிட்டூரி - கொடியவள்; தெரிந்தேன் - அறிவித்தேன், அக்கிரம மின்னே - அக்கிரமக் காரியே; மின் - பெண்; உவமையாகு பெயர்.

IV. ஜெப மாலை

(வேதநாயக சாஸ்திரியார்)

முத்தோத்திரம்

சீருயருந்திரி யேகபரன்றிரு
 நாமவளஞ் சொலியே
தேவர்களெண்டிசை யோருமறிந்திட
 நாவது கொண்டுரமாய்,
நேரு யருந்தவி தோதி வணங்கிய
 நேர்மையதின்படியே
நேயமுடன் செப மாலைமொழிந்திட
 நீணிரையந்தனிலே.
போருயருங்கன பேய்கள் விழுந்துபோல்
 லாத கொடுங்கனியே
பூருவமங்கதம் ஏவையருந்திய
 தீதறவுந்தயவாய்,
ஏருயருங்குரு சேறிமடிந்திச
 றேலையுவந்தருளும்
யேசுவையென்றனி னாவிலடங்கவெங்
 நாளுமிறைஞ்சுவனே. 1

(து...ரை) நீள் + நிரையம் + தனில்—விரிவான நரக பாதலத்திலே; நிரயம் - நரகம். பூருவம், அதம் ஏவைகனி அருந்திய (தனால் விளைந்த) தீது எனக்கூட்டிப் பொருள் கொள்க.

ஏர் + உயரம் + குருசு — அழகு மிகுந்த குருசு - இரட்சிப்பு ஈட்டப் பட்ட இடமாதலின் அழகு மிகுந்தது.

வேலைவிடுத்திச ரேலை நடத்திய
 வேலைமகத்துவமாய்
மேகதறிக்கிடை யேறியமித்திரர்
 வீழ வழித்துடனே
பாலைவிடுத்தடர் சோலைவனத்திடை
 பாரமலைக்குவடே
பாதகமற்றிட வேதமளித்தப
 ராபரன்மெய்ச்சுதனார்
ஓலைவிடுத்துமுன் னூலைமுடித்துல
 கோரை யுயிர்க்கவுமே

ஓகையுடைத்த தவீதுபடைத்திரு
கோலேயடுத்துரமாய்
மாலேவிடுத்துநம் மாலேயுதித்துரு
மாலேயெடுத்ததனுன்
மாலேகொடுத்திட ஞானதிருச்செப
மாலேவழுத்துவனே. 2

(கு...ரை) வேலே - கடல்; மேகதறி - மேகஸ்தம்பம்; அமித்திரர் வீழ- பகைவர்களாகிய எகிப்தியர் கெடும்படி; அடர் சோலேவனம் - நெருங்கிய சோலேகளுடைய காடு; பார மலேக்குவடு - பெரிய மலேயின் உச்சி, சீனய் மலே; ஓகை - உவகை, மகிழ்ச்சி; மாலே விடுத்து - மயக்கத்தைப் போக்கி; நம்மாலே உதித்து - நம்மாலே, நமக்காகவே உலகிற் பிறந்து.

சீருற்ற மணிபரம வெருசலே மணியர்ச்சய
தேவதே வத்திருமணி
திருத்துவ தத்துவம கத்துவவே கத்துவமணி
சிகாமணி மனேமயமணி
பாருற்ற வருவமணி யுருவமணி யருபரூ
பாமணி பராபரமணி
பரிசுத்த துத்தியவுத் தமசத்திய வேதமணி
பரமகிரு பாசனமணி
யேருற்ற வேதநா யகன்மந்திர மணிசுந்தர
வேகாந்த மணியம்மணி
யெந்தைமணி தந்தைமணி விந்தையா னந்தமணி
யிங்கனென் றன்கண்மணி
நேருற்ற தேசுமணி மாசிலாமணியரிய
நேசமணி யேசுநாத!
நீதிமணி யடியவரின் பாவவினே தீர்த்தமணி
நித்தியசீ வத்தின்மணியே! 3

தேவாரம்

அதிநவநிறையொளிவே யமரர்கள் தொழுமொளிவே
கதி நவமிகுமொளிவே கதிர்படுதி ருவொளிவே
மதி நவமலேயொளிவே மறையதிசய வொளிவே
ததி நவமருளொளிவே சரண்மலரடி தொழுதேன்

(கு...ரை) அமரர்கள் தொழும் - தேவர்கள் வணங்கும்; ததி - பலம்; ததி நவம் அருள் ஒளிவே! - ஒளியாக உலகில் வந்தவரே! புது சக்தியை அடியேனுக்கு அருளுவீராக.

கனமிகு குருவடிவே கனிதருவினை மடிவே
மனமிகு மிருள்விடிவே மறை முழுவதின் முடிவே
சனமிகு தவிதுறவே தவறறுகதி நிறைவே
தினமிகு பவமறவே திருமணவடி தொழுதேன்.

(கு...ரை) மறை முழுவதின் முடிவே - சகல வேதங்களுக்கும் முடிவாக உள்ளவனே. தினம் மிகு பவம் அறவே - அனுதினமும் யான் செய்தும் மிகுதியான பாவங்கள் நீங்கும்படியாக.

ஒலிதரு மறைவிதியே யுயர்சுரர் தொழுதுதியே
வலிதரு நரர்பதியே மதுரக ருணைநதியே
பலிதரு திருநிதியே படிநரர் பெறுகதியே
கலிதரு துயரறவே கடிமலரடி தொழுதேன்.

(கு...ரை) நரர்பதியே - மக்களுக்கு இறைவனே; படிநரர் - இப்பூவுலகிலுள்ள மக்கள்; கலி - சனியன், துன்பத்தைக் கொடுப்பவன், சாத்தான்.

கிறிஸ்து வருகைப் பதிகம்

அகிலபுவ னங்களெல்லாம் அமைத்தார் வந்தார்
ஆதியிலே யிருந்தவார்த் தையுமேவந்தார்
சகலசரா சரங்களெல்லாந் தந்தார்வந்தார்
தானாக நின்றதயா பரனார் வந்தார்
புகலரிய வேதபோ தகனார் வந்தார்
பூரணசற் குணமிகுபுண் ணியனார் வந்தார்
உகமுடியு மூழிவரை நிற்பார் வந்தார்
உன்னதப்ப ராபரனே வந்தார்தாமே. 1

(கு...ரை) புகல்அரிய வேத போதகனார் - சொல்லுதற்கரிய வேதங்களைப் போதிப்பவர்; முடியும் உகமாகிய ஊழிவரை, எனக் கூட்டுக. உகம்-யுகம், பெருங்காலப்பகுதி.

அனைத் துலகங்காக்கும் அருளாளர் வந்தார்
அண்டமெலாம் படைத்திரட் சித்தார் வந்தார்
கனத்தபர மண்டலத்தின் கர்த்தா வந்தார்
காரணப்ப ராபரனார் மைந்தன் வந்தார்
தனைப்பலியாய்ப் படைத்துலகை மீட்டார் வந்தார்
தம்மையன்றித் தேவனில்லாச் சாமி வந்தார்
எனைக்கிருபை யாய்நோக்குங் கண்ணார் வந்தார்
இம்மானுவே லரசே வந்தார் தாமே. 2

(கு...ரை) தமை அன்றித் தேவன் இல்லாச் சாமி; தாம் ஒருவரே தேவன், அன்றி மற்றோர் தேவன் இல்லை. அந்த மெய்யான தெய்வமே வந்தார். காரணப் பராபரனார் - சகல சராசரங்களும் உண்டாவதற்கு ஆதி மூலகாரணப் பொருளாக உள்ள கடவுள்.

முத்திவழி காட்டுவிக்கு முன்னோன் வந்தார்
மூவுலகம் படைத்தளிக்கு முதல்வன் வந்தார்
சத்தியவே தத்தைவிரித் துரைக்க வந்தார்
சருவசீ வாத்தும தயாளு வந்தார்
பத்தருக்குப் பதநான்கும் பகுப்பார் வந்தார்
பரிசுத்த வேதபரி பாலன் வந்தார்
எத்திசையும் கொள்ளாத இறைவன் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே. 3

(கு...ரை) தயாளு - தயாளன்; கருணாமூர்த்தி; வேதபரிபாலன் - வேதத்தைப் பரிபாலனம் செய்பவர், காப்பாற்றுகிறவர்; வேதவசனங்களை அழிப்பதற்கு அல்ல அவற்றை நிறைவேற்றுதற் பொருட்டே வந்தவர்.

பாட்டகர்க்குப் பலனளிக்கும் பத்தர் வந்தார்
பாவிகட்கெல் லாம்பாவ நாசர் வந்தார்
கேட்டவர்க்கு மோட்சகதி கிடைக்க வந்தார்
கெட்டவர்க்கெ லாங்கிருபைக் கிறிஸ்து வந்தார்
மாட்டகத்தி னுட்டகத்தின் வடிவார் வந்தார்
மாறுத பெருங்கருணை வைத்தார் வந்தார்
எட்டகத்தி லென்னகத்தை யெழுதார் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே. 4

(கு...ரை) பாட்டகர் - பாடகர், கவிஞர்; எட்டு அகத்தில் என் அகத்தை - எட்டிலே என்னுடைய பாவத்தை.

கடவுள் வணக்கம்

சரணம் சரணம்

ஆதியு மந்தமு மில்லாய் சரணம்
அதுமுன் னதுமுன் அதுமுன் சரணம்
அல்பா வோமே காவே சரணம்
அடியே நடுவே முடிவே சரணம்
சாதி சனங்க ளில்லாய் சரணம்
தானுவானு ஞானுசரணம்
சருவ வியாபி சருவ வல்லவனே
சரணஞ் சருவே சுரனே சரணம்
மாதர்கள் மைந்தர்க ளில்லாய் சரணம்
மனுடவ தாரகு மாரா சரணம்
மாசில் லாத மணியே சரணம்
மன்னு பொன்னு மின்னு சரணம்
ஏத மேது மில்லாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்
எனைமீண் டவனே யெனையாண் டவனே
யேசு நாதா சரணஞ் சரணம். 5

(கு...ரை) ஏதம் ஏதும் இல்லாய் - யாதொரு குற்றமும் இல்லாதவனே; இறையே - சகல சிருஷ்டிகளுக்கும் தலைவனே; நிறையே - பரிபூரண வஸ்துவே, முழுமுதற் கடவுளே; எனைமீண்டவனே - என்னை மீட்டுக் கொண்டவனே.

போற்றி போற்றி!

சத்திய வேதத் தொளிவே போற்றி
சயமே நயமே மயமே போற்றி
தன்முன் னொன்று மில்லாய் போற்றி
சற்குரு ஞானச் சாமீ போற்றி!
பத்துரை வேதப் பொருளே போற்றி
பரனே கிருபா கரனே போற்றி
பாரும் புவியும் பாதலம் யாவும்
பணியப் பெருமை பெற்றாய் போற்றி!
சுத்ததி ருச்சுவி சேடா போற்றி
தோன்றுஞ் சபையின் றுணைவா போற்றி
சொல்லும் புகழுக் கேற்றாய் போற்றி
துங்கா புங்கா சங்கா போற்றி
எத்திசை யோரும் ஈடே றிடவே
இரட்சகனாக வந்தாய் போற்றி
எனைமீண் டவனே யெனையாண் டவனே
யேசு நாதா போற்றி போற்றி. 6

(கு...ரை) பணியப் பெருமை பெற்றாய்! - பணிந்து தாழ்மையான உருவெடுத்து அதனால் பெருமை பெற்றவனே; பாரும் புவியும் பாதலம் யாவும் உன்முன் பணியுமாறு பெருமை பெற்றவனே, என இருபொருள் தோன்றுதல் காண்க. துங்கா; - தூயனே, உயர்ந்தவனே; புங்கா - மேன்மை பெற்றவனே; சங்கா - திருச்சபையின் தலைவனே; அழகுடையவனே.

தேவ தோத்திரம்

அம்புவி யனைத்துந் தாங்கி யாண்டுகாத் தளிக்கும் வல்ல
உம்பரும் பணிந்து போற்றும் ஒருவனை யுவமை யில்லா
நம்பர மனை நம் மேசு நாதனைத் திருரட்சிப்பின்
கொம்பினைத் தம்பமென்று கும்பிடுகின்றே னானே. 7

(கு...ரை) திரு ரட்சிப்பின் கொம்பினை - பரிசுத்த ரட்சணியக் கொம்பை; உம்பர் - தேவர்கள்; தம்பம் - ஆதரவு, பற்றுக்கோடு.

சாத்திரத் திறமை யோனைச் சமஸ்தவல் லவனை யூதர்
கோத்திரத் தரசைத் தேவ குமாரனை யளவில்லாத
நேத்திரக் கிருபை யானை நித்திய பிதாவை மேலாம்
சூத்திரக்கி றிஸ்தை யாவைத் தோத்திரிக் கின்றேனானே. 8

கும்பிடுகிறேனுன் கும்பிடுகிறே னெங்கள்
குருவேசுநாதர்பதங் கும்பிடுகிறேன்

அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்—எனை
யாண்டவனை மீண்டவனைக் கும்பிடுகிறேன்
நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன்—பவ
நாசனைக் கிருபாசனனைக் கும்பிடுகிறேன்
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்—நித்திய
சருவத யாபரனைக் கும்பிடுகிறேன்
உம்பர்தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்—தொனித்
தோசன்னு வோசன்னுவென்று கும்பிடுகிறேன்— 9
கும்பிடுகிறேன்.

தோத்திரிக்கிறேனுன் தோத்திரிக்கிறேன்—தேவ
சுந்தரக் கிறிஸ்துவேந்தைத் தோத்திரிக்கிறேன்

மனுவுரு வானவனைத் தோத்திரிக்கிறேன்—மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்திரிக்கிறேன்
கனிவினை தீர்த்தவனைத் தோத்திரிக்கிறேன்—யூதர்
காவலனை யாவலுடன் தோத்திரிக்கிறேன்
அனைமனு மைந்தனையே தோத்திரிக்கிறேன்—மே
சையாவை மெய்யாகத் தோத்திரிக்கிறேன்
எனைஇரட் சித்தவனைத் தோத்திரிக்கிறேன்—கிறிஸ்து
யேசுநச ராதிபனைத் தோத்திரிக்கிறேன்—தோத் 10

(கு...ரை) அனை - அன்னை, கன்னித்தாய், மரியம்மை; மனு மைந்தன்- மனுஷ குமாரன்; யூதர் காவலன் - யூதர் குலத்திற் றோன்றிய அரசன்.

ஓம் பிரணவம்

பொன்னுல குச்சிதப் புகழ்ச்சி யோம் நமா
பூரண காரணப் புதுமை யோம் நமா
தன்னிக ரொன்றிலாத் தாதை யோம் நமா
தற்பர மெய்ப்பர சயம்ப தோம் நமா
இந்நிலம் புரக்குமி ரட்சிப் போம் நமா
இசரவே லதிபதி யேசு வோம் நமா
நன்னிலை யிருக்கிறோம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்த னுதியே. 11

(கு...ரை) சயம்பு - சுயம்பு, (ஸ்வயம்பு), தானுகவே நிற்பவன், சிருஷ்டிக்கப்படா ஆதிமூலம்; சயம்பு அது ஓம் நமா, எனப் பிரிக்க. ஓம் - ஆகக்கடவது; சகல சராசரங்களும் 'ஆகக்கடவது:' என்ற இறைவனுடைய வார்த்தையினுலே அமைந்தன. அந்த வார்த்தையே தேவன்.

[பரி. யோவான் 1: 1-3]

ஆதியோம் நடுவதோம் அந்தத் தந்தமோம்
ஐயனேம் மெய்யனேம் அனந்த ஞானியோம்
நீதியோம் நித்திய நிலைமைக்குன்ற தோம்
நேற்றுமின் றென்றுமாய் நின்ற ஒன்றதோம்
ஓதியோ மகத்துவத் துயர்ந்த ஒள்ளியோம்
உண்மையி லுண்மையோம் உடன்படிக்கையோம்
நாதனே மிருக்கிறேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே. 12

(கு...ரை) பிரணவம் - எல்லாப் பொருளுக்கும் சொல்லுக்கும் ஆதி காரணமாகிய சொல், அல்லது ஒலி. ஓம் பிரணவம் - ஓம் ஆகிய பிரணவம்; பண்புத்தொகை. ஓம், ஆமென், என்னும் சொற்கள் பொருளிலும் சொல்வடிவிலும் ஒத்திருத்தலின் ஆராய்தற்குரியது; நமஸ்தே - வணக்கம்.

கிறிஸ்துவின் துதி

திருவா ளனேவே தெருளே பொருளே
தேவே காவாவே!
திரமே யுரமே வரமே பரமே
சீவா யேயோவா!
ஒருவா இருவா நடுவா முடிவா
ஓரே கோனுரே!
ஒழியா நிலையே வழியே விழியே
ஓமோ மூவாரே!
தருவே குருவே பரிபூ ரணமே
தாதா வேநீயே!
சருவே சுரனே தயவா யிருநீ
தானு னேதானே,
அருவே யுருவே சுரர்பூ பதியே
ஆலே ஆலேலோ
அமலா சரணே மனு வேலரசே
ஆலே ஆலேலோ. 13

(கு...ரை) தெருள் - ஞானம், தெளிந்த அறிவு; யேயோவா-எகோவா; மூவாரே - திரித்துவக் கடவுளே; அமலா - மாசு மறு அற்றவனே, பரிசுத்த மானவனே; சரணே - உன் திருவடிகளே அடியேனது அடைக்கலம். சர்வ + ஈஸ்வரன் - சர்வேஸ்வரன், சருவேசுரன்.

தொண்டர் பவத்தைக் கொண்டு பொறுத்துச்
சூதோர் வாதாலே
துன்ப மிகுத்துச் செம்புனல் விட்டுச்
சோர்வா யேவாளே

பண்டு பறித்துத் தின்ற கனிக்குப்
பாடாயீ டாயோர்
பங்கமாத்திற் றெங்கிமரித்துப்
பாதாளம் மேதாழ்
வண்டாரவத்தைத் தண்டிமிதித்தப்
பாலேவா னேபோய்
வந்துல கத்தைச் சிந்த வழித்துச்
சீருமா ரூதே
அண்டர் துதிக்கக் கண்ட கருத்தர்க்
காலே ஆலேலோ
அன்பின் மகத்துவத் தெங்கள் கிறிஸ்துக்
காலே ஆலேலோ 14

(கு...ரை) சூதோர் - சூது வஞ்சகம் உடையோர்; செம்புனல் - செந்நிறமாகிய நீர், குருதி; சோர்வாய் - மனவுறுதியின்றி; ஏவாள் சோர்வாய் தின்ற கனி எனக் கூட்டுக; வண்டு + அரவம் - குற்றமுள்ள பாம்பு; வண்டு - குற்றம்; சீரு - சீறி, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இறைவனது இறுதிக் கோபாக்கினையைக் குறித்தது.

தேவ மகத்துவம்

திருப்புகழ்

ஆக மங்கள் புகழ் வேதா நமோ நமோ
வாகு தங்குகுரு நாதா நமோ நமோ
ஆயர் வந்தனைசெய் பாதா நமோ நமோ—அரூபா

மாக மண்டலவி லாசா நமோ நமோ
மேகபந்தியி னுலாசா நமோ நமோ
வானசங்கம விஸ்வாசா நமோ நமோ—மனுவேலா

நாக விம்பமுயர் கோலா நமோ நமோ
காக மும்பணிசெய் சீலா நமோ நமோ
நாடும் அன்பானு கூலா நமோ நமோ—நரதேவா

ஏக மந்திரமுறு பூமா நமோ நமோ
யூக தந்திரவதி சீமா நமோ நமோ
யேசுவென்றதிரு நாமா நமோ நமோ—இறையோனே 15

(கு...ரை) வாகு தங்கு - அழகு பொருந்திய; மாக மண்டலம் - ஆகாய மண்டலம்; விலாசா - விரிவாக எங்கும் நிறைந்திருப்பவனே; வானசங்கமர் - வான லோகத்திற்குரிய பக்தர்கள்; நாக விம்பம் - ஆகாய வடிவம் அதாவது அரூபம்; கோலா - அழகுடையவனே!; யூக தந்திரவதி - சர்வ ஞானி.

கட்டான வேத நிதானு நமோ நமோ
சிட்டோர்களாதிப கோனு நமோ நமோ
கற்றோர்கள் போதக ஞானு நமோ நமோ—கனயூகா

மெட்டான வானவர் கோவே நமோ நமோ
அட்டாவ தானிகள் பாவே நமோ நமோ
மிக்கான ஞானிகள் தேவே நமோ நமோ—வினைநாசா

தட்டான போது சகாயா நமோ நமோ
கெட்டோர்கள் மீது நல்நேயா நமோ நமோ
தப்பாதவாதி லுபாயா நமோ நமோ—சருவேசா

எட்டாத சோதியின் வாசா நமோ நமோ
நெட்டான வீதி விலாசா நமோ நமோ
எக்கோடி சாதி நரேசா நமோ நமோ—இறையோனே. 16

(கு...ரை) கட்டான வேதம் - உறுதியான வேதம், சிட்டோர்கள் ஆதிப கோனு! - பக்தர்களைப் பரிபாலித்து நடத்தும் தலைவனே; தட்டான போது சகாயா - அடியார்களுக்கு இடறல்கள் ஏற்படுமிடத்து சகாயம் புரிப வனே.

தேவ லட்சணம்

சாமி யேசுகிறிஸ்து

ஞானமே கருணையா னந்தமே சொந்தமே
நந்தர்கள் கணபந்தமே!
நாதாந்த மேயந்த மேதாந்த மேதந்த
னந்தமே தருசந்தமே!
மோனமே பிரதான மேதிவ்ய பானமே
முக்யமே மிகு சக்யமே!
மூலமே யோலமே சீலமே கோலமே
மோட்சபக் கிஷ பொக்ஷமே!
மானமே யபிமான மேயதினமே புதின
மார்க்கமே கனதீர்க்கமே
மாணிக்கமே முத்த மேபத்தமே சீவ
மாமகுடமே கனமே
தானமே பேரின்ப மேதம்பமே தேவ
சத்தியத் துறுதி தருவாய்
தாதையா கியவஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே. 17

(கு...ரை) நந்தர்கள் - இடையர்கள்; கணம் - கூட்டம்; பந்தமே - பற்றுக்கு உரியவரே; மிகு சக்கியம் - மிகுந்த அன்பு; புதின மார்க்கமே - புதிய வழியே; இயேசுபெருமான் காட்டிய வழி புதிய வழி: அவ்வழி "நானே" என்று கூறியுள்ளார்.

அப்பனீ யையனீ அண்ணனீ தம்பி நீ
அண்ணாவியுங் குருவுநீ
அன்பனீ நண்பனீ என்பிராண நாயகனும்
ஆண்டவனு மீண்டவனுநீ
ஒப்புரவ னீதிறவ னீகுரவனீ யுயிர்க்
குதவிய வயித்தியனுநீ
உரியபிணையாளிநீ அரியமத் தியஸ்தனீ
உத்தமா சாரியனுநீ
செப்புமுன் றூதனீ யா்யனீ நாயனீ
சேனாபதித் தலைவனீ
செங்கோலி ராசனீ என்பாவ நாசனீ
தேவதே வப்பிரபுநீ
தப்பிலா மெய்ப்பாம ரட்சகனுநீ தேவ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையா கியவஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமி யேசுக்கிறிஸ்துவே. 18

(கு...ரை) குரவன் நீ - எனது குரு நீயே; உத்தம ஆசாரியன் - பிரதான ஆசாரியன்; ஆயன் - மேய்ப்பன்; நாயன் - தலைவன், நாயகன்; வேத மாளிகை ரஸ்து - வேதமாகிய மாளிகைக்குச் செல்லும் வழி; வேதத்தைத் தெளிவாக அறிவதற்குக் கருவாயாவது இறைவனது திருவருளே.

துங்கா அனங்கா பிரசங்கா தரங்கா
துரந்தர புரந்தரீகா!
தூதா அதீதா விநோதா எனாதா
சுமுத்திரமித் திரசமுத்திரா!
அங்கா நிசங்கா திகந்தா சுகந்தா
அகண்டபர மண்டலாதிபா!
ஆசாவுலாசா சர்வேசா நரேசா
அனந்தயோ சனைவிலாசா
புங்கா நலங்கா வணங்கா மணங்கா
புகழ்ந்துசொற் பிரவடீகா!
புராணா கல்யாணா பிரதானா நிதானா
புராதனா கிருபாசனா!
தங்காதிசங்கா திரித்துவகாத் திராவேத
சாஸ்திரி வழுத்து தோத்திரா!
தாதையா கியவஸ்து வேதமாளிகைரஸ்து
சாமியே சுக் கிறிஸ்துவே! 19

(கு...ரை) அனங்கா - ஸ்தூல உடல் இல்லாதவனே; தாங்கா - (கருணைக்) கடலே; புரந்தரீகா - பாதுகாப்பவனே; அதீதா - மனம், மொழி மெய்களுக்கு எட்டாதவனே; விநோதா - அதிசயமானவரே; எனாதா - என் நாதனே; நிசங்கா - உண்மைப்பொருளே; காத்திரா - கனம் பொருந்தியவரே.

தேவ சுபாவ மகிமை

மடக்கு

பொன்னாட்டவர்கள் வணங்கானே!
பொன்னாட்டவர்கள் வணங்கானே!
பூமிக்கான வாதவனே
பூமிக்கான வாதவனே
தன்னாட்டியத்தா வீதருளே
தன்னாட்டியத்தா வீதருளே
தாவானவர்க்குச் சாந்தானே
தாவானவர்க்குச் சாந்தானே
உன்னாட்டளவைக் கரியானே
உன்னாட்டளவைக் கரியானே
ஊழிக்கால முதியானே
ஊழிக்கால முதியானே
என்னாட்டியக்கந் தாரானே
என்னாட்டியக்கந் தாரானே
ஏயோவாவே காகாவே
ஏயோவாவே காகாவே. 20

(கு...ரை) முத்தியுலகுக்குரியவர்களால் வணங்கப்படுபவனே! பொன் மீது நாட்டம் உடையவர்கள் வணங்காதவனே! பூமிக்கு ஆன சூரியனே, (ஆதவன் - சூரியன்) பூ (அழகு) மிகுதியானவனே (பெரும்) தவத்திற்குரியவனே! தனக்குச் சொந்தமான (அன்புமிக்க) பக்திப் பரவசத்தால் நாட்டியமாடிய தாவீதுக்குக் கிருபை புரிந்தவனே; உம் தன் (சொந்த) (மண) வாட்டியாகிய திருச்சபைக்குத் தலைவனே! ஈது (இக்கிருபையை) அடியேனுக்கும் அருளுவீராக. உன்னையே புகலிடமாகக் கொண்டவர்க்கு வாசனையாயிருப்பவனே! (தாவு - புகலிடம்; சாந்து - வாசனை) கெட்டுப்போனவர்களுக்கு சாந்தி அருளுபவனே! (தாவு - தாழ்வு, கேடு; சாந்து - சாந்தி, ஆறுதல்); அறிவினால் அளப்பதற்கு அரியவனே! (உன்னுதல், நாடுதல் - ஆராய்ந்து அறிதல்) உன் ஆட்டு அளவைக்கு (அன்றாடக செயல்களுக்கு) கரியாய் (சாட்சியாக) உள்ளவனே! ஊழிக்காலத்திலும் முதுமை பெறாது என்றும் நிலையாய் இருப்பவனே! இக்காலம் ஊழ்வினை வந்து உதியாயிருக்கச் செய்பவனே! எனது நாட்டியத்திற்கு அழகிய மாலையாக உள்ளவனே (அம் + தார் - அழகிய மாலை); எந்நாள் (உம்) தியக்கம் (= மனக்கலக்கம்) தாராதவனே! ஏகோவாவே! பூங்காவே! என்னை காத்தருளுக!

கிறிஸ்துவின் சுபாவ மகிமை

சீருலாவுதி ரித்துவ தேவனே
பாருலாவும் யாவும் படைத்தவா
நேருலாவுத வீதிறை நீடிய
ஏருலாவும் இறைகிறிஸ் தேசுவே! 21

(கு...ரை) சீர் - சிறப்பு; ஏர் - அழகு; நேர் - நேர்மை, நீதி; பார் - பூமி.

அந்தமாதியி லாதபராபரன்
மைந்தனேநரர் மாங்கிஷமாகியே
விந்தையாயெனை மீண்டிரட் சித்தவா
எந்தயாபர னேகிறிஸ் தேசுவே! 22

அண்ணலார்க்கு மகிமையுண்டாகவும்
மண்ணிலேசமா தானம் வளரவும்
நண்ணுநற்பிரி யம்நரர்க்கெய்தவும்
எண்ணமான இறைகிறிஸ் தேசுவே. 23

கனியருந்துக டும்பகையால்வரும்
வினையொழிந்துவிண் வீடதுறும்படி
மனுடர்சங்கம கிழ்ந்தெழவந்தவா
எனையுவந்த இறைகிறிஸ்தேசுவே. 24

(கு...ரை) வீடது உறும்படி - மோட்ச வீட்டை அடையும்படி; எனை உவந்த - என்னை விரும்பி வந்த.

பரிசுத்தாவியின் சுபாவ மகிமை

பொற்புறு பரமானந்த
பூர்த்தியா னந்தவெள்ள
விற்பன ஞானசத்வ
விமரிசைக் களவில்லாத
தற்பரா இஸ்பிரீத்துச்
சாந்துதற் சுயசொரூபா
அற்புதா பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே! 25

(கு...ரை) விமரிசைக்கு அளவு இல்லாத - ஆராய்ச்சியானல் அளவிடப்படாத; பொற்பு - அழகு.

மூவரில் ஒன்றதான
மூர்த்தியே முடிவில்லாத
சீவனே மனதுக்கான
திவ்யசஞ் சீவியேநற்

காவலே களிப்பே துப்பே
கதித்தமெய்ப் பலனே கற்றோர்க்
காவலே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே. 26

(கு...ரை) மூர்த்தி-கடவுள்; களிப்பே - ஆநந்தமே; துப்பே - அறிவே; கற்றோர்க்கு ஆவலே - கற்றறிந்த அறிவாளிகளுக்கு இன்பத்தையும் ஆவலையும் ஊட்டுபவரே! வாலறிவன் நற்றாள் தொழுவதில் ஆவல் கொள்வதே கற்றதனால் ஆய பயன்.

சோதியே சுடரேமிக்க
துய்யதுப் புரவேசுத்த
நீதியே நெறியேஅன்பர்
நெஞ்சகத் துறைந்த வாழ்வே
ஓதியே உயர்வேயுண்மைக்
குண்மையே ஊழியூழிக்
காதியே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே. 27

(கு...ரை) ஓதியே - அறிவே (ஓதி - அறிவு); துப்புரவு - பரிசுத்தம்; ஊழி ஊழிக்கு ஆதியே - பல்லூழி காலத்திற்கும் முந்தினவனே.

அகப்பற்று

வாவேணும் என்றன் அகமே

ஆதாம் விழுந்த வினையா லுலர்ந்த
அகிலம் புரந்த ருளவே
தீதேயகற்ற மனுவாயெழுந்து
திருவா சகங்கள் சொலியே
வேதாளம் அஞ்ச நரகங் கலங்க
வெகுபாடடைந்தி கலெலாம்
வாதாடிவென்ற குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே. 28

(கு...ரை) புரந்தருள - பாதுகாத்தருள; இகல் எலாம் - எல்லா பகைமையையும்.

ஈராறுசீடர் அடிகண்டுதெண்ட
னிடநின்று கானவிலே
ஓராறுசாடி யுதகம்பிரசஞ்செய்
தொருமுப்ப தாண்டளவிலே

TAMIL NADU ARCHIVES
No.
106830
MADRAS
O-,
N55

பேராறுசென்று திவியதீட்சைபெற்றுப்
பிதாமைந்தன் என்றெருசலே
மாராருகொண்ட குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே. 29

(கு...ரை) பிரசம் - தேன்போன்ற இனிய ரசம்; பேர் ஆறு - புகழ் பெற்ற ஆறு - யோர்தான் நதி.

ஐயாறுவெள்ளி விலைகூறிவிற்க
அநியாய நிந்தைகளுறக்
கையேபிணைக்க வாராலடிக்கக்
கடுவின்கிரீடம் இடவே
மெய்யேநடுங்கக் குருசூடிறந்து
விலாவே துளைக்க உலகின்
மையே தவிர்த்த குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே. 30

(கு...ரை) கடு - முள்; மை - குற்றம்; தவிர்த்த - நீக்கின.

ஒருகாசதேனும் அடியாரைநாடி
உதவாஉலுத்தன் உனது
திருவாசகங்கள் படியாதபாவி
ஜெபம்ஓதவுந் தெரிகிலேன்
பரிவாயுன் அன்பை உணராதுகெட்ட
படுபாதகன் வினையற
மரிபாலுதித்த குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே. 31

(கு...ரை) உலுத்தன் - உலோபி.

மன்றாட்டு

மகத்வ பரனே

எந்தாய்தகப்பனுயிர் தந்தாதரித்தவரு
ளின்றேவ சத்தியகுருவே
பந்தான்மனக்கவலை மிஞ்சாதிரக்கமொடு
பண்பாய்நடத்தி யெனையே
உந்தாமரைச்சரணம் அங்கேயிருத்திமிக
வுங்காதலித்து நிலையாய்
வந்தாளுனக்கபயம் அந்தாதி கர்த்தனருள்
மைந்தா மகத்துவ பரனே. 32

(கு...ரை) பந்தான் - உலக பந்தபாசங்களால்; அந்தாதி கர்த்தன் - எப்பொருட்கும் ஆதியும் அந்தமுமாக உள்ள கர்த்தன்,

உன்னாலெனக்குவளம் உன்னாலெனக்குநலம்
உன்னாலெனக் குறுதியாம்;
என்னாலுனக்குறுவ தென்னோ? பொன்னுக்குதவி
என்னும் அதைப்புனைவரால்?
முன்னோருரைத்தபடி நன்னாவலர்க்கு அருள்
முன்னோன் அளித்தபரனே!
மன்னுபாரத்தின்வளர் மன்னுகிறிஸ்தேமது
மன்னு மகத்துவபரனே. 33

(கு...ரை) அதைப் புனைவரால் - அந்தப் பொன் ஆபரணத்தை அணிந்துகொள்பவர்களால்.

சத்துருநாசம்

மாடும்படு பீடுங்கொடு
வாடுந்தமி யேனின்கன
பாடும்பல கேடுந்தவிர்;
பாடுந்தமிழ் நாவுங்கொடு;
சேடும்பொனின் றோடும்புனை;
தேடும்பரி வாலன்பொடு
சாடும்புகழ் நாடும்; பரா
சருவேசுரா சருவேசுரா. 34

(கு...ரை) மாடு - செல்வம்; பீடு - பெருமை; கொடு - சிறப்பாகக் கருதிக்கொண்டு; வாடும் தமியேனின் - வாடுகின்ற அடியேனின்; கனபாடும் பல கேடும் தவிர்; தமிழில் பாடும் நாவும் கொடு எனக்கூட்டுக. சேடும் - அழகும், பெருமையும்; பொனின் தோடும் - பொன்னாலாகிய காதணியும்.

கிறிஸ்துவின் தாழ்மை

தேவனானநீ மனுடனாகினை
திறமையானநீ சிறுமையாகினை
ஆவியானநீ சீவியாகினை
அருவமானநீ உருவமாகினை
பாவியாகினை தாழ்விலாதநீ
பாடதாகினை ஆடதாகவே
வீவிலாதநீ சாவுமாகினை
வேதநாயகா வேதநாயகா. 35

(கு...ரை) வீவு இலாத - அழிவு இல்லாத; ஆடதாகவே பாடது ஆகினை - பஸ்கா ஆடாகவே பாடுகளை அனுபவித்தாய்; வேதநாயகா - வேதத்திற்கு ஆதி கர்த்தாவே.

உடுகணுற்றசாஸ் திரிகள்தேடவும்
உகம்வனைந்தநீ அமுதமுண்கவும்
இடையர்வந்துகண் டடிதுதிக்கவும்
இரவிலேகுளிர் பனிமிகுக்கவும்
படிசிரிக்கநீ யழுதுகொண்டதும்
பரமசேனைகள் பாடிநின்றதும்
விடையின்முன்புவந் ததுவுமென்? சொலாய்
வேதநாயகா வேதநாயகா. 36

(கு...ரை) உடுகண்ணுற்ற - நட்சத்திரத்தைக் கண்ட; உகம் வனைந்த நீ - பூமியை உருப்படுத்தின நீ; படி சிரிக்க - உலகம் சிரிக்கும்படியாக; என் - என்ன காரணம்; சொலாய் - சொல்வாயாக.

மக்கண்மக்களும் எக்குலத்தரும்
மண்ணுளோர்களும் விண்ணுளோர்களும்
தக்கபாதலத் தோரும் யாவரும்
சருவலோகமுஞ் சகலபேர்களும்
ஒக்கநின்றுகொண் டதிசயிக்கவே
உலகம்யாவையும் உண்டுசெய்தநீ
மிக்கவெட்கமற் றழுவதென்? சொலாய்
வேதநாயகா வேதநாயகா. 37

நித்திரைக்கெனத் தாயராட்டியும்
நீயழுங்குர லேமிகுப்பதென்?
எத்தனைக்குநீ கூவிவாடினும்
ஏழைமாதிடம் ஏததுண்டுதான்?
பெத்தலேமினில் உற்றபேரெவர்?
பெருமைகண்டுனக் கருமைசெய்யவே
மெத்தவுந்துயில் விழிகொள்ளப்பனே;
வேதநாயகா வேதநாயகா. 38

(கு...ரை) விழி துயில்கொள் அப்பனே - என் அப்பனே! கண் தூங்கு.

தள்ளிவீக்கியுன் றனைவளைந்துமே
தறுகணர்க்குழா மிகவடித்தபின்
முள்ளுவன்கொடு முடியழுத்தியே
முகமதிற்கறை படவுமிழ்ந்திடக்
கள்ளனுக்கவே தூடணிக்கினுங்
கருணையாளா! நீ சினமிலாமலே
வெள்ளையப்பனுய் மனமெடுத்தையோ
வேதநாயகா வேதநாயகா. 39

(கு...ரை) தறுகணர்க் குழாம் - பழி பாவங்களுக்கு அஞ்சாத கொடியவர் கூட்டம்; முள்ளுவன் கொடு முடி - முள்ளினுல் ஆகிய மிக்க கொடிய முடியை; துடணிக்கினும் - நிந்தித்தாலும்.

எண்ணுமாகினை இறையுமாகினை
ஏகமாகினை யாகமாகினை
கண்ணுமாகினை ஒளியுமாகினை
கதியுமாகினை பதியுமாகினை
பண்ணுமாகினை பாவுமாகினை
பரமுமாகினை வரமுமாகினை
விண்ணுமாகினை வெளியுமாகினை
வேதநாயகா வேதநாயகா. 40

(கு...ரை) எண்ணும் ஆகினை - சிந்தனைப் பொருளும் ஆனுய்; ஆகம் ஆகினை - உடல் எடுத்தாய்; பண் - இராகம்; பா - பாட்டு.

பாவ சங்கீர்த்தனம்

சீரிலங்கும் ஆதியானின் சேயனே என்ஆயனே
தீயபாவ மாறவந்த தேவதேவ தேவனே
நேரிலங்கு ஞானமங்கை நேயனே சகாயனே
நேர்மையான தீர்வைகூறும் நீதனே அதீதனே
பேரிலங்கு சத்தியத்தின் ராசனே பிரகாசனே
பேதையான பாவியென்றன் பாடல்கேட் டிரங்கியே
ஏரிலங்கு வான நாடர் பேறுதந்தருள்கவென்று
ஏகனுக் குரைக்கவேணும் யேசுநாத சுவாமியே. 41

(கு...ரை) ஆதியானின் சேயனே - ஆதி பிதாவின் குமாரனே; ஞானமங்கை நேயனே - சத்திய ஞான திருச்சபையின் மணவாளனே; ஏர் இலங்கு வானநாடர் பேறு - அழகு விளங்கு மோட்சலோக வாசிகள் அடையும் பேறு, மோட்ச கதி; ஆயன் - ஆத்ம மேய்ப்பன்; தாய் போன்றவன்.

அத்தனே அனாதியே சுத்தஞான ரூபியே
அண்டபிண்டம் யாவையும் விண்டமெய்ப் பிரதாபியே
கர்த்தனே கிருபாசனு சத்தியவேத வாசனு
கண்கொள்ளாத காட்சியே விண்கொள்ளாத சூட்சியே
நித்தனே மகத்துவனே முத்தொழில் திரித் துவனே
நீசனான பாவியென்றன் மாசறுத் தகற்றியே
இத்தரையிலே தயவு வைத்திரங்க வேணுமென்று
ஏகனுக் குரைக்கவேணும் யேசுநாத சுவாமியே. 42

(கு...ரை) நித்தனே - நித்தியமாக உள்ளவனே; முத்தொழில் திரித்துவனே! - படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றும் திரிமூர்த்தியே!

மண்ணிலே பவத்தினால் உதித்துவந்த பாவியான்
மதலையான நாள்துவக்கி வன்பிலே நடந்தநான்
கண்ணினாலே செய்தபாவம் எண்ணினாலு முடியுமோ
காதொடைம் பொறிவினை கணக்கினைக் கடந்ததே
புண்ணியம் அணுத்துணைய தேனுமற்ற வஞ்சகப்
புலையனான பாவியான் புரிந்தரண்ட கங்களாம்
எண்ணிறந்த கோடிபாவ மும்பொறுத் தீடேற்றவென்
றேகனுக் குரைக்கவேணும் ஏசுநாத சுவாமியே! 43

வஞ்சமிஞ்சு பஞ்சபாவி நெஞ்சிலன் பிலாதவன்
வானவனுரைத்த பத்து மறைதனை மறுத்தவன்
தஞ்சமென்றடைந்த பேரைத் தள்ளிவிட்ட பாதகன்
தன்மநீதி ஞாயமுந் தவத்தையு மறந்தவன்
அஞ்சலென் றுனைப்பணிந்தி டாததுர்க் குணன்றனை
அக்கினிக் கடற்படுத்தி ஆக்கினையி டாமலே
எஞ்சலன்றி முற்றினும் இரங்கவேணு மென்பதா
யேகனுக்குரைக்கவேணும் யேசுநாத சுவாமியே. 44

(கு...ரை) எஞ்சல் இன்றி - எவ்விதக் குறைவும் இல்லாமல்.

மண்டலத்தில் மகதலா மரிபவமகற்றினீர்
வலதுகள்ள னுக்கிரக்கம் வைத்துமே வழுத்தினீர்
கண்டுதிமிர் வாதரோகி கன்மபாவ மாற்றினீர்
கண்ணுறச் சீமோனையுங் கடாட்சம் வைத்து நோக்கினீர்
தொண்டர் துன்பம் யாவையுந் துயர்க்குருசி லேற்றினீர்
சொல்லுதற் கதீததீத துய்ய துய்ய துய்யனே
எண்டிசைக்கு ளென்பவத்தையும் பொறுத்திரங்கவென்
றேகனுக் குரைக்கவேணும் யேசுநாத சுவாமியே. 45

(கு...ரை) எண் திசைக்குள் என்பவம் - எட்டுத்திசை வரையும் சென்று முட்டியுள்ள என் பாவத்தை.

இரக்கமுந் தயவு முடைய தற்பரனே
இடும்பவக் குறைகளால் நிறைந்த
மருட்படு மேழைப் பாவியா னொடுக்க
வணக்கமும் பணிவுமாயுனது
திருச்சதுர்க்கிருபா சனத்திடை வீழ்ந்து
சிறியனைத் தாழ்த்தி செய்திறைஞ்சிப்
பெருக்க விண்ணப்பம் புரிவதற் கீண்டு
பெயர்ந்தனன் கருணையாதிபனே. 46

(கு...ரை) இடும் பவம் - செய்யும் பாவம்; மருள் - மயக்கம்.

பாவ நித்திரையி னிருவிசாரத்தால்
பாதகன் சிதைவுறு படிக்குத்
தேவரீருமது பரிசுத்தாவியினால்
திறத்திலென் றனைப்புடைத் தெழுப்பிக்
காவலாய் விழிக்கச் செய்தெனின் பாவங்
களைப்பர தாபமாஞ்சீரை
மேவியானுணரத் தக்க புத்தியதும்
வெளிச்சமும் அருளுமாதிபனே. 47

(கு...ரை) புடைத்து எழுப்பி - தட்டி எழுப்பி; பரதாபம் - வருந்துதல்; பாவங்களைப் (பற்றி) பரதாபம் ஆம் சீரை - எனது பாவங்களைக் குறித்து நினைத்து வருந்தும் சிறந்த பண்பை; யான் மேவி உணரத்தக்க புத்தி அருளுக எனக் கூட்டுக.

கையினாற் காலால் மற்றவயத்தால்
கருதியான் செய்த பாதகங்கள்
ஐயையோ கணக்கில் அடங்குமோ? ஏரா
ளப்பிர வாகமானதலோ?
பையவந் தரங்கத் தினும்பலாறியப்
பராசியத் தினுமியா னிழைத்த
வெய்யபாவங்கள் மறைக்கினு முமக்கு
விவரமாய்த் தெரியுமாதிபனே. 48

(கு...ரை) பைய அந்தரங்கத்தினும் - மெல்ல ஒருவருக்கும் தெரியாமல் அந்தரங்கமாக; பராசியம் - வெளியரங்கமாக; இரகசியம் X பராசியம்.

பரிசுத்தநீதி யுடைய கர்த்தாவே
பாவிஎன் கண்களானின்னைத்
தெரிசித்தே றெடுக்கத் துணிந்தி டேனடுங்கித்
தியங்கி யென் மார்பினிலடித்துக்
கரிசித்த பரனே பாவியென்னுடனே
கனிந்துற வாருமென்றிறைஞ்சி
வரிசித்தபெருமூச் செறிந்து கெஞ்சுகின்றேன்
மனம் பொறுங் கருணை யாதிபனே. 49

(கு...ரை) கரிசித்த - நேசித்த, அன்பு கொண்டுள்ள.

நிந்தாஸ் துதி

உன்றனின்செய்தி யான்அறிந்திலனோ?
உடுப்பதற் கங்கியொன்றதனை
உவந்துசேவகர்தான் சீலிபோட்டெடுத்தார்
ஒன்றுமற் றம்மணத்திருந்தாய்

அந்த நாளுனக்கோர் மடத்திலுமிடமற்
றயல்வனத் திடைவிடை யடையும்
அகத்தினிற் பிறந்தாய் மிடியினாலுனைப்புல்
லணையின்மேற் கிடத்தின னன்றோ!
கந்தையாலுன்னைப் பொதிந்ததும் அழுது
கதறிநீ பால்குடித் திருந்த
கவடமும் அறிவேன் றலைமுடி சாய்க்கக்
கழுமரத் திடமிருந்ததுவோ!
எந்தையே! உனக்கோர் நீசவாகனந்தான்
இருந்துனை ஆட்டுதோ? ஐயா!
எழில் பெறுசீயோன் மகள் மணவாளா!
இறைவனே யேசு நாயகனே! 50

(கு...ரை) நிந்தா ஸ்துதி - நிந்திப்பது போல துதிப்பது; விடை அடையும் சுகம் - மாட்டுக் கொட்டில்; விடை - காளை, இங்கே அஃறிணை இருபாற் பொதுப் பெயராய் வழங்கப்பட்டுள்ளது. மிடி - வறுமை.

திருச்செயல்

ஒன்றுமில்லாமையில் நின்றுலகம் யாவையும்
உண்டுபண் ணினதில்லையோ?
ஊழித்து வாந்தத்தில் நின் றொளிபிரகாசிக்க
உத்தரவு செய்ததில்லையோ?
சென்றந்தரங்களிற் கிரகங்கள் வான்மீன்கள்
சேரும்வழி வைத்ததில்லையோ?
திவலைக ளனந்தனந் தங்களாயேறியே
சேணின்று பெய்யவில்லையோ?
வென்றிபெற இஸ்ரவேற் கொருநாளில் ஆதித்தன்
மீண்டுநின் றேக வில்லையோ?
விரிகடல் இரண்டாய்ப் பிளந்துயோர் தானும்வழி
விட்டடங் கினதில்லையோ?
கன்றிடாதென்மனஞ் சீராக ஒருநவங்
காட்டுவ துனக் கருமையோ?
கருத்தா பரத்தாள் திரித்துவஏ கத்துவமே
கருணையா னந்தவடிவே! 51

(கு...ரை) அந்தரம் - ஆகாயம்; வான்மீன் - நட்சத்திரம்; திவலைகள் - நீர்த்துளிகள்; அநந்த அநந்தங்களாய் ஏறி - எண்ணுக் கடங்காத துளிகள் மேலே சென்று; சேண் நின்று - ஆகாயத்திலிருந்து; ஆதித்தன் - சூரியன்; கன்றிடாது - வருந்திச் சிதையாதபடி.

பொறையைஇ டம்விட்டுப் பெயர்ந்துகட லிற்றாழ்ந்து
போகஉத் தரவுசெயலாம்
பொங்கு திரையின்மேல் நடக்கலாஞ் சிங்கத்தைப்
போர்செய்து கொன்றுவிடலாம்.
மறுபாடை பேசலாம் பேயைத் துரத்தலாம்
வல்லரவு களைநீக்கலாம்,
மரணத்துக் கினமான நஞ்சுண்டு தீவினை
வாராது காத் துவிடலாம்,
அறுதியாய்ச்சுகமிலா தவர்கள் மேற்கைகள்வைத்
தாரோக்கியம் ஆக்கிவிடலாம்
அனுதிரட்சகரைவிசு வாசித்தபேர்களின்
அடையாளம் இவைகளன்றோ?
கறையான மனதினிருள் இரிதலரி தரிதே
கடாட்சித்துன் அடிமை கொள்வாய்
கருத்தாபரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே. 52

(கு...ரை) பொறை - மலை; பாடை - பாஷை; அறுதியாய் - முடிவாக, வரையறுத்து; இரிதல் - அழிதல்; அரிது அரிது - மிகவும் அரிது.

இலக்கத் தோத்திரம்

ஒருவழியான் ஒருமறையான்
ஒருகாவில் ஒருதருமேல் ஒருபாம்பைச்சேர்
ஒருகனியால் வந்தபவந் தீர்க்கவொரு
கனிவயிற்றா டுதித் தோரூரில்
ஒருகுடிலில் ஒருநாளிற் பிறந்துயர்ந்தோர்
குருசேறி உயிரொன்றீந்த
ஒருவனை யென் னுயிரளவும்
ஒருபோது மறக்காம லோதுவேனே. 53

(கு...ரை) உயர்ந்தது ஓர் குருசு ஏறி - உயர்ந்ததாகிய ஒரு சிலுவை மரத்தின் மீது ஏறி; ஒருவனை - ஒப்பற்ற இறைவனை.

இருநாள்வான் விரிவமைத்து
இரண்டு மனுடரைச் செய்திரு மரத்தை நாட்டி
இருபேரைக் கொண்டிலரே வின்சிறைமீட்
டிருவேற்பா டிருபங்காக்கி
இருஞானத் திரவியந்தந் திருசுவா
பங்களேற் றிருவர்பானின்
றிருமறியிலேறியெரு சலையில் வந்தான்
இருபதத்தை இறைஞ்சுவேனே. 54

(கு...ரை) இரு நாள் - இரண்டாம் நாளில்; வான் விரிவு - ஆகாய விரிவை; இரு சுவாபங்கள் ஏற்று - இரண்டு தன்மைகளை ஏற்று; அவை: தெய்வத் தன்மையும் மனிதத் தன்மையும்.

மூன்றுதினத் துலகமைத்து
மூவராய் ஆபிரகா முன்றிற்றோன்றி
மூன்றுநாள் தாய்தகப்பன் றேடவிட்டு
மூன்றுதர முழங்கால் நின்று
மூன்றுமுறை மறுத்தவனை
மூன்றுமுறைவழுத்திமூன் றுநாளுய்த்து
மூன்றுமொன்ற தான திரியேகனையான்
முத்தமிழால் மொழிகுவேனே. 55

(கு...ரை) மூன்று முறை மறுத்தவன் - பேதுரு; முத்தமிழ் - இயல், இசை, நாடகம்; சாஸ்திரியார் முத்தமிழால் இறைவனைத் துதித்தவர்; அவர் பாடியுள்ள ஆயிரக்கணக்கான செய்யுட்பாக்களும், நூற்றுக்கணக்கான இசைப்பாக்களும், குறவஞ்சி போன்ற நாடக நூல்களும் அதற்குச் சான்று.

வீண்பத்தி நாசம்

மாசிலா மனத்தாய்! ராசவிற்பனத்தாய்
 மகிமையின் கிருபையா சனத்தாய்!
வலியமாசனத்தாய்! பலிசெய்போசனத்தாய்!
 மட்டிலா வலமைசேர்கனத்தாய்!
தேசுறுந்திரத்தாய் பேசரும்பரத்தாய்
 திரித்துவ ஏகதத் துவத்தாய்!
செய்யசுந்தரத்தாய் துய்யமந்திரத்தாய்
 திடவரத்தாய் திருவுரத்தாய்!
பாசமேயுதித்தாய் நேசமேகதித்தாய்!
 பரமசத் துவமகத் துவத்தாய்!
பாததோத்திரத்தாய் வேதசாத்திரத்தாய்
 பார்த்திபன் கோத்திரநேத் திரத்தாய்!
ஏசறப்படைத்தாய் ஆசறத்துடைத்தாய்
 எரிநரகக் கதவடைத்தாய்
என்னுருவெடுத்தாய் பொன்னகர்கொடுத்தாய்
 எந்தையே யேசுநாயகனே. 56

(கு...ரை) வலிய மா சனம் தாய் - மனுமக்களாகிய மகா சனங்களுக்கு வலிமை பொருந்திய தாயே; பலிசெய் போசனத்தாய் - பிதாவின் சித்தப் படி தன்னைத் தியாக பலியாக ஈவதையே போசனமாகக் கொண்டவனே; பார்த்திபன் - அரசன்.

கல்லதைச்செம்பை வெள்ளியைப்பொன்னைக்
கடவுளென் றடிதொழுமாட்டேன்;
களிமண்ணுல்மிதியிட் டுருவெனக்குயவன்
காட்டிய கோலமுங்கருதேன்;
வல்லிரும்புருக்கால் வெண்கலத்தகட்டால்
மற்றுள பஞ்சலோகத்தால்
வார்த்ததும்அடித்து வைத்ததுமான
வன்சிலை களையெலா மதியேன்;
செல்லரிக்காத மரத்தினைத்தெரிந்து
சித்திர வேலைகள்தீர்ந்த
சிறந்தபொம்மைகள்பற் பலபடங்களையுந்
சிந்தையிற் கனவிலுநினையேன்;
எல்லையில் லாவெவ் விதங்களாயினமும்
இருத்திய சுருபங்களனைத்தும்
எனக்கினியாகா; உனக்கியான்அடிமை;
எந்தையே யேசுநாயகனே! 57

(கு...ரை) பஞ்சலோகம் - ஐந்து உலோகங்கள். அவை: பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம்.

வாயிருந்தாலும் பேசிடாதுமை
வலியகண் ணிருந்தும்நோக்காத
வன்குருடதற்குச் செவியிருந்தாலும்
வார்த்தைகேட் டறிந்துகொள்ளாது
காயமோடிருகை உண்டெனுந்தொடாது
காலிருக் கினுநடவாது
கடியமூக்கிருந்து முகர்ந்திடாததனின்
கண்டமும் ஓசைகாட்டாது
தீயினிற்போட்டால் எரிந்துபோம்வைது
திட்டியும் பொறுமையாயிருக்கும்
செத்ததோர்பிணம்போல் வைத்திடங்கிடக்கும்
திருடன்வந் தெடுக்கினுமெடுப்பான்
நீயெனைவிடுவி என்றறிவழிந்து
நீசவச் சிலைகளைப் பணியேன்
நின்னையேபணிவேன் என்னையாண்டருள்வாய்
நித்தனே யேசுநாயகனே. 58

(கு...ரை) வைத்த + இடம் = வைத்திடம்; நிலைமொழியீற்று அகரம் தொக்கது; நீச அச்சிலைகள் - நீசத்தன்மை பொருந்திய அந்தச் சிலைகளை; உருவ வழிபாட்டின் வெறுப்பு இங்கு காட்டப்பட்டுள்ளது. திருமறைப் பிரமாணக் கருத்துக்கள் பொதிந்துகிடப்பதை நோக்குக.

ஆதிநாயகனே சோதிநாயகனே
அனந்தபே ரின்பநாயகனே
அரியநாயகனே பெரியநாயகனே
அர்ச்சய தேவநாயகனே
ஓதிநாயகனே நீதிநாயகனே
ஒப்பிலாப் பரமநாயகனே
உரிமைநாயகனே அருமைநாயகனே
உன்னத ஞானநாயகனே
போதநாயகனே நாதநாயகனே
புண்ணிய சொருபநாயகனே
பொறுமைநாயகனே சருவநாயகனே
போற்றருங் கிருபைநாயகனே
வேதநாயகனே வேதநாயகன்பா
விளம்புசங் கீதநாயகனே
மிக்கநாயகனே முக்யநாயகனே
மேசியா யேசுநாயகனே. 59

செப வண்ணம்

தேடும்பணியே திரவியமே
செல்வப்பெருக்கே திருவுளமே
சீனாமலையின் கற்பனையே
செழிக்கும்பரம கானாவே
சிங்காரப்பூங் காவனமே
செங்கோன்முடியே சீர்பதியே
தேவபரனின் றிருமகனே
தேவாலயமே தினகரனே
நாடும்பரம ராச்சியமே
ஞானநதியே நவநிதியே
நல்லோர்க்கருளே நற்பலனே
நன்மைக்குறவே நாயகமே
நவசேனைகளின் இராசாவே
நரகக்கடியைக் கடிந்தோனே
நாவிலடங்கா மிகுபுகழே
நாயேனுனது மகத்துவத்தைப்
பாடும்படியே கிருபைசெய்வாய்
பாவியெனக்குன் உதவியின்றிப்
பார்மீதோரா தரவுமில்லைப்
பைசாசுலகும் மாங்கிஷமும்
பகையென்றுனக்குத் தெரியாதோ?

பந்துக்களுந்தா னுனையடைந்த
படியாலுறவற் றதுமறிவாய்;
பாழிவ்வினைக்கென் செய்வேனுன்.
வாடும்படியென் மனதிதனை
வருந்திவருந்தி நினைத்துருகி
மயங்கிக்கண்ணீர் தனையுதிர்த்து
மருகிமருகிப் புலம்புவனே
வஞ்சக்கலியைத் தூரத்தியுன்றன்
மறைவிலடிமை தனைக்காத்து
மகிமைப்படுத்தி அருள்புரிவாய்
மன்னேன்தவிது குலக்கோவே. 60

(கு...ரை) நரகக்கடி - நரக துன்பம்; பாழ் இவ்வினைக்கு - பாழாய்ப் போன இந்தச் செயலுக்கு; கலி - துன்பம்; மறைவுஇல் அடிமை - முழு அடிமை. என் மனது வாடும்படி இதனை நினைத்து உருகி; எனக்கூட்டுக.

காலைச் செபம்

எந்தன்பரம தாதாவே
என்னைப்போன ராத்திரியில்
எழுஞ்சேதமும்விக் கினமுமின்றி
இரங்கிக்காத்த நின்கிருபைக்
கேசுக்கிறிஸ்தி ரட்சகரென்
இறைவர்திருநா மத்திலுமை
இஸ்தோத்திரஞ்செய் கின்றேன்யான்
இற்றைப்பகலா திந்தமெனைச்
சிந்தைச்சகல பவங்களுக்குந்
தீங்குகளுக்குந் தற்காத்துச்
சிறியனினைவு சொன்னடக்கை
தேவரீருக் கேற்கவுமென்
செயலையெனதூ ழியத்தைமுற்றுந்
திடவுண்மையினாற் சுறுசுறுப்பாய்ச்
செய்துமுடிக்க வுங்கிருபை
செய்யுமெனதாத் துமஞ்சடலம்
சொந்தமெனுமற் றுளதனைத்துந்
துய்யகிறிஸ்து வச்சபையுந்
தொடர்ந்தேயது வர்த்திப்பதற்காஞ்
சுவிசேடத்தின் கிரியையையுஞ்
சூட்டியுனது திருக்கரத்திற்
றொகுத்தொப்புவிக்கின் றேன்பணிந்து
சூதாயகமும் புறமுமெனைச்
சூழ்ந்தபலசத் துருக்களுட

தந்திரமிகுஞ்சோ தனையதனில்
தமியேனகப்பட் டழியாமல்
தாங்கியுனதட் சயமான
சம்மனசைக்கொண் டெனைக்காத்துச்
சதாநித்தியசீ வனின்பாதை
தன்னிலுமதா வியைக்கொடெனைத்
தயவாய்நடத்தி அருள்புரியுஞ்
சத்தியவேதத் தொருமுதலே. 61

(நு...ரை) அட்சயமான - அழிவில்லாத; ஆவிகொடு - ஆவியால்; திடஉண்மையினல் - உறுதியாகவும் உண்மையாகவும்; இற்றைப்பகல் ஆதிந்தம் - இன்று பகல் முழுவதும்.

திருச்சபை யூஞ்சல்

பொன்னுலகும் பூவுலகும் படைத்தானந்தப்
பூரணமாய் நின்றபரா பரனைப்போற்றி
உன்னதனூர் ஆதாமின் குலத்தைமீட்க
ஒருசுதனை யனுப்புவித்த உண்மையாலே
இந்நிலத்துக் கொளியுதித்த தேழைமாக்கள்
எல்லவருங் கிருபைபெற்றூர் என்றேதேர்ந்து
பன்னுகலைக் கிறிஸ்தவர்நீர் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 62

ஆதிசுதன் மானிடவ தாரமானூர்
அம்புவியைத் தமக்குறவ தாக்கிக்கொண்டார்
வாதையுறப் பாடுபட்டார் சிலுவைமீது
மரித்தடக்கப் பட்டுயிர்த்தார், வான்போய்நின்றூர்
நீதியெல்லாம் நிறைவேற்றி முடித்தாரொன்றும்
நிலுவையில்லை வாழ்வனைத்துஞ் சம்பாதித்தார்
பாதகர்க்குப் பயமினியேன் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 63

(நு...ரை) நிலுவை - பாக்கி, குறைவு.

வானுலகைத் தூதருக்காய்ப் படைத்தநாதன்
மண்ணுலகை மானிடர்க்காய் வகுத்தாரேனும்
ஈனமுறும் பாவிகளின் அகந்தைக்காக
எரிநரகத் தையும்படைத்தங் கழுத்தாதெம்மைத்
தானவரோ டேயிருத்திச் சரியதாக்கித்
தாரணியும் வானுலகுஞ் சமனுய்ச்செய்யப்
பானுவெனக் கிறிஸ்துதித்தார் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 64

(நு...ரை) அழுத்தாது - வருந்தவிடாமல்; பானு - சூரியன்.

காடவர்க்கு நாடெமக்குத் தலமாயிற்று
கனத்தமாளிகைநமக்கு அவர்க்கோகொட்டில்
பூடணங்கள் புட்பமெத்தை பொன்னுமெத்தை
புண்ணியர்க்கோ கல்லுமெத்தை புல்லுமெத்தை
மாடுயர்ந்த வலமையுண்டு தலைமையுண்டு
மன்னவர்க்கோ கந்தையுண்டு நிந்தையுண்டு
பாடுமுண்டு பலனமக்குண் டாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 65

(கு...ரை) பூடணங்கள் புட்பமெத்தை பொன்னு - மெத்தை - பாவிகளாகிய மானிடர் நமக்கு ஆபரணங்களும் பூமெத்தையும் பொன் மெத்தையும் உண்டு - எம் பெருமானுக்கோ தலைக்குக் கல்லணை; படுக்கப் புல்லணை.

சீரான வாழ்வதெல்லாம் எங்கட்குண்டு
சேனையுண்டு தானையுண்டு செங்கோலுண்டு
நேரான பந்துக்கள் கூட்டமுண்டு
நித்தியகல் யாணசோ பனங்களுண்டு
ஊராளு மாதிபத்தியந் தானுமுண்டு
உத்தமர்க்கோ என்னவுண்டிங் கொன்றுமில்லை
பாரீரோ சிநேகமிதென் றாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 66

வச்சிரத்தி னாலிழைத்த கால்கணாட்டி
மரகதத்தி னாலரிய விட்டம்போட்டுத்
தர்ச்சீசின் ரத்தினத்தாற் பலகைசேர்த்துத்
தங்கச்சங் கிலிகள்தக தகெனப்பூட்டி
உச்சிதமுத் தாபலத்தாற் கொடுங்கைகூட்டி
உன்னதபத் திராசனத்துக் கொப்பதாக்கிப்
பட்சமுடன் கிறிஸ்துவைக்கொண் டாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 67

மட்டதில்லா மகத்துவப்புத் தெருசலேமின்
வாழ்வனந்தம் வாழ்வனந்தம் வளமோகோடி
கட்டுயர்ந்த சுத்தக்கண் ணாடித்தங்கம்
கனத்தபளிங் கொளிவஸ்பிக் கற்போற்காந்தி
திட்டமதின் மதிற்பனிரண் டஸ்திவாரந்
திவ்வியமாம் விலையுயர்ந்த ரத்தினங்கள்
பட்டணத்தின் மகிழ்ச்சிபெற ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 68

உண்டான நன்மையெல்லாம் நமக்குண்டாச்சு
உம்பரமும் அம்பரமும் நமக்கென்றாச்சு
அண்டசரா சரங்களெல்லாம் நமக்கே சொந்தம்
அனுதிசுதன் றானும்நமக் கருளப்பட்டார்
கண்டகண்ட சிஷ்டியெல்லாம் நமக்கல்லாமற்
கடவுளுக்குத் தேவையென்ன கவைகளென்ன
பண்டோரே நன்றியறிந் தாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 69

(கு...ரை) பண்டோரே - பழங்குடித் தமிழ் மக்களே.

யேசுவினால் மேன்மைபெற்றோங் கிருபைபெற்றோம்
இன்பமுறப் பரிசுத்தா வியையும்பெற்றோம்
யேசுவினால் புத்ரசுவி காரம் பெற்றோம்
எத்தனையோ பாக்கியங்கள் எல்லாம் பெற்றோம்
யேசுவினால் நித்தியசீ வனையும் பெற்றோம்
எண்ணூழி காலமும் வாழ்ந் திருக்கப்பெற்றோம்
பாசம்வைத்துக் கிறிஸ்தவர்நீர் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 70

சத்தியத்தின் மேலான பாதைகண்டோம்
சாங்கமா யுலகத்தைத் தள்ளிப்போட்டோம்
பித்தர்களின் சாத்திரத்தைக் குலைக்கச்செய்தோம்
பிசாசினு டம்பரங்கள் அனைத்தும்விட்டோம்
மெத்தமெத்தக் கிருபைபெற்றோந் தேறிப்போனோம்
வேதநா யகன்பாடல் விரும்பிக்கொண்டோம்
பக்தியுள்ளோர்க் கென்னகுறை? ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல். 71

(கு...ரை) சாங்கமாய் - ஒழுங்காக, முறைப்படி.

V. பெத்லகேம் குறவஞ்சி

(வேதநாயக சாஸ்திரியார்)

பாயிரம்

குறிப்பு. செய்யுள் தொகுப்பின் முடிவில், குறிப்புரை காண்க.

பொன்னிலங்கு நித்திய சீவன்முடியை நார்சிரத்திற்
பொலிவாய்ச் சூட்ட
மின்னிலங்கு பெத்தலேம் பதியிலுற்ற மேசியா
வேந்தன் மீது
மன்னிலங்கு சுவிசேடக் குறவஞ்சி நாடகத்தை
மகிழ்ந்துகூற
முன்னிலங்கு திரித்துவமா முழுமுதலை யொருபொருளை
மொழிகுவேனே. 72

பூவணிந்த ஜெபமாலை புனைந்த பெத்தலேகிரு
பொற்றாள் போற்றி
நாவணிந்த மறைவேதக் குறவஞ்சி நாடகத்தை
நயந்து கூறப்
பாவணிந்த திரியேக பராபரனு மனுவுருவாய்ப்
படி மீதுற்றாக்
காவணிந்த வினைதீர்த்தானும் பரிசுத்தாவியு நல்
காவல்தானே. 73

கடவுள் வாழ்த்து

திருப்புகழ்ச் சந்தம்

திருமறைச் சுவி சேடனையேடனைத்
திடவரப் பிரசாதனை நீதனைத்
திவிய பெத்தலை நாயனை யாயனைச்—செகநாயகனைத்
தரும சற்குரு வானனை ஞானனைச்
சருவ வஸ்துபகாரனை வீரனைத்
தவிதிறைக் குலராசனை நேசனைச்—சருவேசுரனைக்
குருமகத்துவ வாகனை யேகனைக்
குவலயப்பரி பாலனை வாலனை
குறமதற்கருள் கூர்வனை நேர்வனைக்—குருசேறினனைப்

பெருமரக்கனி யால்விளை நால்வினைப்
பிழையறத் துதியே செயமாசயப்
பெலனளித்தருண் மேவியை யாவியைப்—பெறுமா
றருள் 74

ஆதிப்பொருள் சோதிக்கருணையர்
ஆசற்றவு லாசத்தனர்முனம்
ஆதத்துட நீதற்றவர் பல—வர்ச்சயர்க்கிடரே
பேதித்தியல் சாதித்தவரருள்
பேசுத்தம ரேசுச்சுதனவர்
பேரிற்கன சீரிற்பரவிய—பெத்தலேக்குறமே
சோதித்திசை மாதிட்ட மதிவை
சூடத்தகு—நாடத்தகுமிது
தோணித்தமி ழாணிக்குறைசிலே—சொற்றரச் சமைவாம்
நீதிக்கலே யோதிற்பெறு பய
னேர்தப்பினுமோர் தப்பிலேயென
நேசக்கவிராசத் திறமையர்—நிச்சயத்துணவார் 75

காரணவஸ் தாரணனெனவுங்
காயவுடற் றாயவனெனவுங்
காசினிபற் றேசயனெனவுங்—கதியின் பொற்புருவே
கூரணித்தற் பூரணனெனவுங்
கோலனருட் பாலனேமிகவுங்
கூவிய சொற்பாவின முயருங்—குறவஞ்சித் தமிழே
தாரணியிற் றோரணையொடு பண்
தாவியநற் காவியமுணருஞ்
சாதகமெய்ப் போதகர் பலருந்—தயைகொண்டொப்பு
வரே
சீரணிமுப் பேரணிபரமன்
சேவடியைப் பாவடிபடவென்
சீவன்வரைக் காவலிலணைவன்—திருமந்தைச்
சபையே. 76

தோடயம்

தாழிசை

ஒருவன் அன்றிருபுன் மறியிலேறியவ னுதய மூன்றினி
லெழுந்தவன்
ஊழிநாலுவினை மாறவோங்கியைத் தப்பமீந்தறு தினத்திலே
அருளியாவினையு மேழையோய்வுபக லாக்கி விர்த்தசே
தனமதெட்

டாந்தினத்திலேற் றென்பதன் புருவசடர்குட்டம தகற்றியே
மருவு கன்னியர்கள் பத்தில் ஞானமகள் மருணனுகி யூதாசலால்
மறுவில் பதினொருவர் பணியவாசல் பனிரண்டதான
எருசலையில் வாழ்
பெருமைகொண்ட பரனருளு மைந்தனுயர் பெத்தலேக
ருடதாசனுன் 77
பேசுமென்தமிழைவேதபாரகர்பிரதான ஞானியர்தளார்களே

சீருலவு கானுனு தேசத்தில் மேன்மை பெறு
பேருலவு பெத்தலே கப்பெருமான்றன் மீது
தாருலவு குறவஞ்சித் தமிழ்நாடகம் பாடப்
பாருலவு பரன்சுதன் பொற்பாத மிரண்டுந்துணையே—
செயசெயா 78

மங்களம்

துங்கவா னவர்கள் ஆடிதுத்திய கீர்த்தனங்கள் பாடி
நங்கைய ரனந்தங்கோடி நவவெரு சலையினீடி
சங்கையி னரசை நாடிச் சரணபங் கயத்தைச்சூடி
மங்களமெனக் கொண்டாடி வாழ்த்தினார் போற்றினரே 79

சீரேசுநா தனுக்குச் செயமங்களம், ஆதி
திரியேகநா தனுக்குச் சுபமங்களம்
பாரேறு நீதனுக்குப் பரம பொற்பா தனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு—சீரேசு

ஆதிசருவேசனுக்கு வாசனுக்கு மங்களம்
அகிலப்பிரகாசனுக்கு நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு நித்திய சங்கீதனுக்கு
ஓதிய வாசாலனுக்கு வுயர்மனு வேலனுக்கு—சீரேசு 80

தோத்திரத் தரு

விருத்தம்

அணிகொண்ட வானத்தானை யனைத்தையும் அமைத்
தாண்டானை
தணிகொண்ட மனத்தினனை சமஸ்த சாஸ்திர வித்தானை
துணிகொண்ட வொளியினனை தூய சுத்தாங்கத்தானை
மணிகொண்டச் சயனைத்தானை வாழ்த்துவோம் போற்று
வோமே 81

மணிகொண்ட வச்சயனே நமோ நமோ—அம்
மணிகொண்ட வச்சயனே நமோ நமோ
துணிகண்டகத்து வந்தாய் நமோ நமோ—ஆயர்
துணிகண்டகத்து வந்தாய் நமோ நமோ

பணியஞ்சகங் கடந்தாய் நமோ நமோ—தேவ
பணியஞ்சகங் கடந்தாய் நமோ நமோ
அணிமங்கலம் புனைந்தாய் நமோ நமோ—தார்
அணிமங்கலம் புனைந்தாய் நமோ நமோ. 82

பவனிச் சிந்து

விருத்தம்

துங்கயோவா னருளப்ப னெனுமிஸ்நா னகனுரைத்த
சொல்லினேர்மை
அங்கவரெ லாமுணர்ந்து தங்களிருதய மொருமை
யாக்கிச்செல்வம்
பொங்குபுக ழெருசலேமா நகரதனை யலங்காரம்
புரியச்சீடர்
சங்கமுடன் கிறிஸ்திறைவன் வேசரிவா கனப்பவனி
சார்ந்திட்டானே 83

பவனிவந்தனரே—கேரூபின்
பவனி வந்தனரே
அவனிவாழ்த்திய பெத்லகேம் வளர்
புவனமானியர் கவன ஞானியர்
தவனு மாயனு பவனுமானவர்
நவகேரூ பின்மே லுவகையாகவே—பவனி

போதநாயகன் வந்தனன் ஐந்து
பூதநாயகன் வந்தனன்
தூதநாயகன் வந்தனன் எம
தாதிநாயகன் வந்தனன்
தூதர்நாயகன் வந்தனன்றேவ
சோதிநாயகன் வந்தனன்
வேதநாயகன் வந்தனனென
வீதமாய் முரசொலிக்கவே—பவனி 84

கட்டியம்

அதிகபிர வையின்மிகுகிர் பையினுரைகள் புரியவட
ரமலர் தொழு சரண மலரா!
அடியவர்கள் மனதினுறை யிடர்கள்துயர் பல அகல
வருளுதவு கருணை நிதியே!
முதியமறை யதுமுழுது மொருவனென மொழிநவில
முதன்மைபெறு மமுத வடிவே!
முருகுலவு செபமுறையி னெறியொழுகு பவரிதய
முளரிதனி னிறையு முதலே! 85

மின்னார் புலம்பல்

பாவோது புகழுடையான் பெத்தலேகேம் நாதனொரு
பாமன் மைந்தன்
தேவாதி வேசரிவா கனப்பவனி யெழுந்துவந்த
திறமை காண்கக்
காவாதி மக்கள்ளனும் சீயோனின் திருக்கூட்டக்
கன்னிமார்கள்
மாவீதி நிறையளரு சலேயிலெங்கும் மிகநெருங்கி
வருகின்றாரே. 86

திருநாளுக் கெருசலேயிற் பெருநாளுக் கெழுமனந்தந்
திகழ்வானின் மீன்கள்போல் வரும்ஞானமடவார்
கருணைபுரி நாதனிவ னாதமோ? ஆதமெனிற்
கனிதின் றனிவனோ குருசினின் றானென்பார்
தருமனா பேலென்பா ரவனுதிரம் வானோக்கிச்
சத்தமிட்ட திவன்கறைரட் சித்து விட்டதென்பார்:
இருடியனே னோக்கென்பா ரவன்வானி லிருந்தாப்போல்
எடுபட்டா னிவனரர்க்குக் கொடுபட்டா னென்பார். 87

தேவ மோகினி தோற்றம்

அறுபத்துநாலடிச் சிந்து

பல்லவி

அதிக சுபபரம சபையினெருசலேமின் வந்தாள்—சம்பிரமமாக
அதிக சுபபரம சபையினெருசலேமின் வந்தாள்

அனுபல்லவி

அதிக சுபபரம சபையின்மின் வந்தாள்
அறிவினு யருமறை முறைமனது வந்தாள்
துதிமனு வேலுட காதல் மிகுந்தாள்
சுவிசேட சபைமுன மேவியெழுந்தாள்—அதிக

சரணம்

மாதுசெனனங் காணுன்றேச—மற்றெருசலே
மீதுசீயோனின் மலேவாசம்—வேந்தனுந்த
வீதுமகிழ்ந்து புகழ்நேசம்—விளங்குசீட
ரோதுசுவிசேடப் பிரகாச—மொழிவனந்த
சந்திர சீதச ரோருக மேவியபாதஞ்—சருவேசுரன்
மைந்தனுவந்து பிறந்து சிறந்தருணீதம்—வளர்
சாலமோன்

சிந்தை மகிழ்ந்து விளம்பமுழங்கு சங்கீதந்—தீர்க்க
ரெல்லாரும்
மூந்த வரைந்த கடந்த சுதந்தரவேத—முதல்வனுவி
வித்தக மகத்துவ வரத்தருள் பெருத்தகருணை வாரி—
விண்மேவு தூதர்
சித்திர விதத்தினில் மிகுத்தெழி லுதித்துயர் சிங்காரி—
சிறப்பின் மிக்க
பத்திநிலை யுத்தமியெனத்தவ மிகுத்தருளுதாரி—
பராபனை
நித்திய மனத்தினில் நினைத்துருகி வைத்தவனுசாரி—
நிச்சய சுப
மங்களமாக மகிழ்ந்துறவாடி
சங்கீத ஞான பதம்பல பாடி
எங்கும் விளங்கு மனங்களைத் தேடித்
துங்கமி கும்பர மன் சபைநாடி—அதிக 88

தேவமோகினி பிரஸ்தாபம்

விருத்தம்

எத்திசை புகழுங்கீர்த்தி யேசுநா யகனுக்கேற்ற
நித்திய கன்னி யானநேயசீ யோனின்மாது
சத்திய சபைமுன்பாகத் தனதுமேன் மைகளையெல்லாம்
பத்தியுஞ் செபத்தியானப் பண்புடன் பகர்கின்றாளே.

ஒன்றுமி லாதகாலம் நன்றாய்ப் பொருளனைத்தும்
உண்டுசெய்தோன் மேற்காதல் கொண்டவளும் யான்
அன்று தவிதிராசன் சென்றுவாழ் எருசலேம்
அன்னையர்சீ யோனருளுங் கன்னிகையும் நான்;
என்றுமழி யாவஸ்தாய் நின்ற பரம கிறிஸ்து
ஏசுநாத ருக்குகந்த மாசிலாதாள் யான்,
மன்றல் கமழுங்கற்புக் குன்று மரியதாயார்
மாகனிக் கிசைந்த தேவ மோகினிநானே. 89

வெண்ணிலாத் தரு

விருத்தம்

பூமிக்குச் சந்திரனென்று பொன்னுக்கு நான்கு சந்திரன்
சேமமாஞ் சனிக்கோவெட்டு திங்களுக் காறு சந்திரன்
நாமமா யூரானிஸ்க்கு நாலுநெப் தூனுக்கொன்று
ஆமுபக் கிரகம் நாலாறுக்கினன் கடவுள் தானே. 90

சின்ன வெளிச்ச மல்லோ வெண்ணிலாவே! நாற்
றினத்திலுண்டாளுயல்லோ வெண்ணிலாவே!
தன்னொளி யுனக்கில்லாதால் வெண்ணிலாவே! ஆதித்
தன்னொளியைக் கொண்டுயர்ந்தாய் வெண்ணிலாவே!
என்னமதி கொண்டெழுந்தாய் வெண்ணிலாவே! சாலே
மெருசலேசம் வீதியிலே வெண்ணிலாவே!
கன்னியர்க்குள் நானொரு பெண் வெண்ணிலாவே! எனைக்
காய்ந்து கொல்லவேண்டாமே வெண்ணிலாவே.

திங்களென்ற பேர் கொண்டதேன் வெண்ணிலாவே!
செவ்வாய்க்குப் பின்பிறந்தும் வெண்ணிலாவே நீ
அங்கொருநாட் சொப்பனத்தில் வெண்ணிலாவே! யோசேப்
படிவணங்கிக் கொண்டாயல்லோ வெண்ணிலாவே
துங்கயோசுவன் சண்டையில் வெண்ணிலாவே! யுனைச்
சூரியன்பின் னிற்கச்செய்தான் வெண்ணிலாவே!
மங்களச் சீயோன் குமாரி வெண்ணிலாவே! யுனை
வைத்தவிடந் தெரியாதோ வெண்ணிலாவே!

சந்திரனென்று துள்ளாதே வெண்ணிலாவே! என்
தாளினல் மிதிக்கச் செய்வேன் வெண்ணிலாவே!
இந்தவுல கமயக்கை வெண்ணிலாவே நீ
என்று விட்டொழியப்போருய் வெண்ணிலாவே!
நந்திய களங்க மொன்று வெண்ணிலாவே! உன்
நடுவி லிருக்குதல்லோ? வெண்ணிலாவே!
சிந்தை கருவங் கொண்டதால் வெண்ணிலாவே நீ
தேய்ந்து குறைந்து போளுய் வெண்ணிலாவே.

நாக்கு சுட்டதுபோற் சுடும் வெண்ணிலாவே! நீ
நாட்குறிப்புக் காளுயல்லோ வெண்ணிலாவே!
தீக்குணத்தி ளுல்வளர்ந்து வெண்ணிலாவே! மிகத்
தேயபிறை யென்றே குறைந்தாய் வெண்ணிலாவே
மாக்களின் நோக்கதித்து வெண்ணிலாவே! கடல்
வற்றமேற்றத் துக்கேதாளுய் வெண்ணிலாவே!
மேக்குறும் வளர்பிறையில் வெண்ணிலாவே! வெட்டும்
வேய்களையு ளுத்தழித்தாய் வெண்ணிலாவே! 91

உபத்திரமென்ற தென்றல் தரு

விருத்தம்

மட்டுமிகு முபத்திரமே தென்றலென்ற படிகிறிஸ்து
வரு முன்னேயுந்
திட்டமுடன் வந்தபினு மிதுவரையு மினிமேலுந்
தீர்வை நாளின்

மட்டுமுள்ள தெரிசிகளப் போஸ்தலரை விசுவாச
மார்க்கத் தாரைக்
கெட்டழியச் செய்துமஞ் சோம் செயங் கொள்வோ மேசு
விறைற்
கெலிப்போம் நாமே. 92

தீர்க்க தெரிசிகளைத் துன்பஞ் செய்தனை தென்றலே! நீ
தீயினில் மூவரைப் போட்டுக் கொழுத்தினை தென்றலே!
பார்க்குள் தனியேலைச் சிங்கக் கெபியினில் தென்றலே! நீ
பட்டுருளச் செய்துங் கெட்டழிந்தானோ சொல், தென்றலே!
மார்க்கெ ரேமியாவைக் கேணியிற்றள்ளினை தென்றலே! அவன்
மாய்ந்து விடாது தற்காக்கப்பட்டானல்லோ தென்றலே!
போர்க்குளகப்பட்ட யோச பாத்தன்றைக்குத்
தென்றலே! அவன்
பொன்றிவிழாது தற்காக்கப்பட்டானல்லோ தென்றலே! 93

கேணியில் யோசேப்பைப் போட்டது நீயல்லோ தென்றலே!
அவன்
கெட்டழியா தெகிப்பத்தினிற் சென்றதென்? தென்றலே!
ஆணவங் கொண்டிசரேலரின் பாலரைத் தென்றலே! நீ
ஆற்றுத் தண்ணீரில மிழ்த்திக் கொன்றாயல்லோ? தென்றலே!
தோணும்படி பரவோன் செய்த பாதகம் தென்றலே! மிகச்
சுற்றியவனைக் கடலிற் றணித்ததே தென்றலே!
வீணினில் மாய்ந்தவர் கோடியிற் கோடியே தென்றலே! நீ
மிக்கஅப் போஸ்தலமாரையும் கொன்றையே தென்றலே! 94

மலைவளம்

விருத்தம்

திரு ஞானப் பெத்தலே மதிபதியின் கிருபைமிகுந்
திறங் கொண்டோங்கி
வரும் ஞானக் குறவஞ்சி தன்னை மகிழ்ந் தெருசலே
மகளு நோக்கித்
தரு ஞான மொடு பேசிச் சுவிசேடச் சபையிலுற்ற
தையலேயுன்
பெரும் ஞான மலையெந்த மலை? அந்த மலைவளமை
பேசுவாயே. 95

குறத்தரு

தின தேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனு

வானவர்கள் கூடி வந்து தோத்திரங்கள் படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் முல்லை நிலத் தலைவர் வந்து தொழுவார்
நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்
தானதர்ம மேழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்
சண்டாளப் பாவமெல்லா மண்டாது தடுப்பார்
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்
ஏகன்மனு வானவெல்லை யெங்கள் மலையம்மே—தின 96

ஆதிமலை யெங்களுக்கோ ரேதன் மலையம்மே
ஆண்டவனு ரெங்களைத்தா னமைத்தமலை யம்மே
நீதியென்ற நால்வரமுங் கொடுத்த மலையம்மே
நித்தியமும் சாகாம னின்ற மலையம்மே
சாதனையாய்ப் பேய் பிறகு கெடுத்த மலையம்மே
தற்பரனு ரெம்மையங்கே சபித்த மலையம்மே
பேதகமாய் நாங்களதை விட்டதற் பின்னம்மே
பெத்தலேக மெங்களுக்குப் பெரிய மலையம்மே—தின 97

ஆரியனு ராத்துமலை நோவை மலையம்மே
யற்புதமாய்ப் பேழை வந்து நின்ற மலையம்மே
மோரியவின் மலைதனிலே யாபிரகாமம்மே
முக்கியமா மீசாக்கைப் பலிகொடுத்தானம்மே
மேரிபாவை மோசேசு பிரம்பு கொண்டே யடிக்க
மெத்த வெள்ள மான விதஞ் சித்திரங் காணம்மே
நேரிலுயர் கற்பனையின் மலையது தான் சீனாய்
நேர்மை பெத்த லேகமெங்கள் நீதி மலையம்மே—தின 98

நாட்டமுள்ள ஓரேப்பு மலைக் குறவனம்மே
ஞாயப் பிரமாண மதின்றலைக் குறவனம்மே
ஆட்டினத்தை மேய்த்ததிக்கு வாய்க் குறவனம்மே
அக்கினியிற் காட்சி கண்ட மெய்க் குறவனம்மே
தாஷ்டிகமாய்ப் பார்வோனின் சேனை யெல்லா மாளச்
சமுத்திரத்தைப் பிரித்த மோசே முனிக் குறவனம்மே
பாட்டனவன் காணிமலை சீனு மலையம்மே
பரம பெத்த லேகமெங்கள் பழைய மலையம்மே—தின. 99

குறிவளம்

விருத்தம்

நாற்றிசை புகழும் பெத்லேம் நாட்டிலுன் வித்தை யெல்லாம்
ஏற்றியே மகிழ்ந்து சொன்ன எழிற் குறவஞ்சி! கேளாய்;
மாற்றமில் லாதகன்னி மார்களுக்கியம்பு முந்தன் [100
தோற்றும்நற் குறியின்மார்க்கந் துணிவுடன் சொல்லு வாயே.

சிந்து

1 விச்சித்திரமென் குறி யம்மே, பன்னிரு
நட்சத்திரம் பூண்டந ராதிபப் பெண்ணே.

அச்சய தேசமதான—யோர்தா
ஞேேடுங் கானானு தேசம தெங்கும்
நிச்சய மாய்க்குறி சொல்லி—நான் பெற்ற
நேரான விருதுகள் பார்ாய் நீயம்மே—(விச்)

2 முன்னாளி லெகிப் பத்துத் தேயந்—தன்னை
முக்கியமாயாண்ட பார்வோனு வென்ற
மன்னே னிடத்தினிற் சென்று—அவன்
மந்திரி யாகவி ருந்து கொண்டன்று
தென்னாரும் யாக்கோபுத் தீர்க்க—னருளிய
தேசிகனாகிய யோசேப்புச் சிங்கன்
சொன்ன குறிய தினாலே—பெற்ற
சுதந்திர மோதிர மிந்தாபா ரம்மே—(விச்)

3 அன்பாக நேபுகாத் நேச—ரென்ற
அண்ணலு லகினை யாண்டருளும் நாளில்
வன்பாக சாஸ்திரி மார்கள்—சொன்ன
மாராட்டக் குறிமெத்தப் போராட்ட மென்று
தென்பாக அவர்களை வெட்ட—அந்தச்
செய்தியைக் கேட்டெங்கள் தானியேல் தீர்க்கன்
நண்பாக மெய்க்குறி சொல்லிப்—பெற்ற
ரத்தின சரப்பளி மெத்தவுண்டம்மே—(விச்)

4 எலியாசுத் தீர்க்கனி னாளில்—உல
கெங்கேயுங் கடும் பஞ்ச முண்டான போது
தொலையாத கவலையின்லே—காட்டிற்
சுப்பியொ டிக்கவந்த கைம்பெண்டி ரண்டை
மலையாதே யெண்ணெயு மாவு—மினி
வற்றாது என்றவ னுத்தாரஞ் சொல்லப்
பலகாரந் தோசைகள் சுட்டு—அவள்
படைத்துப் படைத்துக் குறி கேட்கலையோ அம்மே—
(விச்)

5 நூற்றி யிருபதாண்டாக—எங்கள்
நோவாவுத் தீர்க்கனும் வாகாகச் சொன்ன
தேற்றுத லாங்குறி கேட்டுத்—தவஞ்
செய்யாத பாவிகள் தண்ணீரில் மாள

6 மாற்ற மில்லாதவன் விட்ட—கன
மாரியி லேகமா வீரியமாக
யேற்றத்திலே தப்பிப் போன—அந்த
எட்டுப்பே ரெங்களுக்குக் கிட்டத்தானம்மே—(விச்)

101

கைக்குறி சொல்லுந் தரு

தினத்தேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு
தினத்தேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு

1 அள்ளியள்ளித் தருமமெல்லாஞ் செய்யுமிந்தக்கையே
அருளான கிருபை நதி பெருகு மிந்தக்கையே
கள்ளமற்று உபகாரம் பெய்யு மிந்தக்கையே
கற்றவர்க்குப் பணிவிடைகள் செய்யு மிந்தக்கையே
தெள்ளு தமிழ்ப் பாவலர்க்குப் பரிசளிக்குங் கையே
சித்திரமாய்ப் புஸ்தகங்கள் வைத்திருக்குங்கையே
வெள்ளை நிலைத் துகிலதனைக் கொய்துடுக்குங் கையே
மேலான நன்மையெல்லாம் விளையுமிந்தக்கையே—(தின)

2 இல்லார்க்குக் கேட்டதெல்லாம் கொடுக்கு மிந்தக்கையே
ஏழைகளை யாதரித்துத் தாங்கு மிந்தக்கையே
பொல்லாப்பில் விழுந்தவரைத் தூக்கி விடுங்கையே
பொற்பரம மோட்சவழி காட்டுமிந்தக் கையே
நல்லாரைக் கண்டவுடன் தோத்திரஞ் செய்கையே
நட்டணையாந் துட்டர்களை மட்டில் வைக்குங்கையே
சல்லாபமாய் நடந்து வீசி வருங்கையே
சகல சம்பத்தும் பெருகித் தழைக்கு மிந்தக்கையே
—(தின) 102

கண்ணி குத்தும் தரு

தானுதந்தனத் தனத்தனுதன தானுதந்தனத் தனத்தனு
தானுதந்தனத் தனத்தனுதன தானுதந்தனத் தனத்தனு

1 தேவசுதனை வேண்டடா மிகும்
தேவபத்தியில் மூண்டடா
சீவ விளக்கைத் தூண்டடா மாயச்
செகத்தைக் கடந்து தாண்டடா—தானு

2 வானவர் வரங்கள் வாங்கடா; சால்மோன்
மண்ட பத்திலே தூங்கடா;
ஈன மனத்தை நீங்கடா; செபத்து
இடைவி டாமலே யோங்கடா—(தானு)

3 மானுவேலைத் தினம் பணியடா; செப
மாலைகொண்டு வந்தங் கணியடா.
ஞானமனத்தினைத் தணியடா; முழு
ஞாலத்தையும் விடத் துணியடா—(தானு)

4 பெத்ல கேம்பதிக் கிறையடா; அவர்
பெருமை யடித்துப் பறையடா
மத்தேயைச் சேராயத் துறையடா அவ்
வழியிற் போவது முறையடா—(தானு)

5 வேதநாயகனைப் போற்றடா அவர்
மேலே பதங்களைச் சாற்றடா
பாதகரைச் சற்று தேற்றடா; கவிப்
பாவல ரையுங் கொண் டாற்றடா—(தானு)

6 திட்ட மதாய்க் கட்டு வலையடா; சுற்றுத்
தேச மெங்குமோடிக் கலையடா
கெட்டவரைத் தேடி யலையடா; தேவ
கிருபையைக்கண்டு நீ நிலையடா—(தானு)

7 பதிவில் கண்ணியை நாட்டடா; ஞானப்
பதங்களைச் சொல்லி மூட்டடா
கதியைக் கை மேலே காட்டடா; மனக்
கவலையை விடுத் தோட்டடா—(தானு)

8 பெத்தலே கேம்பதி நாட்டிலே, யுயர்
பேரின்பத் தின் செப வீட்டிலே,
சத்தியதாய்க் கண்ணி பதியடா; பேயின்
சற்பச்சி ரத்தினை மிதியடா—(தானு)

9 கர்த்தரின் செபத்தை ஓதடா; தூதர்
காளத்தை வாங்கிக் கொண்டூதடா
சத்துரு சோதனை வாதடா, வுடல்
தன்னையும் நம்பப்போ காதடா—(தானு)

10 வண்ணச் சமுத்திரத் தள்ளடா; தேவ
வசனத்தைக் கைக் கொள்ளடா
கண்ணி வைத்து வைத்துத் துள்ளடா; பொல்லாக்
கள்ளக் குருவியைத் தள்ளடா—(தானு)

11 மந்திரம் பத்தையுஞ் சொல்லடா; விசு
வாசமாய் முற்றினும் நில்லடா
தந்திரப் பேயினைக் கொல்லடா; பக்தித்
தாவுகளை பார்த்துச் செல்லடா—(தானு)

சிங்கன் சிங்கி உரையாடல்

கலிப்பா

எண்டிக் கினுமடங்கா வேகர் பெத்தலேகர் வெற்பில்
தண்டாமற் றேடுசிங்கன் றையலைத்தான் கண்டவுடன்
பண்டுகுன்றப் பர்விடுக்கப் பட்டதுக்கென் றெக்களிப்புக்
கொண்டவர்போன் மன்றாடிக் கூத்தாடி நின்றானே. 104

1 இத்தனை காலமா யென்னிடங் கேளாமல்
எங்கே நீ சென்றனை சிங்கி?—மா
பெத்தலேகே நகர் சீயோன் குமாரிக்குப்
பத்திக் குறி சொலச் சிங்கா!

2 உற்ற துணையெனக் காருனைப் போலொன்று
மோதாம லோடினாய் சிங்கி?—நான்
மெத்தப் பரிசுகள் பெற்று வந்தேனெனை
முற்றுங் கவனியே சிங்கா!

3 நோக்கி லதிகமாய் நூதனந் தோற்றுது
கேட்கப்பயமடி சிங்கி?—இங்கே
யார்க்குப் பயமினி சீக்கிரமாக நீ
தீர்க்கமாய்க் கேளடா சிங்கா!

4 காலுக்குக் கீழே கடிக்குஞ் சற்பத்தைக்
கடிந்துதைத் திட்டதேன் சிங்கி?—பாம்
பால விஷத்தை யகற்றின யேசுவி
னற்புதத் தாலடா சிங்கா!

5 ஆலப் பாம்புக்குமேல் கெண்டைக் காலூடே
யணிந்திருப்பதென்ன சிங்கி?—இத்
தாலத்தி லுத்தம வேதத்தின்றேற் பாரஞ்
சாதுக்கணிந் தேண்டா சிங்கா!

6 முற்றுங் கறுத்து முழங்கால் தடித்தது
மோசமதென்னடி சிங்கி?—நான்
சற்றும் விடாமற் செபித்துக் கிறிஸ்துவைச்
சாற்றின தாலடா சிங்கா!

7 மேலேயிடுப்பி லிறுக்கி நெருக்கிய
வித்தையி தென்னடி சிங்கி?—நித்திய
சாலோக பெத்தலே நாதர் சமைப்பித்த
சத்தியக் கச்சையே சிங்கா!

8 உந்திக்கு மேலே யொடுக்கி யடுக்கிய
உச்சித மென்னடி சிங்கி?—இங்கே
வந்தபெத் தலேகர் தந்த நீதியின் மார்
வஸ்திரந் தானடா சிங்கா!

9 மாருக்கு நேரே கழுத்திற் கிடக்கிற
ஆரம தென்னடி சிங்கி?—வெல்லை
யூருக்கு நாயகர் பேருக்குப் போட்ட முத்
தாரக் கண்டியடா சிங்கா!

வாழ்த்து

வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
மானுவேலை வாழ்த்துகிறேன்.

1 அட்டதிக்கு முடையானை
அனுப்பவமு மடையானை
மட்டில்லாக் கொடையானைப்
படையானை வாழ்த்துகிறேன்.

2 தந்தையில்லாத் திருமகனைத்
தாதையருக் கொருமகனை
சந்தமரி த்தலை மகனைக்
கலைமகனை வாழ்த்துகிறேன்.

3 தீயலகைப் படை முகத்திற்
செல்லாமற் பட முடியைத்
தானுதைத்து முன் முடியைச்
சகித்தவனை வாழ்த்துகிறேன்.

4 ஆதாமுக் கையனுமா
மப்பனுமா மாமனுமாம்
மாதுகுலச் சேயனுமாம்
நேயனையே வாழ்த்துகிறேன்.

5 வேதமறை சொன்னவனை
மேதினியில் முன்னவனை
வாகை வென்ற மன்னவனைத்
தன்னவனை வாழ்த்துகிறேன்.

6 அனைத்துலகும் படைத்து மெத்த
அதிசயமாய்க் காத்தளிக்கும்
தினக்கிருபா சனத்திருக்கும்
சீமானை வாழ்த்துகிறேன்.

7 வரு கலியை யுரித்தோனை
மனுவடிவைத் தரித்தோனை
தருங்கிருபைத் திறத்தானைச்
சிரத்தானைப் பாடுகிறேன்.

8 ஒருமலையில் மறுரூபம்
திருமலையிற் செபரூபம்
அருள் மலையிலுயிரீயும்
ஆண்டவனை வாழ்த்துகிறேன்.

9 அருபருக்கு முருபருக்கு
மாவியாக்குஞ் சீவியர்க்குங்
கிருபைவைக்கும் பெருமை மிகும்
கிறிஸ்துவையே பாடுகிறேன்.

10 சீவநதிச் செருக்கானை
சீயோனுக் குருக்கானை
பாவிகள்மேற் றிருக்கானைப்
பெருக்கானை வாழ்த்துகிறேன்.

11 ஆராயக் கூடாத
அகண்ட திரியேக தத்துவ
அம்பரனை நம்பரனைத்
தம்பமென வாழ்த்துகிறேன்.

12 விண்ணூற்றங் கரையானை
விரிவு பெத்தலை வரையானை
யெண்ணூழி கால மெல்லா
மிருப்பானை வாழ்த்துகிறேன்.

13 சபையனைத்துக் கொரு கோனை
தமிழிசைக்கு வருவோனை
அபயந்தந்த பெருமானைத்
திறமானை வாழ்த்துகிறேன். 106

பெத்லகேம் குறவஞ்சி

குறிப்புரை

பாயிரம்

72. ஜீவன் முடி - ஜீவகிரீடம்; நரர் சிரத்தில் - மனிதர்களுடைய தலையில்; சுவிசேடக் குறவஞ்சி நாடகம்: இது ஒரு நாடக நூல் என அறிக.

73. நா அணிந்த - நாவினால் அழகுபடுத்திக் கூறிய; மனு உருவாய்ப் படிமீது உற்று - மானிட வடிவாகப் பூமியிலே அவதரித்து; கா அணிந்த வினை - ஏதேன் தோட்டத்திலே உற்பத்தியான தீவினை.

கடவுள் வாழ்த்து

74. திருமறை ஏடனே - திரு மறையாகிய ஏட்டிலே கூறப்பட்டிருப்பவனே; வாகனே - அழகுடையவனே; குவலயப் பரிபாலனே - இவ்வுலகத்தைப் பரிபாலிப்பவனே; மாசயம் - பெரும் வெற்றி; ஐ ஆவியை - அழகிய பரிசுத்தஆவியை; பெறுமாறு அருள் - பெறும்படியாகக் கிருபை செய்வாயாக.

75. ஆசு அற்ற - குற்றமற்ற; உலாசத்தவர் - மகிழ்ச்சியுடையவர்; பேசு உத்தமர் - சிறப்பாகப் பேசப்படும் மேலானவர்; ஏசு சுதன் அவர்; ஏசுவாகிய குமாரன் அவர்.

76. கூர் அணி - மிக்க அழகுடைய; தாரணியில் தோரணையொடு - இப்பூமியில் முறையாக; பண் தாவிய - இசையொடு பொருந்திய; இக் குறவஞ்சியில் பல பாடல்கள் இசையுடன் பாடற்குரியவை.

தோடயம்

நாடகத்தில் சிறப்புப் பாயிரமாக அமையும் கவி.

தாழிசை

77. ஒருவன் - ஒப்பற்றவன்; அன்று இரு புன் மறியில் ஏறியவன் - முன்னொரு நாள் இரண்டு அற்பமான கழுதைக்குட்டியின்மேல் சவாரி செய்தவன்; அறுதினத்திலே யாவினையும் அருளி - ஆறு நாட்களிலே எல்லாப் பொருள்களையும் சிருஷ்டித்து; ஒன்பது அன்பு உறு அசடர் - நன்றிகெட்ட ஒன்பது அசுத்தர்கள்; குட்டம் - குஷ்டம்; தளார்களே - தள்வார்களே.

78. பார் உலவு பரன் சுதன் பொன் பாதம் - உலகில் வந்து உலாவிய குமாரனது பொன்மயமான திருவடிகள்.

79. நவ எருசலே - புதிய எருசலேம்.

80. நேர் ஏறு போதனுக்கு - நேர்மை பொருந்திய போதகத்தை உடையவனுக்கு; வாசனுக்கு - (பக்தர்கள் உள்ளத்தில்) வாசமாயிருப்பவனுக்கு; நறுமணம் போன்றவனுக்கு; அகிலப் பிரகாசன் - உலகத்திலே பிரகாசிக்கிற ஒளியாக வந்தவன்; வாசாலன் - அன்புள்ளவன்; வாசாலம், வாத்சல்லியம் - அன்பு; வாக்கு வல்லமையுள்ளவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

தோத்திரத் தரு

81. தணிகொண்ட மனத்தினனே - தண் அருள்கொண்ட மனத்தை உடையவனே; மணிகொண்ட அச்சயனே - அழகு பொருந்திய அழிவில்லாத இறைவனே; அம்மணிகொண்ட - நிர்வாண நிலைமையை மேற்கொண்ட; உலகில் குழவியாகத் திரு அவதாரம் செய்தபொழுது அம்மணமாகவே தோன்றினார் இறைவன்; அச்சு ஐயனே - உயிராக விளங்கும் ஐயனே.

82. துணி கண்ட அகத்து உவந்தாய் - தெளிவு கண்ட மனத்தை விரும்பினவனே; ஆயர் துணி கண்டகத்து வந்தாய் - ஆயர்கள் துணிவுடன் தங்கியிருக்கும் முள் அடர்ந்த காட்டிலே வந்தாய்.

பணி அஞ்சு அகம் கடந்தாய் - பாம்பினால் உண்டான பஞ்ச பாதகங்களையும் வென்றவனே; தேவபணி அம் சகங்கள் தந்தாய் - தேவபணி விடையை அழகிய உலகங்களுக்குத் தந்தவனே.

அணி மங்கலம் புனைந்தாய் - அழகிய மங்கல குணங்களை அணிந்தவனே; தாரணி மங்கு அலம்பு நைந்தாய் - இவ்வுலகம் அழிந்து மங்கிப் போவதற்கு ஏதுவாகிய இடர்களை அழித்தவனே! நமோ நமோ - உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பவனிச் சிந்து

83. வேசரி - கோவேறுகழுதை; 84. புவன மாணியர்-உலகில் பெருமை பெற்றவர்; வீதமாய் முரசு ஒலிக்க - விதம் விதமாகப் பலபடப் பாராட்டி, முரசு ஒலிக்க.

கட்டியம்

85. கட்டியம் - புகழ்மொழி; பிரவை - சோதி; முதிய மறையது முழுதும் - பழமையான வேதங்கள் எல்லாம்; முருகு உலவு - வாசனை பொருந்திய; இதய முளரி தனில் - இருதயமாகிய தாமரை மலரில்; நிறையும் முதலே; நிறைவாகத் தங்கியிருக்கும் முழு முதற் கடவுளே.

மின்றார் புலம்பல்

86. மின்னார் - பெண்கள்; 87. திகழ் வானின் மீன்கள்போல் - விண்ணில் விளங்குகின்ற நட்சத்திரங்களைப்போல; தருமன் ஆபேல் என்பார் - புண்ணியவானாகிய ஆபேலோ என்பர் சிலர்; இருடியன் எனோக்கு - முனிவர் எனோக்கு; இவன் நரர்க்குக் கொடுபட்டான் - இவன் மானிடர்க்காகக் கொடுக்கப்பட்டான்.

88. தேவமோகினி தோற்றம்

சீத சரோருகம் - குளிர்ந்த தாமரை; தவ மிகுத்தருள் உதாரி - மிகு தவம்செய்த உதாரத்துவ குணமுடையான். எங்கும் விளங்கும் அனங்கனை - எங்கும் வியாபகமாய்த் தோன்றும் அங்கம் இல்லாதவனை, அரூபியை.

89. தேவமோகினி பிரஸ்தாபம்

மன்றல் கமழும் - வாசனை வீசும்; மரிய தாயார் மாகனி - இரட்சகர்.

90. வெண்ணிலாத் தரு

நாலாறு - இருபத்து நான்கு; ஆதித்தன் ஒளி - சூரிய ஒளி; செவ்வாய்க்குப் பின் பிறந்தும் வெண்ணிலாவே! செவ்வாய்க்குப் பின் தோன்றினும், வாரத்தின் நாள் பெயர் கூறுமிடத்து முன் வைத்துக் கூறப்படும், இதற்குக் காரணம் யாதோ? நாக்கு சுட்டதுபோல் சுடும் - 'நாவினால் சுட்ட வடு' என்னும் வள்ளுவர் வாய்மொழியை ஒப்பிட்டுக் காண்க.

தென்றல் தரு

92–94. விசுவாச மார்க்கத்தாரைக் கெட்டு அழியச் செய்தும், அஞ்சோம்; எசுவினால் செயம் கொள்வோம்; கெலிப்போம்; என அறுவயிக்க; கெலிப்போம் - வெல்வோம்.

மலைவளம்

96-99. முல்லை நிலத்தலைவர் - ஆயர்; ஆரியன் ஆராத்து மலை, அற்புதமாய்ப் பேழை வந்து நின்ற மலை, எனக் கூட்டுக; ஆட்டினம் - ஆட்டு மந்தை; ஆட்டினத்தை மேய்த்த திக்குவாய்க் குறவன், மோசே.

குறிவளம்

100. எழில் குறவஞ்சி - அழகிய குறப் பெண்ணே! குறிசொல்பவளே! விச்சித்திரம் - விசித்திரம், அதிசயமானது; என் குறி மிக அதிசயமானது என்கின்றாள், குறவஞ்சி; விச்சை (கலை) சித்திரம் (அழகு) எனப் பிரித்து யான் சொல்லும் குறி ஓர் அழகிய கலையே எனப் பொருள் கொள்ளினும் அமையும்.

101. அச்சய தேசம் - அழிவில்லாத நாடு; தேசிகன் - அறிஞன்; சுப்பி - சுள்ளி; தேற்றுதல் ஆம் குறி - தெளிவான குறி; மாற்றம் இல்லாதவன் - கடவுள், என்றும் மாறுபாடு இல்லாதவன்; அழிவு இல்லாதவன், இயற்கை வேறுபடாதவன், சொல்லைக் கடந்து நின்றவன், மாற்றம் - (சொல்) எனப் பல பொருள் அமைந்து கிடத்தல் காண்க.

கைக்குறி சொல்லும் தரு

102. வெள்ளை நிலைத் துகில் அதனை - வெண்ணிறமான அங்கியை; இது பரிசுத்தம் என்னும் அங்கி, ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்துக் கறை போக்கிய வெள்ளையங்கி; நட்டனையாம் துட்டர் - கொரோமான செயல்களைச் செய்யும் துஷ்டர்கள்; மட்டில் வைக்கும் கையே - அவர்கள் வரம்பு கடந்து செல்லாதபடி தட்டி ஒடுக்கி வைக்கும் இக்கை; சல்லாபமாய் - சந்தோஷமாய்.

கண்ணி குத்தும் தரு

103. அவர் பெருமை அடித்துப் பறை அடா - அவருடைய பெருமைகளை எல்லாம் பறைபடித்துச் சொல்; பறை - முரசு, சொல்; இவ்விரு பொருளும்பட ஈண்டு அமைக்கப்பட்டிருக்கும் நயத்தை உணர்க; பறை அடித்துப் பறை அடா எனக் கூட்டுக.

சர்ப்பப் பேயின் சிரத்தினை மிதியடா - சர்ப்பமாகிய பேயின் தலையில் மிதித்து நசுக்கு; காளம் - ஊது கொம்பு

வண்ணம் சமுத்திரத்து அள்ளடா; அழகிய (கருணைக்) கடலினிடத்துச் சென்று, அவருடைய கிருபையை வேண்டுமட்டும் அள்ளிக் கொள்.

மந்திரம் பத்து - பத்துக் கற்பனை; இவற்றை மந்திரத்தை உச்சரிப்பது போல அடிக்கடி நினைவுறுத்த, மனச் சான்று கூர்மை பெறும்; பாவக் கண்ணியில் நின்று தப்பலாம்; பக்கி - பட்சி, பக்கித் தாவு - பறவைகள் பதுங்கிக் கிடக்கும் பள்ளத்தாக்குகள்.

சிங்கன் சிங்கி சம்பாஷணை

105. குன்றப்பர் - பேதுரு (குன்று + அப்பர்) குன்றப்பர் விடுக்கப்பட்டதுக்கு என்று எக்களிப்பு கொண்டவர் வரலாற்றை அப். 12-ஆம் அதிகாரத்தில் காண்க.

ஆலப் பாம்பு - விஷப் பாம்பு; உச்சிதம் - உயர்ந்த பொருள்.

106. வாழ்த்து

1. அட்ட திக்கும் - எட்டுத் திசையும்; அணு பவமும் அடையானை - அணு அளவும் பாவம் அணுகாதவனை.

2. தாதையருக்கு ஒரு மகனை - பரம பிதாவின் ஏக சுதனை; சந்த மரித் தலைமகனை - அழகிய மரியம்மையினது முதற் குமாரனை; கலை மகனை - எல்லாக் கல்விக்கும் உறைவிட மானவனை.

3. தீய அலகை படை முகத்தில் செல்லாமல்; கொடிய தீமை செய்யும் பைசாசு போர் முகத்தில் முன்நின்று வெற்றிபெற விடாமல்; படமுடியைத் தான் உதைத்து - படத்தையுடைய அதன் தலையை மிதித்து.

4. மாது குலச் சேயன் - ஸ்திரீயின் வம்சத்தில் தோன்றிய மகன்.

5. வாதை வென்ற மன்னவனை - சாத்தானைப் போரிலே வென்ற வெற்றி வேந்தன்; தன்னவனை - தான் ஒரு முதல்வன்; சுயம்புவாய், பிறர் ஒருவர் வயம் இல்லாதவன்.

7. கலியை உரித்தோனை - துன்பத்தை நீக்கினவனை; சிரத்தானை எனது தலைவனை.

9. அருபர் - அரூபிகள்; உருபர் - உருவம் உடையவர்.

10. ஜீவ நதிச் செருக்கானை - ஜீவ நதி வளம் உடையவனை; பாவிகள் மேல் திருக்கானை - பாவிகள்மேல் திருகிய மனம் (வெறுப்பு) இல்லாதவனை.

11. அகண்ட - விசாலமான; திரியேக தத்துவம், ஆராயக்கூடாத அகண்ட தத்துவம்; தம்பம் - பற்றுக்கோடு; ஊன்றுகோல்.

13. சபை அனைத்துக்கு ஒரு கோனை - திருச்சபை முழுவதற்கும் ஒரே தலைவனை; அபயம் தந்த பெருமானை - பயப்படாதே என்று அடைக்கலம் அளித்த எம்பெருமானை; திறமானை - சகல ஐஸ்வரியங்களும் உடையவனை, ஈஸ்வரனை; திறம் - செல்வம்.

VI. தேம்பா வணி

(வீரமா முனிவர்)

கடவுள் வாழ்த்து

சீரிய உலகம் மூன்றும் செய்தளித் தழிப்ப வல்லான்
நேரிய எதிரொப் பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமலப் பாதம் வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்றன் காதை அறமுதல் விளங்கச் சொல்வாம். 1

பொருள்:—பெருஞ் சிறப்பு அமைந்த உலகங்கள் மூன்றையும் படைத்து அளித்து அழிக்கும் வல்லமையுடையவனும், தனக்கு எதிரும் ஒப்புமின்றி மனம் மொழி மெய்களைக் கடந்து நின்றவனுமாகிய கடவுளினது, தெய்வ மணம் கமழும் திருவடித் தாமரைகளை எமது வினை முழுவதும் கெட, மெய்யாற் பணிவு தோன்றப் பணிந்தும், வாக்கால் தணிவு தோன்ற வாழ்த்தியும், விழுமியோனாகிய சூசை என்னும் வளனது திருக் கதையைக் கேட்போர்க்கு அறனும் அதனால் பொருளும் எளிதிற் புலப்படச் சொல்வாம்.

மருமலி மலர்நிழலே மறைமலி உயர்பயனே
திருமலி கரமுகிலே சிவமலி தனிமுதலே
இருமலி உலகுளரே இணரொடு தொழுமடியே
குருமலி அறநெறியே கொழுமல ரடிதொழுதேன். 2

பொருள்:—வாசமலர்ச் சோலையை ஒத்த அருளால் நிழல் செய்து அளித்தவனே, வேதம் நமக்கு பயன்தரும்படி வந்தவனே, செல்வத்தையும் நன்மைகளையும் பொழியும் மேகத்தை ஒத்த கையை உடையவனே, மோட்சத்தை அருளும் ஒப்பற்ற முதல்வனே, வானுலகத்தோரும், பூவுலகத்தோரும் மலர் சாத்தி வணங்கும் திருப் பாதத்தை உடையவனே, ஈங்கு அவதரித்து, குருவாக வந்து, நல்லறத்தின் வழியாக நின்றவனே, உனது வளம் மிக்க மலர்போலும் பாதத்தைத் தொழுதேன்.

மழை வளம்

புள்ளுலாம் விசும் பிடைதொறும் பொருபடை பொருவ
வெள்ளுலாம் மழை வெண்கொடி உருக்கொடு விளங்கி
தெள்ளுலாம் திரை திளைப்பவுண் டெழுந்துயர் பரந்து
வள்ளுலாம் களி மதகரி இனமெனத் தோன்ற. 3

உரை:—பறவை உலாவும் வானத்தில் எங்கும், எழுந்த படைபோல வெள்ளை மேகங்கள் வெண்கொடிகள் போலத் தோன்றி, பின்பு

தெளிந்த கடல் நீரை நிறைய உண்டு, எழுந்து, பரவி வலிமை பொருந்திய கரிய மதயானைகள் போலத் தோன்றும்.

நாட்டு வளம்

உவர்க்கும் தாழ்கடல் உடுத்தகல் விரிதலை ஞாலம்
எவர்க்கும் தாயென எண்ணிலா கிழிபடக் கீறும்
அவர்க்கும் தானுண வளித்தலே நோய்செய்வார்க் குதவி
தவர்க்கும் தாவரும் தருமமென் றியற்றுதல் போன்றே. 4

உரை:—உவர்க் கடல் உடுத்த அகன்ற பூமி எவர்க்கும் தாய் என்று பாராமல் நெஞ்சு கிழிபட உழுமவர்க்கும், பூமியானது உணவைக் கொடுத்தல், தீமை செய்வார்க்கும் நன்மை செய்யும் தவசிகளும் செய்வதற்கு அரிய தருமம் போலும்.

மலை வளம்

புள்ளி மால்வரை பொன்னுல கிடத்தெடுத் துய்த்தல்
உள்ளி வான்விடும் வடமெனத் தாரைகள் ஒழுக
வெள்ளி நீண்டடர் விசித்ததைப் பிடித்தெனச் சூழத்
துள்ளி வீழுயர் தூங்கிய அருவியின் தோற்றம். 5

உரை:—செல்வமுடைய மலையை எடுத்துப் பொன்னுலகில் சேர்க்க வேண்டுமென்று, வானத்தினின்று விட்ட வடக் கயிறுகள் போல, மழைத் தாரைகள் விழவே, மலையைச் சூழத் துள்ளி விழும் அருவிகளோவென்றால் அம்மலை பெயராதபடிக்கு வெள்ளியினலாகிய நீண்ட சங்கிலியால் அதைக் கட்டிப் பூமி பிடித்துக்கொண்டதுபோல் தோன்றும்.

பொழில் வளம்

கருகரு எனஓர்பால் காடைப் புள்ளினம்
ஞருஞரு எனஓர்பால் நயந்த தோகைகள்
புருபுரு உதலொடு புள்பல் ஓதையால்
அருதுரு உணர்வுறும் அரங்கம் சோலையே. 6

உரை:—ஒருபால் கருகருவென்று காடைகள் கூப்பிடவும், ஒருபால் ஞருஞருவென்று மயில்கள ஒலிக்கவும், புருக்கள் முதலிய பற்பல பறவைகள் எழுப்பும் ஓசையால், ஓயாமல் மனதிற் படாத பாடத்தைப் படிக்கும் சிறுவர்கள் நிறைந்த பள்ளிக்கூடம்போலும் சில சோலைகள்.

நகரச் சிறப்பு

பயனினல் மறைநூல் ஒக்கும் பகலினை மணியால் ஒக்கும்
வியனினல் உலகம் ஒக்கும் வேலியால் கன்னி ஒக்கும்
முயலினல் அலையை ஒக்கும் முனிமுனி ஒன்னர்க் கொக்கும்
நயனினல் உயர்வீ டொக்கும் நகரினை ஒக்கும் வீடே. 7

உரை:—இந்நகரமானது எவர்க்கும் பயன்படுவதனால் வேதமே ஒக்கும். விளங்கும் மணிகளால் பகலே ஒக்கும். அகலத்தினால் உலகம் ஒக்கும். மதில் காவலினால் அழியாத கன்னியை ஒக்கும். வருவாரும் போவாரும் நெருங்கி இருத்தலினால் கடலே ஒக்கும். தன் பகைவர்க்கு முனிவர்களது கோபத்தை ஒக்கும். நன்மைகளினால் உயர்ந்த மோட்சத்தை ஒக்கும். இந்நகரையும் மோட்சந்தான் ஒக்கும்.

மெய்வழி மறைநூல் நீங்கி வியனுல கினிதென் றின்னா
வவ்வழி உற்றதென்ன வதிந்தெமை அளித்துக் காக்கச்
செவ்வழி உளத்த தூயோன் தெரிந்தமா நகரி தென்றால்
இவ்வழி பின்னர் உண்டோ எருசலேம் நகரை வாழ்த்த. 8

உரை:—மெய்யான வேத விதிகளை விட்டு விலகி, பூவுலகத்தோர் இன்பம் என்று செய்த பாவத்தினால் அழிவுற்றார் என்று அறிந்து நம்மைக் காத்து அளிக்க, செம்மையான உள்ளத்தை உடைய பரிசுத்த கடவுள், தெரிந்துகொண்ட நகர் இதுவென்றால், எருசலேம் என்னும் நகரை வாழ்த்த வேறே வழி ஒன்று உண்டோ?

நீரல்லதும் அலையில்லது; நிறைவான்பொருள் இடுவார்
போரல்லது பகையில்லது; புரிவான் மழை பொழியும்
காரல்லது கறையில்லது; கடிகாவலும் அறனால்;
சீரல்லது சிறையில்லது; திருமாநக ரிடையே. 9

உரை:—அந்த அழகிய பெரிய நகரத்தில், தண்ணீரே அல்லாமல் அலைதல் இல்லை. கொடுப்போர், நிறைய வாங்கிக்கொள்ளுமாறு பிறரை வற்புறுத்திச் சொல்லிச் செய்யும் போரே அல்லாமல் வேறே போர் இல்லை. மழை பொழியும் கார்மேகமே அல்லாமல் வேறே மாசு இல்லை. அறத்தினால் மக்கள் தங்களைக் காத்துக்கொள்ளும் காவலே அல்லாமல் சிறைக் காவல் இல்லை.

வளன் பிறப்பு

சொல்லார் நிகர்கெடவோர் வனப்பில் பைம்பொன் சூல்முற்றி
அல்லார் இருள்கெடமீ முளைத்த திங்கள் அணிமணிபோல்
எல்லார் முகத்திலங்கிப் பிறந்த தோன்றல் எழில்கண்டு 10
பல்லார் உடைமம்மர் கெடத்தாய் இன்பப் பயன்கொண்டாள்.

உரை:—வர்ணித்துரைக்க முடியாத வனப்போடு அழகிய கருப்பம் முற்றி, இரவின் இருள் கெடும்படி வானத்தில் முளைத்த திங்களின் அழகு போல் ஒளி வீசிய முகத்தோடு பிறந்த பிள்ளையின் அழகினைத் தாய் கண்டு, பலரும் அடையும் துன்பம் நீங்க மகிழ்ச்சி அடைந்தாள்.

வீடா வானலம்செய் நோக்குநோக்கி விண்ணிறையோன்
கோடா வரத்தரசி செய்வான் மேலோர் குரல்தோன்றி
ஆடா நிலைஅறத்தென் மார்பில் தேம்பா வணியாவான்
வாடா அருள்மகனென் றம்பு மாரி வழங்கிற்றே. 11

உரை:—ஆண்டவன் மோட்ச லோகத்தின் பேரின்பத்தை உண்டாக்கும் பார்வையால் அப் பிள்ளையைப் பார்த்து, குறைவில்லாத வரங்களை அருளும் ஆசீர்வாதத்தை அவனுக்கு அருளிய அளவிலே, ஆகாயத்தில் ஒரு வாக்குத் தோன்றி வாடாத அருளை அடைந்த இம்மகனே அசைவறு அறநெறியில் நிலைகொண்டு, என் மார்பில் அணிதற்குரிய தேம்பா வணி யாவான் என்றான் இறைவன். அவ்வளவிலே பூமாரி பொழிந்தது.

கூம்பா அணிமகற்கு கணித மிக்கோர் கூறுபுகழ்
ஓம்பா அணியாக அனைத்தும் நீக்கி ஒருங்குடனோர்
சாம்பா அணியாக இறங்கி எந்தை தான்புகழ்ந்த
தேம்பா வணியேயென் றணிமிக் கம்பூண் சேர்த்தினரே. 12

உரை:—சூழநின்றவர் "மங்காத அழகுள்ள இம்மகனுக்கு சாதகக் கணித நூல் கற்றோர் கூறும் புகழ் அனைத்தும் உரிய அணி அல்ல என்று நீக்கி; ஒரு சொல்லால் மாறாத பெருமையாக ஆண்டவன்தான் இறங்கிப் புகழ்ந்த தேம்பாவணியே" என்று வாழ்த்தி அழகு மிகும்படி பல அணிகளை அணிவித்தார்.

திருமணம்

காந்தள் மிசையொரு தாம ரையினலர் காணல் எனவரும்
மாதவன்
காந்தன் விரியுகை நான மலர்மிசை காந்தை கரமணி
வாகிவான்
வேந்தன் உமதுரி தாய முறையுரு மேவி வரவெனும் ஆசியோ
டேந்த மறைமுறை வதில் முடிதர வதில் அருமணம் ஆயதே.
13

உரை:—கார்த்திகைப் பூமேல் ஒரு தாமரைப் பூவை இணைத்து வைத்தாற்போல, மணவாளனது விரித்த கையின்மேல் மணப்பெண்ணின் கையைக் கூட்டிவைத்து சீமையோன் என்னும் பெரியோன், "கடவுள் மனிதனாகி உங்கள் கோத்திரத்தின் வழியாக வரக்கடவர்" என்று ஆசீர் வதித்து, யாதொரு குறைவுமின்றி, வேத விதிப்படி திருமணம் ஆயிற்று.

வாழி அறவுரு வாழி மறையுரு வாழி திருவுரு மானுவீர்
வாழி எமதுயிர் வாழி உலகுயிர் வாழி உயிருயிர் போலுவீர்
வாழி அருள்நிலை வாழி தவநிலை வாழி நலநிலை ஆயினீர்
வாழி எனஇவர் வாழி எனஅவர் வாழும் அருமணம் ஆயதே.
14

உரை:—அறத்தின் உருவும், வேதத்தின் உருவும், செல்வத்தின் உருவும் ஒத்தவரே வாழி. எங்களுக்கு உயிரும், உலகிற்கு உயிரும், உயிர்க்கு உயிரும் நிகர்த்தவரே வாழி. அருளின் நிலையும், தவத்தின் நிலையும், ஆனவரே வாழி, என்று பலரும் வாழ்த்த அரிய திருமணம் நிறைவேறிற்று.

இறைவன் திரு அவதாரம்

உலக மூன்றினும் உவமை நீக்கிய
விலையை மூன்றினும் அழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள். 15

உரை. மூவுலகினும் ஒவ்வாத முறையால், பிள்ளையைப் பெறு முன்னும், பெறும் போதும், பெற்ற பின்னும் முக்காலத்தும் அழியாத கன்னியாகி, பிதா சுதன் இஸ்பிரித்து சாந்து என்னும் அளவில்லாத கர்த்தாவாகிய மூன்று ஆட்களுள், இரண்டா மாளாகிய சுதனை முச்சுடரினும் விளங்கப் பெற்றாள், மரியாள் என்பவள்.

மாத மார்கழி வைகலை யைந்தாய்
ஏதிலா நிசிக் கிருத்தை மூவைந்தாய்
ஆதி நாளென ஆதி நாதனைக்
காதல் நாயகி களிப்பின் நல்கினாள். 16

உரை:—மார்சழி மாதம் இருபத்தைந்தாம் தேதி இரவு பதினைந்தாம் நாழிகை ஆதி வாரத்தில், ஆதியாகிய ஆண்டவனைத் தன் ஆசை களிகூர நாயகி தந்தார்.

சூரியோதயம்

தோன்றி னானென நசையுள் தூண்டினாற்
போன்றி வாவுதேர் முடுகிப் போயொளி
கான்றி ராசிவம் களிப்ப மாவியல்
ஈன்றி ராவன்று குருகிற் றென்னவே. 17

உரை:—கடவுள் மகனாய்ப் பிறந்து தோன்றினான் என்று, அவனைக் காண ஆசை உள்ளத்தைத் தூண்டினாற் போல, ஏறிய பொற்றேரை முடுக்கி வந்து, கதிரை வீசி, தாமரை களிகூரச் சீக்கிரமாய் அன்று சூரியன் ஒளி வீசினதால், அன்று இரவு குறுகினது.

ஈசனைக் கண்டு சூசை புகழ்தல்

நீர்பாய் உலகிற் குயிரோய்நீ
நிமிர்வீட் டுலகிற் குயிரோய்நீ
சீர்பாய் பாவிற் குரையோய்நீ
திறன்கொண் டாள்வார்க் கடலோய்நீ
ஏர்வாய் இரவிக் கொளியோய்நீ
எம்மேல் இரங்கிப் பிறந்தனை நாம்
சூர்பாய் துகளற் றுய்வதற்குந்
துணைத்தாள் தொழும்பண் புரையாயோ? 18

உரை:—கடல் சூழ்ந்த இப்பூவுலகத் தோர்க்கும், உயர்ந்த வானுலகத் தோர்க்கும் உயிர் நீயே; சீரைத் தொடுத்த பாவிற்கு உரை நீயே; திறம் கொண்டு ஆள்பவர்க்கு வல்லமை நீயே; அழகிய பருதிக்கு ஒளி நீயே;

எங்கள்மேல் வைத்த இரக்கத்தினால் மனிதனாய்ப் பிறந்தாயே; நாங்களும் துன்பங்களை உண்டாக்கும் பாவங்களை ஒழித்து, நல்வாழ்வு அடைய உன் திருவடிகளை வணங்கும் முறையை எங்களுக்கு உணர்த்துவாயாக.

அறம்தாய் தந்தை சுற்றமுமற்(று)
அனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிரன்னாய்
பிறந்தெம்துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறை தீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தாய் இவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ? 19

பொருள்:—அறமும், தாயும், தந்தையும், சுற்றத்தாரும், மற்று எல்லாரும் நீயே; பரகதியும் நீயே; பூவுலகிற்கு உயிராகப் பிறந்தாயே; பிறந்து எங்கள் துயரங்களையும், பகையையும் அகற்றினாயே; எங்கள் சிறையினின்றும் எங்களை மீட்டாயே; நாங்கள் செய்த பாவத்தா லடைக்கப்பட்ட மோட்ச வீட்டின் வாசலைத் திறந்தாயே; இவற்றை எல்லாரும் அறியும்படி உனது வல்லமையும் தயையும் கொண்டு இரங்கிச் செய்யாயோ?

தெய்வக் குழந்தையை ஆயர் காணுதல்

கொழுந்துறும் குளிர்ந்தமுல்லை கொண்டகோவர் கூட்டமும்
எழுந்துறும் குடத்தியாரும் ஏகியாய காட்சியால்
விழுந்துறும் களிப்புவிஞ்சி வேதநாதன் மேற்பதம்
தொழுந்தொறும் தொழுந்தொறும் துளங்குகின்ற
தோற்றமே. 20

பொருள்:—கொழுந்துவிட்டுக் குளிர்ந்த முல்லை நிலத்திலிருக்கும் ஆயர்கூட்டமும், ஆய்ச்சியர்களும், எழுந்து வந்து சம்பவித்ததெல்லாம் கண்டு, விழுந்து மிகுந்த சந்தோஷத்தோடே பிறந்த வேதநாதனது திருப் பாதத்தை வணங்கி வணங்கி மகிழ்ந்தனர்.

மாலைமேவு வேங்கைபற்றி வண்டுணா தெனமனம்
மாலைமேவு வேங்கைபற்றி வண்டுணா தெனமனம்
மாலையாக வீங்குவந்து வாசமாரு முல்லையார்
மாலையாக வீங்குவந்து வாசமாரு முல்லையார். 21

பொருள்:—மாலை நேரத்தில் மலர்ந்த வேங்கை மரத்தைப்பற்றி அம் மலரை வண்டு உண்ணாதது போல, மன மயக்கத்தைச் செய்யும் பொன்னைப் பற்றி வரும் குற்றங்களை, இடையர் மனதிலே கொள்ளாத குணத்தினால், மிகவும் மனம் உவந்து மணக்கும் முல்லைப் பூமாலைகளைக் கொண்டு இங்கே வந்த இடமெல்லாம் நிறைந்தார் இடையர்.

பஞ்சரங்கில் இன்பரங்கு பான்மையால் அடைவர
அஞ்சலம் குளித்துவந்து மண்டமிழ்ந்து உளந்தனில்
விஞ்சவின்பம் நெஞ்சடங்கில் மேவலார்ந்த தம்முயிர்
உஞ்சலாடி வாயின்வாயில் உற்றுரைத்தல் உற்றனர். 22

பொருள்:—பஞ்சேந்திரியங்களில் பேரின்பத்தை நிறைய அனுபவித்து அடைந்த தேவ வரங்களாகிய கடலைக் குளித்து, மகிழ்ந்து உள்ளே அமிழ்ந்தின மனதிலே மிஞ்சின இன்பம் நெஞ்சிலே கொள்ளாமல் வாயிலே வந்து, தேவ பசதி நிறைந்த தம்முயிர் உடலின் உள்ளே ஊஞ்சலாடியிருக்கப் பேசலுற்றனர்.

எண்ணுளே அடங்கலின்றி ஏந்தமாட்சி பூண்டுவான்
விண்ணுளே பொலிந்துவந்த விண்ணவர்க்கு வேந்தனே
புண்ணுளே மருந்துநீவி போனவாட்டை மீட்கவோ 23
மண்ணுளே யெழுந்துவந்து மண்ணனென்(று) உதித்தனே.

பொருள்:—எண்ணப்படாத மாட்சிமை கொண்டு வானுலகத்தில் உயர்ந்து வாழும் விண்ணவர்க்கு அரசனே! பாவத்தால் வந்த புண்ணுக்கு மருந்து தடவி, இடையனை விட்டுப்போன ஆடாகிய பாவியை மீட்டு இரட்சிக்கவோ பூமியிலே வந்து மனிதனுய்த் தோன்றினுய்?

நவ மீன் தோற்றம்

விண்ணெழுந்த விண்மதியம் மிதித்தொளிரும் மெல்லடியாள் விரும்பியீன்ற
ஒண்ணெழுந்த திருமகற்கே உரிகொடியாம் எனமறையோர் உரைத்த வண்ணம்
கண்ணெழுந்த கவின்காட்டிக் கதிர்பொங்கும் நவமீனைக் கடவுள் தானே
மண்ணெழுந்த நாளிலரு மறைநாப்போல் தோற்றுவித்து வழங்கல் செய்தான். 24

பொருள்:—சந்திரனை மிதித்து விளங்கிய வடிவை உடைய மரி என்பவள் இனிதிற்பெற்ற திருமகனுக்குரிய கொடியாகுமென்று வேதத்தில் எழுதப்பட்டதற்கிசையத் தான் பூமியில் எழுந்தருளின அன்று, வேதத்திற்கு ஒரு நாவைப் போலக் கண்கவரும் அழகினையுடைய கதிர்களைப் பரப்பிய ஓர் புது நட்சத்திரத்தை உண்டாக்கி, எங்கும் வழங்கும்படி செய்தார்.

மூவேந்தர் தொழுதல்

நறுநானம் நறியபுகை நாறிநறும் அராபியநன் னாட்டு வேந்தும்
பெறுமான மணிப்புனல்சேர் பேர்சியநா டாண்டருளைப் பிளிர்ந்த வேந்தும்
செறுவாகத் தரசன்னம் திளைத்தார்க்கும் சபநாட்டுச் சிறந்த வேந்தும்
துறுவாமத் தொளிர்ந்தநவ சுற்கையொடுள் ளறிவெய்தித் தொய்யலுற்றார். 25

பொருள்:—கஸ்தூரி முதலிய வாசனை வீசும் பண்டங்களால் மணக்கும் நாடாகிய அராபியநாட்டு வேந்தனும், மணி கொழிக்கும் புனலையுடைய பேர்சிய நாட்டை ஆண்டு அருள் விளங்கின வேந்தனும், அன்னங்கள் திரண்டு ஆரவாரிக்கும் வயலையுடைய நாடாகிய சபநாட்டு வேந்தனும், இம் மூவரும் புதிதாய் விளங்கித் தோன்றின நட்சத்திரத்தைக் கண்டதும் ஆண்டவன் அப்பொழுது இவர்க்குத் தந்த உள்ளுணர்வினால், நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் அறிந்து மகிழ்ந்தார்கள்.

மும்மலை வீழ்ந் தெனவீழ்ந்து மூச்சுடர்போல் மும்முடிகள்
முகிழுந்தாளில்
விம்மலைவி லுறப்பெய்து மேவியநெஞ் சுருகிக்கண் விடுத்த
நீரால்
பொம்மலையில் பெருகின்பப் புணரியினுள் மூவரங்கண் பொலிய
மூழ்கி
இம்மலையில் தொழத்தொழவீழ்ந் தெழுந்தெழுந்து
கோவேந்தை இறைஞ்சிட்டாரே. 26

பொருள்:—மூன்று மலைகள் விழுந்தாற்போல் மூவரசர் விழுந்து சந்திரன், சூரியன், அக்கினி எனும் முச்சுடரைப் போல தமது மூன்று முடிகளைக் கழற்றி, குழந்தையினது மலர்ப் பாதத்தில் நிறைந்த ஒளி பாயும் படி போட்டு, மனதில் உருகிவிட்ட கண்ணீரால் பொங்கிய அலையெழ, பெருகிய இன்பக் கடலுள் மூழ்கி, விழுந்து எழுந்து அரசற்கரசனாகிய திவ்விய குழந்தையை வணங்கினர்.

மூவேந்தர் காணிக்கை படைத்தல்

ஓராழி உருட்டலின்மூ வுலகாளும் தனிமன்னர்க் குரியமாடை
நீராழி நிலங்காக்க மாள்வனெனும் அதற்குரிய நெய்கொள்
மீறை
ஆராழி அறத்திறைவர்க் கருச்சனைசெய் வதற்குரிய
அரியதூபம்
பாராழி யுடைமூவர் இம்மூன்றும் பதமலர்முன் பணிந்து
வைத்தார். 27

பொருள்:—உலகங்களெல்லாவற்றையும் அரசாளும் அரசன் இவன் என்பதற்கு அறிகுறியாக அரசற்குரிய பொன்னும், கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை இரட்சிக்கத் தன்னுயிரைத் தியாகம் செய்வான் என்பதற்காக மடிந்த உடல்களுக்குப் பூசுதற்குரிய நெய்யையுடைய வாசமீறையும், நிறைந்த அறத்தின் ஆழியையுடைய கடவுள் இவன் என்றதற்கு அருச்சனை செய்வதற்குரிய தூபவர்க்கமும் ஆகிய இம்மூன்றினையும், அவர் பாதத்தில் காணிக்கையாகத் தொழுது படைத்தார்.

பூவேந்தர் துதி

மண்களிப்ப மனுவானாய் மனம்வருந்த
இத்துயர்கொள் வடிவுற்றாயோ
விண்களிப்ப உவப்பானாய் வெயில்வடிவ
மறைந்தெஞ்ச மிடிகொள்வாயோ
கண்களிப்ப உருவானாய் கசடொழிப்ப
உள்ளிரங்கிக் கலுழ் குவாயோ
புண்களிப்ப மருந்தானாய் புண்படமாள்
வாய்கொலெனப் புலம்பி நின்றார். 28

பொருள்:—சுவாமீ! இவ்வுல கெல்லாம் மகிழ்தற் பொருட்டு மனிதன் ஆனாயே! நீ வருந்துதற் பொருட்டு துன்ப வேஷத்தை எடுத்தாயோ? வானுகமும் இன்புறுதற் பொருட்டு நீயே அதற்குப் பேரின்பமாய் இருக்கின்றாயே! விளங்கிய அவ்வடிவத்தை மறைத்தற் பொருட்டு இத்தரித்திர வேஷத்தைக் கொள்வாயோ? அரூபியாய் நின்ற நீ, எங்கள் கண் களிகூரற் பொருட்டு உரு ஆனாயோ? எங்கள் பாவத்தை ஒழித்தற் பொருட்டு, உன் கண் வருந்த மனம் இரங்கி அழுவாயோ? யாம் செய்த பாவத்தால் உண்டான புண் நோவாமல் இருத்தற் பொருட்டு அதற்கு மருந்து ஆனாயே! நீ புண்பட்டு நோதற் பொருட்டு சாவாயோ? என்று புலம்பி அழுது நின்றார்.

பெத்தலை நீங்கி எருசலேம் அடைதல்

இந்நீர் அன்னார்க் கெண்ணை நாள்
இனிதில் அங்கண் போயினபின்
மெந்நீ ருடுத்தீங் கவதரித்து விள்ளா
முகையாம் திருமகன்றன்
நந்நீர் முகத்திற் றுகட்டுடைத்து அவனி
எங்கும் பயன்பயப்ப
முந்நீர் எழுந்த இளங்கதிர்போல் மூதூர்
புறம்வந் ததுசொல்வாம். 29

பொருள்:—இவ்வாறு, அங்கே பெத்திலேயேம் என்னும் ஊரிலே சூசையும் மரியும் திவ்விய குழந்தையை வைத்துக் கொண்டு இனிதாய் நாற்பது நாள் இருந்த பின்னர், மானிட உடலெடுத்து அவதரித்து, மலராத மலரரும்பின் தன்மைத்தாகிய திருக்குமாரன், தனதழகிய முகத்தின் முன்பாக, பாவம் கடிந் தொழித்த பூவுலகிற் கெல்லாம் பெரும்பயன் உண்டாகும் படி, கடலை விட்டெழுந்த இளஞ்சூரியனைப் போலத் தானும் அவ்வூரை விட்டு வெளிவந்த செய்தியை இனிச் சொல்வாம்.

குழவி கொண்டு கோவில் சென்றது

விண்டிறந் துதைந்த பூசனை யன்றே விழிப்பதற் கருத்தியோ
டுயர்வான்
கண்டிறந் தென்னக் கதிரவன் முந்நீர் கடிந்தெழும் காலையில்
இனிதாய்ப்

பண்டிறந் துவைப்ப ஆர்க்குநற் சுடர்செய் பசியபொற்
கோயிலை விருப்பம்
கொண்டிறந் திருவர் கோதறு பலியாய்க் குழவியை ஏந்தி
எய்தினரே. 30

பொருள்:—மரியும் சூசையும் தேவதிருக் குமாரனைக் கோவிலிலே நேர்தலால், அன்று அங்கே வழங்கத் தரும் வானுலகிற் கேற்ற தேவ பூசையைக்காணுதற்கு ஆசை கொண்டு, வானம் கண்ணைத் திறந்தாற்போல, சூரியன் கடலை விட்டெழுந்தபோது, குறையில்லாத பலியாகத் திவ்விய குழந்தையை ஏந்திக் கொண்டு, இருவரும் ஆசையோடு போய், அங்கோரத்துப் பண் திறம் முதலிய, வாத்தியங்கள் முழங்கி ஆர்ப்ப, விளங்கிய பொற் கோயிலிற் சேர்ந்தார்.

கோயிலுட் புகுதல்

மேனிலா வெறிக்கும் குருமணி குயிற்றி
விழுத்தக நிரை நிரை தீட்டிப்
பானிலா வெறிக்கும் பளிக்குயர் கோவில்
பற்பல சாளர விழிகள்
வானிலா வெறிக்கு மகவினை நோக்க
மலர்ந்தபின் வம்மினென் றழைப்பத்
தூனிலா வெறிக்கு மணிக்கத வகற்றிச்
சுருதிவாய் திறந்திவர்புக்கார். 31

பொருள்:—ஒளி செய்யும் பெரு மணிகளைக் குயிற்றி, ஒழுங்குபடச் சித்திரங்களை எழுதிக் குளிர்ந்த சுடரை விடும் பளிங்கினாற் செய்த கோவில், வானுலகிற்கேற்ற சுடர்விடும் முகத்தோடு வருகின்ற தேவ குழந்தையை நோக்கும்படி, பல விழியாகப் பல சாளரங்களைத் திறந்து, பின் அவரை வாருங்கள் என்றழைக்கும்படி, விளங்கிய மணியாற் செய்த கதவினை நீக்கி, வேதத்தின் வாயைத்திறந்தது போல் நிற்க, அவர் உட்புகுந்தார்.

சீமையோன் கண்டு வணங்குதல்

விண்டன மலர்போல் விண்ட விருப்பினன் வெய்தென் றெய்திக்
கண்டனன் களிந்த கண்ணால் கறவைகாண் கன்றின் வெஃகி
உண்டன வுருவிற் குன்று உயர்குணத் திறைவன் தாளைக்
கொண்டன தலையிற் சூடிக் குணக்கடல் குளித்துத்
தாழ்ந்தான். 32

பொருள்:—விரிந்த மலரைப்போல மலர்ந்த விருப்பத்தோடு சீமையோன் விரைந்து வந்து, அவதரித்த நாதனைத் தன் கண் களிகூரக் கண்டான். கண்டவுடன் கறவையைக் கண்ட கன்றுபோல் விரும்பியோடி, எடுத்த மனுக்கோலத்திற் குறைபடாது உயர்ந்த தேவ சுபாவத்தின் மாட்சிமையறிந்து, நாதனுடைய பாதத்தைத் தன் தலைமேற்கொண்டு அணியாகச் சூடிக் குணக்கடலாகிய அத்தேவ குழந்தையின் மாட்சிமை ஆராய்ந்து, உள்ளே முழுகினாற்போல, மகிழ்ந்து வணங்கினான்.

சீமையோன் துதித்தல்

பாருடம் புயிராய் வந்த பரமனைக் கரத்தி லேந்தி
ஈருடம் புயிரொன்றாக எழுந்தவன் புவப்பிற் பொங்கிச்
சேருடம் பிரண்டொன்றாகச் சேர்த்துபு தழுவி யன்பின்
நேருடம் பெழிவீ டுற்ற நிலைமையிற் பாட லுற்றான். 33

பொருள்:—பூவுலகமாகிய உடம்பிற்கு ஓர் உயிராக அவதரித்த நாதனைச் சீமையோன் கையிலேந்தி, இருவருடம்பு இரண்டாயினும் உயிர் ஒன்றாகும்படி தம்முள் எழுந்த அன்பின் மகிழ்ச்சியால் மிகுதியாகிச் சேர்ந்த இரண்டு உடம்பும் ஒன்றாகும்படி இறைக் குழந்தையை மார்போடு அணைத்துத் தழுவி, மீளவும் தன் அன்பின் தன்மைக்கு ஏற்பத் தன்னுடம்பும் ஏறி முத்தியை அடைந்தவனைப் போலப் பாடத் தொடங்கினான்.

துதி

பாற்கடலென் னுள்ளப் பதும மலரும்ப
நூற் கடலே ஈங்குதித்தாய் நும்மலர்க்கண் முத்தரும்ப
நும் மலர்க்கண் முத்தரும்ப நோய்செய் வினைசெய்தேம்
எம் மலர்க்கண் முத்தரும்ப இன்று வினை தீர்த்தாய். 34

பொருள்: பாற்கடலிலே மலர்ந்த தாமரை போல என் உள்ளம் இனிதாய் மலரும்படி, வேத நூல், முதலிய நூலெல்லாம் அடங்கக்கொண்ட கடலாகிய நீ, உன் கண்மலர் முத்தாகிய கண்ணீரைப் பொழியத் துன்பம் அடைவதற்கு மனுவாய்த் தோன்றினாயே. நீ கண்ணீர் வடித்து அழும்படி உனக்கு நோவுண்டாக நாங்கள் வினை செய்தோம். இன்றோ, இன்ப மிகுதியால் யாமும் கண்ணீர்விடும்படி, எங்களுடைய வினையெல்லாம் நீயே இன்று தீர்த்தாய்.

வினை தீர்ப்ப எய்தி வினைகொண்டாய் பாவப்
புனைதீர்ப்ப ஈங்குமனுப் பூட்சிச் சிறைகொண்டாய்
பூட்சிச் சிறைகொண்ட புல்லென் னுயிர் போயுன்
காட்சிச் சிறைகொண்டு கண்டேன் கதிநிலையே. 35

பொருள்:—என் வினையைத் தீர்க்கும்படி வந்து நீ துன்பங்களைக் கொண்டாயே; பாவத் தளையறுத்து என்னை மீட்கும்படி நீ மனுவுடலைச் சிறையாகக் கொண்டாயே. யான் உன் அருளை ஆராய்ந்து அடைந்த இன்ப மிகுதியால், எனது புல்லிய உயிரும் தன் உடற்சிறையைவிட்டு, உன்னைக் கண்ட காட்சியே சிறகாகக் கொண்டுபோய், பரமகதியின் நிலையைக் கண்ட தன்மை போலவாயிற்று.

கண்டேன் கதிநிலையே கண்டுயிரென் பூண்பவினி
உண்டேன் உயிராயன் புன்னடியைச் சூடினேன்
உன்னடியைச் சூடி உனையணுகான் தன்வினையே
தன்னடியைச் சூழ்ந்துதைப்பச் சுட்டெரிவீழ்ந்
தாழ்வானே. 36

பொருள்:—உன்னைக்கண்டு பரகதியைக் கண்டதன்மை போலாயிற்று. இனி நான் இவ்வுயிருடனிருந்து ஆவதென்ன? உன் திருப்பாதத்தைத் தலைக்கணியாகச் சூடி, உன் அன்பினை உயிராக உட்கொண்டேன். இங்ஙனம் உன் திருப்பாதத்தைச் சூடி உன்னை அணுகாதவன்தன் வினையே தன்னடியை விடாது கட்டிக்கொண்டு, அவ்வினை தானே அவனை உதைத்துத் தள்ளுதலின், அவன் சுடும் எரிநரகில விழுந்து அழுந்துவான்

சீமையோன் தீர்க்கதரிசனம்

"திருக்கிளர் இன்ன தோன்றல் சிலர்க்குயிர் சிலர்க்குக்
கேடாய்
செருக்கிளர் பகைவ ரேவும் சினக்கணைக் குறியென் றுவான்
உருக்கிளர் நெஞ்சம் போழ்தற் குறுகண்வா ளுருவப் பாய்ந்து
தருக்கிளர் தருமத்தாயே தளர்ந்திடர் குளிப்பாய்"
என்றான். 37

பொருள்:—இத்திருக் குமாரன் தானே, பூவுலகில் சிலருக்கு உயிராக நிற்பான்; சிலருக்குக் கேடாக நிற்பான். இவனைப் பலரும் பகைத்து கணைகளை எய்வதற்குக் குறிபோல் வைத்து, வருத்துவர். அப்போது, தருமத்தாயே! நீ அதைக் கண்டு, உன் நெஞ்சைப் பிளக்குமாறு துன்ப வாள் ஊருவப் (சீமையோன் - சிமியோன்) பாய்தலின், துன்பசாகரத்துள் அமிழ்ந்தி வருந்துவாய்.

குழந்தையை அன்னம் கண்டது

இன்னிய மொலிக்கும் கோயில் இவையிவர்ந் தங்கண் வைகும்
கன்னிய மாதர்க் கெல்லாம் கனிந்தகைத் தாயாய் மின்செய்
மின்னிய முடியாள் தன்னை விரும்பிமுன் வளர்த்த மாட்சி
துன்னிய அன்னம் என்பாள் துன்னிவந் திளவற் கண்டாள். 38

பொருள்:—வாத்தியங்கள் முழங்க இவையெல்லாம் அக்கோவிலில் நடக்கும்பொழுது, அங்கே வளரும் கன்னிய மாதர்க்கெல்லாம் ஒரு செவிலித் தாயாய் நின்று, மின்முடியைச் சூடிய இம்மரி யென்பவளையும் முன்னாளிலே வளர்த்த மாட்சிமையுடைய அன்னம் என்பவளும் வந்து, தேவ குழந்தையைக் கண்டாள். (அன்னம் - அன்னாள்.)

ஏற்றினாள் இளவற்றாளை இணையறுங் கன்னித் தாயைப்
போற்றினாள் இருவர் மாட்சி புடையில்வந் தெவரும் கேட்பச்
சாற்றினாள் இன்புட் பொங்கித் தாரைநீர் தாரை யாகத்
தூற்றினாள் பெருக்குற் றின்பத் தூய்கடல் அமிழ்ந்தினாளே. 39

பொருள்:—மீண்டும் தேவ குழந்தையின் பாதத்தைத் துதித்து, அவளைக் கன்னியழியாமற் பெற்ற தேவ தாயையும் வணங்கி, சூழ நின்ற அனைவரும் கேட்கும்படி, இருவர் மாட்சியையும் புகழ்ந்து சொல்லி, தன் உள்ளத்தில் பொங்கின இன்ப மிகுதியால், கண்ணீரை மழைத் தாரைபோல் விட்டு அழுது, இன்பக்கடலிலே அமிழ்ந்தினாள்.

எடுப்பரு மின்ன யாவும் இன்பமும் துயருமாகக்
கெடுப்பரு மாட்சி பூத்த கேழ்கொடித் துணையும் தாயும்
தடுப்பரு மறையின் வாய்மை தவறிலா திரு கபோதம்
கொடுப்பரு முலகை யாளும் குழவியை மீட்டிட் டாரே. 40

பொருள்:—இவையெல்லாம் இன்பமும் துன்பமுமாக நடந்தபின்பு கெடாதமாட்சிமையுடைய பூங்கொடி ஏந்திய துணைவணுகிய சூசையும், தாயாகிய மரியும், வேதமுறை தப்பாதபடி இரு புருக்களைக் கொடுத்து, எல்லா உலகங்களையும் ஆளும் தேவ குழந்தையை மீட்டார்.

மண்டருந் தவத்து மூத்தோன் வரைவில ஆசி ஓதப்
பண்டரு மறையோர் யாரும் பரிவெழீ முகமன் கூற
அண்டரும் புடையிற் சூழ அணிமுகை மகவை ஏந்திக்
கொண்டரும் தகவி னோர்பொற் கோயினின் றேகினாரே. 41

பொருள்:—நிறைந்த அருந்தவத்தையுடைய சீமையோன், அளவின்றித் துதிகளைச் சொல்லவும், மற்றப் பழமையான வேதத்திற்குரிய குருக்களெல்லாம் அன்போடு உபசாரங்களைக் கூறவும், வானவர் பக்கத்தே சூழ்ந்து வரவும், அரிய பெருமையுடைய மரியும் சூசையும் அழகிய பூவரும்பினையொத்த திருக்குமாரனை ஏந்திக்கொண்டு கோயிலை நீங்கிப்போனார்.

வானோர் திருப்பாலனை வணங்கிப் புகழ்ந்தது

மாற்றுரை மாய்த்த கதநீதி மாற்றி மாற்றுரை ஆற்ற
மனுவாய்
ஏற்றுரை ஏற்ற அடுகாலம் நீக்கி ஏற்றுரை ஏற்ற இழிந்தே
தேற்றுரை ஆற்ற அழுதாவி வாழ்தல் தேற்றுரை உய்ப்ப
மடிவாய்!
ஆற்றுரை ஆற்றும் அருளாய்ந்து யாருன் அருவீர ஆண்மை
அறிவார்? 42

பொருள்:—உன்னைப் பகைத்தவரைக் கொல்லும்படி சினந்த நீதியை மாற்றி, அப்பகைவரை இரட்சிக்கும்படி மனிதனாக அவதரித்து, உன்னை வணங்காதவரை வெட்டி அழிக்கும் காலத்தைப் போக்கி, அவரையும் மோட்சக்கரை ஏற்றும்படி இப்பூவுலகின்கண் இறங்கி வந்து, தேறுதலின்றி வருந்தினார்க்கு ஆறுதல் அளிக்கும்படி நீ அழுது, உயிர்தப்பிப் பிழைக்கும் வழி அறியாதவரைப் பிழைப்பிக்கும்படி உயிரைத் தியாகம் செய்பவனே! ஆறுதல் இல்லாத பாவிகளுக்கு ஆறுதல் அளிக்கும் உன் அருளை ஆராய்ந்து உனது அரிய வல்லமையை அறியவல்லார் யார்?

ஒருநாதன் என்று தனியேகன் நின்றும் ஒருமூவர் என்று
பெயராய்க்
குருவாகி வந்து தணவாதகன்று குறுகாதும் எங்கும் உளனாய்ப்
பொருளாதி என்று பொருள்தோறும் நின்று பொருள்தோ
றழிந்து சிதையாய்
அருவாகி நின்றும் உருவோய்! யாருன் அருவீர ஆண்மை
அறிவார்? 43

பொருள்:—ஒப்பற்ற கடவுளுமாய் ஏகனுமாய் நின்றும், ஆள் வகையில் மூன்று பேராய் நின்றும், (என்றும் எங்கும் உளன் ஆயினும்) ஒரு காலத்து குருவாக வந்தாய் முன்னிருந்த இடத்தை விடாமல் அகன்றாய். சர்வ வியாபகமாகிய உனது தன்மை குறுகாமல் எங்கும் நிறைந்த பரம் பொருளாவாய்: எல்லாப் பொருள்களுக்கும் ஆதிகாரணமாகி, எல்லாப்பொருள்களிலும் நிற்பாய்; அவ்வாறு நின்றபோதிலும் அப்பொருள் அழியும் காலத்து அதனோடு சேர்ந்து அழிவு அடையாய். அரூபியாக இருந்தும், இக்காலத்து உருவானாய். இவ்வுலகில் உனது அரிய வல்லமையை அறியவல்லவர் யார்?

வினையொன்றும் இன்றி வினைசெய்து செய்த வினைதன்னில்
ஒன்றும் விழையாய்
நினைவொன்றும் இன்றி மறவொன்றும் இன்றி நிகிலம் தெரிந்த
நிலவாய்
முனைவொன்றும் இன்றி முனிவாய்மு னிந்தும் முதிர்கின்ற
அன்பு முயல்வாய்
அணையொன்றும் இன்றி உயர்வோயி யாருன் அருவீர ஆண்மை
அறிவார்? 44

பொருள்:—பிறரை ஏவிச் செயல் ஆற்றாமல், ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் நீ ஒருவனே செய்து, செய்வினையினால் உனக்கு ஊதியத்தை எதிர்பாராய்; இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் முக்காலமும் உனக்கு ஒன்றாய், எல்லாம் நிகழ்காலமாகி எல்லாவற்றையும் அப்பொழுதே ஆகும் பொருளைப்போலக் கண்டறிந்தமையால் உனக்கு நினைவும் இல்லை; மறதியுமில்லை. இங்ஙனம் எல்லாவற்றையும் அறிந்த ஒளியே! நீ மனதை மயக்கும் கோபம் ஒன்றும் இன்றிக் கோபிப்பாய். கோபித்த விடத்தும் நிறைந்த தயையைச் செய்வாய். இங்ஙனம் ஒப்பும் உயர்வுமின்றி உயர்ந்த குணங்களையுடையவனே! இவ்வுலகில் உனது அரிய வல்லமையை அறியவல்லார் யார்?

தேவமாதா திருக்குமாரனைத் துதித்தல்

மருள்தரு வலியுருவே மருளறு சினவுருவே
அருள்தரு தயையுருவே அளவறு திருவுருவே
தெருள்தரு கலையுருவே செயிரறு மனுவுருவே 45
பொருள்தரு மணியுருவே பொழிமண அடிதொழுதேன்.

பொருள்:—பிறர் அஞ்சி மயங்குதற்குக் காரணமாகிய வல்லமையுடையவனே! மயக்கமின்றிச் சினத்தைக் கொண்டவனே! அருள்மிக்க தயை உருவானவனே! அளவிறந்த செல்வத்தையுடையவனே! தெளிந்த கல்வியின் உருவே! பூவுலகத்தின் பாவவினை யறும்படி மனுக்கோலம் கொண்டவனே! பொன்னிற் பதித்த மாணிக்க வடிவுடையவனே! உனது மணம் பொருந்திய மலர் போலும் பாதத்தைத் தொழுதேன்.

உரையில கலைநிலையே உயர்அறம் அடைஉரையே
கரையில படர்கடலே கதியுயிர் பெறுகரையே
வரையில சுகநிலையே வளர்தவம் அடைவரையே
புரையில மனுமகனே பொதிமலர் அடிதொழுதேன். 46

பொருள்:—செவிக்குப் புலனாகிய ஒலியைக்கொண்ட உரையொன்று மின்றிக் கலைகளை யெல்லாம் உணர்த்தும் நிலையே! உயர்ந்த அறமொன்றே அடைவதற்கு ஆதாரமாகும் உரையே! கரையில்லாத நன்மைக் கடலே! உயிர்கள் நற்கதி சேரும் முக்திக்கரையே! அளவில்லாத ஆநந்த நிலையே! தவமொன்றே சேர்ந்தடையும் மலையே! ஒப்பில்லாத தன்மையையுடைய மனுக்குமாரனே! கொத்துப் பூப்போல் மலர்ந்த உனது திருவடிகளைத் தொழுதேன்.

திருவாய் மணித்தேன் மலர்சேர்த்த
தேம்பா வணியைத் தொழுதேந்தி
மருவாய் மணிப்பூண் வயல்நாடு
வடுவற் றுய்ய ஈங்குற்றேன்,
உருவாய் வேய்ந்த என்னிறையோ
னுடன்மூ வரின்பொற் பதத்தணிய
வெருவாய்ப் புன்சொல் அஞ்சியபின்
விருப்பம் தூண்டத் தொழுதணிந்தேன். 47

பொருள்:—தேவதாயின் திருவாய் பூத்த மதுமலராற் சேர்த்திய 'தேம்பா வணி' என்னும் சூசை தன் சரிதையை, நானே வணங்கிக் கையிலேந்தி வாசனை பொழிய மணிமலர் பூத்த வயலை யணிந்த இந்நாடெல்லாம், வடுப்படாது எவரும் பிழைத்து உயிர் வாழ்தல் வேண்டி இங்கே கொண்டுவந்தேன். உருவில்லாதான் ஆகி, உருவாய்ப் பிறந்த என் ஆண்டவனோடு, மரியும் சூசையும் என்றிம் மூவர் பாதத்தில் இத்தேம்பா வணியை அணிய, என் புன்சொல் அஞ்சாநின்றன. எனினும், சூசைமேல் வைத்த விருப்பமே என் மனத்தைத் தூண்டினதனால், துணிந்து வணங்கி அணிந்தேன்.

VII. அடைக்கல மாலை

(வீரமா முனிவர்)

1 மூவுலகு மேந்தும் முழுமுதலோன் தாள்பணிந்து
தேவுலகும் ஏத்தும் திருக்கன்னி—பூவுலகு

2 இல்லார்க் கிவள்திருவே எல்லார்க் கிவள்திறமே
கல்லார்க் கிவளோர் கலைக்கடலே—எல்லார்க்கும்

3 நன்னையே ஆதரவே நன்பே நயக்கதியே
அன்னையே பொய்யா அடைக்கலமே!—பின்னையே

4 இத்தனையும் துன்பமற இன்பமிக உன்னடியே
அத்தனையும் ஓம்பி அடைக்கலமாய்—மொய்த்தணியாய்

5 வைத்தமுடி அத்தனையும் வைத்தமணி அத்தனையும்
வைத்தமலர் அத்தனையும் வைத்ததொடை—அத்தனையும்

6 வைத்தகவி அத்தனையும் வைத்தபுகழ் அத்தனையும்
வைத்தபதம் அத்தனையும் வைத்தபொருள்—அத்தனையும்

7 வைத்தசிரம் அத்தனையும் வைத்தகரம் அத்தனையும்
வைத்தவிழி அத்தனையும் வைத்தமனம்—அத்தனையும்

8 வைத்தவறம் அத்தனையும் வைத்தவரம் அத்தனையும்
வைத்தநலம் அத்தனையும் வைத்திருக்க—மொய்த்திமைக்கும்

9 வானிருக்க மண்ணிருக்க வாய்ந்தவைநின் தாளிருக்க
யானிருக்க ஆங்கிடமொன் றில்லையோ?—பானிருக்க

10 ஓரிருளும் இல்லை உதவிநின் தாளிருக்கச்
சேரிருளும் இல்லை செயிரில்லை—போரில்லை

11 ஏவில்லை கொல்லும் இகலில்லை வாதில்லை
நோவில்லை தாழ்வில்லை நொந்துயிர்கொல்—சாவில்லை

12 இன்மையிலை பஞ்சமிலை ஈனமிலை தஞ்சமிலை
தின்மையிலை வஞ்சமிலை சிற்றமிலை—பன்மையிலை

13 கேடில்லை கோதில்லை கேளடிசேர்ந் தார்க்கெனக்கும்
ஈடில்லை வாங்கிடமொன் றில்லையே—பாடில்லா

14 ஞானக் கலையுண்டாம் நன்றுண்டாம் பேறுண்டாம்
மான ஒளியுண்டாம் வாழ்வுண்டாம்—தேறுண்டாம்

15 பேரின்பம் உண்டாம் பெலமுண்டாம் நோகுமுயிர்
தேரின்பம் உண்டாம் திணைக்கதிவிட்—டாரின்பம்

16 ஆங்குண்டென் றுன்றாள் அடைக்கலமாய் வந்தேனே
ஈங்குண் டெனக்கிடமொன் றில்லையோ?— 48

கருணம்பரப் பதிகம்

மூவா முதலா முற்றிணையா மூவா ளாயோர் மெய்ப்
பொருளாய்த்
தாவா நயனுய்த் தயைக்கடலாய்த் தானுய்த் தனிமுத்
தொழிற்பரனுய்க்
காவா நின்றென் னுளத்தரசாய்க் கருணம் பாமா யாதிபரா
ஆவா புன்னை அருவருமுன் அலர்த்தாள் பணியா வாறென்னே?
49

(கு...ரை) முற்று இணையா - முழுவதும் ஒப்பு அற்ற; மூவான் ஆய் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என மூன்று ஆள் ஆகி; தாவா நயன் ஆய் - நீங்காத நன்மையாய்; பணியா ஆறு என்னே - பணியாதிருக்கும் பேதமையை என் என்பது?

பொருளே செய்தெப் பொருளினுமுட் புணர்ந்தப் பொருள்
கெட்டழியாய் நீ
அருளே புரிந்துசெய்பொருளால் ஆமோர் பயனும் வேண்டா நீ
மருளே அறியாய் தயைமறவாய் மாறு நட்பெம் மேலோழியாய்
இருளே மிகவீ துணராவுன் இணைத்தாள் பணியாவாறென்னே!
50

(கு...ரை) எப்பொருளினும் உள் புணர்ந்து - எல்லாப் பொருளிலும் கலந்து அந்தர்யாமியாய்; பொருள் கெட்டு அழியாய் - அப்பொருள் அழிவடைந்தாலும் தான் அழியாது நிற்பவன்; இருளே மிக ஈது உணரா - என்னிடம் அஞ்ஞான இருள் மிகுவதனுல், உணரமாட்டாத.

VIII. திருக்காவலூர்க் கலம்பகம்

(வீரமா முனிவர்)

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

நான்கடித் தரவு இரண்டு

பார்மேவும் பழிநீப்பப் பகர்ந்தடங்காப் பரிவுள்ளிச்
சீர்மேவும் திருவுளத்தைத் தெளிந்தமரா ளம்பனிப்ப,
உருவில்லான் உருவாகி உலகிலொரு மகனுதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே.

விண்ணுலகம் புகழ்ந்தேத்தி வியந்தலர்சே வடிவருட
மண்ணுலகம் துயர்நீங்க மன்னுயிர்கள் சிறந்துவப்ப,
வான்றளங்கள் புறங்காப்ப வானரசர் பணிகேட்ப
மீன்றளங்கள் அணிமதிபோல் விண்ணரசா ளாயினையே.

நான்கடித் தாழிசை ஆறு

தண்சுடர்க்கான் மதிக்குழவி தாங்கியபூ வடிவிளங்க
தெண்சுடர்க்கா லுடுவணைந்த திருமுடிகொள் சிரமிசைப்பப்
பனியுயிர்த்து மனங்குளிர்க்க பருதியுடுத் துடலிலங்கத்
தனியுயிர்த்து மரசணியாத் தரிப்பதுநின் விருதாமோ.

கனைபூத்த சோணாட்டுக் காவிரியின் வடகரைமேல்
சினைபூத்த நிழற்பொழில்வாய் சிங்கநெடுங் கொடிநிழற்றும்
திருக்காவ லூரகத்துத் திகழொளிவாய் மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநலம் அளிப்பதுநின் தயையாமோ.

உள்ளுருவாக் கவசமென உத்தரிகத் துடன்மருள்தீர்
தெள்ளுருவா மணிமாலை சிறந்தேந்தும் கைநீட்டி
வாய்பொய்யா மறைத்திசையாம் வடதிசையே தனிநோக்கித்
தாய்பொய்யா அடைக்கலமே தருவதுநின் புகழாமோ.

கான்பொதுளும் பூம்புகையும் கமழ்பூவு மணந்தேங்க
மீன்பொதுளும் ஒளிமணியார் விமானத்துள் எழுந்தருளிப்
பார்பூத்த வினையறநீ பயந்தநலத் திவ்வுலகும்
சீர்பூத்த வானுறைப்பச் செய்வதுநின் சிறப்பாமோ.

தாண்மலரே தலையரும்பத் தரும்பணிகேட் டுளம்பனிப்பச்
சேண்மலரே யுன்வரத்தால் திருக்கடலூ டினிதாழ்ந்து
வானவரும் கரைகாணு மனந்தேற்றுப் புன்பாவால்
ஈனவருள் யானீந்தற் கியைந்ததுநின் திறமாமோ.

யாழ்குரலே இனிதென்று ஈன்றாட்கே தன்மகன்சொல்
தாழ்குரலே இனிதென்ற தகைமைத்தோ மனதிரங்கித்
துவர்வாய்ப்பொங் கலமணிபோல் தொடர்புளதாய் நீயென்றன்
உவர்வாய்ப்புன் புகழுரைகொண் டுவப்பதுநின் பரிவாமோ.

ஈரடி அராகம் நான்கு

உயருல கடிதொழ உயிரினு முவகையே
துயருல குளியுள துகளொழி யுறுதியே

உலகினை யருளிய ஒருவனை யருளலின்
அலகினை யறவர மமைதனி யரசினை

வினையிடு மிருளற வெயிலிடு மறையினை
முனையிடு பகையற முயலிடு முடலினை

மறையரு ளிறைவனை மறைவில வருளினை
இறையருள் கதியினை இனிதருள் துணையினை.

ஈரடித் தாழிசை ஆறு

ஆதியிலா அந்தமிலா அனைத்துயிர்க்கும் காரணர்க்கே
ஓதிலெலா நிகர்கடந்த உற்பத்தி யாயினைநீ

பூவாதி மூவுலகின் புலத்தடங்கா வரையொழிக்கும்
தேவாதி தேவனைநின் திருவயிற்றில் அடக்கினைநீ

வானவர்க்கும் தெரியாத வடிவொளியான் வினையிருள்நீத்(து)
ஈனவர்க்கும் தெளிவதற்கே என்னுருவொன் றாக்கினைநீ

மூவுலகும் மூவிரலான் முகந்தேந்து முதலோனைத்
தேவுலகும் வியந்திறைஞ்சச் செங்கரமேல் ஏந்தினைநீ

பொருள்சுரந்தீ னுயிர்க்கெல்லாம் பொழிந்தூட்டி வளர்த்தோனை
அருள்சுரந்த திருக்கொங்கை அமுதூட்டி வளர்த்தனைநீ

அனைத்துலகும் ஏவலைக்கொண் டமைத்ததனி யானையினால்
நினைத்துலகும் வியப்புறவிந் நிலத்தேவல் கொண்டனைநீ

பல்வகை அம்போதரங்கம்

உந்தையை யீன்றுநீ ஒருவர்க் கீங்கரும்
வந்தையோ டன்னையும் மகளும் ஆயினை
கனியரும் பயனொடு கலந்த பூவினைத்
தனியருள் கன்னியும் தாயும் ஆயினை

வேறு

தொற்பழி யுரக மிதித்தனே; துகட்பழி யுலகில் துடைத்தனே
கற்பழி அலகை அடக்கினே; கதிக்கத வகல வியக்கினே

வேறு

விண்டிறந்தனே எண்டிறந்தனே
பானணிந்தனே மீனணிந்தனே
மதிபதத்தினே °கதிபதத்தினே
அருள்வலத்தினே பொருளிடத்தினே
எனவாங்கு (தனிச்சொல்)

அகவற் அசிதகம்

தண்டிருக் காவலூர்த் தடம்வளர்ந் தொளிபெற
மண்டிரு மலரடி வைத்தபின் எங்கணும்
வினையிராப் பரந்து விளைந்த வவாவிருள்
தனையிற மறையொளி தரும்திருப் பகலோன்
வந்துயிர் விளக்க வருநாள் இதுவென
நந்துயி ருய்ய நகைக்கதிர் பரப்பிக்
கொதித்தனேத் திருளினைக் கொய்தீங்(கு)
உதித்தனே நீயோர் உதய மீனே. 51

முற்றும்

10830

223
8-55

TAMIL CHRISTIAN CLASSICS, SERIES—2

Selections from Tamil Christian Classics

விலை ரூ. 2-4-0